# காந்தீய அரசியல்

CONNEMARA PUBLIC LIBRARY
21 NOV 1948
MADRAS

ஸ்ரீமந் நாராயண அகர்வால்
ஆங்கிலத்தில் எழுதியதை
நாமக்கல் கவிஞர் இராமலிங்கம் பிள்ளை
தமிழாக்கியது

தமிழ்ப் பண்ணை
தியாகராயநகர் :: சென்னை

முதற் பதிப்பு
1946 ஜூலை

விலை
ரூபாய் மூன்று

...ம பதிவு செய்யப் பெற்றது

...அச்சுக்கூடம், திருவல்லிக்கேணி, சென்னை.
...ப் பண்ணை வெளியீடு—Ms. 384

CONNEMARA ... 21 NOV 1948 MADRAS

முன்னுரை

## நாமக்கல் கவிஞர்

உலகத்தில் 'ராமராஜ்யம்' உண்டாகவேண்டும் என்று மகாத்மா காந்தியவர்கள் அடிக்கடி எழுதியும் பேசியும் வருகிறார். காந்தியவர்களின் கட்டுரைகளைச் சிந்தனையோடு கவனித்து வருகின்ற எல்லாருக்கும் அவர் சொல்லுகிற 'ராமராஜ்யம்' என்னவென்பது எளிதிற் புலப்படும். அந்த 'ராமராஜ்யம்' உலகத்தில் எங்காவது எப்போதாவது ஏற்படுமா என்பது அரசியல் ஆராய்ச்சிக் காரர்களையெல்லாம் திகைக்கவைக்கும் என்பது திண்ணம். காந்தியடிகள் சொல்லுகின்ற 'ராமராஜ்யம்' பிரமாதமான சட்டதிட்டக் கட்டுப்பாடுகளினால் அமைக்கவேண்டியது அல்ல. அதற்கு அரசியல் ஞானமும் அதிகம் வேண்டியதில்லை. ஒவ்வொரு மனிதனும் 'தன்னைப் போலவே பிறனையும் மதிக்கவேண்டும்' என்கின்ற ஒரே ஒரு நல்லெண்ணத்தை நித்திய ஒழுக்கமாகக் கொண்டு நடக்கும் நியதியை தனக்குத் தானே கட்டாயப்படுத்திக் கொள்ள முடியுமானால் அதுவே ராமராஜ்யத்தின் ஆரம்பம். மனித சமூகத்தில் இந்த நல்லெண்ணம் தலைசிறந்து நிற்கவேண்டும் என்ற நியாயத்தை எல்லா தேசத்து மக்களும் எல்லா மொழி இலக்கியங்களும் ஒத்துக் கொள்வதாகத்தான் தெரிகிறது. மற்ற நாடுகளைப்பற்றி எப்படியிருந்தாலும் இந்திய நாட்டைப் பொறுத்தமட்டிலும் இந்த நல்லெண்ணத்தை எல்லாரும் வெகு தீவிரமாக விரும்பிப் பாராட்டிப் பேசுகின்றதைப் பார்க்கிறோம். ஆனாலும் இந்த நல்லெண்ணம் பெரும்பாலும் மக்களிடத்தில் செய்கைகளில் ஒரு முகூர்த்த காலத்துக்கேனும் நிரந்தரமாக நிற்பதில்லை என்பது நாம் கண்ணாரக்

காணும் உண்மை. இன்றைக்கு மட்டுமல்ல, மனித சரித்திரம் ஆரம்பமான காலம் தொட்டு இது இப்படியேதான் இருந்து வந்திருக்கிறதாகத் தெரிகிறது. அவதார புருஷர்களும் மகாத்மாக்களும் அந்த ஒரு நல்லெண்ணத்தைப் பரப்பவேதான் பாடுபட்டிருக்கிறார்கள். அந்த மகா புருஷர்களின் முயற்சிகளின் பயனாக அப்போதைக்கப்போதாவது இந்த நல்லெண்ணத்தின் சிந்தனை பாமர மக்களிடையேயும் பரவி அமைதியைப் பாதுகாத்து வந்திருக்கிறதும் உண்மையே.

எப்படிப் பார்த்தாலும் காந்தியடிகள் கற்பிக்கின்றதைப்போன்ற 'ராமராஜ்யம்' அந்த ராமனே அரசாண்ட காலத்திலும்கூட நடைமுறையில் இருந்திருக்குமா என்று எண்ணும்படியாகத்தான் மனித சரித்திரம் நம்மை மலைக்கச் செய்கிறது.

'இப்படி முன்னே இருந்திருக்குமா', 'இப்போது இருக்கிறதா' 'இனிமேலாவது இருக்குமா' என்றெல்லாம் நினைப்பது சாதாரண மக்களுக்கு சகஜம்தான். ஆனால் மனித சமூகத்தைப் புனிதப்படுத்த முயலும் மகாத்மாக்கள் 'இப்படி முன்னே இருந்ததுண்டு' 'இப்போது இப்படி இருக்கச் செய்வோம்' 'இனிமேலும் இப்படி இருக்க முடியும்' என்று கண்டிப்பாகத்தான் சொல்லுகிறார்கள். 'நல்லது' என்று மனப்பூர்வமாக நாம் நம்புகின்ற ஒன்றைக் காரியத்தில் செய்வதை விட்டுவிட்டு 'இருந்திருக்குமா, இருக்கிறதா, இருக்குமா' என்றெல்லாம் எண்ணத் தொடங்குவது வீண் வேலையென்பது உத்தமமான உபதேசம். உதாரணமாக: நமக்கு மிகவும் வேண்டிய ஒருவர் கடுமையான நோயடைந்து மிகவும் அபாயமான நிலைமையில் இருப்பதாக வைத்துக்கொள்ளுவோம். அப்போது நாம் என்ன செய்வோம்? உடனே அந்த அபாயத்தை நீக்கவேண்டிய முயற்சிகளையெல்லாம் ஒன்றுவிடாமற் செய்வோம். அப்படிச் செய்யவேண்டியதுதான் அறிவும் கடமையும்

ஆகும். அதைவிட்டு 'இப்படிப்பட்ட நோயில், இந்த நிலைமை அடைந்தவர்கள் யாராவது இதற்குமுன்னால் தப்பி இருக்கிறார்களா? "இப்போது அப்படித் தப்பிப் பிழைத்தவர்கள் இருக்கிறார்களா? 'இவர்கள் தப்பக்கூடிய வழி இனிமேலாவது உலகத்தில் உண்டாகுமா?' என்றெல்லாம் சந்தேகித்துச் சும்மா இருப்போமா? இருக்கவிடுமா? இருக்க விடுவார்களா? ஓடி ஆடித், துடித்துடித்து, துறுதுறுத்து, நோயாளியைப் பார்க்க வந்தவர்களையெல்லாம்கூட வைத்தியம் செய்யச் சொல்லிப் பதறமாட்டோமா?

அப்படிப்போல அரசியல் சீர்கேட்டினால் அவதிப்படும் ஜன சமூகத்துக்கு நல்வாழ்வு வரவேண்டுமானால் நாமெல்லாரும் 'ராமராஜ்யத்தை' உண்டாக்க உடனே முயலவேண்டும் என்று மகாத்மா காந்தியவர்கள் கதறிக் கதறிக் கூவுகின்றார்.

நம்முடைய பலவீனத்தால், இந்த 'ராமராஜ்யம்' அசாத்தியமானதுபோலத் தோன்றினாலும் அப்படிப்பட்ட ஒரு அரசியலும் சமூகமும் அமைவது அசாத்தியமல்ல என்பதுதான் அரசியல் ஆராய்ச்சிக்காரரின் ஆசையிலும், மகான்களின் மனதிலும், கவிஞர்களின் கற்பனையிலும் எப்போதும் இருந்துவந்திருக்கிறது. ராமராஜ்யத்தைப்பற்றி வர்ணிக்கின்ற இலக்கியங்கள் எத்தனையோ இருக்கின்றன. ஆனால் காந்தியவர்கள் எண்ணத்தினால் நிலவுகின்ற ராமராஜ்யத்தைக் கம்பன் நடத்தியே காட்டிவிட்டான். கம்பராமாயணத்தில் அரசியல் சம்பந்தமான பாட்டுக்களையெல்லாம் பாரபட்சமில்லாமல் ஆராய்ந்து பார்க்கிறவர்களுக்கு, ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னாலேயே இப்போது காந்தியடிகள் உண்டாக்க விரும்புகின்ற 'ராமராஜ்யம்' தமிழனுடைய சிந்தனையில் தலைசிறந்து நின்றிருந்தது என்பது நிச்சயம். கம்பன் காட்டுகின்ற ராமராஜ்யத்தை விளக்குவதற்கு பல பாடல்களை எடுத்துக் காட்டவேண்டும். அப்படிச் செய்யப்

புகுவது இந்த முன்னுரை நோக்கத்துக்கு முரணாகும். குறிப்பாக கம்பன் சொல்லுகின்ற ஒரே ஒரு சொற்றொடரைமட்டும் எடுத்துக் காட்டிவிட்டால், காந்தியடிகள் கருதுகின்ற ராமராஜ்யத்துக்கும் கம்பன் சொன்ன நல்லரசுக்கும் எவ்வளவு பொருத்தம் இருக்கிறதென்பது புரிந்துவிடும்: ராமராஜ்யம் என்ற நிலைமைக்கு அத்யாவசியமான நிபந்தனை ஒன்றே ஒன்றுதான் என்று மகாத்மா காந்தி அடிக்கடி வற்புறுத்துகிறார். அதே ஒரு நிபந்தனையைத்தான் கம்பனும் நல்லரசுக்கு முக்யம் என்று முத்தாய்ப்பாகச் சொல்லுகின்றான். மகாத்மா சொல்லுகின்றார் "என்னுடைய 'ராமராஜ்யம்' என்பதற்கு ஒரே ஒரு அர்த்தம்தான். அது என்னவென்றால்: 'இந்த நாட்டில் மிகவும் உயர்ந்த பணக்காரன் அனுபவிக்கின்ற எல்லாச் சுக செளகரியங்களும் இந்த நாட்டிலுள்ள பரம ஏழைக்கும் கிடைக்கவேண்டும். பணக்காரன், ஏழை என்ற பாரபட்சம் ஒழியவேண்டும். மற்ற வித்யாசங்களைப்பற்றி எனக்குக் கவலையில்லை" என்பதே.

அதையே கம்பன் சொல்லியிருப்பதை கவனிக்க வேண்டும். அவன் சொல்லுகின்ற அரசாட்சியில்,

'எல்லாரும் எல்லாப்பெரும் செல்வமும் எய்தலாலே
இல்லாரும் இல்லை. உடையார்களும் இல்லைமாதோ'

'செல்வத்தினால் ஏற்படக்கூடிய எல்லா வசதிகளும் அந்த நாட்டிலுள்ள எல்லா மக்களுக்கும் சமமாகக் கிடைத்ததனால் அங்கே பணக்காரனும் இல்லை, ஏழையும் இல்லை' என்பது பொருள்.

'சமதர்மம்' என்றும் 'பொது உடைமை' என்றும் பலவிதமான பெயர்களால் குறிக்கப்படுகிற எல்லா அரசியல் சீர்திருத்தங்களும் இதையேதான் குறியாகக் கொண்டுள்ளன. இதைவிட ஒப்புரவான ஒரு அரசியல் நிலையை எந்தச் சிந்தனைக்காரரும் சிருஷ்டிக்க முடியாது.

இப்படிப்பட்ட ஒரு அரசாட்சி முறையை ஏற்படுத்த இன்னும் திருப்பித்திருப்பி பேசிக்கொண்டேயிருக்காமல் உடனடியாக முயற்சி செய்யவேண்டும் என்பதே மகாத்மாவின் துடிப்பு.

அந்தத் துடிப்புக்கு ஓரளவேனும் பலன் கிடைக்கக் கூடிய அனுகுணங்கள் இப்போது உலகத்தில் உண்டாகி யிருக்கின்றன. சமீபத்தில் முடிவடைந்த இரண்டாவது உலக மகா யுத்தத்துக்குப் பிறகு உலகத்திலுள்ள எல்லா அரசாங்கங்களிடையேயும் பரவியிருக்கிற பரபரப்பே அந்த அனுகுணங்களின் அறிகுறி. இனிமேல் உலகத்தில் சண்டையே நிகழாதபடி எல்லா நாடுகளும் சமதர்ம சமரசத்தோடு ஒத்துழைத்து ஒரு அகில உலக அதிகாரத்தை ஏற்படுத்தவேண்டும் என்று செய்துவருகிற ஆலோசனைகள்தான் அந்த 'ராமராஜ்ய' ஆசை. யுத்த மோகமும் பலாத்காரமான எண்ணங்களும் உலகத்தை விட்டு இன்னும் ஒழிந்துவிடவில்லை என்பது உண்மை தான் என்றாலும், சென்ற யுத்தத்தில் ஈடுபட்ட எல்லா தேசங்களிலும் மக்கள் சமாதான வாழ்வையேதான் விரும்புகிறார்கள் என்பது வெளிப்படை. அந்த விருப்பம் நிலைத்திருக்குமா இல்லையா என்பது வேறு விஷயம். யுத்தத்தில் தோற்றவர்களும் வென்றவர்களும் சமமாகச் சோர்வடைந்துபோய் அணுகுண்டை நினைத்து அனைவரும் அந்தரங்கத்தில் அச்சமுற்றிருக்கிற இப்போதைய நிலைமை ராமராஜ்யத்தைப்பற்றிய முயற்சிகளைச் செய்வதற்கு மிகவும் ஏற்றது.

அதை அறிந்தே காந்தியவர்கள், சுமார் இருபத்தைந்து வருஷங்களுக்கு முன்னால் அவர் சொல்லத் தொடங்கிய ராமராஜ்யத்தைப்பற்றி மீண்டும் இப்போது அடுத்தடுத்து நினைப்பூட்ட ஆரம்பித்திருக்கிறார்.

காந்தியடிகளின் ராமராஜ்யக் கருத்துக்களை ஆதியிலிருந்து ஆர்வத்தோடு அறிந்து வந்திருக்கும் ஸ்ரீ அகர்வால் அவர்கள் அந்த ராமராஜ்யத்துக்கு அடிப்படையாக

அமையத்தகுந்த இந்த அரசியல் திட்டத்தை வகுத்திருக்கிருர். ஸ்ரீ நாராயண அகர்வால் அவர்களை நான் நேரில் அறிவேன். கற்று, உணர்ந்து, அடக்கமுள்ள கண்ணியர் உணர்ச்சியினுலும் ஒழுக்கத்தினுலும் காந்தீய தத்துவங்களுக்கு விளக்கம் சொல்ல மிகவும் தகுந்தவர்.

இந்தப் புத்தகத்தில் விவரிக்கப்பட்டிருக்கிற திட்டத்தின் வெவ்வேறு அம்சங்களைப்பற்றி இந்த முன்னுரையில் விரிப்பது சரியல்ல. அவற்றின் பெருமைகளை படிப்பவர்களே பார்த்துக்கொள்ள முடியும்.

இந்தத் திட்டத்தில் சொல்லப்படுகின்ற ஜனநாயகத் தேர்தல் முறைமட்டும் மிகவும் குறிப்பிடத் தகுந்தது. அதை அனைவரும் ஆழ்ந்து சிந்திக்கவேண்டும். ஜனநாயகத்தின் பெயரால் இப்போது உலகத்தில் எங்குபார்த்தாலும் நடத்தப்படுகிற தேர்தல் முறை மிகவும் தீமையுள்ளதாக இருக்கிறது இந்தியாவைப் பொறுத்தமட்டில் இந்த அன்னியத் தேர்தல் முறை ஒவ்வொரு கிராமத்திலும் கட்சிப் பிரதி கட்சிகளை உண்டாக்கி ஒற்றுமையைக் குலைத்துவிட்டது. ஊரும் பேரும் உருப்படியும்கூட ஓட்டர்களுக்குத் தெரியாதவர்கள் வெகு விஸ்தாரமான தொகுதிகளுக்கு அபேக்ஷகர்களாக நிற்கிருர்கள். அங்கங்கே செல்வாக்குள்ளவர்கள் அவரவர்களுக்கு வேண்டிய அபேக்ஷகருக்கு ஓட் போடும்படி பாமர மக்களை ஆட்டுமாட்டு மந்தைகளைப்போல ஓட்டிவந்து, தேர்தல் நடத்துகிருர்கள். வேறு எந்த நியாயத்தையும் கருதாமல் வெறும் லஞ்சப் பணத்தைமட்டும் கருதி, விரும்பவே தகாத ஒருவருக்கு வெளிப்படையாக வாக்குகளைப் பதிவுசெய்யும் வற்புறுத்தல் சர்வ சாதாரணமாகிவிட்டது. இப்படிப்பட்ட பல தீமைகளை நீக்குவதற்கு இந்தக் காந்தீயத் திட்டத்தில் சொல்லப்படுகிற தேர்தல் முறை மிகவும் உபயோகமானது. இதிலும் குற்றம் குறை இருக்கலாம். ஆனுலும் இப்போது நடந்துவரும்

முறையைக் காட்டிலும் இது பலமடங்கு சிறந்தது என்பதில் சந்தேகமே இல்லை.

எல்லா அம்சங்களிலும் இப்புத்தகத்தில் சொல்லப் பட்டிருக்கிறபடியே முடியாவிட்டாலும் இதிலுள்ள மூலக்கொள்கைகளை மட்டுமாவது அடிப்படையாகக் கொண்ட ஒரு அரசியல் நமக்கு அமையவேண்டிய விதத்தில் நாம் முயற்சிக்கவேண்டியது கடமை.

அவகாசக் குறைவால் தாம் எழுதியிருக்கவேண்டிய இந்த திட்டத்தை ஸ்ரீ அகர்வால் அவர்கள் எழுதினதற் காக மகாத்மா மகிழ்ந்து பாராட்டுகின்றார். அதுவே ஸ்ரீ அகர்வால் அவர்கள் போற்றத்தகுந்த பரிசாகும். எனினும் ஆழ்ந்த சிந்தனையும் அரசியல் அறிவும் நிறைந்த இப்படிப்பட்ட திட்டத்தை, இந்திய நாட்டுக்கு சுதந்தரம் வருகின்ற இந்தச் சமயத்தில் எழுதிக் கொடுத்ததற்காக இந்திய மக்கள் ஸ்ரீ நாராயண அகர்வால் அவர்களுக்கு என்றென்றும் நன்றி செலுத்துவார்கள்.

**வெ. இராமலிங்கன்.**

# பாராட்டுரை

ஆசிரியர் அகர்வால் எழுதியுள்ள புத்தகத்துக்கு "காந்திய அரசியல் அமைப்பு" என்று பெயரிட்டிருப்பது பொருத்தமானதல்ல போலத் தோன்றுகிறது. அந்தப் பெயர் நல்லதாகவும் சுருக்கமானதாகவும் இருக்கலாம். ஆனால் இதில் எழுதியுள்ள விஷயங்களெல்லாம் நான் எழுதின பல விஷயங்களை ஆராய்ந்தறிந்து, ஆசிரியர் அகர்வால் அவர்கள் தாமே சொந்தமாக எழுதியுள்ளவை.

அநேக ஆண்டுகளாக நான் எழுதிவரும் கருத்துக்களுக்கு அவர் விளக்கம் செய்துவருகிறார். நான் எழுதிவந்திருக்கிற விஷயங்களுக்குத் தப்பான வியாக்யானம் செய்துவிட்டதாக இருக்கக் கூடாதென்றதை மிகவும் கவனிக்கிறவரானதினால், என் கருத்துக்களாக அவர் எழுதுகின்ற எதையும் எனக்குக் காட்டாமல் வெளியிட விரும்பமாட்டார். அதனால் ஒரு அனுகூலமும் உண்டு, ஒரு பிரதிகூலமும் உண்டு. அனுகூலம் வெளிப்படையானது. பிரதிகூலம் என்னவென்றால், இதைப் படிக்கின்றவர்கள் இதில் இருக்கிற எல்லா விஷயங்களும் என்னுடைய கருத்துக்கள் என்று தவறாக எண்ணிவிடக்கூடும். அதனால் அப்படித் தவறாக நினைத்து விடக் கூடாதென்று முதலில் எச்சரிக்கின்றேன். இதிலுள்ள ஒவ்வொன்றும் என்னுடைய கருத்துத்தான் என்று நான் ஒத்துக் கொள்வதாக இருந்தால், இதை நானே எழுதிவிடலாம். பல வேலைகளுக்கிடையில் எனக்குக்கிடைத்த அவகாசத்தில், கூடிய மட்டும் வெகு கவனத்தோடு இதை இரண்டுமுறை படித்தேனென்றாலும் இதிலுள்ள ஒவ்வொரு சொல்லையும் ஒவ்வொரு கருத்தையும் சரிதானென்று ஆராய்ந்து பார்க்கும் வேலையை மேற்கொள்ள முடியவில்லை. அப்படி ஆராய்ந்து பிழை கண்டு பிடித்துத் திருத்துகிற பாதகத்தைச் செய்ய என் மனம் இடங் கொடுக்கவும் இல்லை. ஏனெனில் அப்படிச் செய்வது நேர்மையானதல்ல வென்பதும் இன்னொருவருடைய சுதந்தரத்தில் தலையிடுவதாகுமென்பதும் என் அபிப்பிராயம். அதனால் நான் சொல்லக்

கூடியதெல்லாம் என்னவென்ருல்: இந்தச் சிறு புத்தகத்தை எழுதுவதில் இதன் ஆசிரியர் சொல்லப்புகுந்த விஷயங்களெல்லாம் குற்றமற்றனவாக இருக்கவேணும் என்பதில் தம்மால் கூடிய மட்டும் ஸர்வ ஜாக்ரதையாக கவனம் செலுத்திஇருக்கிருர் என்பதற்கு ஏராளமான சான்றுகள் இதில் இருக்கின்றன என்பது மட்டும்தான். என்னுடைய நோக்கங்களுக்குப் பொருந்தாதது என்று அபஸ்வரமாக தொனிக்கக்கூடிய எதுவும் இதில் இல்லை.

நான் அவசியமென்று கருதின திருத்தங்களை ஆசிரியரே செய்துவிட்ட நற்குணத்தைப் பாராட்டுகிறேன்.

'அரசியல் அமைப்பு' என்ற சொல்லைக்கொண்டு, ஒரு அரசாங்கத்துக்கு அவசியமான எல்லாத் திட்டங்களையும் பரிபூரணமாகச் சொல்லிவிட்டதாக இதன் ஆசிரியர் நினைப்பதாக வாசகர்கள் தப்பர்த்தம் கொள்ளக்கூடாது. என்னுடைய நோக்கங்களுக்கிணங்க உருவாகவேண்டிய ஒரு அரசியல் அமைப்பு எப்படியிருக்கும் என்பதைக் காட்டக்கூடிய சில அடிப்படையான விஷயங்களை மட்டும்தான் சொல்லியிருப்பதாக இந்தப் புத்தகத்தின் ஆரம்பப் பகுதியில் ஆசிரியர் மிகவும் தெளிவாகச் சொல்லியிருக்கிருர். இந்தியாவுக்கு ஒரு அரசியல் அமைப்புத் திட்டத்தை வகுத்துக் காட்டுவதற்காகச் செய்யப்பட்டுவரும் பல முயற்சிகளுள் ஆசிரியர் அகர்வாலின் புத்தகம் சிந்தனை நிறைந்த ஒன்ருக நான் மதிக்கின்றேன். இந்த முயற்சியின் சிறப்பு எதுவென்ருல், அவகாசமில்லாக் 'காரணத்தால் நான் செய்யத் தவறிவிட்ட ஒரு முயற்சியை ஆசிரியர் அகர்வால் செய்திருக்கிருர் என்பதுதான்.

கல்கத்தாவுக்குப் போகும்போது
ரெயில் வண்டியில்
1945ஸ்ரு நவம்பர்மீ 30-ம்உ

மோ. க. காந்தி.

21 NOV 1948
MADRAS

# பொருளடக்கம்

## முதற்பாகம்

பக்கம்

நான்முகம் ... 1
அடிப்படையான கொள்கைகள் ... 10
ஜனநாயகம் - இருப்பதா? இறப்பதா? ... 26
காந்திய வழி ... 37

## இரண்டாம்பாகம்

ஜீவாதார உரிமைகளும் கடமைகளும் ... 96
தாலூகா - ஜில்லாப் பஞ்சாயத்துக்கள் ... 105
மாகாண ஆட்சி ... 108
மத்ய அரசாங்கம் ... 113
நீதி பரிபாலனம் ... 119
தேர்தல் முறை ... 124
இந்திய சுதேச சமஸ்தானங்கள் ... 131
தேசத்தின் தற்காப்பு ... 135
சிறுபான்மையோர் பிரச்னை ... 141
அன்னிய நாடுகளுடன் சம்பந்தம் ... 152
வருமானமும் வரியும் ... 155
தேசியச் சொத்து ... 157
கல்வி ... 159
குற்றமும் தண்டனையும் ... 161
சர்க்கார் உத்யோகங்கள் ... 165
இதர விஷயங்கள் ... 168
முடிவான குறிப்புக்கள் ... 169

CONNEMARA
21 NOV 1948
MADRAS

நூன் முகம்

## எஸ். என். அகர்வால்

ஐக்ய நேச நாடுகள் கடந்த யுத்தத்தில் 'முழு-வெற்றி' அடைந்துவிட்டார்கள் என்பதில் சந்தேகமில்லை. நிபந்தனையற்ற சரணாகதியடையச் செய்து, ஜெர்மனியையும் ஜப்பானையும் அவர்கள் அடிபணியச் செய்துவிட்டார்கள். ஆனால் சண்டையில் 'முழு வெற்றி' யடைந்துவிட்ட நேச தேசத்தார் 'முழு சமாதானத்'தையும் அடைந்துவிட்டார்களா என்பது இனிமேல் ருசுப்படுத்திக் காட்டவேண்டிய விஷயம். ஆனால் அட்லாண்டிக் சாசனத்தை சண்டை முடிவதற்குள் அட்லாண்டிக் சமுத்திரத்திலேயே முழுகடித்துவிட்ட மானங்கெட்ட காரியமும், முன்னிருந்த 'லீக் ஆப் நேஷன்ஸ்' என்ற உதவாக்கரை சங்கத்தை வேறொரு பெயரால் ஸ்தாபித்திருக்கிற வேலையும், 'வர்ஸேல்ஸ்' சமாதான உடன்படிக்கையைக் காட்டிலும் மிக மோசமான 'போட்ஸ்-டாம் அறிக்கை'யும், நேச தேசங்கள் சமாதானத்திலும் வெற்றியடைந்து விடுவார்கள் என்ற ஆசையை வளர்க்கத்தக்க அறிகுறிகள் அல்ல. வெண்டல் வில்கி என்பவர் 'ஒரே உலகம்' என்ற புத்தகத்தில் 118-வது பக்கத்தில் சொல்லுவதுபோல 'சண்டைக் காலத்தில் சித்தியாகாத எந்த நன்மையும் சமாதான காலத்தில் சித்தியாகப் போவதில்லை.' பெர்ல் பக் என்பவர், 'ஆசியாவும் ஜனநாயகமும்' என்ற புத்தகத்தின் 16-வது பக்கத்தில் சொல்வது போல் "பிரிட்டன் தன்னுடைய ஏகாதிபத்யத்தைக் கைவிடாமல் காத்துக்கொள்ளச் சண்டை போடுகிற

ஜனநாயகம்தான்.' மனித வர்க்கத்தின் சரித்திரத்தில் இதைவிடக் குழப்பமுண்டாக்கக் கூடிய ஏமாற்றம் இருக்கமுடியாது. ஏனென்ருல், ஏகாதிபத்யமும் ஜன நாயகமும் ஒன்றுக்கொன்று நேர் விரோதமான விஷயங்கள். ஆனால் பிரிட்டன் இந்த 'இருதலைக் கொள்ளி' யான முறையை நெடுங்காலமாகக் கையாண்டு வருகிறது. அதனால் அது கண்ணியமான முறையில் 'இந்தியாவை விட்டு வெளியேறும்' என்று எதிர்பார்ப்பது வீண். எப்படியிருந்தாலும் இந்தியாவை விட்டுவிடக் கூடாது என்று பிரிட்டன் கொண்டுள்ள விருப்பத்துக்கு விரோதமாக வெகு சீக்கிரத்தில் இந்தியா விடுதலையடையும் என்பதில் எனக்கு எந்தவிதமான சந்தேகமும் இல்லை. ஹெச். ஜி. வெல்ஸ் என்பவர் 'எதிர்காலத்தில் நடக்கப் போகிற விஷயங்கள்' என்ற பெயருடன் எழுதியுள்ள புத்தகத்தில் 'இந்தியாவின்மேல் இங்கிலாந்துக்குள்ள பிடி கொஞ்ச காலத்துக்கு ஜன்னி கண்டதுபோன்ற வேகத்துடன் பிகுவுகாட்டிவிட்டுக் குறைந்து ஒன்று மில்லாமற் போய்விடும்' என்கிருர். இந்த ஜன்னி வேகந்தான் கடந்த மூன்று வருஷங்களாக நடந்து வருகிற தென்றும், அந்த வேகத்தின் முடிவுகாலம் நெருங்கிவிட்ட தென்றும், இப்போது இருந்துவருகிற திக்குத் தெரி யாத அந்தகாரம் விரைவில் நீங்கி, விடுதலை உதயத்தின் வெளிச்சம் வரப்போகிறதென்றும் நான் மனப்பூர்வமாக நம்புகிறேன்.

"ஆசியாக் கண்டத்தில் இவ்வளவு பெரிய நாடான இந்தியாவிற்கு விடுதலையில்லாமல், உலக சமாதானம் என்பது முடியாத காரியம். இந்தியாவின் அடிமைத் தனம், உலகத்திலுள்ள எல்லா தேசங்களுக்குமிடை யில் இருக்கவேண்டிய நம்பிக்கைக்கும் நல்லெண் ணங்களுக்கும் பயங்கரமான அபாயமாக வளர்ந்துவிடும். அதனால் 'சுதந்தரமாக வாழும் சுதந்தரத்தை' இந்தியா விற்கு மட்டும் இல்லையென்று சொல்லிவிட எந்த தேசத்

நாலும் இயலாது" என்று லூயி பிஷர் 'காந்தியுடன் தங்கிய ஒரு வாரம்' என்ற கட்டுரையில் எழுதுகிருர்.

இதிலிருந்து, இயல்பாக எழுகின்ற கேள்வி என்ன வென்ருல்: 'சுதந்திர இந்தியாவிற்கு எந்தவிதமான அரசியல் அமைப்பு இருந்தால் நல்லது?' என்பதே. ஸ்விட்ஜர்லாந்து, அமெரிக்க ஐக்ய நாடுகள், ருஷ்யா முதலான மேல் நாடுகளைப் பின்பற்றி அங்குள்ளதைப் போன்ற ஒரு அரசியல் அமைப்பை ஏற்படுத்தலாமா? அல்லது நம்முடைய சொந்த மனோதர்மம், பண்பு, பழக்க வழக்கங்கள், ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்ட ஒரு நூதன அரசியலமைப்பை உண்டாக்கிக் கொள்ளலாமா? என்னுடைய மனதிற்கு இந்தக் கேள்விதான் எல்லாவற்றிலும் முக்கியமானது; இதற்குத் தகுந்த பதிலை, அரசியல் அதிகாரம் நமக்கு உண்மையாகவே கிடைக்கப்போகிற வரைக்கும் ஒத்திப்போடாமல், இப்போதே இங்கேயே ஆராய்ந்து அறிந்துகொள்ள வேண்டியது அவசியம்.

இந்தியா ஒரு வெகு புராதனமான நாடு. அதன் சரித்திரத்தில் காணப்படுகிற பழைய அரசியல் முறைகளை கவனித்தால், கிறிஸ்து பிறப்பதற்குப் பல ஆண்டுகளுக்கு முன்னாலேயே, ஏறத்தாழ இப்போது நாம் எண்ணக் கூடிய எல்லாவிதமான அரசாட்சி முறைகளையும் இந்தியா அனுபவித்திருக்கிற அறிகுறிகள் தெரிகின்றன. ஐரோப்பாவும் அமெரிக்காவும் நாகரீகம் என்பதன் எல்லையை எட்டிக்கூடப் பார்க்காதிருந்த காலத்திலேயே இந்திய தேசம் முடிமன்னர் ஆட்சி, யதேச்சாதிகாரம், ஜனநாயகம், அரசனில்லா பொது - ஜனத் தலைவர்களின் ஆட்சி, நாதனில்லாத அராஜகம், என்று சொல்லத்தக்க எல்லாவிதமான ஆட்சி முறைகளையும் கையாண்டு பரீட்சை செய்து முடித்திருக்கிறதாக அறிகிருேம். கே.பி. ஜெயஸ்வால் என்பவர் தாம் எழுதியுள்ள 'ஹிந்துக்களின் அரசுமுறை', என்ற புத்தகத்தில், பவ்ஜ்யா (வெறும் சுகபோகங்களையும் பிரஜைகளையும் காப்பது).

ஸ்வராஜ்யா (அங்கங்கே அவரவர் ஆட்சி), வைராஜ்ய ராஷ்ட்ரிகா (அன்னியர் ஆதிக்யம்), த்வைராஜ்யா (அரசனும் குடிகளும் இரட்டை ஆட்சி), அராஜகா (சரியான அரசில்லாத குழப்பம்) என்று பலவித அரசுமுறைகள் புராதன இந்தியாவில் இருந்ததாகச் சொல்லுகிருர். இவற்றிற் சில முறைகள், இந்தியாவைத் தவிர வேறு நாடுகளில் அனுஷ்டிக்கப்பட்டதில்லை யெனத் தோன்றுகின்றது. ஆகையினுல், இந்தியா பழையகாலத்திலிருந்து பலவிதமான அரசியல் முறைகளுக்கும் உற்பத்திச் சாலையாக இருந்திருப்பதாகக் கொள்ளலாம். ஆகையினுல், இன்னும் குழம்பிக்கொண்டே தெளிவடையாமல் இருக்கிற மேல்நாட்டு அரசியல் முறைகளைக் கலந்த ஒரு அரசியல் அமைப்பை இந்தியாவிற்குத் தயார் செய்வது, இந்த நாட்டை அவமதிப்பதுமட்டுமில்லாமல், மனித வர்க்கத்தின் சமூக சமுதாய வளர்ச்சியின் சாஸ்திரத்தைச் சிறிதும் அறியாமையும் ஆகும். ஏனெனில், அரசியல் அமைப்புகளெல்லாம் சமூக அமைப்பிலிருந்தே வளர வேண்டிய விஷயங்கள்; ஒரு நாட்டின் சொந்த உணர்ச்சிகளுக்கு அன்னியமான ஆட்சிமுறையை அதில் திணிக்க முயல்வது சரியல்ல. அரசியல் முறைகளை ஒரு மண்ணிலிருந்து இன்னொரு மண்ணில் பிடுங்கி நடமுடியாது: அப்படிப் பிடுங்கிநட முயல்வதும் பிழை. ஸர் ஜான் மாரியட் என்பவர் 'சர்வாதிகாரமும் ஜனநாயகமும்' என்ற நூலில் சொல்லுகிறபடி 'அரசியல் திட்டங்கள் ஏற்றுமதி செய்யக்கூடிய பொருள்கள் அல்ல'. ஒவ்வொரு தேசத்திற்கும் அதனுடைய 'ஆன்மா' என்று சொல்லத் தகுந்த தனித்தனி மனேதர்மமும் பண்பும் நாகரீகமும் இருக்கின்றன. இந்தத் தனித்தன்மை அந்தந்த நாட்டின் வாழ்விற்கான எல்லாத் துறைகளிலும் பரிணமிக்கச் செய்து, பாதுகாக்கப்படவேண்டும். இயற்கையிலிருந்து விரிகின்ற ஆற்றலும் வேறுபாடுகளும்தாம் வாழ்க்கையின் ஜீவன்; சொந்த முயற்சிகள் இல்லாமல், பிறரைப் பின்

பற்றி, எப்போதும் ஒரேமாதிரி இருந்து காலங்கடத்தி விடக் கருதுவது மரணத்துக்குச் சமானம்.

நான் சொல்லுவதைத் தப்பர்த்தம் செய்துகொள்ளக் கூடாது. பிற நாட்டு அனுபவங்களைக் கவனிக்காமல், குருட்டுத்தனமாக ஒருவித குறுகிய மனப்பான்மையுள்ள தேசீயத்தை வளர்க்க வேண்டுமென்று நான் யோசனை கூறுவதாகக் கொள்ளக்கூடாது. நான் சொல்லுவது அதுவன்று. பின் என்னவென்றல்: நெடுநாட்களாக மேல்நாட்டாருக்கு மட்டமானவர்களாக நம்மை நாமே கருதி வந்துவிட்டோம். அந்த மனப்பான்மையை விட்டொழிக்கக் காலம் வந்துவிட்டது. நமக்குத் தேவையான எல்லாவற்றிற்கும் மேல்நாடுகளையே எதிர்பார்ப்பதை விட்டுவிட்டு, நம் தேவைகளை நம் நாட்டுக்குள்ளேயே தேடப் பழகவேண்டும். நாம் மேல்நாட்டாரைப் பின்பற்றி எல்லா விஷயங்களிலும் குரங்குகளைப்போல் வேஷம் போட்டு நடித்தது போதும். இனிமேலாவது நம்முடைய கலாசாரங்களிலும் சமுதாய ஸ்தாபனங்களிலும் உண்மையாக உள்ள சிறப்புகளை உணர்ந்து நியாயமான முறையில் பெருமை கொள்ளுவோம்.

அதுமட்டுமன்று. ஒருபடி அதிகமாகவும் சொல்ல வேண்டியிருக்கிறது. இந்தியாவில் பல நூற்றுண்டுகளாக வெகு பக்குவமாகப் பயிர் செய்து, பாதுகாக்கப்பட்டு வந்திருக்கிற எல்லா அதிகாரமும் ஒரே இடத்தில் இல்லாத. கிராம சமுதாயம்' என்னும் ஜனநாயக முறை, அழிந்துபோன ஒரு பொருளின் மிச்சமாகக் கிடைத்துள்ள ஒரு அடையாளமன்று. அன்றியும் அது, கட்டுப்பாடான ஒரு ஜாதியாருக்குமட்டும் இருந்துவந்த சமதர்ம உணர்ச்சியின் உதிர்ந்துபோன மிச்சமும் அன்று. ஆனல் அது வெகு ஆழ்ந்த சிந்தனையும் நெடுங்காலப் பரிசோதனையாலும் கிடைத்த அனுபவமாகும். நம்முடைய நாட்டில் எண்ணிக்கைக் கடங்காத கிராம சமுதாயங்களில் இருந்த ஸ்தல சுயராஜ்யமுறை, அநேக நூற்றுண்டு

களாக இந்த நாட்டில் நடந்திருக்கிற அரசியல் பிரளயங்களுக்கெல்லாம்கூட அசையாமல் இருந்து வந்திருக்கிறது. இன்றைக்கும்கூட மிகவும் உயர்ந்த ரகமான ஜனநாயக முறையை ஸ்தாபிக்கப் பயன்படுத்திக் கொள்ளத்தக்கது. பழைய காலத்தில் இருந்த ஸ்தல சுய ஆட்சிமுறையை, அப்போது இருந்தபடியே இப்போதும் புகுத்தவேண்டும் என்பது என் எண்ணமன்று. சமூக வாழ்க்கையில் இக்காலத்திலுள்ள நிலைமைகளுக்கு ஏற்றவாறு பல திருத்தங்களைச் செய்துகொள்ளத்தான் வேண்டியிருக்கும்.

இருபதாவது நூற்றுண்டில் இந்தியாவின் அரசியல் அமைப்பைச் சீர்திருத்துவதற்காகச் செய்யப்பட்ட முயற்சிகளைச் சிறிது கவனிப்போம். 1909-லும், 1919-லும் 1935-லும் அமுலுக்குக் கொண்டுவரப்பட்ட அரசியல் திருத்தங்கள் எல்லாரும் அறிந்தவையே. பிரிட்டிஷ் அரசியல் நிபுணர்கள் 'அரசியல் திட்டங்களை இறக்குமதி செய்யமுடியாது' என்று சொல்லுகிறதற்கு விரோதமாக மேற்சொன்ன சீர்திருத்தங்கள் யோசனையில்லாமல் இங்கிலாந்திலிருந்து இந்தியாவிற்கு ஏற்றுமதி செய்யப்பட்டன. அந்தச் சீர்திருத்தங்களுக்கும் இந்த நாட்டின் புதுமலர்ச்சி எண்ணங்களுக்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை. இந்த நாட்டு மக்களுக்குச் சொந்தமாக உள்ள உணர்ச்சிகளுக்கும் பண்புகளுக்கும் பழக்க வழக்க நாகரீகத்துக்கும் ஒத்ததான முறைகளை விருத்தி செய்யவேண்டும் என்பதில் முதன்முதல் கவனத்தைச் செலுத்தின தலைவர் மகாத்மா காந்திதான். 1908-ல் அவர் எழுதிய 'ஹிந்த் ஸ்வராஜ்' என்ற புத்தகத்தில், இந்தியாவின் எதிர்கால அரசியல் அமைப்பு எந்த அஸ்திவாரத்தின்மேல் கட்டப்பட வேணும் என்பதற்கு ஆதாரமான மூலக் கொள்கைகள் அடங்கியிருக்கின்றன. அதன் பிறகு 1916-ல் "காங்கிரஸ் - லீக்" திட்டம் தயாரிக்கப்பட்டது. இந்தக் கூட்டுத் திட்டத்தில் புதிய கொள்கைகள் ஒன்றும் இல்லையென்றாலும், இது பிரிட்டிஷ் பார்லிமெண்ட்

முறைகளைப் பின்பற்றியே செய்யப்பட்டதென்றாலும், ஹிந்துக்களும் முஸ்லிம்களும் திருப்தியுடன் ஒத்துக் கொள்ளத் தக்கதாக இருக்கவேண்டுமென்ற உண்மையான நல்லெண்ணத்தினால் வகுக்கப்பட்டது. பிறகு, 1922-ல் நடந்த கயா காங்கிரசுக்குப் பின் சித்ரஞ்சன் தாஸூம், டாக்டர் பகவான் தாஸூம்சேர்ந்து, 'ஸ்வராஜ்ய திட்டத்தின் வரிவடிவம்' என்ற ஒரு திட்டத்தை தயார் செய்தார்கள். ஆனால் 1924-25-ல் பல முக்யமான அரசியல் தலைவர்களுடன் கலந்து ஆலோசித்து, டாக்டர் அன்னிபெஸன்ட் அம்மையார்தாம் 'காமன் வெல்த் ஆப் இந்தியா மசோதா' என்ற அரசியல் திட்டத்தை வெளியிட்டு, அரசியல் திட்ட முயற்சிகளுக்குப் பூர்வாங்கமான முன்னணி வேலையை முடித்துவைத்தார். இந்தியா பிரிட்டிஷ் ஏகாதிபத்யத்துக்கு உட்பட்ட ஒரு குடியேற்ற நாட்டு அந்தஸ்துடன் சுய ஆட்சி நடத்தவேண்டும் என்றுதான் டாக்டர் அன்னிபெஸன்ட அம்மையார் விரும்பினார். எனினும் அவர், இந்தியாவில் பழங்காலங்களில் இருந்துவந்த 'கிராமப் பஞ்சாயத்'துக்களை அடிப்படையாகக் கொண்டுதான் இந்தியாவின் எதிர்கால அரசியல் அமைக்கப்பட வேண்டுமென்பதையே ஆதரித்தார். அதற்குப் பிறகு 1928-ல் 'நேரு யாதாஸ்து' என்று வழங்கப்பட்ட சர்வ கட்சி மகாநாட்டின் திட்டம் வெளியாயிற்று. 1939-ல் காந்திஜியின் ஆலோசனையுடன் அவந்தி சமஸ்தானத்துக்கென்று தயார் செய்யப்பட்ட புது அரசியல் திட்டமும் இந்த அரசியல் அமைப்புகளைப்பற்றிய முயற்சிகளில் இன்னொரு முக்ய அம்சம். அந்தத் திட்டம் அந்த சமஸ்தானத்தில் பஞ்சாயத்து ஆட்சியை முற்றிலும் ஜனநாயக முறையில் ஸ்தாபித்தது. அரசியல் திட்டங்களைத் தயாரிப்பதில் கடைசியாகச் செய்யப்பட்டுள்ள முயற்சி, ஸர் தேஜ் பஹதூர் ஸப்ருவின் தலைமையில் அமைக்கப்பட்ட சமரசக் கமிட்டியின் பிரசித்திபெற்ற யாதாஸ்துதான்.

இத்தனையும் இருந்தாலும், இந்தியாவின் பழக்க வழக்க மனுதர்மப் பண்புகளை அடிப்படையாகக் கொண்ட இன்னொரு புது அரசியல் திட்டத்தை உருவாக்கவேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்கிறது. துர் அதிர்ஷ்டத்தினுல் நம்முடைய தலைவர்களில் பெரும்பாலோர், பூர்வகாலங்களில் இந்தியாவில் இருந்த அரசியல் ஸ்தாபனங்களை ஆராய்ந்தறிய அக்கறை கொள்ளவில்லை. தேசீய மறுமலர்ச்சிக்கு அவசியமான இந்தத் துறையில் கவனம் செலுத்தி வற்புறுத்தி வருகின்றவர் காந்திஜி ஒருவர்தாம். அதனுல் சுயராஜ்யத்திற்கு வேண்டிய ஒரு சுதேசி அரசியல் திட்டத்தை வகுக்க வேண்டிய அவசியத்தைப்பற்றி நான் காந்திஜியுடன் கலந்து ஆலோசனை கேட்டேன். அப்படிப்பட்ட ஒரு திட்டத்தை வகுக்கவேண்டிய அவசியத்தை அவர் முற்றிலும் ஒத்துக்கொண்டு, அதற்கான ஒத்தாசைகளைச் செய்து எனக்கு வழிகாட்டவும் அன்போடு இசைந்தார். இந்திய நாட்டின் பரம்பரைப் பண்புகளுக்கும் நாகரீகத்துக்கும் சின்னமாகவும் செயலாளராகவும் காந்தியடிகளே விளங்குவதால், இந்த திட்டத்துக்கு 'காந்தீய அரசியல்' என்று பெயர் சூட்டத் தீர்மானித்தேன். மேலும், இதிலுள்ள எல்லா விஷயங்களையும் அவருடன் விவாதித்து, இந்த நாட்டின் அரசியல் அமைப்பைப் பற்றி அவருக்குள்ள அபிப்பிராயங்களைச் சரியாக எடுத்துக்காட்ட எல்லா முயற்சிகளும் செய்யப்பட்டிருக்கின்றன. ஆனுலும் இதிலுள்ள ஒவ்வொரு சொல்லுக்கும் ஒவ்வொரு கருத்துக்கும் நான் காந்திஜியை உத்தரவாதியாக்க முடியாது. முடிவான பொறுப்பு முற்றிலும் என்னுடையதுதான்.

இந்தச் சிறு நூல், நம்முடைய நாட்டில் உடனே அமுலுக்குக் கொண்டுவரத் தகுந்த ஒரு பரிபூரணமான அரசியல் திட்டத்தை வகுத்துவிட்டதாகப் பாசாங்கு கூடப் பண்ணமுடியாது. சுதந்தர இந்தியாவிற்கு இனி

மேல் வேண்டியிருக்கிற அரசியல் சட்டத்தில் அமைய வேண்டிய அடிப்படையான நோக்கங்களும் கொள்கைகளும் மட்டும்தான் இதில் சொல்லப்பட்டிருக்கின்றன. அதிகாரங்களை யெல்லாம் ஒரே மத்ய இடத்தில் குவிக்காமல், அங்கங்கே பிரித்துக் கொடுத்து நடத்தப்படுகிற ஜனநாயகம் வெறும் கற்பனுலோகத்தைச் சேர்ந்ததன்றுவென்பதை நான் அழுத்தமாகச் சொல்லவேண்டியிருக்கிறது. அது நடைமுறைக்கு மிகவும் அநுபவ சாத்தியமானதும் அவசியமானது மாகும். பொதுத் தேர்தலுக்குப் பிறகு, அரசியல்திட்டத்தை நிர்ணயிக்கவேண்டியிருக்கிற 'அரசியல் அமைக்கும் கமிட்டி' நம்முடைய நாட்டிற்குத் தகுதியான ஒரு திட்டத்தை நிர்மாணிக்கவேண்டிய நெருக்கடியை சமாளிக்க வேண்டிவரும். அந்தச் சமயத்தில் நாம் வகுக்கப்போகிற அரசியல் திட்டம் இந்த நாட்டின் பழக்க வழக்கப் பண்புகளுக்கும் சுதேச மனோதர்மத்துக்கும் ஒத்ததாக இருக்கவேண்டும் என்ற சிந்தனையைத் தூண்டிவிட இந்தப் புத்தகம் உபயோகப்பட்டு, வெற்றி பெறுமானல், அதையே என் முயற்சிக்குத் தக்க பரிசாகக் கொள்ளுவேன்.

# அடிப்படையான கொள்கைகள்

குற்றமில்லாத ஒரு அரசியல் ஸ்தாபனத்துக்கு அவசியமான மூலக் கொள்கைகளையெல்லாம் ஒன்றுவிடாமல் சொல்லிவிடக்கூடிய ஒரு திட்டத்தை எழுதிவிட்டேன் என்கிற எண்ணம் எனக்குக் கொஞ்சங்கூட இல்லை. இருந்தாலும், உறுதியாக நிற்கக்கூடிய ஒரு அரசாங்கத்தை ஏற்படுத்த அடிப்படையான சில கொள்கைகளைமட்டுமாவது அலசிப்பார்த்து ஆராய வேண்டியது அவசியம். அப்படிப்பட்ட மூலக்கொள்கைகளை விளக்கிக்கொள்ளாவிட்டால், எந்த விதமான அரசியல் அமைப்பையும் திட்டப்படுத்த முயல்வது அர்த்தமில்லாத வீண் முயற்சியே ஆகும்.

முதலில் நாம் தெளிவாகத் தெரிந்துகொள்ள வேண்டியது என்னவென்றால்: எல்லா தேசங்களுக்கும் எல்லாக் காலத்துக்கும் 'மிகச் சிறந்த அரசுமுறை' என்ற எதுவும் இருக்க முடியாது என்பதே. அரசியல் அமைப்பை, அந்தந்த நாட்டின் இறந்த காலத்துப் பரம்பரைப் பழக்க வழக்கங்களை எண்ணிப் பார்த்து, நிகழ்காலத்து சமய சந்தர்ப்ப நிலைமைகளையும் கவனித்துத்தான் நிச்சயிக்க வேண்டும். 'உலகத்தில் அரசாங்கங்கள் எதற்காக ஏற்படுத்தப்படுகின்றனவோ அந்தக் காரியத்தை, எந்த நாட்டில் எந்தக் காலத்தில், எந்த அரசாங்கம் - மிகவும் வெற்றிகரமாகச் செய்து முடிக்கிறதோ அந்த அரசாங்கம் தான், அந்தக் காலத்துக்கு, அந்த நாட்டிற்கு மிகவும் சிறந்த அரசாங்கம்' என்று அரிஸ்டாட்டல் என்பவர்

'யதேச்சாதிகாரமும் ஜனநாயகமும்' என்ற புத்தகத்தின் 217-வது பக்கத்தில் எழுதுகிறார். இந்த நியாயத்தை முதன் முதல் வற்புறுத்திச் சொன்ன சிந்தனையாளர் அவர் தான் போலும். ஒவ்வொருவனுடைய சுபாவத்திலும் இயற்கையாக அமைந்திருக்கிற சக்திகள் எல்லாம் பூரண வளர்ச்சி பெற்று, அவன் நல்வாழ்வு வாழ்வதற்கு உதவியாக இருக்கச் செய்யவேண்டியதுதான் அரசாங்கத்தின் வேலை. 'அவரவர்களுடைய சந்தர்ப்பங்களுக்குத் தக்கபடி சிறந்த முறையில் அரசாளப்படுகிறவர்கள் தான் சிறந்த வாழ்க்கை வாழ முடியும்' (அரிஸ்டாட்டலின் 'அரசியல்'). ஆகையினால், ஒவ்வொரு அரசாங்கத்தையும் அதற்குச் சொந்தமான சட்டதிட்டச் சிறப்புகளைக் கொண்டு அளந்துவிடாமல், 'அந்த அரசாங்கத்தினால் அங்குள்ள ஜனங்கள் எவ்வளவு நல்ல வாழ்க்கை நடத்துகிறார்கள் என்ற அளவைக்கொண்டு தான் மதிப்பிட வேண்டும்' என்று புரொபெஸர் ஜோட் என்பவர் 'நம் காலத்துத் தத்துவம்' என்ற நூலில் 331-ம் பக்கத்தில் சொல்லுகிறார். உலகத்திலுள்ள எல்லா அரசாங்கங்களும் அவற்றின் நோக்கத்தில் ஒத்திருக்கலாம். ஆனால் அவற்றின் ஆட்சி முறைகள் அங்கங்கே உள்ள சூழ்நிலைகளுக்குத் தகுந்தபடி வேறு பட்டுத்தான் இருக்க முடியும்.

## அரசாங்கத்தின் நோக்கம்

அப்படியானால் அவ்வரசாங்கம் எதற்காக? உண்மையில், இந்தக் கேள்வியைச் சுற்றிச் சுற்றித்தான் அரசியல் யோசனைகள் எல்லாம் புராதன காலங்களிலிருந்து இந்த நாள்வரையிலும் ஓயாது வட்டமிட்டுக் கொண்டிருக்கின்றன. கிரேக்கர்களுக்கு அரசாங்கம்தான் வாழ்க்கையின் உயர்ந்த லக்ஷியம். மற்றவையெல்லாம் அதற்குள் அடக்கம். ஒவ்வொரு தனி மனிதனுடைய எல்லா முயற்சிகளும் செய்கைகளும், ஆறுகளெல்லாம் கடலில் கலந்துவிட வேண்டியவை போல, அரசாங்கத்தைப் போய் அடைய

வேண்டியவை. (கில்கிரைஸ்ட் என்பவரின் 'அரசியல் சாஸ்திரத்தின் கொள்கைகள்' பக்கம் 460). 'எதீனியர்களுக்கு, தனி மனிதனுடைய குடித்தனம்தான் எல்லாவற்றிற்கும் மேலான கீர்த்தியாக இருந்தது. அவர்களுக்கு நகர வாழ்க்கைதான் மேலான ஒழுக்கமாகவும், சமுதாய தர்மமாகவும், பொருளாதாரமாகவும், அரசியல் அறிவாகவும் இருந்தது' (புரொபெஸர் சபைன் என்பவரின் 'அரசியல் தத்துவத்தின் சரித்திரம்' ப. 13). நகர வாழ்க்கைதான் அவர்களுடைய பொது நலத்தின் சின்னமாகக் கருதப்பட்டது. அதனால் கிரேக்கர்களுடைய அரசியல் தத்துவங்களின் அடிப்படை முழுதும் பொது வாழ்க்கையில் பிணக்கங்கள் வராமல் இருக்கவேண்டுமென்பதைத்தான் பிரதானமாகக் கொண்டதாக இருந்தன. பிளேடோ என்பவர் அரசாங்கம் ஒரு அண்டமாகவும், ஒவ்வொரு தனி மனிதனும் அவனவனுடைய தகுதிகளுக்குத் தக்கபடி அந்த அண்டத்தில் இடம் பெற்று அந்த அரசாங்கத்துக்கு வேண்டிய கடமைகளைச் செய்ய வேண்டியவனாகவும் இருக்க விரும்பினார். அரிஸ்டாட்டல் என்பவர் 'அரசாங்கங்களின் வேலையெல்லாம், குடிகளின் ஒழுக்கத்தைப் பாதுகாக்க வேண்டியதுதான். அரசாங்கம் என்பது சம அந்தஸ்துள்ள தனித்தனி மனிதர்கள் சேர்ந்த ஒரு கூட்டுறவுச் சங்கம்தான். எல்லாருமாகச் சேர்ந்து, கூடிய மட்டும் நல்வாழ்வு வாழ முயல்வதே அரசாங்கம்' என்று நம்பினார். ரோமர்கள் அரசாங்க அமைப்புகளின் பலா பலன்களைப்பற்றி அதிகம் கவலை கொள்ளவில்லை. ஏனெனில் அவர்களுடைய சக்தியில் பெரும்பகுதியும் ரோம ஏகாதிபத்யத்தை விஸ்தரிப்பதற்கே செலவாய்ப் போய்விட்டது. ஐந்தாவது நூற்றுண்டில் ரோமராஜ்யம் அழிந்துபோன பிறகு, 15-16 வது நூற்றுண்டுகள் வரையிலுமுள்ள 'இடைக்காலத்தில்' தோன்றிய செல்வாக்குள்ள பாதிரிமார்கள் 'அரசாங்கம் என்பது கிறிஸ்தவ மதத்தைப் பாதுகாப்பதற்காக கடவுள் கைக்

கொண்டுள்ள ஆயுதம் என்று' கருதினார்கள். ஹாப்ஸ் என்பவருடைய அபிப்பிராயத்தில் 'ஜனங்களிடையே ஒழுங்கையும் சமாதானத்தையும் சொத்துரிமையையும் பாதுகாப்பதே அரசாங்கத்தின் வேலை.' லாக் என்னும் எழுத்தாளர், 'மக்களின் உயிரையும், சுதந்தரத்தையும், உடைமைகளையும் காக்கவேண்டியதே அரசாங்கத்தின் கடமை' என்கிறார். ரூஸோ என்பவர் 'அரசாங்கம் என்பது பொது ஜன விருப்பங்களைப் பூர்த்திசெய்ய நமக்குள் ஏற்படுத்திக் கொள்ளும் ஒரு சமூக ஒப்பந்தம்' என்கிறார். ஹெகல் என்பவர் அரசாங்கம்தான் எல்லாவற்றிலும் மேலான விஷயம் என்ற கிரேக்க அபிப்பிராயத்தை மீண்டும் பரவச் செய்தார். அவர் 'அரசாங்கம் இருப்பதுதான் உலகத்தில் கடவுளின் நடமாட்டத்தைக் காட்டுவது. அரசாங்கம்தான் உலகத்திலுள்ள எல்லா சக்திகளுக்கும் மேலானது. அரசாங்கத்தின் நோக்கம் அரசாங்கம்தான். அரசாங்கத்தின் பயனும் அரசாங்கமேதான்' என்று எழுதினார். பெந்தம் என்பவர் 'பெரும்பாலும் குடிகளுக்கு நலன்களைத் தேடித் தருவதற்காகத்தான் அரசாங்கம் இருக்கிறது' என்றார். ஹெர்பட் ஸ்பென்ஸர் என்பவருக்கு 'அரசாங்கம் என்பது மனிதர் ஒருவருக்கொருவர் செய்யவேண்டிய ஒத்தாசைகளை உறுதி கூறிக்கொள்வதற்காக அமைக்கப்படுகிற ஒரு கூட்டுறவுச் சங்கம்'. ஜான் ஸ்டூவர்ட் மில் என்பவர் 'தனித்தனி மனிதருடைய சுதந்தரத்தைக் காக்க வேண்டியதுதான் அரசாங்கத்தின் கடமை' என்று வெகு ஆவேசத்துடன் எழுதி வந்தார். மார்க்ஸ் என்பவர் 'மேல் வகுப்பு, கீழ் வகுப்பு என்ற வகுப்பு வேற்றுமை இல்லாத ஒரு சமுதாயத்தை உண்டாக்கமட்டும் தான் அரசாங்கம் தேவை என்றும், அப்படி வகுப்பு வித்தியாசமில்லாத ஒரு சமுதாயம் ஏற்பட்டபின் அரசாங்கம் என்பது ஜனங்களோடு ஜனமாகக் கரைந்துபோக வேண்டும் என்றும் எதிர்பார்த்தார். நம்முடைய காலத்திலிருக்கிற புரொப

ஸர் லாஸ்கி என்பவர் 'அரசாங்கமென்பது, பொது வாழ்வைச் செழிப்புள்ளதாக்க முயலும் ஒரு சங்கம்' என்கிறார். (அரசியல் இலக்கணம் ப. 37). பெர்னார்ட் ஷா என்பவர் 'ஒரு வகுப்புக்கு, அல்லது சில வகுப்புகளுக்கு, என்றில்லாமல் ஒரு நாட்டின் ஜனத்தொகையில் அடங்கின எல்லாருக்கும் எவ்வளவு அதிகமான சுக சௌகரியங்களைச் செய்து கொடுக்க முடியுமோ, அவ்வளவையும் செய்துகொடுக்க முயல்வதுதான் அரசாங்கம்' என்கிறார். வெல்ஸ் என்பவர் 'மக்களுடைய சுதந்தரங்கள், சுகாதாரம், நல்வாழ்வு முதலிய மனித உரிமைகளை ஊர்ஜிதப்படுத்துகிற ஒரு சர்வதேசச் சட்டத்தால் அமுல் நடத்தக் கூடியதாக உலகத்துக்கெல்லாம் ஒரே அரசாங்கத்தை உண்டாக்க வேண்டு'மென்று உபதேசிக்கிறார். ('உலகத்தின் புது அமைப்பு' - ப. 122).

இந்தியாவில் முற்காலத்திலிருந்த அரசியல் கருத்துக்களெல்லாம் முக்கியமாக - ராமாயணம் மகாபாரதம் என்ற இரண்டு இதிகாசங்களிலும், மனுஸ்மிருதியிலும், கௌடில்யாவின் அர்த்த சாஸ்திரத்திலும், சுக்ராச்சாரியாரின் நீதிசாரம் என்ற நூலிலும் அடங்கியிருக்கின்றன. ராமாயணத்தில், குடி ஜனங்களெல்லாம் சந்தோஷமாகவும் சமாதானமாகவும் செழிப்பாகவும் இருந்ததாகச் சொல்லப்படுகிற ஒரு மிகவும் விரும்பத்தகுந்த அரசாக்ஷி வர்ணிக்கப்படுகிறது. மகா பாரதத்தில் சாந்தி பர்வத்தில் பீஷ்மர் ஒரு அரசாங்கத்தின் கடமைகளை விவரிக்கிறார். அதில் ஒரு அரசாங்கத்தின் முக்ய நோக்கம் 'பிரஜைகள் தத்தம் கடமைகளைச் செய்துகொண்டு, சந்தோஷமாக, சமாதானத்துடன், நீதி தவறாத வாழ்க்கை நடத்தும்படி அவர்களுக்குப் பாதுகாப்பளிப்பதே யாகும்' என்று சொல்லுகிறார். கௌடில்யாவும், அரசன் அல்லது அரசாங்கம் செய்யவேண்டிய பிரதான கடமையானது குடிகளின் சந்தோஷமான வாழ்க்கையையும் சௌக்கியங்களையும் கவனிக்க வேண்டியதுதான் என்று வலியுறுத்துகிறார்.

குடிகளின் சுகத்தில்தான் அரசனுடைய சுகம் அடங்கியிருக்கிறது. அவர்களுடைய க்ஷேமந்தான் அரசனுடைய க்ஷேமம், என்று தம் 'அர்த்த சாஸ்திரத்தில்' சொல்லுகிருர். 'சுக்ரநீதி' அரசனைப் 'பாதுகாப்பாளனுகவும் உபகாரியாகவும்' வர்ணிப்பதுடன்; 'ஒவ்வொரு பிரஜையும் தன்னுடைய கடமைகளைச் சரியாகச் செய்யவும் பிறருடைய அலுவல்களில் தலையிடாதிருக்கவும் செய்ய வேண்டிய வேலை அரசனுடையது' என்று சொல்லுகிறது.

## சர்வாதிகார அரசாங்கமும் - சர்வாதிகார மனிதனும்

அரசாங்கங்களின் பயனையும் கடமைகளையும் பற்றி இதுவரையிலும் சொல்லிவந்த ஐரோப்பிய அரசியல் கோட்பாடுகளையும் இந்திய அரசியல் கோட்பாடுகளையும் கவனித்துப் படித்துப் பாகுபாடு செய்வோமானுல், ஒன்றுக்கொன்று முற்றிலும் வேருகிய இரண்டு விதமான மனப்போக்குகள் இருப்பதைக் கண்டு கொள்ளலாம். இவற்றுள், ஒரு போக்கைச் சேர்ந்த சிந்தனையாளர்கள், அரசாங்கத்துக்கு அதிக முக்யத்வம் கொடுத்து, தனி மனிதனுடைய சுதந்தரம் அரசாங்க அதிகாரத்துக்கு அடங்கினதுதான் என்று கருதுகின்ருர்கள். அவர்கள் அரசாங்கத்தை தெய்வீக பதவிக்குத் தூக்கி வைத்துக் கொண்டாடி, தனிமனிதனைத் தாழ்த்துகின்ருர்கள். அவர்களுடைய எண்ணத்தின்படி அரசாங்கத்தின் பயன் அந்த அரசாங்கத்துக்கு அடங்கின குடிமக்களை, அரசாங்கமென்னும் அதிகார சக்திகள் மிகுந்த ஒரு அரசியல் எந்திரத்திலுள்ள சக்கரத்தின் வெறும் பல்லுகளாக மட்டும் இருக்கப் பழக்கி வைக்க வேண்டும் என்பது தான். இந்த மனப்போக்கு, தனியதிகாரம், யதேச்சாதிகாரம், சர்வாதிகாரம் முதலியவற்றில்தான் கொண்டு போய்ச் சேர்க்கின்றது.

மற்றொரு மனப்போக்குள்ள அரசியல் ஆலோசனைக் காரர்கள், மனிதனுடைய 'மனுஷத்தனத்தைக் கொண்டு தான் எதையும் அளக்க வேண்டும்' என்பவர்கள். அவர்களுக்கு தனித்தனி மனிதனுடைய சுதந்திரமும் வளர்ச்சியுந்தான் மற்றெல்லாவற்றிலும் பிரதானம். அவர்களுடைய கருத்தின்படி அரசாங்கத்தின் வேலையெல்லாம் தனிமனிதனுடைய உரிமைகளைப் பாதுகாக்க வேண்டியதொன்றே. அவர்கள், மனுஷத்தனத்தை ஒரு கருவியாக எண்ணுமல் லக்ஷியமாக மதிக்கிருர்கள். கவுண்ட் கூடன் ஹோவ் காலெர்ஜி என்பவர் தாம் எழுதியுள்ள 'சர்வாதிகார அரசாங்கமும் சர்வாதிகார மனிதனும்' என்ற நூலில் இந்த இரண்டுவிதமான அரசியல் மனப்போக்குகளையும் 'ஸ்பார்ட்டன் ஜாதியாரின் லக்ஷியமான சர்வாதிகார அரசாங்கம், என்றும் 'ஏதீனியன் ஜாதியாரின் லக்ஷியமான சர்வாதிகார மனுஷத்தனம்' என்றும் பாகுபாடு செய்கிருர். ஸ்பார்ட்டர்களின் நாட்டில், மனிதன் அரசாங்கத்துக்காக உயிர் வாழ்ந்தவன். ஏதென்ஸில் அரசாங்கம் மனிதனுக்காக ஏற்படுத்தப்பட்டதாக இருந்தது. இந்த இரண்டுவித அரசியல் கோட்பாடுகளும் 'கூட்டுத்தன்மை' என்றும் 'தனித்தன்மை' என்றுங் கூடப் பெயரிடப்பட்டிருக்கின்றன. ஆனல் 'இந்த இரண்டுவித மனப்போக்குகளும் ஒன்றுக்கொன்று விரோதம் பாராட்டாமல், இனிமையான முறையில் கலந்துவிடுவதுதான் மனிதவர்க்கத்துக்கு நலம்'. அரசாங்கங்களின் பயனும் கடமையும் இந்தத் 'தனி மனித' நலங்களையும் 'கூட்டுத்தன்மை' நலங்களையும் ஒன்றுக்கொன்று உறவாகக் கலந்துவாழச் செய்வனவாகத்தான் இருக்கவேண்டும். இதை வேறு வார்த்தைகளிற் சொல்ல வேண்டுமானல் அரசாங்கத்தின் நோக்கம் 'சுதந்தரம்' என்பதையும் 'அதிகாரம்' என்பதையும் சமரசப் படுத்துவதாக இருத்தல்' வேண்டும். தனி மனிதனுடைய நலமும் தொகுதிகளின் நலமும் ஒன்றுக்கொன்று

ஒத்தாசையாக இருப்பதற்கான வசதிகளைச் செய்து கொடுத்து, விருத்தி செய்து, பலப்படுத்த வேண்டியது அரசாங்கத்தின் நோக்கமாக இருக்க வேண்டும். ஒவ்வொரு தனி மனிதனும் அரசாங்கத்துக்குச் செய்ய வேண்டிய கடமைகளை உணர வேண்டும்; அரசாங்கமும், ஒவ்வொரு தனிமனிதனுடைய உரிமைகளைப் பாதுகாத்து, அவனவனுடைய மனுஷத்தனம் எட்டின மட்டும் வளர்ந்து பரிபூரணமடைவதற்கு வேண்டிய அனுகூலங்களை அளிக்க வேண்டும். புரொபெஸர் டானி என்பவர் இதே கருத்தை 'கடமை உணர்ந்த சமுதாயம்' என்று சொல்லுகிறார். அதாவது: உரிமைகள் எல்லாம் கடமைகளை உணர்ந்து நடக்கும் தன்மையையும் சமூகத்துக்குச் செய்கிற சேவைகளையும் பொறுத்த தாகவே இருக்கும் ('வளர்ச்சியுள்ள சமுதாயம்'-டானி). வேறு விதமாக அதைச்சொன்னால் 'தனி மனிதனுடைய உரிமைகளும் சுதந்தரமும் சமூகத்துக்குச் சம்பந்தப்பட்டனவாகவும் சில நிபந்தனைகளுக்குக் கட்டுப் பட்டனவாகவும் தான் இருக்க முடியும்'. அவை சமூகத் துக்கு மேலானவைகளாகவும் கட்டுப்பாடுகளுக்கு அடங் காதனவுமாகவும் இருக்க முடியாது.

மிஸ்டர் ஏ. ஜி. கார்டினர் என்பவர் 'ஒவ்வொரு மனிதனுக்கும் தனித்தனி சுதந்தரம் என்றால் சமுதாயத் தில் குழப்பம்தான். சமூகத்தின் சுதந்தரத்தைப் பாது காக்க வேணுமானால் தனி மனிதன் தன் சுதந்தரங்களைக் குறைத்துக்கொள்ள வேண்டியதுதான்.' என்று எழுது கிறார். பிற மனிதரின் உரிமைகளைப் பாதிக்காத முறையில் நாம் நம் இஷ்டப்படி நடந்துகொள்ள நமக்குச் சுதந்தரம் உண்டு. மிஸ்டர் கார்டினர் சொல்லுகின்றார்:—நான் (லண்டனிலுள்ள) ஸ்ட்ராண்ட் என்னும் தெரு வழியாக, வெட்டிவிடாத நீண்ட கூந்தலுடனும் மார்பில் உடை தரிக்காமல் ஒரு சல்லடத்துடனும் பூட்ஸ் இல்லாத வெறுங் காலோடும் நடந்துபோக விரும்பினால் என்னை

யார் தடுக்க முடியும்? அதற்காக என்னைப் பார்த்து ஏளனமாகச் சிரிக்க உங்களுக்குச் சுதந்தரம் உண்டு. உங்கள் ஏளனச் சிரிப்பை சட்டை செய்யாமல் இருக்க எனக்குச் சுதந்தரம் உண்டு. நான் என்னுடைய ரோமங் களுக்குச் சாயமடித்துக்கொள்ளவோ, என் மீசைகளுக்கு மெழுகு தடவி முறுக்கி விட்டுக் கொள்ளவோ ஒரு உயரமான தொப்பியுடன் இரட்டை மார்பட்டையுள்ள சட்டையையும் செருப்பையும் அணிந்து கொள்ளவோ என் வீட்டில் வெகுநேரங்கழித்து தூங்கப் போகவோ அதிகாலையில் விழித்துக் கொள்ளவோ யாருடைய அனுமதியையும் கோரவேண்டிய அவசியம் இல்லை." (கட்டுரை 'ரஸ்தாவின் விதிகளைப்பற்றி'). ஆனால் இந்த சொந்தக் காரியங்களும் எல்லையை விட்டு வெளியே வந்து விட்டால் சொந்த சுதந்தரமானது மற்றவர்களுடைய சுதந்தரங்களுக்குக் கட்டுப்பட வேண்டியதாகிவிடுகிறது. உலகத்தில் எத்தனையோ மனிதர்கள் இருக்கிறார்கள். அவர்களுடைய சுதந்திரங்களுக்கும் நாம் இடம் கொடுக் கத்தான் வேண்டும்.

கட்டுப்படாத 'தனிமனிதன் சுதந்தரம்' என்பதும் கேள்வி முறையில்லாத 'அவனவன் இஷ்டம்' என்பதும் இப்போது அண்டரண்டப் பட்சியைப்போல் அற்றுப் போய் விட்டன. உலகத்தில் அவை மீண்டும் தலை தூக்க முடியா. இருந்தாலும், தனிமனிதனுக்குள்ள உரிமை களையெல்லாம் அரசாங்கத்துக்குப் பலி கொடுத்துவிட வேண்டுமென்னும் இப்போதுள்ள போக்கு எல்லாவற் றிலும் மிகவும் அருவருக்கத் தக்கது. கான்ட் என்பவர் சொல்லுகிற நியாயம் நிச்சயமாக மிகவும் உண்மை. என்னவெனில் 'உன்னையே பொறுத்த விஷயத்திலா னாலும் அல்லது இன்னொரு மனிதனைப் பொறுத்த விஷயத்திலானாலும் தனி மனிதனுடைய மனுஷத்தனத் தையே எல்லாக் காரியத்திலும் ஒரு லக்ஷியமாகக் கருத வேண்டுமேயன்றி அதை ஒருபோதும் வெறும் ஒரு கருவி

யாகக் கருதிவிடாதபடி நடந்து கொள்' என்பது. உதாரணமாக; அரசாங்கத்தின் ராணுவ பலத்திற் காகத் தனி மனிதனை நிர்ப்பந்தமாக ஒரு கருவிபோல உபயோகப்படுத்துவது மனுஷத் தன்மைக்கே துரோக மான பாவம். இப்படி பலவந்தப்படுத்திப் பழக்குவது தானகவே சர்வாதிகாரத்தை உண்டாக்குகின்றது. ஆகையினுல் அது ஷேக்ஸ்பியர் சொல்லுவதுபோல 'இரட்டிப்புத் தீமையுள்ளது.' ஆளுகின்றவனுக்கும் தீமை. ஆளப்படுகின்றவனுக்கும் தீமை. அப்படி அமைக் கப்படுகிற ஒரு சர்வசக்தியுள்ள அரசாங்கம் தனிமனிதனை வெறும் சூன்யமாக்கி விடுகிறது. மேலும், அப்படிப்பட்ட சர்வாதிகார அரசாங்கங்கள்—பாஸீஸத்தைச் சேர்ந்த தானுலும் சரி, சமதர்மத்தைச் சேர்ந்ததானுலும் சரி— கடைசியில் பலகோடி மக்களின்மேல் அதிகாரம் செலுத்துகிற ஒரே ஒரு மனிதனுக்கோ அல்லது 'அசாதாரண' சில மனிதருக்கோ அஞ்சி அடங்கி நடக்க வேண்டியதாகி விடுகின்றன. ஆனுல் மனித வர்க்கத்தின் 'மனுஷத்தனம்' அழிந்துபோகாமல் இருக்கவேணுமானுல் நாம் இப்படிப்பட்ட 'அசாதாரண' மனிதர்களை— அவர்கள் எவ்வளவு உயர்ந்தவர்களானுலும் அல்லது எவ்வளவு நல்ல நோக்கங்களுடையவர்களானுலும்— விலக்கி விடவேண்டும். "விக்ரஹ ஆராதனையைப்போல ஒரு மனிதனை வணங்கி நடக்கவேண்டிய அரசாங்கத்தில் 'நாகரீகம்' என்பதற்கு இடமே இருக்க முடியாது" என்று பெர்னுர்டு ஷா என்பவர் 'அரசியலில் ஒவ்வொரு வரும் அறியவேண்டியது—எது? என்ன?' என்ற புத்த கத்தில் ப—341ல் சொல்லுகிருர். ஹிட்லரும் முஸலோனி யும் வெகு வேகமாக அதிகாரத்தில் உயர்ந்த விநோதமும் அதே வேகத்தில் அவர்கள் விழுந்துபோன விசித்திரமும் அகங்காரம் மிகுந்த சர்வாதிகாரங்கள் பிரயோசன மற்றவை என்பதைக் காட்டுவதற்கு வெகு தெளிவான சாட்சியங்கள். ஹிட்லர் இப்போது உயிரோடிருந்தாலும்

சரி அல்லது செத்துப்போயிருந்தாலும் சரி, அவன் விஷயம் பூர்வகாலக் கட்டுக்கதை போலவும் நம்பத்தகாத கற்பனைபோலவும்தான் ஆகிவிட்டது.

## ருஷ்ய ஜனநாயகம்

சாதாரணமாக 'ஏழை மக்களின் இஷ்டப்படி நடக்கும் அரசாங்கம்' என்று சொல்லப்படுகிற இன்னொரு அரசு முறையை ருஷ்யா தோற்றுவித்திருக்கிறது. காரல் மார்க்ஸ் குறித்த அரசாங்கம் 'வகுப்பு வித்யாசமில்லாத ஜனநாயக சமுதாயம்' என்பது. ஆனால் அந்தப் பெயரில் இப்போது ருஷியாவில் பாமரமக்கள் எல்லாரையும் ஈவிரக்கமில்லாத முறையில் ஒரே பட்டாளமாக்கிவிட்டு, பின்னால் அரசாளும் வகுப்பென்பதே இல்லாமற் செய்துவிடலாம் என்ற எண்ணத்தில் நடத்தப்பட்டு வருகிறது. ஆனால் புரொவெஸர் ஆல்டோ ஹக்ஸ்லீ சொல்லுவதுபோல 'அப்படிப்பட்ட அரசாங்கம் வெளிநாட்டுச் சண்டையினாலாவது அழிந்துபோகும் அல்லது உள்நாட்டுக் கலகத்தினாலாவது கவிழ்ந்து போகும்' ('பலன்களும் அவற்றை அடையும் மார்க்கங்களும்' ப—63) 'அரசாளும் வகுப்பே அங்கு இல்லாமல், ஏழைமக்களின் ஆதிக்கமே கடைசியாக வந்துவிடும் என்று நம்புவதற்குக் கொஞ்சம்கூட இடமில்லை'. ஜான் கந்தர் என்பவர் அஞ்சுவதுபோல 'ருஷ்ய அரசாங்கம் ஏழைமக்களின் மீது நடத்தப்படும் சர்வாதிகாரமாக இருக்கலாமே தவிர ஏழை மக்களால் நடத்தப்படும் சர்வாதிகாரம் ஆக முடியாது.' புரொவெஸர் ஜோட் என்பவர் 'நல்லொழுக்கங்களுக்கும் அரசியலுக்கும் அவசியமான தத்துவங்கள்' என்ற நூலில் குறிப்பிடுகிறார்:—

"சரித்திரம் என்பதை கவனிக்கிறபோது, இந்த சர்வாதிகாரங்களெல்லாம் சுபாவமாகவே நாளுக்கு நாள் அதிகப்படுகின்றனவேயன்றி குறைவதில்லை; குற்றங்குறைகளை எடுத்துச்சொன்னால் அதைச் சகித்துக்கொள்ள

முடியாத ரோசமும் ஆத்திரமும் அதிகப்படுகின்றனவே யல்லாமல் குறைவதில்லை. இன்றைய உலகத்தில் நடக்கிற காரியங்கள் இதை ருசுப்படுத்துகின்றன. இருந்தும், ருஷ்யாவிலுள்ளது போன்ற 'பொது உடைமை'க் கோட்பாடு, சரித்திர உண்மைகளுக்கு முற்றிலும் நேர் மாருன உத்தேசங்களை ஸ்தாபிக்க முயலுகின்றது. அந்த உத்தேசம் எதுவென்ருல்: 'இந்தச் சர்வாதிகார ஆட்சி, நினைத்தமாத்திரத்தில் தன் அதிகார வேகங்களைத் குறைத்துத் தன்னிடத்திலுள்ள அதிகாரங்களையெல்லாம் துறந்துவிட்டு, இதுவரையிலும் சுதந்தரமில்லாமல் அடக்கி ஆளப்பட்டுவந்த ஏழைமக்களிடமே அதிகாரத் தையும் சுதந்தரைத்தையும் ஒப்படைத்துவிடும்' என்பது. இந்த நியாயத்தை ஒத்துக்கொள்ள உலக சரித்திரமோ அல்லது மனித வர்க்கத்தின் மனேதத்துவ சாஸ்திரமோ இடங்கொடுக்கவில்லை"

புரொவெஸர் ஜின்ஸ்பர்க் என்பவர் தம்முடைய 'சமூகத்தின் மனேதத்துவம்' என்ற நூலில் "அதிகா ரங்களை யெல்லாம் ஒரே மத்ய இடத்தில் வைத்துக் கொண்டு நடத்தப்படுகிற எந்த அரசாங்கமும் ஒரு மனிதன் அல்லது சில மனிதர் யதேச்சாதிகாரமாகத்தான் இருக்க முடியும்" என்கிருர். ஆச்சாரியர் விஞேப பாவேயும் இதே அபிப்பிராயத்தைக் கொண்டவராக இருக்கிருர். 'ஒரே இடத்தில் அதிகாரங்களெல்லாம் இருக்கிற அரசாங்கம், அது முதலாளிகளால் நடத்தப் படுவதானுலும் சரி, அல்லது 'சமதர்ம'க் காரர்களால் நடத்தப்படுவதானுலும் சரி, அது ஹிம்சையும், அடக்கு முறையும், ராணுவக் கொடுமையும் உள்ளதாகத்தான் இருக்கும்' என்கிருர்.

## ஜனநாயக நியாயம்

ஆகையினுல் இதற்கெல்லாம் இப்போது உலகத்தில் எண்ணக்கூடிய ஒரே ஒரு மாற்று எதுவென்ருல்,

அதுதான் 'ஜனநாயகம்,' அது ஒன்றுதான், சரியாக அமைக்கப்பட்ட ஒரு அரசாங்கத்தினுல் சமூகத்திலுள்ள வர்களின் மனுஷத்தனத்தை மலரச் செய்கிறது, அல்லது மலரச்செய்ய முடியும். ஜனநாயகம் தனித்தனி மனித னுடைய சுதந்தரங்களைக் கொடுப்பதுடன் ஒவ்வொரு தனி மனிதனும் அரசாங்கத்துக்கு அல்லது சமூகத்துக்குச் செய்யவேண்டிய கடமைகள் உண்டு என்பதையும் நெடுக நினைப்பூட்டிக்கொண்டே இருக்கிறது. லிங்கன் என்பவர் ஜனநாயகத்தை 'ஜனங்களே, ஜனங்களைக் கொண்டே, ஜனங்களுக்கென்றே நடத்துகிற அரசாங்கம்' என்று வர்ணித்தார். இந்த உயர்ந்த சொற்ருெடர், சர்வ சாதாரணமாக எங்கும் சொல்லப்படுகிற பாமரப் பேச்சுப் போல் சிறப்பிழந்து விட்டாலும் அதில் நாம் சாதாரண மாக கவனிக்கிற அர்த்தத்தைக் காட்டிலும் ஆழ்ந்த கருத்துக்கள் அடங்கியிருக்கின்றன. ஸ்ரீமதி எலினுர் ரூஸ்வெல்ட் சுட்டிக் காட்டுவதுபோல, ஜனநாயகத்தின் அடிப்படை நல்லொழுக்கமும் தெய்வ நம்பிக்கையும் கொண்டது; அதில் மனித சகோதர உணர்ச்சியும் ஒருவருக்கொருவர் காட்டவேண்டிய ஆழ்ந்தமரியாதையும் அடங்கியிருக்கின்றன. 'நம்முடைய நல்வாழ்வு நிலைக்க வேண்டுமானுல் அதில் நம்மோடிருக்கிற மற்றவர்க ளுடைய நல்வாழ்வும் சேரவேண்டும் என்ற உண்மை அடங்கியுள்ளது.' ('ஜனநாயகத்தின் நல்லொழுக்க அடிப் படை'—ப-13).

பிளேடோ என்பவர் ஜனநாயகத்தை ஆதரிக்கவில்லை. ஏனென்ருல் அது 'சோம்பேரிகளாகவும் ஒழுக்கமற்றவர் களாகவும் உள்ள வகுப்பினரால் அடக்கியாளப்படுகிற குணமுள்ளது' என்று அவர் நம்பினுர் ('ஜனநாயகம்' புத்தகம் VIII) அதனுல்தான் அவர் 'தத்துவ ஞான முள்ள ஒரு மன்னனுடைய யதேச்சாதிகாரமே ஜனநாய கத்திலும் சிறந்தது' என்ருர். ரூஸோ என்பவர், குற்ற மற்ற ஜனநாயகம் மனிதனுல் நடத்த முடியாதது என்றும்

'தெய்வங்கள் குடியிருக்கிற இடத்தில் மட்டும் தான் ஜனநாயகம் இருக்க முடியும்' என்றும் கூறினர். ('சமூக ஒப்பந்தம்' அதி. 4). டி-டோக்வில் என்பவர் "ஜனநாயகத்தின் பலஞக 'சிறந்த மனிதன்' என்று சொல்லத் தக்க அறிவாளிகளே இல்லாதபடி, சமூகத்தில் எல்லாரும் வெகு சாதாரண அறிவேயுள்ள மட்டமான ஜீவனற்ற நிலைமை உண்டாகிவிடுகிறது" என்று முடிவு கட்டி விட்டார். ஸர் ஹென்ரி மெயின் என்பவர் 'ஜனநாயகத்தால் ஜன சமூகத்தில் முன்னேற்றமே இல்லாத ஒரு பாசிபடிந்த நிலைமை ஏற்பட்டுவிடுகிறது' என்று பயப்பட்டார். லாக் என்பவர் 'ஜனநாயகம், மனிதனுடைய எல்லாக் காரியங்களிலும் அதிகப்படியாகத் தலையிட்டு சுதந்தரத்துக்கு முற்றிலும் எதிரிடையாக முடிகிறது' என்று மதித்தார். பிஸ்மார்க் என்பவர் ஜனநாயகத்தை 'அழுமூஞ்சி மனப்பான்மை' என்று வெறுத்தார். பாக்கே என்னும் பிரசித்தி பெற்ற பிரெஞ்ச் எழுத்தாளர், ஜனநாயகத்தை 'கையாலாகாத்தனத்தின் நம்பிக்கை' என்ருர். நீட்ச் என்பவருக்கு ஜனநாயகமென்பது, 'மனித சமூகத்தை சீரழிக்கும் அரசியல் முறை' யாகத் தோன்றிற்று. வால்டேர் என்பவர் ஜனநாயகத்துக்கு விரோதமாக இருந்தார். ஏனென்ருல் அவர் ஜனநாயகத்தை 'நுகத்தடியும், ஓட்டுகிறவனும், புல்லுப்போடுகிறவனும் இல்லாத மாட்டு மந்தைக்குச்' சமானமாகக் கருதினர். நம் காலத்தில் இருக்கிற பெர்னர்டு ஷா என்பவர், ஜனநாயகத்தைப் பற்றி லிங்கன் சொன்ன வியாக்யானத்தை 'கட்டுக்கதையான முட்டாள்தனம்' என்கிருர். 'ஜனநாயகத்தில் ஜனங்கள், அரசாட்சிக்கு வேண்டியமட்டும் இடைஞ்சல் செய்திருக்கிருர்கள்; கலகம் செய்திருக்கிருர்கள்; ஆனல் அதில் அரசாட்சி நடத்தவேயில்லை, என்று சொல்லுகிருர் ('ஒவ்வொரு மனிதனும் அரசியலில் அறியவேண்டியது, எது? என்ன? —ப. 336)

இத்தனை பேரும் இப்படியெல்லாம் சொல்லியிருந்தாலும், ஜனங்களுக்கும் அரசாங்கத்துக்கும் உள்ள சம்பந்தாசம்பந்தங்களை சமரசப்படுத்துவதற்கு 'ஜனநாயகம்' ஒன்றுதான் சரியான முறை என்ற உண்மையை அசைக்க முடியவில்லை. நான் ஆரம்பத்தில் சொன்னது போல எல்லா தேசத்துக்கும் எல்லாக் காலத்துக்கும் 'சிறந்தது' என்று சொல்லக்கூடிய அரசியல் திட்டம் ஒன்று இருக்கமுடியாதென்பது உண்மையானாலும், ஜனநாயகம் ஒன்றுதான் ஜனங்களுக்குள் சமாதானமுள்ள நல்ல வாழ்வை அபிவிருத்தி செய்யக்கூடிய சமய சந்தர்ப்பங்களை உண்டாக்க வல்லது, என்பதை அனுமதிக்கத்தான் வேண்டும். "ஜனங்கள் எல்லோரும் சம அந்தஸ்துடையவர்கள், சம்மான பொறுப்பாளிகள் என்ற உணர்ச்சி ஏற்பட்டால்தான் நாட்டில் திருப்தியும் பாதுகாப்பும் உண்டாகும்." என்று லார்ட் ப்ரைஸ் என்பவர் சொல்லுகிறார் ('இக்காலத்திய ஜனநாயகம்'—புத்தகம்—1–ப. 50). மேலும் புரொபெஸர் லென்னார்ட் என்பவர் சொல்லுவதுபோல "ஜனநாயகம் என்பது வெறும் அரசாட்சி முறைமட்டும் அல்ல. அதற்கும் மேலான ஒரு விஷயம்; அது ஒரு சமூக லக்ஷ்யம். அதிலுள்ள கஷ்டம் என்னவென்றால் அதுவும் மனிதனுடைய 'பெருந்தன்மை' யினால் நடைபெற வேண்டிய விஷயமாக இருப்பதுதான்." ('ஜனநாயகத்தின் அடிப்படைக்குள்ள ஆபத்துகள்'—ப–84)

ஜனநாயகம் அளவற்ற பிரயோசன முள்ளது. ஏனெனில் அதுதான் ஒவ்வொரு மனிதனுக்கும் உள்ள 'மனுஷத்தனம்' என்பதற்கு மதிப்புத் தருகிறது. 'ஜனநாயகத்தின் அதிசயிக்கத் தகுந்த பெருமை எது வென்றால், அதுதான் மனுஷத்தனத்தை விருத்திபண்ணக் கூடியது.' என்று ஸ்ரீமதி வெப் என்பவர் சொல்லுகிறார். ('இக்காலத்திய அரசாங்கம்' ப–84) ஒரு நாட்டின் பொதுவான நல்லொழுக்கத்தைப் பற்றிச் சொல்லும்போது

ஜான் ஸ்டூவர்ட் மில் சொல்லுகிறார். "மற்ற எல்லா முறைகளையும் விட ஜனநாயகம் ஒன்றுதான் ஒரு நாட்டின் பெரும்பான்மை ஜனங்களின் நல்லொழுக்கத்தையும் உயர் குணத்தையும் வளர்க்கத்தக்க சக்தி வாய்ந்தது என்பது தான் அதன் தனிச் சிறப்பு.'' என்று கூறுகிறார். கல்வி முறையிலும் ஜனநாயகம்தான் சிறந்தது. "மிகச் சிறந்த கல்வி எது வென்றால் ஒவ்வொரு மனிதனும் தனக்குத் தானே போதனை செய்துகொள்வதே" என்று புரொவெஸர் பர்ண்ஸ் சொல்லுகிறார். மனித சுபாவத்தில் அடங்கியுள்ள சமுதாய உணர்ச்சிகளைத் தட்டி எழுப்பும் ஆற்றல் ஜனநாயக முறைக்குத்தான் உண்டு. மற்ற முறைகளுக்குக் கிடையாது.

ஆனால் உலகத்திலுள்ள எல்லா நல்ல முயற்சிகளையும் போலவே ஜனநாயகம் என்பதும் பலவிதமான பாபங்களுக்கு ஒரு வெறும் போர்வையாகப் போய்விட்டது என்பதை ஒத்துக்கொள்ளத்தான் வேண்டும். இந்த நாளில் அதில் அநேக தீமைகளும் குறைபாடுகளும் தொத்திக்கொண்டிருக்கின்றன. உண்மையில் இப்போது ஜனநாயகத்துக்குச் சோதனை காலம். அது 'இருப்பதா போவதா' என்ற நிலையில் இருக்கிறது. ஜனநாயகத்துக்கு நேர்ந்துள்ள நெருக்கடியை இன்னும் கொஞ்சம் நுணுக்கமாக ஆராய்ந்து பார்ப்போம்.

# ஜனநாயகம் இருப்பதா? இறப்பதா?

முதல் உலக மகா யுத்தம் 'உலகத்தில் ஜனநாயகத்துக்கு அபாயம் வராமல் செய்யவும்' இனிமேல் யுத்தங்களே நேராதபடி பார்த்துக்கொள்ளவும் நடத்தப்பட்டதாகச் சொன்னார்கள். ஆனால் அந்த யுத்தத்துக்குப் பின் உலகம் மிகவும் வருந்தத்தக்க ஏமாற்றம் அடைந்தது. வார்ஸேல்ஸ் சமாதான உடன்படிக்கை சமாதானத்தை உண்டாக்குவதற்குப் பதிலாக முன்னிலும் அதிகக் கொடுமைகள் நிறைந்த சண்டைக்கே வழி தேடிவிட்டது. 'உலகத்தில் ஜனநாயகத்துக்கு அபாய மேற்படாமல் இருக்கும்படி' செய்வதற்குப் பதிலாக 'உலகத்தில் ஜனநாயகத்தால் அபாய மேற்படாமல்' இருக்கச் செய்துவிட்டாற் போதும் என்று நினைக்கும்படியான நிலைமை ஏற்பட்டுவிட்டது. ஜனநாயகங்களை ஸ்தாபிக்க வேண்டுமென்று செய்யப்பட்ட வெகு வேகமான முயற்சிகளின் பயனாக ஐரோப்பாவில் அநேக சர்வாதிகார ஆதிக்கங்கள் தோன்றிவிட்டன. இந்த யதேச்சாதிகாரிகளுடன் யுத்தம் செய்வதற்காக, ஜனநாயகமாக இருந்த நாடுகளெல்லாம், தெரிந்தோ தெரியாமலோ, தாங்களும் தங்கள் நாடுகளிலிருந்து ஜன நாயகத்தை ஓட்டிவிட்டன. 'உலகத்திலுள்ள எல்லா ஜனங்களும் தங்களுக்கு விருப்பமான அரசியலை அமைத்துக் கொள்ளும் உரிமையைப் பாதுகாப்பதற்காகவே' இந்த இரண்டாவது மகா யுத்தம் நடத்தப்படுவதாக அட்லாண்டிக் சாசனத்தில் சொல்லப்

பட்டது. ஆனால், ஐக்கிய நாடுகளின் பகிரங்கமான மிருகத்தன்மையினாலேயே அந்த அட்லாண்டிக் சாசனம், யுத்தம் முடிந்த பிற்பாடு யாருக்கும் ஏமாற்றம் உண்டாகாதபடி, யுத்தம் நடந்து கொண்டிருக்கும்போதே அந்த அட்லாண்டிக் சமுத்திரத்திலேயே பத்திரமாக முழுகடிக்கப்பட்டு விட்டது. ஆகையினால், இந்த இரண்டாவது மகா யுத்தத்தின் நோக்கமெல்லாம் வெற்றியைக் குறிப்பதற்காக ஒரு பெரிய V என்ற எழுத்தில்தான் முடிந்தது. சான்பிரான்ஸிஸ்கோ மகாநாட்டின் நடவடிக்கைகளிலிருந்து துளிகூட சந்தேகமில்லாமல் ருசுவாகிற விஷயம் என்னவென்றால்: 'பெரிய மூன்று' வல்லரசுகளின் நோக்கமெல்லாம், எப்போதும் தாங்களே வெற்றி வீரர்களாக விளங்க வேண்டும் என்று விரும்புவதேயாகும். ஆனால் அவர்கள் சுதந்தரத்தைப் பற்றியும் ஜனநாயகத்தைப் பற்றியும் வாயளவில் அனுதாபங் காட்டி, அடிமைப் பட்டுள்ள நாடுகளுக்கெல்லாம் 'சுய ஆட்சி' என்றும் 'சுதந்தரம்' என்றும் ஆசைகாட்டி, உத்ஸாகப்படுத்துவதற்குமட்டும் எப்போதும் தயாராக இருக்கிறார்கள் என்பதும் உண்மைதான். பாஸிஸ்ட் அரசாங்கங்களாகிய இதாலியும் ஜெர்மனியும் ஜப்பானும் சரணாகதி யடையும்படிச் செய்துவிட்டது வாஸ்தவம் தான். ஆனால் பாஸீஸ உணர்ச்சி மட்டும் உலகத்தில் முன்னிலும் அதிகமாக ஓங்கிவிட்டதாகத் தோன்றுகின்றது.

'வெற்றியினால் சிற்சில காரியங்களைச் சாதிக்கச் சந்தர்ப்பங்கள் தான் கிடைக்குமேயல்லாமல் வெற்றியே வேலைகளையெல்லாம் முடித்துவிட்டதாகாது. அது ஜனநாயகத்துக்கு மீண்டும் ஒரு சந்தர்ப்பத்தைக் கொடுக்கிறது. ஆனால் அந்த சந்தர்ப்பத்தை உபயோகப்படுத்திக் கொள்வார்கள் என்பது நிச்சயமல்ல,' என்று புரொபெஸர் லாஸ்கி சொல்லுகிறார் ('நம் காலத்திய புரட்சிகளைப் பற்றிய சிந்தனைகள்' ப. 149). அந்த சந்தர்ப்பத்தை

மீண்டும் இழந்துவிட்டோம் என்பது இப்போது அநேகமாக உறுதியாகிவிட்டது. 'மேல் நாடுகளில் இப்போது ஜனநாயகம் என்பதே கிடையாது. எல்லா அரசாங்கங்களும் முதலாளிகள் ராஜ்யங்கள்தான். அவைகள் உச்சி முதல் உள்ளங்கால்வரை சர்வாதிகாரம்தான்' என்று பெர்னார்டு ஷா எழுதுகிறார். இந்தக் குற்றச்சாட்டு இப்போது இங்கிலாந்திலுள்ள தொழில் கட்சி அரசாட்சிக்கும் ஏறத்தாழ அமையும்; ஏனெனில் ஜனநாயகமும் ஏகாதிபத்யமும் சேர்ந்திருக்க முடியாது. சர்ச்சில் நடத்தின யதேச்சாதிகாரத்துக்குப் பதிலாக இப்போது 'தொழில் கட்சியின் சர்வாதிகாரம்' நடக்கிறது என்பது தான் வித்யாசம். அமெரிக்க ஐக்ய நாடுகள், இளமையும் புத்திசாலித்தனமும் கொஞ்சம் அதிகமுள்ளதாக இருப்பதனால் அது 'வெளிப்படையான ஏகாதிபத்யத்தை' விரும்பவில்லை. ஆனால் ஐக்ய அமெரிக்காவின் 'கண்ணுக்குத் தெரியாத' ஏகாதிபத்யம் நிச்சயமாகத் தன்னுடைய பிடியை உலகத்தில் பரப்பும். அந்தப் பிடியும் 'நான்கு சுதந்தரங்கள்' என்ற பெயராலேயே பரப்பப்படும். இந்தப் 'பெரிய மூன்று' வல்லரசுகளிலும் ருஷ்யா தான் மிகவும் சாமர்த்தியமான தந்திரங்களுள்ளது. அது எட்ட நின்றுகொண்டே, உலகத்தில் 'பொது உடமை'த் தத்துவத்துக்கு அபாயம் வராமல் பார்த்துக் கொள்ளவென்று, மிகவும் சக்தி வாய்ந்த தன்னுடைய வலையை வீசும். இப்படியாக, இரண்டாவது மகா யுத்தத்துக்குப் பிறகும் ஜனநாயகத்தின் கதி மிகவும் இருள் சூழ்ந்ததாகவும் பலஹீனமானதாகவும்தான் இருக்கின்றது. இன்னும் சில வருஷங்களுக்குள் இந்த ஐக்கிய வல்லரசுகள் தமக்குள் மனஸ்தாபம் ஏற்பட்டு ஐக்யமில்லாதவர்கள் ஆகிவிட்டால் இந்த உலகம் முழுவதும் நிர்மூலமாகிவிடும் என்பது நிச்சயம். பிரிட்டிஷ் தொழிற் கட்சியில் செல்வாக்குள்ள பத்திரிகையான 'டெய்லி ஹெரால்ட்' மிகவும் வெள்ளிடையான எச்சரிக்கை செய்திருக்கிறது.

என்னவெனின் 'உலகம் கண்ணைத் திறந்துகொண்டே இன்னொரு யுத்தம் என்ற படுகுழியில் விழுந்துவிடப் போய்க் கொண்டிருக்கிறது. இப்போது இந்த 'முப் பெரும்' ஐக்ய நாடுகள் போகிற போக்கினால் நாம் வெகு சீக்கிரத்தில் இவர்களுடைய ஐக்யத்தை உண்டாக்கி வைத்த ஹிட்லர் இப்போது இல்லையே என்று துக்கப் பட வேண்டியிருக்கும்—அதாவது இவர்கள் ஹிட்லரை நல்லவனாக்கி விடுவார்கள்போல் இருக்கிறது.'

## முதலாளிகளின் ஜனநாயகம்

மேல்நாடுகளில் இந்த நெருக்கடி இருப்பதன் காரணங்களை அறிந்து கொள்வது கஷ்டமல்ல. புரொ வெஸர் டானி சொல்லுவதுபோல 'இந்தக் குழப்பங்களுக் குக் காரணமெல்லாம் இப்போதுள்ள பேராசை பிடித்த முதலாளித்தனம்தான். முதலாளித்தனம், தன்னுடைய பணப் பையை யாரும் தொடாமலிருக்கிற வரைக்கும் வெகு தாராளமுள்ளதாகவும் தயவுள்ளதாகவும் இனிமை யுள்ளதாகவும் இருக்க முடியும். அது சமூக சீர்திருத்தங் களையும் அரசியல் சீர்திருத்தங்களையும் பாமர மக்களுக் குத் தர ஒத்துக்கொள்ளுகிறது. ஆனால் ஒரே ஒரு நிபந் தனையின் மேல்தான். என்னவெனில் அந்தச் சீர்திருத்தங் களால் பாமர மக்களுக்குக் கிடைக்கக்கூடிய அரசியல் செல்வாக்கைக் கொண்டு, அவர்கள் முதலாளித்தனத்தின் வேரை வெட்டிவிட இடங்கொடுக்கக் கூடாது என்பதே. 'இனிமேல் முதலாளித்தனம் இருக்க முடி யாது' என்ற பயம் வந்த உடனேயே அது தன்னுடைய இனிமையான வேஷங்களை யெல்லாம் விட்டுவிட்டு போர்க்கோலம் பூண்டுவிடுகிறது. முதலாளி வர்க்கத்தைச் சேர்ந்து சுகப்படுகிற வகுப்புகளெல்லாம், தங்கள் விருப்பங்களுக்கிணங்க தாளம் போடுகிற வரைக்கும் அதற்குக் கூலி கொடுக்க ஒத்துக்கொள்வார்கள். 'ஆனால் அவர்கள் தங்களுடைய பழங்காலப் பெருமைகளும்

இப்போதுள்ள சுகபோகங்களும் அப்படியே இருக்க வேண்டுமென்பதற்காக எப்படிப்பட்ட மிருக பலங்களை யும் ஏவிவிடத் தயங்கமாட்டார்கள். பார்க்கப்போனால் 'பாஸிஸம்' என்பது என்ன? புரொபெஸர் லாஸ்கி 'உபயோகமற்றதாகப் போய்விட்ட பழைய வழக்கங் களைப் பாதுகாப்பது கூடாது என்று எழுகின்ற சக்திகளை, அழித்துப் புதைத்த கல்லறையின்மேல் பொறிக்கப்பட்டுள்ள எழுத்துக்கள்தான் பாஸீஸம்' என்பது" என்று எழுதுகிறார் (இங்கிருந்து நாம் எங்கே போகிறோம்? என்ற புத்தகத்தில்). வேறுவிதமாகச் சொன்னால் "வேட்டையில் தப்பியோட வழி யில்லா மற் சிக்கிக் கொண்ட மிருகமான பணக்காரர் ஜன நாயகம்தான் பாஸீஸம் என்பதாகும்." முதலாளித் தனத்துக்கும் ஜனநாயகத்துக்கும் சுபாவத்திலேயே முரண் பாடு இருக்கிறது. முதலாளித்தனமுள்ள சமுதாயத்தில் பொருள்களின் உற்பத்தியின் நோக்கமெல்லாம் அந்த உற்பத்தி ஆலைகளுக்குச் சொந்தக்காரர்களான முதலாளி களின் லாபம் ஒன்றுதான். ஜனநாயகத்தில், குடிகள் தமக்குள்ள அரசியல் சக்தியை உபயோகப்படுத்தி, அரசாங்கத்தின் அதிகாரத்தைக் கொண்டு தங்களுடைய வாழ்க்கைக்கு வேண்டிய வசதிகளை அதிகப்படுத்திக் கொள்ள முயற்சி செய்கிறார்கள். முதலாளித்தனம் இப்போதுள்ளதுபோல பலமடைகிற வரையிலும் முதலாளித்தனமும் அரசியல் ஜனநாயகமும் சுமுகமாகத் தான் கலந்து வேலைசெய்து வந்தன. முதல் மகா யுத்தத்துக்குப் பிறகுதான் அந்த ஒத்துழைப்பு குறைய ஆரம்பித்தது. அந்த யுத்தத்தின் பயனாகப் பெருவாரியான மக்களுக்கு வேலையில்லாத் திண்டாட்டமும் 'ஏராளமாக உணவு இருந்தும் பட்டினி' என்ற நிலைமையும் ஏற்பட் டன. பாமர மக்கள் தங்களுடைய வறுமையைப் போக்கிக் கொள்ள அரசியல் அதிகாரத்தை உபயோகப்படுத்த முயன்றார்கள். இது முதலாளிகளுக்கு நேர் எதிரான

'சவால்' விடுவதாயிற்று. அதிலிருந்துதான் பாஸீஸத்தைச் சேர்ந்த யதேச்சாதிகாரங்களும் சர்வாதிகாரங்களும் உற்பத்தியாயின. ஜனநாயகம் என்று வெளிக்குச் சொல்லப்படுகிற பிரிட்டனும் அமெரிக்க ஐக்ய நாடுகளும்கூட உள்ளுக்குள் பாஸீஸம்தான். பிரிட்டனுக்கும் ஜெர்மனிக்கும் யதேச்சாதிகாரத்தின் அளவில்தான் வித்யாசமேயல்லாமல் முறையில் அல்ல. இத்தாலியிலும் ஜெர்மனியிலும் இருந்ததுபோல எங்கெந்த இடத்தில் சமதர்ம உணர்ச்சி எழுவதைக்கண்டு பயம் அதிகமாக இருந்ததோ அந்தந்த இடங்களி லெல்லாம் 'பாஸீஸம்' அதிகக் கொடூரமுள்ளதாகவும் சர்வாதிகாரமுள்ளதாகவும் இருந்தது.

ஜனநாயக நாடுகளில், முதலாளித்தனத்துக்கு அவ்வளவு பிரமாதமான அபாயங்கள் ஏற்படவில்லை. ஆகையினால் அந்த நாடுகளில், அது மற்ற நாடுகளில் இருந்ததைவிட அமைதியாகவும் ஜனநாயகத்தை ஆதரிப்பது போலவும் நடந்துகொள்ள முடிந்தது. ஆனால் பிளேடோ சொல்லுவதுபோல ('பணக்காரர்களுடைய நகரங்கள்' என்றும், 'ஏழைகள் இருக்கும் இடங்கள்' என்றும் பிரிந்து வாழ்கின்ற சமூகங்களில் உண்மையான ஜனநாயகம் இருக்க முடியாது.) பணக்காரர் ஏழை என்ற வகுப்பு வித்யாசங்களை ஆதரிக்கிற அரசாங்கம், செல்வத்துக்கு ஆதாரமாக இருக்கிற சரக்குகளை உற்பத்தி செய்கிற ஆலைகளின் அதிகாரிகளாக இருக்கிற பணக்காரர்களுக்கு அடங்கினதாகத்தான் எப்போதும் இருக்க முடியும் ('அரசாங்கத்தின் கொள்கையும் நடைமுறையும்'—புரொ. லஸ்கி : ப. 328). இதனால் பொருளாதாரக் கொள்கைகளில் மாறுதல் ஏற்படாமல் இப்போதுள்ள சமூக அமைப்பில் மாறுதல்கள் ஏற்பட முடியாது. இல்லாவிட்டால் ஜனநாயகம் என்பது முதலாளித்தனத்தின் கையாளாகத்தான் இருக்கும். நேராகவோ மறைமுகமாகவோ சட்டசபைகள், அச்சுக்கூடங்கள், பத்திரிகைகள், இலக்கிய

வெளியீட்டு நிலையங்கள், கல்வி ஸ்தாபனங்கள் முதலான பிரசார வசதிகளையெல்லாம் பணக்கார வகுப்புகள்தான் அடக்கி ஆண்டு வருகின்றன. அவை ஜனநாயகத்தையும் தங்களுடைய சௌகரியத்துக்கே பிரயோகப்படுத்திக் கொண்டு, தங்கள் ஆட்சியாகவே செய்து விடுகின்றன. 'ஜனநாயகத்துக்கு விடாப்பிடியும் வஞ்சகம் நிறைந்தது மான பகைவன் பண பலத்தைக் காட்டிலும் வேறெதுவும் இல்லை' என்று லார்டு ப்ரைஸ் சொல்லுகிருர். அந்தப் பகைவன் 'பகிரங்கமான பலாத்கார முறைகளை மேற்கொள்ளாமல், மறைவிலிருந்து கொண்டே தூண்டி விட்டும் ஏமாற்றியும் அழித்துவிடுவதால் மிகவும் சக்தி வாய்ந்தவனுக இருக்கிருன்' (இக்காலத்திய ஜனநாயகங்கள்: Vol. II. ப. 533). "'ஜேப்புத் தொகுதிகள்'—'பாக்கெட் பர்ரோஸ்' என்ற தொகுதிகள் இருந்த பழங்காலத்திலிருந்து, எந்நேரமும் சட்ட சபைகளில் கலந்து கொண்டு 'தொகுதியிலுள்ளவர்களுக்கு அப்போதைக்கப்போது அரசியல் அறிவூட்டி வளர்க்கிற' இந்த நாள் வரையிலும் 'பணக்கார ஜனநாயகத்தின்' பழி மிகுந்த கதை ஏறத்தாழ அப்படியேதான் இருந்து வருகிறது.

## ஜனநாயகமும் 'கலகக் கும்பல்'களின் ஆதிக்கமும்

இக்காலத்து ஜனநாயகத்தில் பண பலத்தால் நேரிடுகின்ற தீமைகள் மட்டுமல்லாமல், தேர்தல் நடக்கிற முறைகளும் மிகவும் குறைபாடுள்ளனவாகவும் விரும்பத்தகாதனவாகவும் இருக்கின்றன. வெகு விஸ்தாரமான தொகுதிகளால் வாக்காளர்களுக்கும் அபேக்ஷகர்களுக்கும் அறிமுகம்கூட அபூர்வமாக இருக்கிறது. இதனுல்தான் தீமைகள் நிறைந்ததாக நமக்கெல்லாம் நன்ருகத் தெரிந்த 'தேர்தல் பிரசாரங்கள்' நடத்த வேண்டியிருக்கிறது. "இந்தத் தேர்தல் பிரசாரக் கூட்டங்கள் பழிச் சொற்

களும் அவதூறுகளும் அருவருக்கத்தக்க காட்சிகளும் நிறைந்த இடங்கள்; அங்கே வெறி பிடிக்காத சாதுக்களான புத்தி நிதானமுள்ள மனிதர்களும்கூட விவஸ்தையில்லாமல் எதையோ ஊளையிடுகிருர்கள். பாரபட்சமில்லாத யாரேனும் அதைப் பார்த்தால், மிகவும் பயங்கரமான புத்தி மாருட்டமடைந்துவிட்ட பைத்தியக்காரர்களை அடைத்து வைத்திருக்கும் ஒரு ஆஸ்பத்திரியில் தான் இருப்பதாக நினைப்பான். எனக்கு வயசு அதிகரிக்க அதிகரிக்க, இப்படிப்பட்ட தேர்தல் கூட்டக் காட்சிகள், மனுஷத்தனத்துக்கும் குடித்தன ஒழுங்குக்கும் முற்றிலும் சகிக்க முடியாத மானக்கேடுகள் என்றும், அவைகள் ஒரு தேசத்தின் அரசாங்கத்தின் முக்கியமான அலுவல்களைச் சேர்ந்த அவசியமான அம்சங்களாக இருப்பது மிகவும் அநாகரிகம் என்றும் அருவருக்கிற உணர்ச்சியே அதிகரிக்கிறது'' என்று பெர்ஞர்ட் ஷா அவருடைய ஒப்பற்ற நடையில் எழுதுகிருர் ('அமெரிக்காவிலும் நம் நாட்டுக்கு அருகிலும் நடக்கிற அரசியல் பைத்தியக்கார விடுதி': ப. 25–26). சமாளிக்க முடியாத மிகப் பெரிய தொகுதிகள் இருப்பதனுல் சரியான பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுப்பது நிச்சயமில்லாத விஷயமாகி விட்டது. 'ஜனநாயகத்துக்குப் பதிலாகக் கலகக் கும்பல்களின் ஆட்சியைத்தான் காண்கின்ருேம்' என்று காந்திஜி குறிப்பிடுகிருர். கண்ணியமும் திறமையும் வாய்ந்த அடக்கமுள்ள மனிதர்கள், இந்தத் தேர்தல் பிரசாரத்தின் கூச்சலுக்கும் குழப்பத்துக்கும் கூசி, ஒதுங்குகின்ருர்கள்; பழி பாவத்துக்கஞ்சாத, மானுவமான உணர்ச்சிகளுக்கு மரத்துப் போன அபேட்சகர்கள், தங்களுக்குக் கைவந்த ஆயுதங்களான லஞ்சம், பித்தலாட்டம் முதலியவற்றைக்கொண்டு வெற்றிபெற்று விடுகிருர்கள். தாங்க முடியாத தேர்தல் பிரசாரச் செலவுகள் ஜனநாயகத்தைப் பணக்காரர்களுடைய வலைக்குள் தள்ளுகின்றன. அதனுல் முடிவில், முதலாளிகளின் ஆதிக்கமாகவே ஆகிவிடுகின்றது.

மேலும், பிரம்மாண்டமான தொகுதிகளை உண்டாக்கி இப்போது தேர்தல் நடத்தும் முறை ஜனங்களுக்கு உத்ஸாகமில்லாத, கட்டாயத்துக்கு அழ வேண்டிய விருப்பமற்ற காரியமாகப் போய்விட்டது. கட்டுப்பாடான அரசியல் கட்சிகளோ அல்லது காளான்போல் உண்டாகிற தேர்தல் கட்சிகளோ நிற்கச் செய்கிற அபேக்ஷகர்களைப்பற்றி வாக்காளர்களுக்கு நேராக ஒன்றும் தெரியாது. சட்ட சபைகள் விவாதிக்கிற விஷயங்களிலும் அரசாங்க நடைமுறைகளிலும் அங்கங்கே உள்ள ஜனங்களுக்கு அவர்களுக்குச் சுவையுண்டாக்கக் கூடிய உள்ளூர் விஷயம் எதுவும் இருப்பதில்லை. அதனால் அந்தத் தேர்தல்களைப்பற்றிய அக்கரையும் ஜனங்களுக்கு அதிகமில்லை. ஆதலால் ஜனநாயக நாடுகளிலுள்ள வாக்காளர்களுக்குள் வளர்ந்துவிட்ட இந்த அக்கரையில்லாத்தன்மை உலகப்பிரசித்தமாகி விட்டது. தேர்தல் நடக்கும்போது, உண்மையாகவே ஓட்டர்களை ஓட்போடும் இடங்களுக்கு உந்திக் கொண்டும் இழுத்துக் கொண்டும் போக வேண்டியிருக்கிறது. மிக்க முன்னேற்றமடைந்துள்ள அமெரிக்க ஐக்ய நாடுகளிலும்கூட சராசரி பாதிக்கும் குறைவான வாக்காளர்கள்தான் ஓட்டு போடப் போகிறார்கள், வெறும் ஆள் கணக்கை மட்டும் எண்ணி அறிவைப்பற்றி எண்ணாமல், ஓட்டுகளின் எண்ணிக்கையை மட்டும் மதித்து ஓட்டர்களின் மதிப்புகளை மதிக்காமல் தேர்தல் நடத்துகிற முறையில் அறிவாளிகளுக்கு ஆர்வம் இருக்குமென்று எதிர்பார்க்க இடமில்லை.

## அரசியல் 'தேர்தல் கட்சிகள்'

கட்டு திட்டமான விதிகளுக்கடங்கின அரசியல் ஸ்தாபனங்கள் இருப்பதனால் ஒவ்வொரு மனிதனும் சுதந்தரமாக எண்ணவோ காரியம் செய்யவோ இடமில்லை. ஒரு குறிப்பிட்ட மனிதர் ஒரு குறிப்பிட்ட ஸ்தானத்துக்கு

மிகவும் தகுதியுள்ளவராக இருக்கலாம். ஆனால் அவர் கட்சித் தலைவர்களுடைய தயவுக்கு ஆளாகாவிட்டால் அவர் தேர்தலில் நிற்க சந்தர்ப்பம் கிடைக்காது. ஒரே கட்சியைச் சேர்ந்த பிரதிநிதிகளுக்கும்கூட சட்டசபை களில் அடிக்கடி கொறடா போடவேண்டி யிருக்கிறது. இதனால் இக்காலத்திய 'கட்சி முறைகளில்' ஒரு பெருமையும் இல்லையென்று நான் சொல்லுவதாகக் கருதிவிடக் கூடாது. தேச நலங்களுக்கு அவசியமான விஷயங்களைப் பற்றி வாக்காளர்களுக்கு அப்போதைக்கப்போது விஷயங்களை விளக்கி அறிவூட்டுவதற்கு இந்தக் கட்சி முறை பயனுள்ளதுதான். ஆனால் இக்காலத்திலுள்ள அரசியல் கட்சிகள் அளவுக்கு மீறிய கட்டு திட்டங்களால் இறுகிப் போய் இருக்கின்றன. "இந்தக் கட்சி முறை பொதுஜனங் களின் சரியான கருத்தைப் பாகுபடுத்தி அளப்பதற்குத் தகுதியானதென்று சொல்ல முடியாது. அது ஜீவனற்ற ஒரு யந்திரம்போல் வேலை செய்கிறது" என்று ஏ. ஆர். லார்ட் என்பவர் சொல்லுகிறார். ('அரசியலின் கொள் கைகள்' ப-162). "நம்முடைய இக்காலத்திய தேர்தல் முறைகள், 'பிரதிநிதிகளின் அரசாட்சி' என்பதன் பரிகாசக் காட்சிதான். அது அமெரிக்காவிலும், ஐரோப் பாவிலும், பெரிய, முட்டாள்தனமான, லஞ்சப் பித்த லாட்டங்கள் நிறைந்த, 'அரசியல் கட்சிகள்' என்னும் யந்திரங்களை உண்டாக்கியிருக்கிறது" என்று ஹெச். ஜி. வெல்ஸ் எழுதியிருக்கிறார். ('புது உலகசமுதாயம்'- ப-123). சட்டசபைகளில் நடக்கிற விவாதங்களின் முறையும் முற்றிலும் ஒரு நடிப்பாகிவிட்டது; அங்கே நடக்கிற ஒவ்வொரு முக்யமான விவாதத்தின் பலனும் அப்போதைக்கு அதிகாரத்திலுள்ள கட்சியின் உத்தரவுக் கிணங்க முன்னாலேயே முடிவு கட்டிவிட்ட ஏற்பாட்டின் படிதான் தீர்மானிக்கப்படும். அதனால் 'பிரதிநிதிகளின் சபை' என்று சொல்லளவில் பேர்படைத்துள்ள இந்தச் சட்டசபைகளும் 'பார்லிமெண்டுகளும்' 'வெறும் பேச்சு

அரங்குகளே' என்று பொது மக்கள் வெறுக்கும் நிலைமைக்கு வெகு வேகமாக வந்து கொண்டிருக்கின்றன.

## அதிகார உக்ராணம்

ஒரு நாட்டை இன்னொரு நாடு படையெடுக்கும் என்ற பயம் ஒவ்வொரு நாட்டிலும் அரசாங்க அதிகாரங்களையெல்லாம் ஒரே இடத்தில் அடைத்துப் பூட்டி வைக்கும் வழக்கத்தை உண்டாக்கிவிட்டது. இப்படி அளவுகடந்த அதிகாரங்களையும் அரசாங்க வேலைகளையும் ஒரே மத்ய இடத்தில் அடைத்துவிடுவதனால் ஜனநாயகம் என்பது வெறும்கானல் நீராகவும் வெகு பணச் செலவில் நடத்தப்படும் வேடிக்கையாகவும் போய்விட்டது. சட்டசபையிலும் சமாளிக்க முடியாத அளவிற்கு வேலைகள் குவிந்துவிடுகின்றன. இந்த வேலை மிகுதியினால், எல்லா வேலைகளிலும் திறமைக் குறைவும், அனாவசியமான தாமதமும், கால விரயமும் சக்தி விரயமும்தான் உண்டாகின்றன. "எல்லா ஜனங்களையும் பாதிக்கிற விஷயங்களை எல்லா ஜனங்களும் சேர்ந்துதான் முடிவு செய்ய வேண்டும்" என்ற ஜனநாயகத்தின் மூலத்தையும் அது முறியடித்துவிடுகிறது.

இக்காலத்தில் நடத்தப்படுகிற ஜனநாயகத்திலுள்ள குற்றங்குறைகளின் சுருக்கம் இதுதான். இன்னும் அநேக குறைகளைச் சுலபமாகச் சொல்லலாம். ஆனால் நாம் மேற்கொண்டுள்ள முக்கிய வேலைக்கு அது சரியல்ல.

ஜனநாயகம் என்பது 'இருக்கவேணுமா போகவேணுமா' என்ற நிலையில் இப்போது இருக்கிறது என்பதை மட்டும் சொல்லத்தான் வேண்டும். ஜனநாயகம் இறந்துபோகாமல் இருக்கத்தான் வேண்டும். இருக்க வேண்டுமானால் அது எந்த வழியிற் சென்றால் இருக்க முடியும்?

# காந்தீய வழி

ஜனநாயகத்துக்கு நேர்ந்திருக்கிற நெருக்கடியைத் தீர்த்து வைக்க, இக்காலத்திலுள்ள சிந்தனையாளர்களால் வெவ்வேறு வழிகள் சொல்லப்பட்டிருக்கின்றன. ராம்சே மூர் என்பவர், "இப்போதுள்ள தேர்தல் முறையை மாற்றி, ஒவ்வொரு வகுப்புக்கும் அதன் ஜனத்தொகைக்குத் தகுந்த வீதாச்சாரத்தில் பிரதிநிதித்வம் கொடுத்து, மாற்றக்கூடிய ஒற்றை ஓட் முறையில் தேர்தலை நடத்தினால், சிறிய வகுப்பினர்கள் பெரிய எண்ணிக்கையான ஸ்தானங்களைக் கைப்பற்றிவிட முடியாது. ஒவ்வொரு வகுப்புக்கும் நியாயமான அளவில் பிரதிநிதித்வம் கிடைத்து, நாட்டின் அபிப்பிராயத்தை சரியாகப் பிரதிபலிப்பதாக இருக்கும் வீதாச்சாரத்தில் பிரதிநிதித்வம் இருந்தால் தேர்தலுக்கென்று கிளம்புகிற கட்சிகளை ஒழித்துவிட முடியும். மிகவும் திறமைசாலிகளைத் தேர்ந்தெடுக்கவும் அது நல்ல வழி" என்கிறார். அத்துடன் அவர், சட்டசபைகளில் வேலை மிகுதியைக் குறைக்க, கமிட்டிகளை ஏற்படுத்தும் முறையையும் சிபார்சு செய்கிறார். அவர் சொல்லுகிற முறை எளிதாக நடத்தக் கூடியதுதான் என்றாலும் அதனால் இப்போது ஜனநாயகத்துக்கு நேர்ந்துள்ள நெருக்கடிகள் முழுதும் தீர்ந்து விடா. அது அந்த நெருக்கடிகளை மேலெழுந்த வாரியாகத் தான் தீர்க்கமுடியும். உள்ளே இருக்கும் ஊழல்களை மாற்றமுடியாது. 'வீதாச்சார பிரதிநிதித்வம்' நல்லது தான். ஆனால் அதுமட்டும் போதாது. அவர் சொல்லுகிற

'கமிட்டி முறையும்', சட்டசபைகளிலும் நிர்வாகத்திலும் குவிந்துவிடுகிற வேலை மிகுதிகளின் கஷ்டங்களைக் குறைத்துவிட முடியாது. "மக்களின் நல்லொழுக்க உணர்ச்சியும் புத்திக் கூர்மையும் விருத்தியடைந்தால்தான் ஜனநாயகம் தப்பிப் பிழைக்க முடியும்" என்று லார்ட் பிரைஸ் மிகவும் அழுத்தமாக நம்புகின்றார். "புத்தி சாலித்தனமும், கருணையும், கடமையை உணரும் குண மும் இருந்தால் எல்லாம் ஒழுங்காகப் போகும்" என்கிறார். ('இக்காலத்திய ஜனநாயகங்கள், –ப–666). ஆனால் இந்த பயபக்தியான பிரார்த்தனையினால் மட்டும் இக்காலத்து ஜனநாயகத்தை தொத்திக் கொண்டிருக்கிற எல்லாத் தீமைகளையும் தீர்த்துவிட முடியாது. இந்தப் பிரச்னையி லுள்ள பல சிக்கல்களை நீக்கிவைக்க சில குறிப்பான நிர்மாண வேலைகள் அவசியம். "ஏராளமான செல்வங் களுக்கு இடையிலும் பெருவாரியான மக்கள் தரித்திரத் தால் வாடுகின்ற ஆபாச நிலைமைகளை ஒழித்து, சில வகுப்பார் மட்டும் அனுபவிக்கிற விசேஷ சலுகைகளை சமப்படுத்திவிட்டால், ஸ்திரமானதும் குறையற்றதுமான ஜனநாயகத்தை ஸ்தாபிக்க முடியும்" என்று புரொபெஸர் லஸ்கி எண்ணுகிறார். ஆனால், 'பொது உடைமை' சமத்துவம் மட்டும் போதுமா? சோவியத் ருஷ்யாவில் நடக்கிறமாதிரியான சமதர்ம ஜன நாயகம், வெறும் சர்வாதிகாரத்திலும் பாமர மக்கள் அனைவரையும் பட்டாளமாக்கி விட்டதிலும்தான் முடிந் திருக்கிறது என்பதை ஏற்கனவே நாம் எடுத்துக் காட்டி யிருக்கிறோம். "ஜனநாயக முறையில் மட்டும் சாத்ய மாகக் கூடிய 'அரசியல் சுதந்தரங்களையும் நாகரீக உரிமைகளையும்,' சர்வாதிகார முறையினால் சாத்திய மாகின்ற அதிகாரத் திறமையோடும் பொருளாதாரத் திட்டங்களை வகுக்கும் கட்டுப்பாடோடும் சேர்த்துக் கூட்டின ஒரு நூதன ஜனநாயக அரசியலை உண்டாக்க வழிதேட வேண்டும்" என்று ஸர் ஸ்டாவ்வோர்ட் கிரிப்ஸ்

சொல்லுகிறார் ('இக்காலத்துக்கு வேண்டிய ஜனநாயகம்' ப–107). ஆனால் இது ஒரு தெளிவில்லாத யோசனை. ஸெக்கோஸ்லொவேகியாவின் தலைவரான எட்வர்ட் பீன்ஸ் என்பவர் ஒரு சரியான ஜனநாயகத் தலைவனுக்கு இருக்கவேண்டிய தகுதிகளைப்பற்றி ஒரு நீண்ட அட்டவணை அடுக்குகிறார். அந்தத் தலைவர் "உயர்ந்த நிறைசான மனிதன் என்பதற்கான எல்லாக் குண நலங்களும் சரியான அளவில் அமைந்தவனாக இருக்கவேண்டும்; மிகுந்த புத்திக் கூர்மையும் பயிற்சியும் பண்பாடும் விஞ்ஞானப் புலமைகளும் உள்ளவனாக இருத்தல் வேண்டும்; கூர்மையுள்ள இயற்கையான தீர்க்கதிருஷ்டியும் சூக்ஷ்ம சுபாவமும் உள்ளவனாக இருக்க வேண்டும்; மேலும் அவன் சுறுசுறுப்பான உத்ஸாகமும், ஊக்கமும், எதையும் உடனுக்குடன் தீர்மானிக்கும் தீவிரமும், வேலைகளை விரைவாக நடத்தும் ஆற்றலும், சரீர பலமும், மனோதைரியமும் உள்ளவனாக இருக்க வேண்டும்" என்று எழுதுகிறார் ('ஜனநாயகம் - இன்றும், இனிமேலும்'– ப–212). ஆனால் இப்படிப்பட்ட தலைவர்களுக்கு நாம் எங்கே போவது?

வழக்கம்போல், பெர்னார்ட்ஷா, தம்முடைய அபூர்வ யுக்தியில் ஒரு யோசனை சொல்லுகிறார். "வயதுவந்தவர்களுக்கெல்லாம் வாக்குண்டு" என்ற முறை ஜனநாயகத்தைக் கொன்றுவிடுவதாகக் கருதுகின்றார். "நான் 'மனித சுபாவம்' என்ற அந்த ஜீவவர்க்க சாஸ்திரத்தின் மாணவன். பெரும்பான்மை மனிதரின் வாக்கு கடவுளின் வாக்கு என்றும், 21 வயதுக்கு மேற்பட்ட ஒவ்வொருவருடைய ஓட்டும் முடிவானதாகவும் தவறில்லாததாகவும் இருந்துவிடும் என்றதுமான ஒரு உலகம் கற்பனுலோகம் தான். அப்படி எந்த நாளிலும் இந்த உலகம் இருந்ததும் இல்லை, இருக்கப்போவதாக எனக்கு எந்தக் குறி சொல்லும் பூசாரியும் சொன்னதும் இல்லை" என்று அவர் சமீபத்தில் வெளியான 'டைம் அண்ட் டைட்' என்ற

பத்திரிகையில் எழுதுகிறார். "அதனால், சோதனையில் தேர்ச்சி பெற்றவர்களாகவும், பொதுஜனங்களின் வெகு கண்டிப்பான கண்காணிப்புக்கு உட்பட்டவர்களாகவும் பொதுஜனங்கள் அப்போதைக்கப்போது விரும்பின படிக்கு வேலையிலிருந்து நீக்கவும் நியமிக்கவும் கூடியவர்களாகவும் இருக்கிற மனிதர்களால் நடத்தப்படும் அரசாங்க சபைகளை ஸ்தாபிக்க முயல்வதுதான் நமக்குத் தீமையில்லாத நோக்கம்" என்றும் எழுதுகிறார். ('ஒவ்வொருவருக்கும் அரசியலில் எது? என்ன?'–ப-341) அவருடைய அபிப்பிராயத்தில், "ஜனநாயகத்தைச் சேர்ந்த ஒவ்வொரு பிரஜையின் வேலையும், சட்டசபைகளில் வேலையைச் செய்யப் பிறவியிலேயே தகுதி வாய்ந்த 'அசாதாரண மனிதரை'க் கண்டுபிடிக்க ஏதாவது சில சோதனைகளைக் கொண்டு பரிசோதித்து, அவற்றில் தேரக்கூடியவர்களை சட்டசபைக்குத் தகுதியானவர்களுடைய ஜாபிதாவில் சேர்க்க வேண்டியதுதான், அந்த ஜாபிதாவிலிருந்துதான் பிரதிநிதிகளைப் பொறுக்க வேண்டும்." இதனால் ஷா, 'ஏகபோக ஜனநாயகம்' என்று சொல்லத் தகுந்த ஒரு முறையை நம்புகிறார். அசாதாரண நாடகாசிரியரான அவருக்கு நாம் செலுத்தக் கடமைப்பட்டுள்ள மரியாதையுடன் அவரை நாம் ஒரு கேள்வி கேட்போம்: ஆமாம், இந்த அசாதாரண தகுதியுடையவர்களைப் பொறுக்கி எடுக்கும் சோதனைகளை யார் நிர்ணயிக்கிறது? இதிலிருந்து அறியக்கூடிய முடிவு என்னவாகுமென்றால் இந்த 'அசாதாரணப்' பிரதிநிதிகள் தாங்களாகவே அந்தச் சோதனையை மேற்கொண்டு, தங்களை 'ரக்ஷிக்க' வந்தவர்கள் போலவும் 'தெய்வீக' சக்தி வாய்ந்தவர்கள் போலவும் காட்டிக்கொள்ள வேண்டியதுதான். இப்படி ஆராய்ந்து பார்க்கிறபோது ஷா நினைக்கிற 'ஏகபோக ஜனநாயகம்' என்பது 'ஏகபோக சர்வாதிகார'மாகத்தான் முடியும்.

அப்படியானால் ஜனநாயகம் என்பது எந்த வழியைப் பின்பற்ற வேண்டும்? என்னுடைய விடை என்னவென்றால்: 'ஜனநாயகம் காந்திய வழியைப் பின்பற்ற வேண்டும்' என்பதே. இதில் இரண்டு அடிப்படையான கொள்கைகள் அடங்கியிருக்கின்றன: அஹிம்சையும், அதிகாரங்களைப் பிரித்து அங்கங்கே கொடுப்பதும். இந்தக் கொள்கைகளை சற்று விபரமாகச் சொல்லுகிறேன்.

## அஹிம்சை

மகாத்மா காந்தியின் கருத்துக்கிணங்க ஜனநாயகத்தை அஹிம்சையினால்தான் பாதுகாக்க முடியும். ஏனென்றால் ஜனநாயகம் ஹிம்சையோடு கூடியிருக்கிற வரையிலும் தீனர்களுக்கு வசதிகள் செய்துகொடுக்கவும் முடியாது, அவர்களைக் காப்பாற்றவும் முடியாது. "என்னுடைய ஜனநாயக எண்ணம் எதுவென்றால், ஜனநாயக ஆட்சியில் அதிகப் பலசாலிக்கு உள்ள அதே வசதிகள் அதிகப் பலஹீனனுக்கும் கிடைக்க வேண்டும். அது பலாத்கார முறைகளால் ஒருக்காலும் முடியாது." (ஹரிஜன் 18-5-1940). என்றும் 'மேல் நாடுகளில் இப்போது நடத்தப்பட்டு வரும் ஜனநாயகம் பாஸிஸமும் நாஜீஸமும் கலந்த ஒரு ஆட்சி முறை. அங்கே ஜனநாயகமானது நாஜீஸமும் பாஸீஸமும் விரும்புகிற ஏகாதிபத்திய ஆசையை மறைத்துக்கொள்ளும் போர்வையாகத்தான் இருக்கிறது. மேலும், ஜனநாயகமும் பலாத்காரமும் சேர்ந்திருக்க முடியாது. இப்போது பெயரளவில் ஜனநாயகமாக இருக்கிற அரசாங்கங்கள், ஒன்று பகிரங்கமான சர்வாதிகாரங்களாக வேண்டும்; அல்லது அவைகள் ஜனநாயகங்களாக இருக்க வேண்டுமானால் தைரியமாக அஹிம்சையை மேற்கொள்ள வேண்டும்" ('ஹரிஜன்' 12-11-38) என்றும் மகாத்மா எழுதுகிறார். இல்லாவிட்டால் அரசியல் ஜனநாயகம் என்பது வெறும் கனவுதான். முதலாளித்தன

முள்ள சமூகம் பிறரைச் சரண்டி வாழ்வது என்பதன் வடிவம்தான். (எந்தவிதமான சுரண்டலுக்கும் பலாத்காரம்தான் மூலபலம்.) ஆகையினால், சுரண்டல் வேலையை ஒழிக்க வேண்டுமானால் பலாத்காரமில்லாத சமூகத்தையும் அரசாங்கத்தையும் ஏற்படுத்த வேண்டும். அப்படிப்பட்ட சமூகமோ அரசாங்கமோ பொருளாதார சமத்துவத்திலும் உரிமைகளிலும்தான் நிர்மாணிக்க முடியும். ஏனெனில் பொருளாதார சமதர்மம் இல்லாவிட்டால் ஜனநாயக அரசியல் நிலைக்காது.)

இந்தப் பொருளாதார சமத்துவத்தையும் சுதந்தரத்தையும் உண்டாக்குவது எப்படி? அதற்கு ஒரு வழி, 'ஏழை மக்களின் சர்வாதிகாரம்' என்ற பெயரில் பணக்காரர்களை இரக்கமில்லாமல் பலாத்காரத்தினால் அடக்குகிற 'சோவியத் பொது உடைமை முறை'யாகும். ஆனால் அந்த முறையில் ஏழைமக்களும்கூட வெகு கண்டிப்பான கட்டு திட்டங்களுக்கு அடங்கி நடக்க வேண்டியிருப்பதால் அங்கே சுதந்தரமும் ஜனநாயகமும் அழிந்து விடுகின்றன. அதனால் மருந்தே வியாதியைக் காட்டிலும் தீங்கு விளைவிப்பதாகிவிடுகிறது. போரிஸ் ப்ரட்ஸ்கஸ் என்பவர் சொல்லுவதுபோல, "ஹாப்ஸ் என்பவர் சொன்ன 'ஒழுக்கமுள்ள சமுதாய முறை' என்ற பெயரால் தனி மனிதனுடைய நல்லொழுக்கங்களெல்லாம் அடங்கினதாக வர்ணிக்கப்பட்ட பெரும்பூதம், ஐரோப்பிய நாடுகளில் முன்னே இருந்த மன்னர் ஆட்சியிலும் இல்லை, இப்போதுள்ள ஜனநாயகங்களிலும் இல்லை. அது 'சமதர்மப் பொது உடைமை நாடுகளில் இருப்பதாகத் தோன்றுகிறது." ("பொருளாதாரத் திட்டம் வகுத்தல்"- ப-76) சோவியத் ருஷ்யாவை மிகவும் புகழ்ந்து பேசிக் கொண்டிருந்த மாக்ஸ் ஈஸ்ட்மன் என்பவருங்கூட, பின்னால் மிகவும் ஏமாற்றமடைந்துபோய் "'ஏழை மக்களின் அதிகாரம்' என்றோ, 'ரோமாபுரியின் கீர்த்தி' என்றோ, 'நார்டிக் ஜனங்களின் தலைமை' என்றோ எந்தப்

பெயரைச் சொல்லிக்கொண்டாவது ஒரு கட்டுப்பாடான சிறு கூட்டத்தார் ராணுவ பலத்தைக் கொண்டு அதிகாரங்களைக் கைப்பற்றிக் கொள்வது என்பது - அவர்கள் எவ்வளவு சாமர்த்தியமான முறையில் பாமர மக்களேயும் அதில் சேர்த்துப் பேசிக்கொண்டாலும்—கடைசியில் ஸ்வேச்சாதிகார ஆட்சியாகத்தான் முடியும்" என்று எழுதுகிருர் ('ஸ்டாலினுடைய ருஷ்யாவும் சமதர்மத்துக்கு நேர்ந்த நெருக்கடியும்' ப. 12). 'சர்வாதிகார அரசியல்' என்பது, நவீன கருவிகளைக்கொண்டு நடத்தப்படுகிற 'கொடுங்கோன்மை'க்கு புதுப் பெயர்தான். இந்தக் கொடுங்கோலாட்சிகள் 'யுத்தகால அவசியங்கள்' என்று கூறி குடிகளின் 'மனுஷத்தனத்தை' சுதந்தரமாகவும் இயல்பாகவும் வளரமுடியாதபடி குரல்வளையைப் பிடித்து நசுக்கிவிடுகின்றன. ஜான் ஸ்டுவர்ட் மில் சொல்லுவதுபோல "ஒரு அரசாங்கத்தின் மதிப்பு அந்த நாட்டிலுள்ள தனித்தனி மனிதர்களுடைய மதிப்பைப் பொறுத்ததே" என்பதை நாம் எப்போதும் ஞாபகத்தில் வைக்கவேண்டும். "எந்த அரசாங்கம் தன்னுடைய பிரஜைகளைத் தன்னுடைய கருவிகளாக உபயோகிப்பதற்காக அவர்களுடைய சுதந்திர உணர்ச்சிகளையும் சொந்த ஆற்றல்களையும் வளரவிடாமல் செய்துவிடுகிறதோ அந்த அரசாங்கமானது இறுதியில் சின்ன மனிதர்களைக் கொண்டு பெரிய விஷயங்களைச் சாதிக்க முடியாத பரிதாப நிலைமைக்கு வந்துவிடும்." ('சுதந்தரத்தைப்பற்றி' ப-143) இதிலிருந்து பலாத்காரமில்லாத முறைகளால் ஜனநாயகத்தை உருவாக்க வேண்டிய அத்யாவசியம் உண்டாகிறது.

## அதிகாரங்களைப் பிரித்துவிடுதல்

அப்படியானுல் பலாத்காரமில்லாத ஜனநாயகத்துக்கு அவசியமான சாதனம் எது? பலாத்காரம் இயல்பாகவே அதிகாரங்களையெல்லாம் ஒரே இடத்தில் அடைத்து

வைக்கிறது. அதனால், பலாத்காரம் இல்லாமலிருக்க வேண்டுமானால் அதிகாரங்களை அங்கங்கே பிரித்துக் கொடுத்துவிட வேண்டும். தனக்கு வேண்டிய தேவை களைத் தானே தேடிப் பூர்த்தி செய்துகொண்டும், தன் னுடைய எல்லைக் குட்பட்டவர்களைத் தானே ஆண்டு கொண்டும் இருந்த 'கிராம சமுதாய' முறையினால்தான் ஏறத்தாழ இந்த அதிகாரப் பிரிவினையைச் சாதிக்க முடி யும் என்று காந்திஜி எப்போதும் உபதேசித்து வந்திருக் கிறார். இந்தக்கிராம சமுதாயங்களை அவர் பலாத்காரமற்ற ஸ்தாபனங்களுக்குச் சரியான 'மாதிரிகள்' என்று மதிக் கிறார். ஆனால் காந்திஜி பூர்வகாலத்தில் இருந்தக் கிராமச் சமுதாயங்களை அப்போதிருந்தது போலவே இப்போதும் அமைத்துவிட வேண்டும் என்று சொல்லவில்லை. அப்படிச் செய்வது சாத்தியமும் அல்ல, சரியானதும் அல்ல. இக்காலத்திலுள்ள நிலைமைகளுக்கும் தேவைகளுக்கும் தகுந்தபடி மாறுதல்களைச் சேர்த்துக்கொள்ள வேண்டி யதுதான். அன்றியும் பழைய கிராம சமுதாயங்கள் முற்றிலும் குற்றங் குறைகள் இல்லாதவைகளும் அல்ல. இருந்தாலும், ஸ்தல சுய ஆட்சிக்கும் பொருளாதார ஒப்புரவுக்கும், அதிகாரங்களெல்லாம் எங்கோ இருக்கிற ஒரு மத்திய இடத்தில் அடைந்துபோகா திருக்கக்கூடிய ஏற்பாட்டுக்கும் வேண்டிய வசதிகளெல்லாம் இந்த 'கிராம சமுதாய' முறையில் மிகவும் உயர்ந்த அளவில் அடங்கியிருந்தன என்பதைமட்டும் எல்லாரும் ஒப்புக் கொள்ளத்தான் வேண்டும். அதனால்தான் காந்திஜி, நம் முடைய நாட்டிற்கு இனி நாம் ஏற்படுத்தப்போகிற 'ஆட்சி முறை', இந்தக் கிராமச் சமுதாயங்களை சரியானபடி ஐக்கியப்படுத்தி, உண்மையாகவே அவற்றில் அடங்கியுள்ள ஜனநாயகத்தையும் பலாத்காரமில்லாத பொருளாதார ஒத்துழைப்பையும் பலப்படுத்தி, நேர்முகமாக ஜனங்கள் ஒருவருக்கொருவர் கலந்து நடத்துகிற சிறு சிறு அரசுகளை ஒன்றாகச் சேர்க்கப்பட்டதாக இருக்க வேண்டுமென்று

உறுதியாக நம்புகின்றார். "எந்த ராஜாங்கத்தில் அதிகார அமுல் மிகவும் குறைவாக இருக்கிறதோ அந்த அரசாங்கம்தான் மிகவும் சிறந்தது" என்று காந்தியடிகள் தீர்மானிக்கிறார் ('ஹரிஜன்' 25-8-1940).

உடனடியாக அதிகாரங்களை மாற்றவேண்டும் என்பதும் அதிகாரங்களை அங்கங்கே பிரித்துக் கொடுத்து விடவேண்டும் என்பதும் வெறும் காந்தீயப் 'பித்துக்கள்' அல்ல. மிகவும் முற்போக்கான மேல்நாட்டு அரசியல் ஆலோசனைக்காரர்கள் அனைவரும் அதை ஆமோதிக்கிறார்கள். ஒரே மனிதன் ஏககாலத்தில் பல உத்யோகங்களை வகிக்கிற முறையை ஆதரிக்கிறவர்களும், பிரதிநிதிகள் ஆட்சியை ஆதரிக்கிறவர்களும், அராஜகத்தை விரும்புகின்றவர்களும் வெவ்வேறு இனத்தைச் சேர்ந்தவர்களானாலும்கூட இவர்கள் எல்லாரும் அலுவல்களையும் அதிகாரத்தையும் அங்கங்கே பிரித்துக் கொடுத்துவிடுகிற ஜனநாயக தத்துவத்தைமட்டும் ஆதரிக்கிறார்கள். அரசியலிலானாலும் சரி, பொருளாதாரத்திலானாலும் சரி, எல்லா அதிகாரங்களும் ஒரே இடத்தில் இருப்பதை அவர்கள் எல்லாரும் எதிர்க்கிறார்கள். புரொவெஸர் ஜோட் என்பவர் "சமூக வாழ்வில் மக்களுக்கு நம்பிக்கை வரும்படியாக புது ஜீவனைப் புகுத்த வேண்டுமானால், அரசாங்கம் தன்னுடைய பொறுப்புக்களையும் அதிகாரங்களையும் துண்டு துண்டாகப் பிரித்து எல்லாக் குடிகளுக்கும் பங்கிட்டுக் கொடுத்துவிட வேண்டும். ஒரு நாட்டிலுள்ள ஒவ்வொரு தனி மனிதனும், தானும் அந்த நாட்டிலுள்ள வெவ்வேறு அலுவல்களில் அதிகாரமுள்ளவனென்றும், அந்த நாட்டின் உற்பத்தித் தொழில்களிலும் ராஜ்யப் பொறுப்புக்களிலும் பங்குள்ளவனென்றும் உணரும்படிச் செய்துவைக்க வேண்டும். அந்த சமுதாயத்தைச் சேர்ந்தவனாக இருப்பதில் தன்னுடைய மனுஷத்தனத்துக்கும் மதிப்பிருக்கிறதென்றும், தன்னுடைய விருப்பத்தையும் பொருட்படுத்துகிறார்கள் என்றும்,

தானும் சமூகத்துக்குப் பிரயோசனமான வேலையைச் செய்கிறவனென்றும் எண்ணும்படியான உணர்ச்சிகளை உண்டாக்கவேண்டும் அதற்கு அரசாங்க அமைப்பின் அளவைக் குறைத்துக்கொள்ள வேண்டியிருக்கும். அங்கங்கே சமாளிக்கக்கூடிய அளவில் சிறு சிறு ஸ்தாபனங்கள் அவசியமாகின்றன. அப்படிச் செய்தால்தான் அவர்களுடைய உழைப்பின் பலாபலன்களை அங்கங்கே உள்ளவர்கள் அப்போதைக்கப்போது அறிந்து புதுப்புது ஆலோசனைகளைச் செய்துகொள்ள முடியும். அப்போது தான் உண்மையான ஜனநாயகத்தில் சமுதாயம் தனி மனிதனுடைய கருத்துக்களுக்குக் கட்டுப்படுவதும், தனித்தனி மனிதனும் தானே அந்த சமுதாயம் என்று எண்ணுவதும் சாத்தியமாகின்றது." என்று எழுதுகிறார். 'இக்காலத்திய அரசியல் கோட்பாடு' ப-120-121)

புரெவெஸர் கோல் என்பவர் எழுதுகிறார்: "அதிகாரங்களையெல்லாம் ஒரே இடத்தில் திணித்துவைக்கிற வழக்கத்துக்கு முற்றிலும் விரோதமானது 'ஜனநாயகம்'. ஏனென்றால் ஜனநாயக உணர்ச்சியென்பது, ஜனங்களின் விருப்பத்தை வெளிப்படுத்த வேண்டிய அவசியம் ஏற்பட்டபோதெல்லாம் உடனுக்குடன் அங்கங்கே சுதந்தரமாக காரியங்களை முடிக்கவேண்டுமென்று எழுகின்ற உணர்ச்சி. அந்த நியாமான கோரிக்கை, அதிகாரங்களையெல்லாம் தன்னிடத்திலேயே வைத்துக்கொண்டிருக்கிற வேறொரு இடத்தில் சொல்லப்பட்டு அவர்கள் இஷ்டப்பட்டால்தான் அந்த கோரிக்கை பூர்த்தியாகும் என்று தயங்கவிடுவது, தானாகப் பொங்கிவரும் பொதுஜன விருப்பத்தைச் சிதைத்து ஜனநாயகம் என்பதைப் பொய்யாக்கிவிடுகிறது.' 'இக்காலத்து அரசியல்களுக்கு வழிகாட்டி' ப-532). 'வேபிய சமதர்மம்' என்ற புத்தகத்தில் புரொவெஸர் கோல் பின்னும் சொல்லுகிறார்: "சாதாரண ஜனங்களிடை - ஆண்களுக்கும் பெண்களுக்கும் - பொதுநல எண்ணங்களைப் பரவச்செய்து அவர்களுக்குப்

பொதுக் காரியங்களில் அனுபவம் உண்டாக்க வேண்டு மானல், நாம் நமது சமுதாயத்தை ஜனநாயக ஊழியர் களின் சிறுசிறு தொகுதிகளாகப் பிரிக்கத் தலைப்பட வேண்டும்." புரொபெஸர் ஆல்டோஸ் ஹக்ஸ்லி என்பவர் "இப்போது உள்ளதைக் காட்டிலும் மேலான ஒரு சமூக வாழ்வை உண்டாக்குவதற்குச் சரியான அரசியல் மார்க்கம் எதுவென்ருல்: அதிகாரங்களைப் பிரித்துக் கொடுத்து அங்கங்கே சுய ஆட்சியை ஸ்தாபிப்பதுதான்" என்று கூறுகிருர். ('நோக்கமும் மார்க்கமும்' ப-63)

அதிகாரங்களை யெல்லாம் ஒரே இடத்தில் வைக்கப் பட்டிருக்கிற இந்த 'அதிகாரமத்யம்', தனி மனிதனுடைய சுதந்தரங்களைக் குறைத்து, கொஞ்சங் கொஞ்சமாக பெருவாரியான பாமரமக்களை வெறும் பட்டாளங்களாக்கி விடுகிறது; இதுவரையிலும் ஜனநாயக அரசாங்க முறைகளை அனுபவித்துவருகிற நாடுகளிலும் அதுதான் நடந்திருக்கிறது. ஜனநாயகம் மனிதனுக்காக ஏற்பட் டதேயன்றி மனிதன் ஜனநாயகத்துக்காக ஏற்படவில்லை என்ற உண்மையை நாம் அடிக்கடி மறந்துவிடுகிருேம். நம்முடைய நோக்கங்களைப் பூர்த்தி செய்துகொள்ள ஒரு மார்க்கம்தான் ஜனநாயகம்; அதனுல் அது மனிதனுடைய மனேதத்துவ மாறுதல்களுக்குத் தகுந்தபடி சமயோ சிதமாக இணங்கி இடங்கொடுக்கக் கூடியதாக இருக்க வேண்டும். இக்காலத்திய சமூக சாஸ்திரங்கள் "மனிதன் சிறு சிறு கூட்டமாக வாழ்வதில்தான் அதிக இன்பமடை கிருன்" என்ற நியாயத்தைத்தான் ஆதரிக்கின்றன. (ராய் கிளெண்டே என்பவர் எழுதின 'சிக்கன சமுதா யத்தின் எதிர்காலம்-ப-251). "மனிதனுடைய மனுஷத் தனத்தை மதிக்காமல், அமைதியும் ஒற்றுமையுமுள்ள சிறு சிறு சமூகங்களாகவாழ்ந்து இன்பமடைய மக்களுக்கு இடம் செய்யாமல், சமாதானமுள்ள ஒரு நூதன உலக சமுதாயத்தை உண்டாக்க வேண்டுமென்று செய்யப் படுகிற படாடோபமான முயற்சிகளெல்லாம் பயனற்றுக்

கவிழ்ந்துதான் போகப் போகின்றன." என்று ராய் கிளெண்டே சுட்டிக் காட்டுகிறார். "இனப்பற்று இல்லாத மனிதன் கூடில்லாத நத்தைக்குச் சமானம்" என்று காரல் மான்ஹீம் சொல்லுகிறார். "ஒரு சமூகத்தில் வாழும் ஒரே இனம் என்ற நினைப்புத்தான் தனித்தனி மனிதர்களை ஒரு சகவாச சமுதாயக் கட்டுப்பாட்டில் நிறுத்துகின்றது" என்று புரொவெஸர் ஜின்ஸ்பர்க் எழுதுகிறார். இந்த உணர்ச்சியும் ஆசாபாசங்களால் ஏற்படுகிற மற்ற அந்தரங்க விசுவாசங்களும் இருந்தால்தான் ஜனநாயகம் சரிவர நடக்கும். இந்த உணர்ச்சிகள் இப்போது உலகில் நடந்துவருகிற 'அதிகாரமத்ய' ஜனநாயகங்களில் அறவே கிடையாது. அதனால்தான் புரொவெஸர் ஆடம்ஸ் என்பவர் இக்காலத்திலுள்ள பிரதிநிதிகளின் ஆட்சி முறைகளிலுள்ள குறைபாடுகளை நன்றாக ஆராய்ந்து சொல்லி விட்டு "இந்தத் தீமைகளுக்கெல்லாம் மூலகாரணமாகிய 'அதிகார மத்ய' ஆட்சி முறையை ஒழித்துவிட்டு, அதிகாரங்களைப் பிரித்துக் கொடுத்து, வெவ்வேறு இடங்களில் வேலைகளை நடக்கச்செய்கிற முயற்சியில்" ஈடுபடச் சொல்லுகிறார். ('இக் காலத்திய அரசாங்கம்' ப-235). புரொவெஸர் லஸ்கி "அதிகார மத்யமான அரசாங்கத்தில் ஜனங்கள் அதனுடைய உத்தரவுகளுக்குக் கீழ்ப்படிவது சந்தோஷமில்லாத ஒரு ஜீவனற்ற காரியமாகத்தா னிருக்கும். அது யந்திரம் போல உணர்ச்சியற்றதாகத்தான் நடக்கும்" என்கிறார். "அதிகார மத்ய ஆட்சியில் ஒழுங்கு முறைகள் சரியாக இருக்கலாம். ஆனால் அதில் இடத்துக்கும் காலத்துக்கும் ஏற்றபடி சமயோசிதமாக நடந்துகொள்ளக் கூடிய சொந்த அறிவு மட்டும் கிடையாது" ('அரசியலில் முதற் பாடம்' ப-53). லூவிஸ் மம்போர்ட் என்ற பிரசித்தி பெற்ற சமூக சாஸ்திர நிபுணர் "நகரங்களை விட்டுவிட்டு நாட்டுப்புறத்தில் திறந்த வெளிகளில் சரியான முறையில் சமரசப்படுத்தப்பட்ட சிறு சிறு சமுதாயங்களை அமைக்க

வேண்டும்" என்று சிபார்சு செய்கிறார். இப்படிப்பட்ட சிறு சமுதாயங்கள் ஸ்தல சுய ஆட்சியை அதிகமாக அனுபவிக்க முடியும். அத்துடன் உண்மையான ஜீவசத்துள்ள ஜனநாயகத்தில் மக்கள் பயிற்சி பெறுவதற்கு இந்தச் சிறு சிறு சமுதாயங்கள் சரியான பள்ளிக்கூடங்களாகும். அதிகார வர்க்க ஆட்சிமுறையை ஒழிப்பதற்கு அதுதான் ஒப்பற்ற மார்க்கம். அன்றியும் அங்கங்கே உள்ள தேவைகளை நேருக்கு நேராக மக்கள் உணர்ந்து, அவசியமான செயல்களைப்பற்றி விவாதித்து உடனுக்குடன் முடிவு செய்துகொள்ள முடியும். "சிறு சிறு சமுதாயங்களில்தான் ஜனநாயகம் என்பது முதல் முதல் உற்பத்தியானது. அந்தச் சிறு சமுதாயங்களிலிருந்து தான், ஜனநாயகத்தைப்பற்றி இலக்கியங்களை எழுதினவர்களும் அதற்கென்றே வாழ்ந்து உபதேசம் செய்யப் பிறந்தவர்களும் தங்களுடைய ஜனநாயகக் கோட்பாடுகளை அறிந்து கொண்டார்கள். அங்கேதான் எப்படி ஜனங்களுடைய விருப்பத்தின்படி அரசாட்சி நடந்துகொள்ள வேண்டும் என்பதை ஆராய்ந்தறிய முடியும். ஏனென்றால் அங்கே ஆலோசனைக்கு வருகிற எல்லா விஷயங்களும் எல்லா ஜனங்களுக்கும் நேரில் தெரிந்தவைகள்." என்று லார்ட் பிரைஸ் எழுதுகிறார். ('இக்காலத்திய ஜனநாயகங்கள்', 2-ம் பாகம், ப-489). கிராமங்களிலும் கிராம சமுதாயங்களிலும் உள்ள ஸ்தல சுதந்தரங்களின் தன்மைகளைப்பற்றி விவரித்து எழுதுகின்ற டாக்டர் பெனி பிரஸாத் சொல்லுகிறார்: "அரிஸ்டோடல் சொல்லுகிறபடி குற்றமற்ற 'ஸ்தல சுயஆட்சி' என்பது அந்த ஸ்தலத்திலுள்ள ஜனங்கள் ஒருவர் மற்றவருடைய நடத்தைகளை நன்றாக அறிந்திருக்கிற ஒரு சர்வ சாதாரண அனுபவம்தான். கிராம சமுதாயத்திலும் நகர சமுதாயத்திலும் அல்லது இதர சமுதாயத்திலும், சுதந்தரமுள்ள சுய ஆட்சி, ஜனநாயகத்தினால் கிடைக்கக்கூடிய நன்மைகளைக் கொடுத்து, உள்ளூர் அபிமானத்தை ஊக்கி

விட்டு, ஒவ்வொரு நபரையும் வெறும் தன்னல எண்ணங்களிலிருந்து உயர்த்திவைத்து, ஒத்துழைப்பு வழக்கங்களை உறுதியாக்கி, லக்ஷக்கணக்கான ஜனங்களுக்கு நிதான புத்தியும் நிர்வாகத் திறமையும் வரக்கூடிய பயிற்சியளித்து, வெகு தூரத்திலுள்ள சட்டசபைகளுக்குப் பிரதிநிதிகளை அனுப்பவேண்டிய அவசியத்தையும் சிரமத்தையும் விலக்குகின்றது. அங்கங்கே கிராமங்களிலும், நகரங்களிலும் ஜில்லாக்களிலும் சுய-ஆட்சி இருந்தால் சட்டசபைகளிலும் சர்க்கார் காரியாலயங்களிலும் உள்ள மிதமிஞ்சிய வேலை நெருக்கடியும் குறைந்துவிடும். இக்காலத்திய பெரிய அரசாங்கங்களில், விஸ்தாரமான தொகுதிகளை ஏற்படுத்தி, வெகு பெரிய தேர்தல்களை நடத்துவதால், அதில் ஒவ்வொரு தனிமனிதனும் பெரிய வெள்ளத்தில் முழுகிப்போகிற ஒரு துரும்புக்குச் சமானமாக மனுஷத்தனத்தின் மதிப்பற்றுப்போகிற மிகப் பெரிய குற்றம் உண்டாகிறது. இந்த நிலைமை ஒவ்வொருவருக்கும் பயங்கரமான ஒரு திகைப்பை உண்டாக்கி, தன்னால் என்ன முடியும் என்ற பலவீன ஏக்கத்தையும் கொடுத்து, இயற்கையிலுள்ள பெரிய சக்திகளை நினைக்கும்போது 'மனிதன் எம்மாத்திரம்?' என்று எல்லாருக்கும் உண்டாகிறதைப் போன்ற ஒரு அச்சத்தையும் அளிக்கிறது. இதனால் ஏற்படக்கூடிய 'நம்மால் ஒன்றும் செய்ய முடியாது, எல்லாம் விதிப்பயன்' என்ற மனச் சோர்வை, 'அங்கங்கே சுதந்தரம்' 'அவரவருக்கு அதிகாரம்' என்ற உணர்ச்சி ஒன்றுதான் பரிகரிக்க முடியும்.' ('ஜனநாயகத்தின் நடைமுறை' - ப 249-50).

" ஐரோப்பாவில், பழைய கிரேக்க தேசத்தில் இருந்த நகர சமுதாயங்கள் நேரான ஸ்தல சுய ஆட்சியை அனுபவித்தன. முடிவான அதிகாரம் அங்குள்ள ஜனத்தொகையைச் சேர்ந்த அத்தனைபேரும் சேர்ந்துதான் நடத்தவேண்டியதாக இருந்தது. " அந்த ஜனத்தொகையே அந்த ஸ்தலத்தின் பிரதிநிதிகள் சபையாகவும், அரசாங்க

மாகவும், அமுல் நடத்தும் அதிகாரியாகவும், சட்ட சபையாகவும், நீதிமன்றமாகவும் ஏக காலத்தில் எல்லா வேலைகளையும் செய்தது" என்று லார்ட் பிரைஸ் எழுதுகிறார். நித்தநித்தம் ஜனங்கள் ஒருவரோடு ஒருவர் கலந்து நெருக்கமான உறவு கொண்டாடிவந்ததால் கட்டுப்பாடான கட்சி பேதங்களுக்கு அவசியமில்லாமல் இருந்தது. அன்றியும், அங்கே பிரசண்ட வேகத்தில் தேர்தல் பிரசாரங்கள் நடத்தவேண்டிய தேவையும் இருந்ததில்லை; ஏனெனில், கிரேக்கர்களுடைய சமுதாயத் தொகுதிகள் சிறியனவாக இருந்ததினால், வாக்களிக்க உரிமையுள்ள ஓட்டர்களையெல்லாம் ஒரு கூப்பிடு-சத்தத்தில் ஒன்றுசேரச் செய்யவும், பிரதிநிதியாக வரவோ அல்லது உத்யோகத்துக்கு வரவோ விரும்புகிற அபேக்ஷகர்களுடைய யோகிக்யதாம்சங்களை நேருக்கு நேராக அறிந்து உடனடியாக அப்போதே தீர்ப்பு சொல்லச் செய்யவும் வசதிகள் உள்ளனவாகவும் இருந்தன. நகரத் தொகுதிகள் சிறுசிறு சமுதாயங்களாகவே அமைக்கப்பட வேண்டிய அகத்தியமுள்ளனவாக இருந்தன; அப்படிப்பட்ட சிறு தொகுதியில்தான் ஐக்ய வாழ்வு சாத்தியம். 'சிறந்த மனிதர்கள் உள்ள சமுதாயந்தான் சிறந்த அரசாங்கம் நடத்த முடியும்' என்பது பிளேடோவின் கோட்பாடு. தேகத்தின் ஒரு உறுப்புக்கு நோய் வந்தால் மற்ற உறுப்புக்களெல்லாம் அந்த நோயின் துன்பங்களை அடைந்து, நோயுற்ற அவயவத்துக்காக அனுதாபம் காட்டுகின்றன. இதே நியாயம்தான் ஒரு அரசாங்கத்துக்கும். இப்படி ஒரு பகுதிக்காக மற்றப் பகுதிகள் அனுதாபங் கொள்ளக்கூடிய அரசியல் சிறு சிறு ஐக்யமான சமுதாயங்களில்தான் சித்தியாகும். கிரேக்கர்களுக்கு நகர வாழ்க்கைதான் 'பொது வாழ்க்கை'யாக இருந்தது. அதனுடைய அரசுமுறையும் அரிஸ்டோடல் சொன்னது போல 'வாழ்க்கையின் வகை'யாக இருந்ததேயல்லாமல் சட்டத்தினால் கட்டுதிட்டப்படுத்தினதாக இருக்கவில்லை.

கிரேக்க நகர சமுதாயங்கள் முற்றிலும் குற்ற மற்றவை என்று நான் சொல்ல வரவில்லை. அவற்றில் பல குற்றங் குறைகளும் பழி பாவங்களும் இருந்தன. உதாரணமாக அவர்கள் நடத்தின அடிமைவியாபாரத்தை யார் ஆதரிக்க முடியும்? ஆனாலும், அவர்களுடைய ஐக்கியமும் சமாதானமும் நிறைந்த பொது வாழ்க்கையினால் அவர்கள், சிறப்பாக ஏதன்ஸ் நகரத்தார், தங்களுடைய மிக்க சக்திவாய்ந்த சமுதாயத்தினால் ஐரோப்பாவின் அறிவையும் கலைகளையும் விருத்தி செய்தார்கள் என்பதை மறுக்க முடியாது. புரொபெஸர் டிலைல் பர்ண்ஸ் காட்டுவது போல "எதீனியர்களின் வாழ்க்கையும் சுதந் தரமும் அநேக நன்மைகளை உற்பத்தி செய்திருக்கின்றன. உண்மையில் ஏதன்ஸ் நகரத்தின் சரித்திரம் வேறு எந்த நகரத்தின் சரித்திரத்தைக் காட்டிலும் சித்திர வித்வான் கள், கவிஞர்கள், தத்துவ ஞானிகள் முதலான கலைஞர் களின் சிறப்பு மிகுந்ததாக இருக்கிறது. வேறெந்த ஜனங் களும் தங்களுடைய சரித்திரத்தில் அவ்வளவு குறுகிய காலத்தில் சிற்பக் கலையிலும், சிலை செதுக்கும் வித்தை யிலும், நாடகக் கவிதையிலும் தத்துவ சாஸ்திரத்திலும் அவ்வளவு சிறப்புவாய்ந்த சித்திகளை சாதித்ததில்லை." ('அரசியல் கோட்பாடுகள்' ப - 41)

## இந்திய கிராம சமுதாயங்கள்

ஐரோப்பாவில் அநேக சிறிய கிராமச் சமூகங்களில், இயந்திரத்தொழில் ஆரம்பத்துக்கு முன்னால், ஸ்தல சுய ஆட்சி நடத்தப்பட்டு வந்தது. அந்தக் கிராமங்களிலிருந்த ஒத்துழைப்பு வாழ்க்கையைப்பற்றி க்ரொபாட்கின் பிரபு தம்முடைய 'பரஸ்பர உதவி' என்ற நூலில் விஸ்தாரமாகச் சொல்லுகிறார். சீனாவிலும் ஜப்பானிலுங் கூட மிகப் புராதன காலத்தில் இப்படிப்பட்ட ஸ்தல - அதிகாரங்களுள்ள கிராம ஸதாபனங்கள் இருந்திருக் கின்றன. இருந்தாலும், இந்த உள்ளூர் - சுய ஆட்சி

ஸ்தாபனம் இந்த உலகத்தில் முதல் முதல் 'ஆரம்பமானதும், நெடுங்காலம் அழிவில்லாமல் பாதுகாக்கப்பட்டதும் நமது இந்தியாவில்தான் என்று நியாயமாகப் பெருமை கொண்டாடலாம்.' என்று ஆர். ஸி. டட் என்பவர் கூறுகிருர். ('இந்தியாவின் பொருளாதாரச் சரித்திரம்' என்ற புத்தகத்தில்). இந்தக் கிராமச் சமுதாயங்கள் நமது நாட்டில், சரித்திரத்துக்கு எட்டாத காலந் தொட்டு இருந்துவந்திருக்கின்றன. ப்ருது என்ற புராதன மன்னன் கங்கைக்கும் யமுனைக்கும் மத்தியிலுள்ள டுவாப் என்ற பிரதேசத்தில் குடியேறின காலத்திலேயே இந்தக் கிராமச் சமுதாய முறை ஏற்படுத்தப்பட்டதாக நம்பப்படுகிறது. மனு ஸ்மிருதியிலும் மகா பாரத சாந்தி பர்வத்திலும் 'கிராம சங்கம்' என்பதைப் பற்றி பல இடங்களில் சொல்லப்பட்டிருக்கிறது. கிறிஸ்து பிறப்பதற்கு 400 வருஷங்களுக்கு முன்னுலிருந்த கௌடில்யாவின் அர்த்த சாஸ்திரத்திலும் இந்தக் கிராம சமுதாயங்களின் விவரம் இருக்கிறது. வால்மீகி ராமாயணத்தில் 'ஜனபதம்' என்பதைப் பார்க்கிருேம். அது பல கிராமச் சமுதாயங்களின் ஐக்யம்போல் தோன்றுகிறது. கிரேக்கர்கள் இந்தியாவைப் படையெடுத்த காலத்தில் இந்தக் கிராமச் சமுதாய முறை இந்த நாட்டில் எங்கு பார்த்தாலும் நடப்பிலிருந்திருக்கிறதாக நிச்சயமாகத் தெரிகிறது. மகஸ்தெனிஸ் என்பவர் இந்தக் கிராமச் சமுதாயங்களை 'பெந்தாட்' என்று பெயரிட்டு, அவற்றைப்பற்றி மிகத் தெளிவான விவரங்களை எழுதி வைத்துப் போயிருக்கிருர். சீன யாத்திரிகர்களான ஹையூன்த்ஸாங், பாஹியான் என்ற இருவரும் இந்தியாவைச் சுற்றிப் பார்த்தகாலத்தில் இந்த நாடு 'வெகு செல்வ வளமுள்ளதாகவும், ஒப்புவமை சொல்ல முடியாத அளவில் இந்த நாட்டு மக்கள் செழிப்பாகவும் 'சந்தோஷமுள்ளவர்களாகவும்' இருந்ததாகச் சொல்லியிருக்கிருர்கள். ஏழாவது நூற்றுண்டில் இந்தியாவில்

இருந்த 'கிராமப் பொது' என்பதைப் பற்றின விவரங்கள் சுக்ராச்சாரியாரின் 'நீதி சாரம்' என்ற நூலில் காணப்படுகின்றன.

உண்மையில், இந்தியாவில் கிராம சமுதாயத்தையே அரசாங்கத்திற்கு அடிப்படையானதாக, வேதகாலத்தின் அதி - ஆரம்பத்திலிருந்தே மதித்து வந்திருக்கிறார்கள் என்பதற்கு ஆதாரங்கள் உள்ளன. 'கிராமிணி' அல்லது 'கிராமத் தலைவன்' என்ற பதம் ரிக் வேதத்தில் சொல்லப் பட்டிருக்கிறது (X·62·11; 107·5) "கிராம சபைகள்", அல்லது "கிராம ஸ்தல சமுதாயங்களைப் பற்றி" என்னும் புத்தநூல் ஜாதகங்களிலும் கூறப்பட்டிருக்கிறது. 'ஷ்ரேணி' என்பது வியாபார சங்கங்களைக் குறிக்கும் பிரசித்தியான பதம். "வேத காலத்துக்குப் பின்னும்கூட, கிராமமே அரசியல் ஐக்யத்துக்கு ஆரம்ப ஸ்தானமாக எப்போதும் கருதப்பட்டு வந்திருக்கிறது. அதனால், விஷ்ணு ஸ்மிருதியிலும், மனு ஸ்மிருதியிலும் கிராமத்தையே அரசாங்கத்தின் ஆரம்ப ஸ்தாபனமாக கணிக்கப்பட்டிருக்கிறது" என்று 'பூர்வகால இந்தியாவில் சமூக ஐக்யம்' என்ற நூலில் ஆர். சி. மஜூம்தார் கூறுகிறார். தர்ம சூத்ரங்களிலும் தர்ம சாஸ்திரங்களிலும் காணப்படும் 'கண' என்ற பதமும் 'புக' என்ற பதமும் கிராம சமுதாயத்தையும் நகர சமுதாயத்தையும் குறிக்கும் சொற்களாகத் தோன்றுகின்றன. புதைந்துபோன புராதன உண்மைகளைத் தோண்டி அறிய முயற்சிக்கிற 'புராதனங்களின் ஆராய்ச்சி' சாஸ்திர முறையில் கிடைத்துள்ள கல்வெட்டுக்களிலும் செப்பேட்டுகளிலும் அக்காலங்களிலிருந்த சுதந்தரமான ஸ்தல ஸ்தாபனங்களைப் பற்றிய எழுத்துகள் ஏராளமாக இருக்கின்றன.

இந்தியாவிலிருந்த சுதந்தர கிராம சமுதாயங்கள் கிழக்கிந்திய கம்பெனியார் வருகிறவரைக்கும் ஹிந்து ஆட்சியிலும், முஸ்லிம் ஆட்சியிலும், பேஷ்வாக்கள் ஆட்சியிலும் மிகவும் செழிப்புற்றிருந்து வந்திருக்கின்றன.

ராஜ பரம்பரைகளும் ஏகாதிபத்யங்களும் சிதைந்தும் மறைந்தும் போன காலங்களிலும்கூட இந்த கிராமச் சமுதாயங்கள் ஒரு குறையும் வராமல் ஜீவித்து வந்திருக்கின்றன. "அரசியல் பிரளயங்கள் நேரிட்ட சமயங்களில் சமூக சமாதானமும் தேசீய கலாசாரங்களும் தங்களுக்கு ஒரு தீங்கும் நேராதபடி பதுங்கிப், பாதுகாப்பைத் தேடிக் கொள்வதற்கு, ஒரு ஆமையின் ஓடுபோல் இந்த சுதந்தரமான, சுய ஆட்சியுள்ள கிராம சமுதாயங்கள் உதவின." ('பூர்வகால இந்தியாவில் ஸ்தல ஆட்சி' டாக்டர் ராதாகுமுத முகர்ஜி - ப - 10) அரசர்கள் இந்த கிராமச் சமுதாயங்களிலிருந்து தங்களுக்குச் சேர வேண்டிய அரசிறைப் பணத்தைமட்டும் வாங்கிக் கொண்டார்களே ஒழிய, ஸ்தல ஆட்சியின் உள்ளூர் விவகாரங்களில் தலையிடுவதில்லை. ஸர் சார்லஸ் ட்ரெவெலின் "அநேக அன்னியர்கள் ஒருவர்பின் ஒருவராக இந்தியாவைப் படையெடுத்துச் சூறையாடியிருக்கிறார்கள். ஆனாலும் இந்தியாவின் ஸ்தல சமுதாயங்கள் மட்டும் இந்திய மண்ணோடு சேர்ந்திருக்கிற தர்ப்பைப் புல்லைப்போல நிர்மூலமாக்க முடியாமல் நிலைத்து வந்திருக்கின்றன" என்று குறிப்பிடுகிறார், ஸர் ஜார்ஜ் பர்ட்வுட் "மற்ற எல்லா தேசங்களைக் காட்டிலும் இந்தியாவில் தான் மத சம்பந்தமான புரட்சிகளும் அரசியல் சம்பந்தமான குழப்பங்களும் அதிகமாக நேர்ந்திருக்கின்றன. ஆனால் ஸ்தல சுய ஆட்சிமட்டும் இந்தியா முழுவதிலும் பூரண சுதந்தரத்தோடு இருந்து புகழ்பெற்றிருக்கின்றது. சிதியர்களும், கிரேக்களும், சாரசேனர்களும், ஆப்கானியரும், மங்கோலியரும், மராட்டியரும் தங்கள் மலைநாடுகளிலிருந்து இறங்கிவந்தும் - போர்த்துகேசியரும், டச்சுக்காரரும், ஆங்கிலேயரும், பிரெஞ்சுக்காரரும், டென்மார்க்கர்களும் தங்கள் கடல் நாடுகளிலிருந்து கப்பலேறிவந்தும் மாறி மாறி தங்கள் ஆதிக்யங்களை நாட்டியிருக்கிறார்கள் ; ஆனாலும், மத உணர்ச்சிகளும் வியாபாரப் பொருளா

தாரக் கூட்டுறவும் கலந்த கிராமக் கட்டுப்பாடுகள் மட்டும், ஓயாது மோதுகின்ற சமுத்திர அலைகளுக்குத் துளிகூட அசையாமல் நிமிர்ந்து நிற்கின்ற பாறைகளைப் போல, இந்தப் படையெடுப்புகள் போவதையும் வருவதையும் பொருட்படுத்தாமல் இருந்தன" என்று எழுதுகிறார். ('இந்தியாவின் தொழிற் கலைகள்' - ப. 320.)

1830-ல், அப்போது இந்தியாவின் 'கவர்னர் ஜெனரல்' வேலையை, பதிலியாகப் பார்த்த ஸர் சார்லஸ் மெட்காவ் என்பவர், அவருடைய பிரசித்திபெற்ற குறிப்புகளில் எழுதுகிறார் :

"இங்குள்ள கிராம சமுதாயங்கள், ஏறக்குறைய தங்களுக்குத் தேவையான எல்லா வசதிகளும் உள்ள சிறு சிறு ஜனநாயக ஸ்தாபனங்கள். அவைகள் எந்த அன்னிய அதிகாரங்களுக்கும் அடங்கினவைகளல்ல. மற்ற எல்லாம் அழிந்துபோன இடங்களிலும்கூட அவைகள் அழியவில்லை. பல அரச பரம்பரைகள் ஒன்றன்பின் ஒன்றாக ஒழிந்து மறைந்துவிட்டன; பல புரட்சிகளும் ஒன்றன்பின் ஒன்றாக வந்து ஓய்ந்துவிட்டன. ஆனால் கிராம சமுதாயங்கள் மட்டும் அப்படியே இருக்கின்றன. ஒவ்வொன்றும் ஒரு தனி அரசுபோல இருக்கின்ற இந்தக் கிராம சமுதாயங்களின் சேர்க்கைதான், மற்ற எந்தக் காரணத்தைக் காட்டிலும் அதிகமாக இந்திய மக்களின் நாகரீகத்தையும் நலத்தையும் பாது காத்து வந்திருக்கிறது. எத்தனையோ புரட்சிகளும் மாறுதல்களும் ஏற்பட்டும் தான்மட்டும் மாறாமல் இருந்து வந்திருக்கிற இந்தக் கிராம சமுதாயங்கள் தான், இந்திய மக்களின் சுபிக்ஷத்துக்கும் திருப்திக்கும், அவர்கள் அனுபவித்த சுயேச்சைக்கும் சுதந்தரத்திற்கும் ஆதாரமாக இருந்திருக்கின்றன. அதனால் இந்தக் கிராம சமுதாயங்களைக் குலைக்கக்கூடாது என்பது என்னுடைய விருப்பம். அவைகளுக்குத் தீங்கு விளைக்கக்கூடிய எந்தக்

காரியத்தையும் அஞ்சுகின்றேன்" ('ஹவுஸ் ஆப்காமன்ஸ் செலக்ட் கமிட்டியின்' அறிக்கை 1832.)

ஆனால் விதியின் விளைவு வேறு விதமாக இருந்தது. 'கிழக்கிந்தியக் கம்பெனியாரின்' மிதமிஞ்சின பழிபாவங்களுக்கஞ்சாத பேராசையே இந்தக் கிராமப் பஞ்சாயத்துக்களைக் கொஞ்சங் கொஞ்சமாக க்ஷீணமடையச் செய்துவிட்டது. 'குடிவார' முறைகளை வேண்டுமென்றே அழித்து 'ரயத்வாரி' முறைகளைப் புகுத்தினதால் கிராமச் சமுதாயத்தின் ஐக்ய வாழ்க்கை அழிக்கப்பட்டுவிட்டது. எல்லா நிர்வாக அதிகாரங்களும், நீதி விசாரணை அதிகாரங்களும் பிரிட்டிஷ் அதிகார வர்க்கத்தினரின் கைக்கே போய் விட்டதனால் கிராமாதிகாரிகள் நெடுங்காலமாக அனுபவித்து வந்த அதிகாரங்களையும் செல்வாக்கையும் இழந்துவிட்டார்கள்.

ஸர் ஹென்ரி மெயின் என்பவர் தமது 'கிராம சமுதாயங்கள்: கிழக்கிலும் மேற்கிலும்' என்ற புத்தகத்தில் "இந்தியக் கிராமச் சமுதாயங்கள் மிக்க ஜீவசக்தி வாய்ந்தன. உயிரற்ற ஸ்தாபனங்கள் அல்ல" என்று எழுதியிருக்கிறார். பேடன் பவெல் தம்முடைய 'இந்தியக் கிராமச் சமுதாயம்' என்னும் நூலில் இந்த கிராம சமுதாய அமைப்புகளைப்பற்றி மிகவும் விஸ்தாரமாகச் சொல்லியிருக்கிறார். புரொபெஸர் ஆல்தேகர் என்பவர் எழுதியுள்ள 'மேற்கிந்தியாவிலிருந்த கிராம சமுதாயங்களின் சரித்திரம்' என்ற நூல் இந்த நாட்டில் 'கிராமப் பொது' என்பது எப்படி நடந்து வந்தது என்பதைக் காட்டுவதற்கு மிகவும் பிரயோசனமானது. ஆனால் இந்த விஷயத்தைத் பற்றிய மிகவும் சிறந்த நூல்கள் டாக்டர் ராதாகுமுத முகர்ஜி எழுதியுள்ள 'பூர்வகால இந்தியாவில் இருந்த உள்ளூர் அரசாட்சிகள்' என்பதும் டாக்டர் ராதா கமல முகர்ஜி எழுதியுள்ள 'கீழ்நாடுகளின் ஜன நாயகம்' என்பதுமே.

இந்திய கிராமப் பஞ்சாயத்துகள் எப்படி வேலை செய்தன என்ற நுணுக்கங்களில் நுழைவது, இந்தச் சிறு நூலின் நோக்கத்துக்குப் புறம்பானது. ஒன்றுமட்டும் சொன்னாற் போதும். என்னவெனில்: பிரிட்டிஷ் ஆட்சியினால் ஏற்பட்ட மிகவும் துக்கப்படவேண்டிய தீமைகளில் இந்தக் கிராமச் சுதந்தரச் சமுதாயங்களை நிர்மூலமாக்கி விட்டது ஒன்று. பிரிட்டன் தனக்கு இஷ்டமான ஒரு ஸ்தல ஆட்சி முறையை இங்கே சுமத்தியிருக்கின்றது. அந்த முறை இந்திய மனப்பான்மைக்கு அன்னியமானது; இந்தியப் பண்புகளுக்கு ஒத்ததல்ல. அதனால்தான் அந்த முறை மிகவும் துக்ககரமான தோல்வியுற்றது. டாக்டர் அன்னிபெஸன்ட் அம்மையார் சொல்லுவது போல "கிராமப் பஞ்சாயத்துகளின் (டாக்டர் பி. கே. சர்க்கார் 'ஹிந்துக்களின் அரசியல் ஸ்தாபனங்களும் கோட்பாடுகளும்' என்ற நூலில் இந்தக் கிராமச் சமுதாயங்களுக்கு 'கிராமப் பஞ்சாயத்துகள்' என்ற பெயர் பிற்காலத்தில் வழங்கினது என்று எழுதியுள்ளார்) உத்யோகஸ்தர்களின் பெயர்கள் மட்டும் அப்படியே இருந்தன. ஆனால் முன்னெல்லாம் இந்தக் கிராம உத்தியோகஸ்தர்கள் அந்த கிராமத்திலுள்ள குடித்தனக்காரரால் நியமிக்கப்பட்டவர்களானதால் அந்தக் குடித்தனக்காரர்களுக்கு அடங்கினவர்களாக இருந்தார்கள். ஆனால் பிரிட்டிஷாரால் ஏற்படுத்தப்பட்ட கிராம ஆட்சியில் இந்தக் கிராம உத்யோகஸ்தர்களின் பெயர்கள் மட்டும் அப்படியே இருந்தாலும் அவர்கள் பிரிட்டிஷ் அதிகாரிகளால் நியமிக்கப்பட்டவர்களாகி, அந்த அதிகாரிகளை சந்தோஷப் படுத்த வேண்டியவர்களாகி விட்டார்களே ஒழிய முன் போல் ஜனங்களுக்குக் கட்டுப்பட்டவர்களாக இல்லாமற் போய்விட்டார்கள்." (இந்தியா: அடிமையா சுதந்தரமா?—ப–29)

அநேக குற்றங் குறைகள் உள்ளனவாக இருப்பினும் இந்திய கிராம சமுதாயங்கள், உண்மையான ஜனநாயகத்

துக்கும் ஸ்தல சுய ஆட்சிக்கும் மிக்கப் பிரசித்தி பெற்ற அத்தாட்சிகளாக விளங்கின. போதுமான உள்ளூர் அதிகாரமும் ஐக்யமும் இல்லாத, (வேறு தூர இடத்திலுள்ள) இக்காலத்திய 'மத்ய அதிகார' ஆதிக்யம் எங்கே பார்த்தாலும் அரசியல் காரியங்களை சுவையற்றனவாகவும், ஜீவனற்ற ஒரு யந்திர இயக்கமாகவும் செய்துவிட்டது. தனி மனிதனுடைய நலங்களுக்கும் அரசாங்கத்தை நடத்துகின்ற கும்பலின் நலத்துக்கும் என்னேரமும் போராட்டங்களே நடக்கின்றன. இந்தியக் கிராமப் பஞ்சாயத்துகள் இந்த நிலை வரவொட்டாமல் இந்த இருதரத்து நலங்களும் ஒன்றோடொன்று பின்னிக் கிடக்கும்படியான சமூக அரசியலை உண்டாக்கி, சமுதாய வாழ்க்கையை ஜீவகாருண்ய முள்ளதாகவும் பயனுள்ளதாகவும் செய்திருந்தன. ஆச்சாரியர் விேைப பாவே சொல்லுகிறபடி கிராம சபையைச் சேர்ந்த ஓவ்வொருவரும் ஒரு மன்னனுக எண்ணிக்கொள்ள இடமிருந்தது. இருந்தும் ஓவ்வொருவரும் அங்குள்ள மற்ற மக்களுடன் பிரிக்க முடியாத பாசபந்த உறவுகளுக்குக் கட்டுப்பட்டிருந்தார்கள். ('ஸ்வராஜ்ய சாஸ்திரம்—ஹிந்தி பதிப்பு—ப-47). தனித்தனி மனிதன் தன்னுடைய மனுஷத்தனத்தைப் பூரண அளவில் விருத்தி செய்துகொள்ள வசதிகள் உடையவனுக இருந்ததுடன், அந்தச் சிறு அரசாங்கத்துக்குப் பொறுப்பும் பிரயோசனமும் உள்ள அங்கமாக அமைந்திருந்தான். இந்திய கிராம சமுதாயங்களில் இருந்த அதிகாரப் பிரிவினைகள் மேல்நாட்டு அதிகாரப் பிரிவினைகளுக்கு மிகவும் வேறுபட்டன. இந்திய அதிகாரப் பிரிவினையின்படி கிராம சமுதாயங்களுக்கிருந்த அதிகாரங்கள் நிர்வாகத்தில் மட்டுமன்றி நிலத்தின் எல்லைக் கட்டிலும் சுதந்தரமுடையனவாக இருந்தன. அதனுல் சமூக நலங்களும் அரசியல் நலங்களும் ஒன்றுக்கொன்று பந்தப்பட்டனவாகவும் இயல்பாக நடக்கக்கூடியனவாகவும் பிணைக்கப்பட்டிருந்தன.

இப்போதுள்ள ஜனநாயக ஆட்சி முறைகளில் மலிந்து கிடக்கிற பல தீமைகள் இந்தியக் கிராமப் பஞ்சாயத்துகளில் இருந்ததில்லை. பணப் பழக்கமே இல்லாதிருந்ததனுல் லஞ்சத்துக்கும் பித்தலாட்டங்களுக்கும் இடமே இல்லை. கட்டுப்பாடும் நிர்ப்பந்த குணமும் மிகுந்த முதலாளித்தனங்கள் இல்லாதிருந்ததனுல் ஜனநாயகத்தை விலைக்கு வாங்கிவிட முடியாத பாதுகாப்பிருந்தது. தொகுதிகள் சிறிய அளவாக இருந்ததால் தேர்தல் என்பது ஏகோபித்த அபிப்பிராயமாகவும் இயற்கையாக உண்டாகிறவைகளும், பிரசாரங்களினுல் கலைக்கப்படாதவைகளுமான உணர்ச்சிகளுக்கு உட்பட்டதாகவும் இருக்க முடிந்தது. எல்லா ஜனங்களுடைய நன்மதிப்புக்கும் பாத்திரமான குண நலங்களுள்ள கிராமத் தலைவர்கள் கிராமத்தாரால் தேர்ந்தெடுக்கப் பட்டார்கள். தேர்தல் பிரசாரங்களுக்காக ஒரு தம்படிகூட யாரும் செலவு செய்ய வேண்டிய அவசியம் இருந்ததில்லை. மிகவும் தாராளமான முறையில் அதிகாரங்களை அங்கங்கே கொடுத்து, அந்தந்த இடத்துக்குப் பூரண ஸ்தல சுதந்தரங்கள் இருந்ததனுல் கிராம சபைகளில் வேலை மிகுதி என்பதும் இருந்ததில்லை. இப்படியாக, இந்திய ஜனநாயகம், நேரடியானதாகவும், ஜீவசத்துள்ளதாகவும், புரையில்லாததாகவும், பயனுள்ளதாகவும், பலாத்காரமில்லாததாகவும் இருந்தது. இதற்கு நேர் விரோதமாக இக்காலத்திய ஜனநாயகம், மறைமுகமானதாகவும், ஜீவனற்றதாகவும், புரையுள்ளதாகவும், பயனற்றதாகவும், பலாத்காரமுள்ளதாகவும் இருக்கின்றது. ஆகையினுல், இந்தச் சுதேசி ஸ்தாபனங்களை மீண்டும் உயிர்ப்பித்து, நம்முடைய எதிர்கால ஸ்வராஜ்ய அரசியல் அமைப்பிற்கு அவற்றை அடிப்படையாக்க வேண்டியது விரும்பத் தக்கது. டாக்டர் ராதாகமல முகர்ஜி மிகவும் சரியாகச் சொல்வதுபோல "இந்தியாவில் முன்னிருந்தமாதிரியான, அதிகாரங்களையெல்லாம் ஒரே இடத்தில் அடைக்காத சுதேசி ஜனநாயக முறை

தான், வெறும் மேல்நாட்டு முறைகளைப் பின்பற்றுவதைக் காட்டிலும் நமக்குப் பொருத்தமானதும் ஊக்கமளிக்கக் கூடியதாகவும் இருக்கும். அதுமட்டுமல்ல, அப்படிச் செய்வதுதான் மனித வர்க்கத்தின் அரசியல் சரித்திரத்துக்கே நாம் செய்யும் உதவியுமாகும். எப்படியெனில், பிரம்மாண்டமான மேல்நாட்டு ஏகாதிபத்தியங்களும் ராணுவ பலங்களும் நடத்துகின்ற பலவித விபரீதமான போட்டிகளினால் ஏற்படுகிற சச்சரவுகளின் பயனாக மதிகெட்டுப் போயிருக்கிற மனிதவர்க்கத்துக்கு அதுதான் நல்ல வழிகாட்டியாகும்.' பின்னும் முகர்ஜி பேசுகிறார்:

"இந்த முறை, அந்தந்த ஊரிலுள்ள வெவ்வேறு காரியத் திறமையுள்ள கூட்டங்களை ஒழுங்கு படுத்தி, முரண்பாடுகளைக் குறைத்து, ஒரு புதுமாதிரியான அரசியல் அமைப்பை உண்டாக்குவதற்கு அடிப்படையாக உதவும் என்று நிச்சயமாகத் தெரிகிறபடியால், நம் எதிர்கால அரசியலை நூதன முறையில் அமைப்பதற்கு மேல் நாடுகளிலிருந்த 'ரோமன்-டியுடானிக்' தினுசிலும் அதற்குப் பிற்காலத்திய 'பார்லிமெண்ட்' தினுசிலும் அமைக்கப்படுகிற அரசியலைக் காட்டிலும் அதிக திருப்தியை அளிக்கத்தக்கதாக இருக்கும். அன்றியும் ஆசியாவில் இருந்துவருகிற ஜாதிக் கட்டுப்பாட்டு ஐக்யங்களும் அதைப்போன்ற ஆசியப் பண்புகளும் முற்றிலும் புதுமுறையில் சமூக—அரசியல் திருத்தங்களைப் பரிசோதிக்க மிகவும் பிரயோசனமுள்ள முயற்சியாக இருக்கும். இப்போது ஆசிய மக்களிடை ஏற்பட்டிருக்கிற 'மறுமலர்ச்சி' உணர்ச்சிகள் மட்டும் மாறிவிடாமல் இருக்குமானால் அது மிகவும் பயன் தரக்கூடிய பரீட்சையாகும். உலகமெங்கும் இப்போது மனித சமூகம் 'அரசியல் ஸ்தாபனங்களின் கட்டுப்பாடு' என்ற சிறையில் அடைபட்டு, 'அமைதி' 'ஒழுங்கு' என்ற யந்திரங்களால் அடக்கப்பட்டு, மிகவும் பலவீனமுள்ளதாகப் போய் மனுஷத்தனத்தையே மறந்துவிட்டதால், யந்திரம் போல

சுரண்டல் வேலையையே நோக்கமாகக் கொண்ட அரசாங்கங்களில் அகப்பட்டுக்கொண்டு தவிக்கின்றது. அதனால் இப்போது உலகத்துக்கு மிகவும் அவசரமான தேவை எதுவென்றால்: சமூக வாழ்வில் ஒரு புது உணர்ச்சியைப் புகுத்தி, மனிதனை மீண்டும் மனுஷத்தனமுள்ளவனாக்கி, சமயோசிதமாக நடந்துகொள்வதற்கு மனித சுபாவத்தில் இயற்கையாகவே இருக்கிற சக்திகளைக் கிண்டிவிட்டு, இயற்கை அவனுக்குக் கொடுத்திருக்கிற சுயபுத்தியை சுதந்தரமாக உபயோகப்படுத்தச் செய்வதுதான். ('கீழ் நாடுகளில் ஜனநாயகம்—ப—25-26).

## பொருளாதாரப் பங்கீடு

கிராம சமுதாயங்களில் உள்ள அமோகமான இதர நன்மைகளுடன் பொருளாதார நலங்களும் ஒழுங்கான முறையில் பங்கிடப்படுகின்றன. உற்பத்திச் சாலைகளை யெல்லாம் பணக்காரர்களும் நடுத்தரமானவர்களுமே ஆண்டு வருகிற இப்போதுள்ள முதலாளித்தன சமூகம் உலகத்தில் நிரந்தரமான அமைதியையும் ஜன சௌக்யத்தையும் நிலைநாட்டத் தவறிவிட்டது. ருஷ்யா முதலான நாடுகளிலுள்ளதுபோன்ற 'சமதர்மக்' கொள்கையோ, பணக்கார வகுப்புகளை யெல்லாம் இரக்கமற்ற கொடூர முறைகளில் கொன்று குவித்துக் கருவறுத்துவிட்டது. சோவியத் 'பொது உடைமை'த் தத்துவம் உற்பத்தி ஸ்தாபனங்களை யெல்லாம் பலாத்காரமாகக் கைப்பற்றி, பாமர மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தியிருப்பது வாஸ்தவமானாலும், அதனால் மட்டும் அதை ஒரு குற்றமற்ற பாக்யமாகக் கொள்ளக் கூடாது. அதனுடைய அபார சக்தி வாய்ந்த 'திட்டம்' வகுக்கிற யந்திர முறை, தனி மனிதனை ஏறத்தாழ வெறும் சூன்யமாகவும் சொந்த உணர்ச்சியில்லாத யந்திரப் பகுதியாகவும் செய்து விட்டது. மேலும், ருஷ்யா தனது அக்கம்பக்க நாடுகளின் மேல் தனது இறகுகளை பரப்பவும் ஆரம்பித்துவிட்டது

ருஷ்யாவினுடைய நோக்கங்கள் எவ்வளவு உயர்ந்தன வாக இருந்தாலும் அதனுடைய அன்னிய நாட்டுக் கொள்கைகளைக் கண்டு நாம் ஐயுற வில்லாமல் இருக்க முடியவில்லை. முதலாளித்தனத்திலாவது, பொது உடைமை முறையிலாவது அல்லது வேறு எந்த முறை யிலாவது ஏகாதிபத்யங்களை ஏற்படுத்தும் முயற்சி களை நாம் ஏற்றுக்கொள்ள முடியாது. அதிகாரங் களையெல்லாம் தன்னிடத்திலேயே வைத்துக்கொண்டு, பெரும்படியான சமதர்மத்தை ஸ்தாபிக்க முயலும் நாடுகளெல்லாம் கடைசியில் பிறரை வலியப்போய்த் தாக்குகிற வம்பர்களாகவும் ஏகாதிபத்ய வெறியுள்ளன வாகவுந்தான் மாறிவிட முடியும். அதனுல் அப்படிப்பட்ட அரசாங்கங்கள் சிறிதும் பெரிதுமான எல்லா நாடுக ளுக்கும் சமமான சமாதானத்தையும் சௌக்யத்தையும் சுதந்தரத்தையும் கொடுக்கக்கூடிய ஒரு புது உலக சமுதாயத்தை உண்டாக்கும் என்று உறுதி சொல்ல இடமில்லை.

அப்படியானுல் இதற்குப் பரிகாரந்தான் என்ன? உற்பத்திகளெல்லாம் ஒரே இடத்தில் உண்டாக வேண்டும் என்ற எண்ணத்துடன் நடத்தப்படுகிற பெரும் பெரும் ஆலைகளை விட்டுவிட்டு கிராமங்களில் அங்கங்கே குடிசைத் தொழில்களாக நடத்த ஏற்பாடு செய்வதுதான் அந்தப் பரிகாரத்துக்கு வழி காட்டும். முன்னிருந்த கிராம சமுதாயங்களில், ஏற்றத் தாழ்வு இல்லாத ஒரு பொருளாதார முறையைக் கையாண்டார்கள். அந்த முறையில், 'எந்தக் காரியத்தையும் கவனிக்காமல் விட்டு விடுகிறது' அல்லது 'எந்தக் காரியத்திலும் ஏகபோக அதிகாரம் செலுத்துவது' என்ற இரண்டு குற்றங்களும் இல்லாதிருந்தன. பலவிதமான ஆழ்ந்த பரிசோதனை களுக்கு அப்புறம் அவர்கள் மிகவும் திருப்தியளிக்கக் கூடிய தங்கமான வழியில் சமதர்மத்துக்கும் முதலாளித் தனத்துக்கும் தகராறு இல்லாமல் செய்திருந்தார்கள்.

விவசாயத்திலும் கைத்தொழில்களிலும் ஏழைகளைப் பணக்காரர்கள் சுரண்ட முடியாதபடி மிக மேன்மையான கூட்டுறவுக் கொள்கையை அனுஷ்டித்து வந்தார்கள். காந்திஜி சொல்லுவதுபோல ,'பொருள்களை உற்பத்தி செய்வதும் அவற்றைப் பங்கிடுவதும், அவைகளை உபயோகப் படுத்துவதும் ஆகிய இந்த மூன்று காரியங்களும் ஏக காலத்தில் முடிந்தன. குடிசைகளிலும் வீட்டுக்கு வீடு இருந்துவந்த தொழிற்சாலைகளிலும் செய்யப்பட்ட பொருள்கள் அனைத்தும் அங்கங்கே உள்ள ஜனங்களுக்கு அப்போதைக்கப்போது வினியோகப் படுத்துவதற்கேயல்லாமல் தூரந்தொலைகளிலுள்ள வியாபாரச் சந்தைகளுக்கு அனுப்புவதற்காக அல்ல. இப்படி அங்கங்கே சிறு சிறு அளவில் தேவைகளைப் பூர்த்தி செய்யமட்டும் உற்பத்திகள் செய்யப்பட்டு வந்ததால் முதலாளியின் சுரண்டலுக்கு இடமே இல்லை. அனேக ஆயிரம் மக்களை ஒரே தொழிற் சாலையில் அடைத்து, அவர்களுடைய சுதந்தர வாழ்க்கையைப் பறிக்காமலும், அத்தனை பேரையும் சில பேர் அடிமைப்படுத்தி அடக்கியாளுகின்ற கொடுமைகள் இல்லாமலும், பொருளாதார சமத்வம் நிறுவப்பட்டிருந்தது. காந்தீயக் கருத்தின்படி அங்கங்கே அமைக்கப்படும் குடிசைத் தொழில்கள் ஒன்றுக்கொன்று கூட்டுறவு முறையில் கட்டப்பட்டிருக்கும்படி அமைக்க வேண்டுமேயல்லாமல் முதலாளித்தன முறையில் அமைக்கப்படல் ஆகாது என்பதை சொல்லத் தேவையில்லை. ஜப்பானில் உள்ளதுபோல சிறு முதலாளிகளை வீட்டுக்கு வீடு உள்ள தொழிற்சாலைகளை அடக்கியாள இடங்கொடுத்தால் குடிசைத் தொழிலாளர்களெல்லாம் வெறும் சுரண்டப்பட்ட கூலிக்காரர்களாகவேதான் இருக்க முடியும்.

பழையகால கிராம சமுதாயங்களில் பல குறைகளும் இருந்தன. நியாய விரோதமான வித்யாசங்களுக்கு இடங் கொடுத்த வெகு இறுகலான ஜாதிப் பிரிவினைகள் மிகவும் வருந்தத்தக்க குறை. அந்தக் காலத்திலுங்கூட சில பணக்

கார 'சேட்டுகள்' இருந்தார்கள். அரசியல் விஷயங்களிலும் பொருளாதார விஷயங்களிலும் ஐக்யக் குறைவும் இருந்தன. அவர்களுடைய சராசரி வாழ்க்கைத் தரமும்கூட இப்போது நமக்கு ஆசை ஊட்டக் கூடிய அவ்வளவு உயர்ந்ததாக இருந்திருக்க முடியாது. இருந்தாலும், இந்தக் கிராம சமுதாயங்கள் இந்திய மக்களின் முதிர்ந்த ஆலோசனையும் நீண்டகால அனுபவமும் சேர்ந்ததன் பலனாக பொருளாதார அமைப்புக்கு மிகவும் அனுகூலமான கொள்கைகள் உடையன. அதைச் சரியான முறையில் புதுப்பித்து, ஐக்யப்படுத்தினால், யுத்தக் கொடுமைகளால் சீரழிந்துபோன இவ்வுலகத்தில் நம்மை இரவு பகலாக ஹிம்சித்து வருகிற அநேக தீமைகளை அகற்றுவதற்கு நல்ல வைத்தியமாக, இன்றைக்கும் பிரயோசனப்படும்.

பொருளாதாரப் பங்கீடும் அதிகாரப் பிரிவினையும், அளவுக்கு மீறிய யந்திரப் பெருக்கத்தினால் வரும் தீங்குகளிலிருந்தும் நம்மைப் பாதுகாக்கும். "ஏராளமான எந்திரங்களாலும் தொழிற் பெருக்கத்தாலும் ஏழை மக்களின் வாழ்க்கை தனித்தனி மனிதனுக்கிருக்கவேண்டிய இன்பமற்றுப் போய் விட்டது. அதனால் உழைப்பாளிக்கு உத்ஸாகமே இல்லாமற் போய்விட்டது. அவன் எந்திரத்தோடு சேர்ந்த ஒரு ஜீவனற்ற உருப்படியாகி விட்டான்." என்று கார்ல் மார்க்ஸ் எழுதுகிறார். ('பொது உடைமை அறிக்கை') மேலும் அவரே சொல்லுகின்றார்: "எந்திரச் சாலையைச் சேர்ந்த பாட்டாளி ஒரு முடவனாகவோ அல்லது விகார ரூபமுள்ள பூதமாகவோ மாறி விடுகிறான். ஆனால் அதற்கு நேர்மாறாக, எந்திரத் தொழிலைச் சேராமல் சொந்த வேலையைச் சுதந்தரமாகச் செய்கிற உழவனும் கைத்தொழிலாளியும் அறிவிலும் புத்தியிலும் தன்னம்பிக்கையிலும் விருத்தியடைகிறான்." ('டாஸ் காபிடல்') கார்ல் மார்க்ஸ், எந்திரங்களைக் கொண்டு பெருவாரியான சாமான்களை உற்பத்தி செய்து

குவிப்பதனால் உண்டாகும் தீமைகளை அறிந்திருந்தும் அந்தத் தீமைகளைப் 'பொது உடைமை' அரசாங்கத்தினால் மாற்றி விடலாம் என்று எதிர் பார்த்தார். ஆனால் 'எவ்வளவு சாமர்த்தியமான காரணங்களைக் காட்டிச் செய்யப்பட்டதானாலும்' எந்திரப் பெருக்கமானது, முதலாளித் தனத்தைச் சேர்ந்ததானாலும் சரி, அல்லது சமதர்மப்பொது உடைமைத் தத்துவத்தைச் சேர்ந்ததானாலும் சரி, யந்திரச் சாலைகளில் வேலை செய்கிற தொழிலாளிகளின் உடல் நலத்தையும், மதி நுட்பத்தையும், ஒழுக்கத்தையும் கெடுக்காமலிருக்க முடியாது.

"முதலாளித்தனத்தைக் கொண்டு உற்பத்தி செய்வதையும் விற்பனை செய்வதையும் ஒழித்து, சுரண்டல் வேலைகளை விலக்கிவிட்டோம் என்பதனால் மட்டும் எந்திரத் தொழில்களால் நேரும் தீமைகளை மாற்றிவிட முடியாது" என்று புரொபெஸர் போர் சோதி எழுதுகிறார். ('விகாரநாகரிகம்'). அதனால், காந்திஜி, இக்காலத்திய யந்திரத்தொழிற்சாலைகளை வெறுக்கிறார். ஆனால் அவர் எல்லா விதமான எந்திரக் கருவிகளுக்கும் விரோதி என்று எண்ணிவிடுவது பெருங்குற்றம். அவர் 'ஆலோசனையில்லாமல் எந்திரச் சாலைகளைப், பெருக்குவதை மட்டும்' ஆட்சேபிக்கிறார்.

"ஒரு குறிப்பிட்ட வேலையைச் செய்து முடிக்க ஆள்கள் மிகவும் குறைவாக இருக்கிறபோது எந்திரங்கள் நல்லதுதான். ஆனால், இந்தியாவில் இருப்பதுபோல தேவைக்குமேல் அதிக வேலைக்காரர்கள் இருக்கிற இடங்களில் அது ஒரு தீமை." ('ஹரிஜன்' 16-11-1934).

இன்றைய உலகில் யந்திரங்கள் தொழிலாளிகளைச் சூன்யமாக்கி விட்டன. அவர்கள் தங்கள் மனுஷத்தனத்தை இழந்து, இரவு பகலாக ஓயாமல் ஓசை முழங்க ஓடிக்கொண்டிருக்கிற பூதாகாரமான எந்திரங்களுள்ள பிரம்மாண்டமான தொழிழ்சாலைகளில் தூசுகள்போல் இருக்கிறார்கள். அப்படியில்லாமல் கோடிக்கணக்கான

குடியானவர்களுக்கும் தொழிலாளிகளுக்கும் அங்கங்கே அவர்களுடைய சிரமங்களைக் குறைக்க உதவியாக இருக்கத்தக்க சிறு சிறு யந்திரங்களை நிச்சயமாக காந்திஜி விரும்புவார்.

தொழிலாளிகளுக்கு வேலை கொடுக்கும் நோக்கத்திலும் குடிசைத் தொழில்களுக்குப் பிரதான்யம் கொடுக்க வேண்டும். 'முழு நேர வேலை' என்பது மேற்கத்திய நாடுகளில் பொருளாதாரத் திட்டங்களை வகுப்பதற்குப் போடுகின்ற புதுக் கூச்சல். ஆனால் யந்திரங்களைப் பெருக்கி, பிரமாண்டமான தொழிற்சாலைகளில் ஏராளமான சாமான்களைச் செய்து குவிக்க வேண்டுமென்ற திட்டங்களில் எல்லா மக்களுக்கும் நிச்சயமாக வேலை கொடுக்க முடியுமா? எந்திரத் தொழில்களில் மிகவும் முன்னேற்றமடைந்த இங்கிலாந்து தேசமும் அமெரிக்க ஐக்ய நாடுகளும்கூட கோடிக்கணக்கான தங்கள் குடிகளுக்கு வேலை கொடுக்க முடியாமல் திண்டாடுகிறபோது, 40 கோடி ஜனங்களைக் கொண்ட இந்தியாவில் எந்திரச் சாலைகளையும் மில்களையும் பெருக்குவதனால், வேலையில்லாத் திண்டாட்டத்தை விலக்கிவிட முடியும் என்பது நியாயமாகுமா? இப்போது நமது நாட்டிலுள்ள எல்லா எந்திரச் சாலைகளும் சேர்ந்து, இருபது லட்சம் தொழிலாளிகளுக்குத்தான் வேலை கொடுக்க முடிகிறது. 'பம்பாய்த் திட்டம்' வகுத்தவர்களுடைய கணக்குப்படி பெரிய எந்தரத் தொழில்களை இப்போதிருப்பதைவிட ஐந்து மடங்கு அதிகமாக்கினால் சுமார் ஒரு கோடி ஜனங்களுக்கு வேலை கொடுக்க முடியும். அப்படியானால் மிச்சமுள்ள 39 கோடி மக்களின் கதி என்ன? இந்திய நாட்டில் விவசாயிக்குக்கூட வருஷம் பூராவும் வேலை இருப்பதில்லை. அவனுடைய சொற்ப வரும்படியுடன் இன்னும் கொஞ்சம் சம்பாதிக்க, வேறு தொழில் ஏதாவது வேண்டியிருக்கிறது. அதனால் சிறுசிறு குடிசைத் தொழில்களை ஏற்படுத்தி

எண்ணிறந்த கிராம சமுதாயங்களில் உள்ள எல்லா மக்களுக்கும் வேலை கொடுத்து, 'ஏராளமான சரக்குகளைக் குவிப்பதற்கு' பதிலாக 'ஏராளமான மக்களுக்கு வேலை கொடுக்க' வேண்டும். பொருளாதாரத் திட்டங்களின் நவீனத் தேவைகளைக் கருதி, பெரிய எந்திரங்களைக் கொண்டு நடத்தப்படுகிற சில 'மூலத்' தொழிற்சாலைகள் இருக்கவேண்டி யிருக்கும். ஆனால் அப்படிப்பட்ட 'மூலத்' தொழில்களெல்லாம் அரசாங்கத்தின் சொந்தமாக அதன் அதிகாரத்தில் நடத்தப்பட வேண்டும் என்று காந்திஜி உறுதியாக அபிப்பிராயப் படுகிறார்.

நம்முடைய கிராம சமுதாயங்களில் நடத்துகிற குடிசைத் தொழில்கள் ஆதாயமில்லாதனவாக இருந்து விடும் என்று நாம் அஞ்சவேண்டியதில்லை. இந்த உலகத்தில் இப்போது இவரைவிடப் பெரிய ஆலைத் முதலாளி இல்லையென்று சொல்லப்படுகிற ஹென்றி போர்ட் என்பவர் "பொதுவாக மிகப் பெரிய எந்திரங்களால் லாபமில்லை" என்று சொல்லுகிறார். ('இன்றும் நாளையும்'—ப–109). ஆகையினால் எல்லாச் சரக்குகளையும் பெரிய எந்திரங்களுள்ள ஒரே சாலையில் உற்பத்தி செய்ய வேண்டுமென்பதிலும் அர்த்தமில்லை. "எல்லாராலும் உபயோகப்படுத்தப்படுகிற ஒரு பொருள் எல்லா இடங்களிலும் உற்பத்தியாக வேண்டும். அப்போதுதான் சரக்குகளைத் தொழிற்சாலையிலிருந்து வெவ்வேறு இடங்களுக்குக் கொண்டுபோவதிலும் பகிர்ந்து கொடுப்பதிலும் உள்ள சிரமங்கள் குறைந்து அங்கங்கேயுள்ள ஜனங்கள், வேண்டிய சரக்கை, வேண்டியபோது, வேண்டிய இடத்தில் வாங்கிக்கொள்ள சௌகரியமாக இருக்கும்" என்றும் போர்ட் சொல்லுகிறார். அவருடைய முடிவான நோக்கம் "உற்பத்திகளை அங்கங்கே உண்டாக்கும்படி சிறு சிறு யந்திரங்களை ஸ்தாபித்து அதில் தொழிலாளிகளும் விவசாயிகளும் கலந்து வேலை செய்யும்படி செய்ய வேண்டும். அப்படிச் செய்தால்தான் தனி மனிதனுடைய

சுதந்தரம் பாதிக்கப் படாமல் இருப்பதுடன் உணவும்கூட சரசமான விலைக்குக் கிடைக்கும்" என்பதாகும் ('முன்னேற்றம்'—ப–157) "வெவ்வேறு சாமான்களை உற்பத்தி செய்கிற சிறு சிறு உற்பத்தி சாலைகளும், சமயோசிதமாக உபயோகப்படுத்திக் கொள்ளக்கூடிய சிறு சிறு யந்திரங்களும் பெரிய பெரிய தொழிற்சாலைகளையும் பெரிய பெரிய எந்திரங்களையும் காட்டிலும் லாபகரமானவை" என்று லூாவிமம்போர்ட் என்பவரும் அபிப்பிராயப்படுகிறார். ('பயிற்சியும் பட்டணங்களும்'—ப–342)

பெருவாரியான சரக்குகளை உற்பத்தி செய்யும் மத்யத் தொழிற்சாலைகளுக்கு அதிபதிகளான முதலாளிகள் இந்த உலகத்தை ரத்தக்களறியாக்கி, மிக்கச் சேதமுண்டாக்கும் கொடூரமான யுத்தங்களுக்கு அடிக்கடி இழுத்துவிட்டிருக்கிறார்கள். இந்த யுத்தங்களால் ஏற்பட்ட துக்ககரமான அளவற்ற உயிர்ச் சேதத்தையும் பொருட்சேதத்தையும் பெருவாரி உற்பத்திச் செலவுகளோடு சேர்க்க வேண்டாமா? அனுபவத்தில், யந்திரங்களைக் கொண்டு பெருவாரியான சரக்குகளை உற்பத்தி செய்வது மிக்கச் செலவு அழிவுகள் உள்ளதாகவும் சிக்கன முறைகளுக்குச் சிறிதும் ஒவ்வாததாகவும் இருக்கிறதென்பது நிதர்சனமாகிறது.

பொருளாதாரச் சிக்கனப் பிரிவினைகளைப் பற்றி 'காந்தீயத் திட்டம்' என்ற புத்தகத்தில் மிகவும் விரிவாகச் சொல்லியிருக்கிறேன். இந்தச் சிறு நூலில் அந்த விவரங்களையெல்லாம் விரித்துச் சொல்வது பொருத்தமற்றதாகப் போகும்.

## மத்ய அதிகாரத்தைப் பிரித்துவிடுவதின் தத்துவம்

அதிகாரமோ உற்பத்தியோ ஒரே இடத்தில் இருக்கக் கூடாது என்ற கொள்கையை, அதனால் உண்டாகக்கூடிய அரசியல், பொருளாதார நன்மைகளை மட்டும் கருதி

காந்திஜி சிபார்சு செய்யவில்லை என்பதைத் தெளிவாக அறியவேண்டும். மத்ய அதிகாரங்களைப் பிரிப்பது 'எளிய வாழ்க்கையும் உயர்ந்த எண்ணமும்' என்ற மனப் பண்பையும் ஆன்ம உணர்ச்சியையும் வளர்க்கக் கூடியது என்பது காந்திஜியின் நம்பிக்கை. மற்றக் காரணங்களைக் காட்டிலும் இந்தக் காரணத்துக்காகவே அவர் அதை ஆதரிக்கிறார். "மனம் என்பது ஒரு ஓய்வில்லாத பறவை. எவ்வளவுக்கெவ்வளவு கிடைக்கிறதோ அவ்வளவுக்கவ்வளவு இன்னும் அதிகமாக வேண்டுமென்று மனம் ஆசைப்படுகிறது. அப்படியே கிடைத்தாலும் திருப்தியடைவதில்லை. நாம் எவ்வளவுக்கெவ்வளவு சுகபோகங்களில் பற்று வைக்கிறோமோ அவ்வளவுக்கவ்வளவு அவை கட்டுக்கடங்காமல் மிதமிஞ்சிவிடுகின்றன. அதனால்தான் நமது முன்னோர்கள் போகாதிகளுக்கு அளவு வகுத்திருந்தார்கள். அவர்கள் 'இன்பம்' என்பது பெரும்பாலும் ஒரு மனோநிலைதான் என்பதைக் கண்டவர்கள். நம்முடைய உண்மையான இன்பமும் ஆரோக்யமும் நம்முடைய கைகளையும் கால்களையும் சரியான வழியில் உபயோகப்படுத்திக்கொள்ளத் தெரிந்துகொள்வதில் தான் இருக்கின்றன என்பதை அவர்கள் அறிந்திருந்தார்கள்." என்று கூறுகிறார், எளிய வாழ்வும், மனோவிருத்தியும், ஒழுக்கமும் வாழ்க்கையின் இன்பத்துக்கு இன்றியமையாதன எனக் கருதுகின்றார். புகழ்பெற்ற விஞ்ஞான சாஸ்திரியான புரொபெஸர் ஈன்ஸ்டின் என்பவரும் இதே கருத்தை ஆதரிக்கிறார்.

> "சொத்துடைமையும், வெளிப்படையான வெற்றிகளும், விளம்பரமும், சுகபோகங்களும் எனக்கு எப்போதும் வெறுப்பான விஷயங்கள். ஆடம்பரமில்லாத எளிய வாழ்வும் அகந்தையில்லாத நடத்தையுந்தான் ஒவ்வொரு மனிதனுக்கும் மிகவும் சிறந்த மார்க்கம். அது தேகத்துக்

கும் நல்லது, மனசுக்கும் நல்லது" – ('நான் நம்புவது' - ப-70).

ஆனால் எளிய வாழ்க்கை என்பது எப்போதும் தரித்திரத்தில் வருந்திக்கொண்டு கோவணாண்டியாக இருப்பது என்று அர்த்தமல்ல. காந்திஜி சொல்லுகிற வாழ்க்கைத்தரமும் தேவைகளும் குறைந்தபக்ஷ சௌகரியங்களும் முற்றிலும் உயர்ந்த ரகமாகத்தானிருக்கின்றன. ஆனால் அவர் சொல்லுகிற 'நல்ல வாழ்வில்' ஆடம்பரச் சுகபோகங்களுக்கு இடமில்லை. அவர் வெறும் 'வாழ்க்கைத்தரத்தை உயர்த்த வேண்டும்' என்பதில் ஆசை கொள்வதில்லை. அவர் 'மனித வாழ்க்கையே உயர வேண்டும்' என்பதைத்தான் விரும்புகிறார்.

எளிய வாழ்க்கை என்பதை ஒட்டியே 'மனுஷத் தனம்' என்பதையும் 'மிருகத்தனம்' என்பதையும் பற்றி நாம் சிந்திக்க வேண்டும். காந்திஜிக்கு 'மனுஷத்தனம் தான் முடிவான லக்ஷியம். அல்லது ப்ரோட்டோகோரஸ் என்பவர் சொன்னது போல 'மனுஷத்தனம்தான் எல்லா வற்றிற்கும் அளவுகோல்'. 'பணத்தில் சிக்கனமாக' இருப்பதை விட, காந்திஜி 'வாழ்க்கையில் சிக்கனமாக' இருக்க வேண்டுமென்பதையே உபதேசிக்கிறார். மனுஷத் தனத்தை மதிக்கிற ஜீவகாருண்ய முறைகளில் சமூகத்தையும் பொருளாதாரத்தையும் திருத்தியமைக்க வேண்டும் என்ற அழுத்தமான நம்பிக்கைதான், கதர் இயக்கத்துக்கும் கிராமக் கைத்தொழில் இயக்கத்துக்கும் அடிப்படை. "கதர் உணர்ச்சி என்பதற்கு உலகத்திலுள்ள ஒவ்வொரு மனிதனிடத்திலும் சகோதரத்வமும் சமத்வமும் பாராட்ட வேண்டும் என்பதுதான் அர்த்தம்" (எங்இந்தியா 17-2-1927) இதே உணர்ச்சிதான் பூர்வகால கிராம சமுதாயங்களின் கூட்டுறவு வாழ்க்கையில் பிணைந்திருந்தது. இக்காலத்திய 'பொருளாதாரச் சிக்கனக்காரனுக்கு' பணத்தைக்காட்டிலும் தெய்வமில்லை. ஆனால், 'அகில லோகமும் கிடைப்பதானாலும் ஆன்மாவை விற்றுவிடக்

கூடாது' என்பதுதான் காந்திஜி நமக்குச் செய்யும் உபதேசம்.

காந்திஜியின் பொருளாதார சமத்துவ தத்துவத்தில் 'தேக உழைப்பின் தெய்விகப் பெருமை' என்பது இன்னொரு முக்யமான கருத்து. "கோடிக்கணக்கான மக்கள் தங்களுடைய கை கால்களை உபயோகப்படுத்துவதையே விட்டுவிட்டார்கள் என்பது மிகவும் துக்ககரமான உண்மை" ('எங்கிந்தியா'—22-9-1927.) "இணையற்ற ஜீவ யந்திரமாகிய நமது தேகத்தை, துருப்பிடிக்க விட்டு விட்டு அதற்கு பதிலாக ஜீவனற்ற யந்திரங்களை உபயோகப்படுத்த விரும்புவதனால் நமது தேகத்தை நாமே அழிக்கிறோம்" ('எங்கிந்தியா'—8-1-1925). காந்திஜியின் எண்ணத்தின்படி 'உழைப்புத்தான் உயிர் வாழ்க்கை.' அது ஒரு வரம், சாபமல்ல.

மேற் சொன்ன விஷயங்களைச் சிறிது சிந்தித்தால், எளிய வாழ்க்கை, மனுஷத்தனம், உழைப்பின் தெய்விகம் என்ற இந்த கோட்பாடுகளெல்லாம் முடிவில் காந்திய முயற்சிகளுக்கெல்லாம் அஸ்திவாரமான அஹிம்சையின்மேல் கட்டப்பட்டிருப்பதை அறியலாம். "அஹிம்சையை அடிப்படையாகக் கொண்ட வாழ்க்கையை நான் சித்திரித்துப் பார்த்தபோது, அது 'எளிய வாழ்க்கையும் உயர்ந்த எண்ணமும்' என்ற மிகவும் சுருக்கமான வடிவத்தில் அமைவதைக் கண்டேன். அஹிம்சையை ஆதாரமாகக் கொண்ட சமூகம் என்பது கண்ணியமும் அமைதியுமான வாழ்க்கைக்கு அத்யாவசியமான 'கட்டாயப்படுத்தப்படாத' ஒத்துழைப்புக்கு இருப்பிடமாகிய கிராமங்களிலுள்ள சிறு சிறு சமுதாயங்களில்தான் சாத்யம். அஹிம்சை முறையில் அமையக் கூடிய நாகரிகத்துக்கு ஏகதேசம் மிகவும் சரியான மாதிரியாகக்கூடியது முற்காலத்தில் இந்தியாவிலிருந்த 'கிராம சமுதாயம்'தான். அது சாணை பிடிக்காத வயிரம்போல் மெருகற்றுக் கரடுமுரடாகத் தான் இருந்தது என்பதை

நான் ஒத்துக்கொள்ளுகிறேன். அதில் என்னுடைய கருத்துக்களுக்கு ஒத்ததும், நான் சொல்லுகிற மாதிரியும் ஆன 'அஹிம்சை' இல்லை யென்பதையும் அறிவேன். ஆனால் அஹிம்சையின் கரு அதில் இருந்தது" என்று காந்திஜி எழுதினார். ('ஹரிஜன்' 13-1-1940). அதனால் காந்திஜி 'கிராமத்தன்மை' என்பதை வைத்துக்கொண்டு ஒரு புது நாகரீகத்தை விருத்தி செய்ய வேண்டுமென்று மிகவும் தீவிரமாக விரும்புகிறார். "நான் நினைக்கிறபடி அமையக்கூடிய 'கிராமப் பொருளாதார' ஏற்பாட்டில் 'சுரண்டல்' என்பதற்கு இடமே இராது. 'சுரண்டல்' தான் பலாத்காரத்தின் மூலகாரணம்". என்கிறார் காந்திஜி. ('ஹரிஜன்' 4-11-39)

காந்திஜியின் கருத்தின்படி 'அஹிம்சைதான் உலகத்தில் எல்லாவற்றிலும் மிகப் பெரிய சக்தி'. அதுதான் வாழ்க்கையின் முடிவான சட்டம். "ஒன்றையொன்று இழுத்துப் பிடித்துக்கொண்டிருக்கிற 'ஆகருஷ்ண சக்தி, யினால் உலகம் எப்படி நிலை பெயராமல் இருக்கிறதோ அதைப்போலவே 'அஹிம்சை' என்ற சக்தியினால்தான் மக்களின் சமூக வாழ்க்கை நிலைகுலையாமல் இருந்து வருகின்றது" என்று காந்திஜி எழுதுகிறார் ('ஹரிஜன்'— 11-2-39) டி. ஹெச். க்ரீன் என்பவர் "அரசாங்கத்துக்கு அடிப்படை 'சம்மதமே யன்றி பலாத்காரமன்று என்று கூறுகின்றார்." ('அரசியல் பொறுப்புக்களின் கொள்கைகள்). ஹிம்சை முறைகள் முற்றிலும் பயனற்றவை என்பதை இந்த இரண்டு உலக மகா யுத்தங்களும் தீர்மானமாக நிரூபித்துக் காட்டிவிட்டன. அன்றியும் அமெரிக்கத் தலைவர் ட்ரூமன் சமீபத்தில் சொன்னது போல 'இன்னொரு யுத்தம் வந்தால் நாகரீகம் என்பதே அடியோடு அழிந்து போய்விடும்'. விஞ்ஞானத்தின் விபரீதப் போக்குகள், நாம் தீர்மானிக்கவேண்டிய விஷயங்களை முடிவு கட்டிவிட்டன. இப்போது உலகில் எழுந்திருக்கிற போட்டி, 'ஹிம்சைக்கும் அஹிம்சைக்கும்'

அல்ல; 'ஹிம்சைக்கும் விஞ்ஞானத்துக்குமே' யாகும். ஹிம்சையும் விஞ்ஞானமும் ஏககாலத்தில் வாழ முடியாது. இந்த நியாயத்துக்கு அணு குண்டே போதிய பிரமாணம். ஹிம்சையை நோக்கமாகக்கொண்ட விஞ்ஞானத்தின் நேரான விளைவுதான் அணுகுண்டு. இப்போதுள்ள அணுகுண்டை வெறும் வாண வேடிக்கையாக்கி விடக் கூடிய சக்திவாய்ந்த இன்னொரு விதமான வெடி குண்டை அமெரிக்கா கண்டுபிடித்திருப்பதாகப் பிரஸ்தாபிக்கப்படுகிறது. ஆகையினால், நாகரீகத்துக்காகவும் ஜீவ காருண்யத்துக்காகவும் இந்த ஹிம்சை முறைகளை அடியோடு விட்டொழிப்பதைக் காட்டிலும் நமக்கு வேறு வழியில்லை, அணுகுண்டைக் கொண்டு அழிக்க முயல்வதை விட்டு விட்டு, அண்டங்கள் அனைத்தும் ஒரு அணுவில் அடங்கி யிருப்பதை அறிந்து கொள்ள முயல வேண்டும். இப்படிப்பட்ட ஒருநோக்கம் இல்லாவிட்டால் உலகம் நிர்மூலமாகிவிடும் என்பது நிச்சயம்.

## சமூக நலம்

சமூக நலங்களைக் கருதினாலும், தனித்தனி 'கிராம சமுதாய' சமதர்ம முறையை விருத்தி செய்வதுதான் நல்லது. ஜன நெருக்கமான நகரவாழ்க்கையைக் காட்டிலும் நல்ல காற்றுள்ள கிராமந்தர வாழ்க்கைதான் ஆரோக்யத்துக்கும் சுகாதாரத்துக்கும் உகந்தது. நோயுண்டாக்கக்கூடிய சந்தடி மிகுந்த பட்டண வாசம், கொஞ்சங்கொஞ்சமாக நரம்புகளைத் தாக்கி தேகத்துக்கும் மனதிற்கும் தீமையை உண்டாக்குகிறதென்பது உண்மை. எந்திரம் போன்ற மாமூல் பழக்க வழக்கங்களால் வாழ்க்கையின் உத்ஸாகங்களை வெகு வேகமாக இழந்து வருகிற இக்காலத்திய ஜன சமூகத்துக்கு சந்தடியில்லாத வாழ்வும், உடல் நலத்துக்கு உகந்ததான விவசாய உழைப்பு, குடிசைத் தொழில், சிறுசிறு தொழில் சாலைகள் முதலிய

வசதிகளும் உள்ளதாகிய கிராம வாழ்க்கைதான் இனி மேல் குதூகலத்தையும் வீரியத்தையும் கொடுக்க வல்லது.

'மீண்டும் கிராம வாழ்க்கையை மேற்கொள்க என்று கிளம்பியிருக்கிற புதுயோசனையில் அடங்கியுள்ள நியாயம் தேசீய ஆரோக்யத்துக்கு மட்டுமல்லாமல், மனிதவர்க்க சாஸ்திரப்படி மனித சமூகம் அழிந்துபோகாமல் இருப்பதற்கும் அவசியமானது. தொழிற்சாலைகள் மிகுந்த அநேக ஐரோப்பிய நாடுகளில் கடந்த பல பத்தாண்டுகளாக ஜனத்தொகை குறைந்து கொண்டே வந்திருக்கிறது. மால்தூஸ் என்பவர் 17-18ம் நூற்றுண்டில் ஜனப் பெருக்கம் அதிகமாக இருக்கிறதென்ற கவலையினுல் பீடிக்கப்பட்டு வருந்தினுர். ஆனுல் இக்காலத்திய மனித வர்க்க சாஸ்திர ஆராய்ச்சியாளர்கள், ஜனத்தொகை குறைந்து விட்டது என்றுமட்டுமல்லாமல் மனிதவர்க்கத்தின் தரமும் குறைந்து வருவதாக விசாரப்படுகிருர்கள். கிராமவாசிகளைக் காட்டிலும் நகரவாசிகளின் 'குழந்தை பெறும் சக்தி' மிகவும் குறைவு என்பது, நன்ருக ருசுவாகி விட்ட சமூக சாஸ்திர உண்மையாகும். நகரவாசிகளிடத்தில் காணப்படுகிற இந்தக் குறைவுக்குக் காரணம் நகர வாசத்தின் ஜன நெருக்கமும், கருத்தரிக்கிற காலத்திலும் கரு வளர்கின்ற காலத்திலும் கவனிக்க வேண்டிய ஒழுக்கங்களை இயற்கைக்கு விரோதமான பழக்கங்களால் அவமதிக்கிறதும், குடும்பத்தின் பந்தங்களை பாதிக்கிற புதுப்புது ஆசாபாச முறைகளும்தான் என்று புரொவெசர் லான்ஸிலோட் ஹாக்பென் என்னும் சாஸ்திரி சுட்டிக் காட்டுகிருர். மிதமிஞ்சிய எந்திர சம்பந்தமும் சமூக வாழ்க்கையை ஒரு எந்திர இயக்கமாக்கி விட்டது. "எந்திரம் போல் சுழன்று நடக்கிற உத்ஸாக மற்ற நகர வாழ்க்கையில் 'பிள்ளை பெறுவது' என்பது, இயற்கைக்கு விரோதமான ஒரு ஆஸ்பத்திரி வேலையாகப் போய்விட்டது. வெறும் யந்திரங்களைப்போல வாழ்ந்து, கர்ப்பத்தை உண்டாக்கவோ கர்ப்பம் தரிக்கவோ சக்தி

யற்றுப்போன நகரவாசிகளான ஆண்களும் பெண்களுமே இப்போது நாகரீக மனிதர்களாகிவிட்டார்கள்." என்று புரொபெஸர் ஹாக்பென் எழுதுகிருர் ('நமக்கு வரப் போகிற கதி என்ன'—ப-184) இதற்கு நேர் விரோதமாக கிராமாந்தரங்களில் கால்நடைகளும் செடி கொடிகளும் தமது பின் சந்ததிகளைப் பெற்று வளர்க்கிற சம்பவங் களைத் தினந்தினம் பார்த்துக்கொண்டு வளர்கின்ற கிராமக் குழந்தைகளுக்கு ஜீவராசிகளின் தொடர்ச்சி, மறுமலர்ச்சி பெறுகின்ற இயற்கை உணர்ச்சிகளாகத்தான் இருக்கின் றன. நகரவாசப் பழக்கங்கள் வெறும் முதலாளிகள் சமூகத்தில் தான் இருக்கும் என்று எண்ணிவிடக்கூடாது. ஒரு 'சமதர்ம' அரசாங்கம் வந்தாலும் மனிதவர்க்கம் சீர்கெட்டு மங்கிப்போகாமலிருப்பதற்கு இந்தப் பிரச் னைக்கு வழி செய்ய வேண்டியதாகவேயிருக்கும்.

கிராம சமுதாயங்கள் ஏற்பட்டால் சமூக ஒற்றுமை யும் பாதுகாப்பும் உண்டாகும். பழையகால கிராம சமுதாயங்கள் பெரிய கூட்டுக் குடும்பங்கள்போல் நடந்து வந்தன. ஒரு தனி மனிதனுக்கு நேரும் துன்பங்கள் அந்த கிராமம் முழுதுக்கும் நேர்ந்ததாகக் கருதப்பட்டன. ஒரு மனிதனுடைய சொத்துக்கள் களவு போய்விட்டால் கிராமத்திலுள்ள மற்றவர்களெல்லாம் சேர்ந்து அந்த நஷ்டத்துக்கு ஈடு செய்து விடுவார்கள். ஒரு கிராமவாசி யின் வீடு அகஸ்மாத்தாக நெருப்புப்பிடித்து எரிந்துபோய் விட்டால் கிராமத்திலுள்ள மற்றவர்கள் உடனே கட்டிடத்துக்கு வேண்டிய சாமான்களைத் தேடி மீண்டும் அதைக் கட்டித் தந்து விடுவார்கள். ஒரு குடும்பத்தின் தலைவன் திடீரென்று இறந்து, அவன் மனைவி மக்கள் நிர்க்கதியாகிவிட்டால் அந்தக் கிராமத்திலுள்ளவர்கள் அக்குடும்பத்துக்கு வேண்டிய வசதிகளைச் செய்து கொடுப்பார்கள். ஒரு குடும்பத்தில் நடக்கிற மணமோ மரணமோ அந்த கிராமத்துக்கே பொதுக்காரியமாக மதிக்கப்பட்டன. உழைப்பும் தொழில்களும் வகிக்கப்

பட்டிருந்த விதத்தில் வேலையில்லாத திண்டாட்டங்களை விலக்கக்கூடிய விதிகள் தாமாகவே அமைந்திருந்தன. ஆனால் சிறு சிறு பொறாமைகளும் போட்டிகளும் கட்சிப் பிரதி கட்சிகளும் அதிலேயும் இல்லாமற் போகவில்லை என்பது உண்மைதான். ஆனால் அவற்றில் இப்போதுள்ள பெருந்தீமைகள் இருந்ததில்லை. அப்போதிருந்த போட்டியும் பொறாமைகளும், அந்தக் கிராமத்திலிருந்த அமைதி வெறும் கல்லறை அமைதியல்ல என்பதைத்தான் காட்டுமேயன்றி வேறில்லை.

## வாழ்க்கையின் இன்பம்

கிராம வாழ்க்கையை மீண்டும் தொடங்குவது என்பதற்கு அர்த்தம் பாமர மக்களுக்குக் குதூகலத்தையும் சந்தோஷத்தையும் களியாட்டங்களையும் மீண்டும் உண்டாக்குவது என்பதுதான். டாக்டர் மஜூம்தார் தாம் எழுதின 'பூர்வ இந்தியாவில் இருந்த ஐக்ய வாழ்க்கை' என்ற புத்தகத்தில், இந்தியாவில் மிக மிகப் பழைய காலத்திலிருந்த கிராமக் களியாட்டங்களைப் பற்றிய விவரங்களை எழுதியிருக்கிறார். வேதகாலங்களில், பிற்காலத்தில் 'கோஷ்டிகள்' என்ற பெயரால் குறிப்பிடப்பட்ட சங்கங்கள் இருந்தன. பகலெல்லாம் பாடுபட்டுவிட்டு மாலைப் பொழுதில் கிராமத்தார் பலரும் கூடி சங்கீதம், நடனம், கதா காலக்ஷேபம், உள்ளூர் விவகாரங்களை விவாதித்தல் முதலான இன்பப் பொழுதுபோக்குகளில் கலந்து கொள்வார்கள். மௌரிய வம்சத்தார் அரசாண்ட காலத்தில் விடுமுறை நாட்களிலும் விழாக் காலங்களிலும் கிராமக் களியாட்டங்கள் நடைபெற்றன. இந்தக் களியாட்டங்களிலுங்கூட மற்ற எல்லா விஷயங்களிலும் போலவே சகோதர சமத்துவமும் கூட்டுறவுமே கிராமத்தாரின் குறியாக இருந்தன. இந்தப் பொது விழாக்களில் கலந்து கொள்ளாமலும் ஒத்துழைக்காமலும் இருப்பது கிராமப் பொதுவிற்கே செய்யப்படும் பாப

மாகக் கருதப்பட்டது. இந்தப் பழைய ஐதீகம் இப்போதும் நமது கிராமங்களில் இருந்து வருகின்றது. சந்தைகள் என்பது அப்போதும் இப்போதும் இந்நாட்டு கிராமாந்தரங்களில் சர்வ சாதாரணம். அவற்றில் நடக்கும் பாமர நாட்டியங்கள், கூத்துக்கள், குஸ்திச் சண்டைகள், பஜனைக் கூட்டங்கள் முதலியவைகள் கிராம வாசிகளின் இன்பப் பொழுது போக்குகளாக இருந்து வருகின்றன. அவைகளில் கள்ளங்கபடமற்ற இன்பத்தை அவர்கள் அனுபவிக்கிறார்கள்.

பகலெல்லாம் வஞ்சனையில்லாமல் உழைத்துவிட்டு, மாலை நேரங்களில் படாடோபமில்லாமல் கிராமவாசிகள் அனுபவிக்கின்ற இந்தக் களங்கமற்ற இயற்கையான இன்பங்களுக்கு முற்றிலும் மாருக, ஜன நெருக்கடி மிகுந்த நகரங்களில், 'கிராமாபோன்' இசைத்தட்டுகள், 'சினிமா'ப்படங்கள். 'ரேடியோ' ஒலி பரப்பி, முதலான உயிரில்லாத பொழுதுபோக்குகள் தான் இருக்கின்றன. எந்திரப் போக்குடன் இணங்கி வாழவேண்டியவனுகப் போய்விட்ட இக்காலத்திய நகரவாசி, எந்திரம் போலவே ஒரே மாதிரி சுழலுகின்ற தினசரி வழக்கமுள்ளவனுகி விட்டான். வாழ்க்கைக்கு ஜீவசத்தாக உள்ள மனுஷத் தனத்தை அவன் இழந்து விட்டான். அவகாசம் குறைந்து போனவனுகிவிட்டதால் அவகாசம் கிடைத்த உடன் எந்திரப் பொழுது போக்கான சினிமா, ரேடியோ முதலானவைகளைத்தான் அடைய முடிகிறது. அவன் இதயமும் ஒரு எந்திரமாக மாறிவிட்டது. அதனுல் அவனுடைய எண்ணங்களும் புதுமையான மாறுதல்களுக்கு இடங்கொடுக்க மறுத்து விடுகின்றது. இப்படியாக, இன்பத்தை நாடின அவன் எந்திர வாழ்க்கையான மரண வேதனையையே இன்பமாக அனுபவித்து இறக்கின்ருன்.

## கலையும் அழகும்

இக்காலத்திய நாகரீக நகரவாசிகள் தங்களுடைய கலைகளைப் பற்றியும் அழகுகளைப்பற்றியும் பெருமையடித்துக் கொள்ளுகிறார்கள். ஆனால் அவர்களுடைய இயற்கையல்லாத ஜோடிப்பு வாழ்க்கையும், 'பூச்செடி' நாகரீகமும் அச்சில் வார்த்த இறுகிப்போன ஒரே மாதிரியான கலைகளைத்தான் உண்டாக்க முடியும். அவற்றில் ஜீவசக்தியும் இல்லை, சிந்தனை சக்தியும் இல்லை. பணப் பெருக்கத்தின் ஆட்சிக்குட்பட்ட நாகரிகத்தில் கலைகளும் அழகுகளும்கூட பணக்கணக்கில்தான் மதிக்கப்படுகின்றன. காட்டுப் புஷ்பங்களால் கட்டப்பட்ட மாலை கவர்ச்சி கொடுப்பதில்லை. 'மாசற்ற இயற்கை அழகு' என்ற மதிப்பில், ஆகாயத்தை முட்டும்படி அடுக்கடுக்காக கட்டப்படும் இக்காலத்திய பிரம்மாண்டமான உப்பரிகைகள் வெறும் புருக்கூடுகள்தான். கிராமவாசிகள் நல்ல காற்றோட்டமுள்ள திறந்த வெளிகளிலுள்ள குடிசைகளில் வசிக்கிறார்கள். சிற்சில இடங்களில் பழங்காலத்தின் பெருமைகளுக்கு இடமாக இருந்து, இப்போது பாழடைந்து கிடக்கிற இருளடைந்த மனைகளைப்பற்றி நான் இங்கு சொல்லவரவில்லை. பொதுவாக இந்தியக் கிராமவாசிகள் இயற்கைத் தாயின் மடியில் வசிக்கிறார்கள் என்று சொல்லலாம். கிராமத்திலுள்ள தொழிலாளிகளும் 'சமூகத்தொண்டு' என்கிற லௌகிக நியாயங்களுக்குக் கட்டுப்பட்டே வேலை செய்கிறார்கள். அவர்கள் தங்களுடைய தொழிலில் இன்பங் கொள்ளுகிறார்கள். "அதன் பயனாக அவர்கள் நல்ல அழகுள்ள பொருள்களைச் சிருஷ்டி செய்கிறார்கள். ஆனந்தமாகப் பாடிக்கொண்டே உழைக்கிறார்கள்." ('ஒத்துழைப்பு ஜனநாயகம்'—ப. 4 - ஜே. பி. வார்பேஸ்). கிராமாந்தரப் பெண்மக்களும்கூட விடியற்காலையில் மாவரைக்கும்போதுகூட பாடிக்கொண்டே வேலை செய்கிறார்கள். தலையில் பளபளப்பான

பித்தளைக் குடங்களைச் சுமந்துகொண்டு கிராமக் கிணறுகளுக்குத் தண்ணீர் கொண்டுவரப் போகும்போதும் அடிக்கடி கிராமப் பெண்கள் சந்தோஷமாக ஆடிக்கொண்டும் பாடிக்கொண்டும் போவதைக் காணலாம். கிராமங்களில் அவர்கள் வீட்டுச் சுவர்களில் வரையப்பட்டிருக்கிற ஆடம்பரமில்லாத சித்திரங்களின் அழகும், அவர்களுடைய கற்பனையில்லாத கவிகளிலும் நாட்டுப்பாட்டுகளிலும் நிறைந்துள்ள வேகமும் வீரியமும், வாழ்க்கையோடு இசைந்த அவர்களுடைய நடனமும் நாடகமும், கையாற் செய்யப்பட்டுப் பலவித வர்ணங்களமைந்த அவர்களுடைய அநேக பண்டங்களின் அழகும், நாகரீகமுள்ளனவாகக் கருதப்படுகிற நகரக் கலைகளிலும் இலக்கியங்களிலும் காணமுடியாத ஒரு ஒப்பற்ற சிறப்பு வாய்ந்தனவாக இருக்கின்றனவென்பது உண்மை.

இந்தியாவைப் போன்ற புராதன நாடுகளில் கலைகளும் நாகரீகநற்பயிற்சிகளும், வனங்களிலிருந்தும் குடிசைகளிலிருந்தும் கிராமங்களிலிருந்தும்தான் நகரங்களுக்குப் பரவின. சந்தடியில்லாத அமைதியான கிராமந்தரங்களில் இருந்த ரிஷிகளின் மூளைகள்தான் ஆழ்ந்த அறிவிற்கும் அழகான உணர்ச்சிகளுக்கும் ஊற்றுக் கண்களாக இருந்தன. ராமாயணம் மகாபாரதம் போன்ற சிரஞ்சீவிகளான காவியங்கள் சர்வகலாசாலையில் தேறிய பட்டதாரிகளாலும் இலக்கண இலக்கிய வித்வான்களாகிய புலவர்களாலும் இயற்றப்பட்டன அல்ல. அஜென்தாவிலுள்ள அழியாப் புகழ்பெற்ற சித்திரங்கள் இக்காலத்திய சித்திரக் காட்சி சாலைகளின் தலைவர்களால் வரையப்பட்டன அல்லவே! அந்த அற்புதச் சித்திரங்களை சிருஷ்டித்த தெய்விகச் சித்திர வித்வான்கள் மறந்து தங்கள் பெருமையை தங்கள் கலையின்பக் களிப்பால் பெயர்களைக் கூடப் பின் சந்ததியார் அறியும்படி எழுதி வைத்துப் போக எண்ணவில்லை. அவர்கள் இப்போதுள்ள நாகரிகச் சித்திர வித்வான்கள் செய்வதுபோல 'கலையின்பத்துக்

காக கலையா?' அல்லது 'வாழ்க்கைகாகக் கலையா?' என்ற விவாதங்களைச் செய்தவர்களல்ல. அவர்களுக்கு வாழ்க்கையே மிகச்சிறந்த கலையாக இருந்தது.

## நாட்டின் பாதுகாப்பு

அதிகாரங்களை அங்கங்கே பகிர்ந்து விட்டுவிடுவதும், நகர வாசங்களுக்கு மாறுன நாட்டுப்புற வாழ்க்கையும், அன்னியப் படையெடுப்புகளைத் தவிர்க்கத் தகுந்த மிகச் சிறந்த சாதனங்கள். அவைகள்தான் இந்தக்காலத்திய யுத்த முறைகளைத் தோற்கடிக்க வல்லன. ஒரே இடத்தில் பெருவாரியான பொருள்களை உற்பத்தி செய்கிற பெரிய பெரிய தொழிற்சாலைகள் வெடிகுண்டு விமானங்களுக்கு இலக்குகளாகின்றன; சிற்சில வெடி குண்டுகளை வீசியே ஒரு நாட்டின் உற்பத்தி ஸ்தாபனங்களை விரைவில் ஒடுக்கிவிட முடியும். உற்பத்தி ஸ்தாபனங்களாகிய பெரிய தொழிற்சாலைகளை யெல்லாம் சில நகரங்களிலேயே அமைத்துக்கொண்டுள்ள ஒரு நாடு மிகவும் பலஹீனமானது. சீனுவில் அமைக்கப்பட்டுள்ள 'தொழில் கூட்டுறவு' அமைப்புத்தான் இத்தனை வருஷங்களாக சீனுவுக்கு ஜப்பானை எதிர்த்து நிற்கச் சக்தி கொடுத்த காரணங்களில் மிகவும் குறிப்பிடத் தகுந்தது. அந்த அமைப்பு, சீனுவின் மூலை முடுக்குகளிலுள்ள எல்லா இடங்களிலும் குடிசைத் தொழில்களை ஏற்படுத்தி, ஒவ்வொரு கிராமமும் அதற்கு வேண்டிய தேவைகள் அனைத்தும் அடங்கினதாக இருக்கும்படிச்செய்து, பொருளாதார முறையில் அந்தக் கிராமங்களை யெல்லாம் ஒன்றுக்கொன்று ஒட்டியிருக்கும்படியான கட்டுக்களை உண்டாக்கிவிட்டது. "அடிக்கடி யுத்தங்கள் மூளக்கூடிய இப்போதைய உலகில் மிகக் கொடூரமான முறைகளில் நீண்டகாலக் குழப்பங்கள் நேரும்; அதனுல் உயிர் வாழ்வதற்கு அத்யாவசியமான உணவு, உடை முதலான தேவைகளுக்குத் தூர தேசங்களை எதிர்பார்க்காமல் அங்கங்கே உற்பத்தி

யாகும்படி பந்தோபஸ்துக்களைக் கூடுமானவரையில் செய்துகொண்டால்தான் தப்பித்துக் கொள்ளலாம். உற்பத்திகளை அங்கங்கே உண்டாக்கக்கூடிய 'பிரிவினை' ஏற்பாடுகள் யுத்தகாலத் தேவைகளான ராணுவகாரிய மாகவும் போய்விட்ட இந்தக் காலத்தில், நமது நாட்டில் ஏற்கனவே இருந்துவந்திருக்கிற 'பிரிவினை' ஏற்பாடுகளை இகழ்ந்துவிடுவது வெறும் பைத்தியக்காரத் தனந்தான்." (புள்ளி விவரங்களைச் சேகரிக்க அமைக்கப்பட்ட கமிட்டி யின் அறிக்கையில் 'கைத்தறிகளும் மில்'களும் என்ற பகுதி - ப - 207.)

## பல நாடுகளுக்குள் பரஸ்பர சம்பந்தம்

உலக சமாதானத்தையும் பற்பல நாடுகளுக்குள் இருக்கவேண்டிய பரஸ்பர சம்பந்தங்களையும் நிலைநாட்ட எத்தனையோ திட்டங்கள் வகுக்கப்பட்டு வருகின்றன. 'லீக் ஆப் நேஷன்ஸ்' என்ற பல நாட்டுக் கூட்டுறவுச் சங்கம், ஒரு நாட்டிற்கும் இன்னொரு நாட்டிற்கும் ஏற் படுகின்ற சச்சரவுகளைச் சமாதான முறைகளில் பஞ்சா யத்துப் பேசி தீர்த்துவிட வேண்டும் என்ற நோக்கத் துடன் நிறுவப்பட்டது. ஆனால் அந்தச் சங்கத்தின் கட்டுக் கோப்புக்கள் முழுதும் 'பாஸீஸத்தின்' கொடுங் கோபத் தினால் குலைந்து போய்விட்டன. சமீபத்தில் நடந்த சான்பிரான்ஸிஸ்கோ மகாநாட்டில் உலக சமாதானத்திற் காக இன்னொரு புதுச் சாசனத்தை தயாரித்திருக்கிறார்கள். ஆனால் அதன் சாராம்சம் முழுதும், 'முப்பெரும் வல்லரசு களே' மற்றெல்லா நாடுகளையும் அடக்கியாள வேண்டும் என்பதுதான். அமெரிக்க ஐக்ய நாடும், சோவியத் ருஷ் யாவும், பிரிட்டனுமே அந்தச் சாசனத்தில் குறிப்பிடப் பட்ட சர்வதேச சமாதானத்தைப் பாதுகாக்கும் போலீஸ் 'எஜமானர்'களாக இருப்பார்கள். ஆனால் இந்த மூன்று பேருக்குள்ளேயே சச்சரவு வந்துவிட்டால் இந்தப் 'போலீஸ்' என்னவாகும்?

வெவ்வேறு நாடுகளுக்கிடையில் அப்படிப்பட்ட அராஜகம் ஏற்படாமல் இருப்பதற்காக உலகத்திலுள்ள அநேக சிறந்த சிந்தனையாளர்கள் ஒரு 'உலக அரசாங்கத்தை' உண்டாக்க வேண்டுமென்று அழுத்தமாகக் கூறுகின்றார்கள். ஈலி குல்பர்ஸ்டன் என்பவர் 'நேச நாடுகளுக்கு' ஒரு விண்ணப்பம் செய்துகொள்ளுகிறார்: "சுதந்தரமுள்ள எல்லா அரசாங்கங்களும் கலந்தாலோசித்து, அவைகள் எல்லாவற்றுக்கும் மேலதிகாரமுள்ள ஒரு உலக சமுதாய அரசாங்கத்தை, நடைமுறைக்கு சாத்யமான விதமாக ஸ்தாபிக்கவேண்டும். அந்த உலக சமுதாய அரசாங்கம் தனித்தனி நாடுகளிலுள்ள சாதாரணச் சட்டங்களுக்கு மேலானவைகளான எல்லாருக்கும் பொதுவான சட்டங்களுக்கு உட்பட்டதாக இருக்க வேண்டும். அந்தச் சட்டங்களை அமுல் நடத்த எந்தத் தனி அரசுக்கும் கட்டுப்படாத சுதந்தரப் 'போலீஸ்' படை ஒன்று இருக்கவேண்டும். இந்தப் போலீஸ் படை எல்லாரையும் சமமாக காக்கக் வல்லதாகவும், எல்லா நாடுகளும் சேர்ந்துகொண்டு ஒரு நாட்டிற்குத் தீங்கு செய்தால் அந்த ஒரு நாட்டைக் காக்க மற்ற எல்லா நாடுகளையும் எதிர்த்து அடக்க வல்லதாகவும் இருக்கவேண்டும்" ('முழு சமாதானம்' ப - 193.) ஸர் வில்லியம் பீவரிட்ஜ் என்பவர் தம்முடைய 'சமாதானத்தின் விலை' என்ற புத்தகத்தில் "'முப்பெரும்' வல்லரசுகளின் ஆதரவு பெற்று, எல்லா தேசங்களுக்கும் மேற்பட்ட அதிகாரமுள்ள ஒரு ஸ்தாபனம் வேண்டும்" என்கிறார். சம்னர் வெல்ஸ் என்பவர் ஒவ்வொரு நாட்டுக்கும் தனித் தனி ஸ்தல உரிமைகள் தரக்கூடிய 'சர்வதேச சங்கம்' வேண்டும் என்று சொல்லுகிறார். இந்த எல்லா யோசனைகளிலும் உலகத்தின் பொதுவான பாதுகாப்பும் ஆயுதப் பரிஹரணமும்தான் அடிப்படையாகக் கருதப்படுகின்றன. ஆனாலும் அவற்றில் ஒன்றாவது இந்த விஷயத்தைச் சரியான முறையில் கையாளவில்லை.

சண்டைகளுக்கெல்லாம் மூலகாரணம் ஒவ்வொரு நாடும் தங்களுடைய சரக்குகளை விற்பனை செய்து பிறரைச் சுரண்டவேண்டுமென்ற அளவுகடந்த பேராசையினால் உலகத்தின் வியாபாரச் சந்தைகளைக் கைப்பற்ற வேண்டுமென்ற போட்டிதான் என்பது வெளிப்படை. இப்போது முடிந்த சண்டைக்குப் பிறகும் 'நேச தேசங்கள்' தங்கள் ஏற்றுமதி வியாபாரத்தை அதிகப்படுத்தித் தங்கள் ஜனங்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்திக்கொள்ள வேண்டுமென்று வெகு அவசரமாகத் திட்டங்களை வகுத்துக் கொண்டிருக்கிறார்கள். இந்த ஏகாதிபத்ய வெறிபிடித்த வியாபாரப் போட்டிகள்தான் பொருமையையும் போராட்டத்தையும் கிளப்பிவிட்டுக், கடைசியாக உலக மகா யுத்தமாக முடிகிறது. அதனால் உண்டாகக்கூடிய அழிவுகளை நினைத்தாலும் மனம் நடுங்குகின்றது. அதனால், உலகத்தில் யுத்தங்களை ஒழிக்கவேண்டுமானால் முதலாளித்தனத்தையும் அதன் விளைவான ஏகாதிபத்யத்தையும் முதலில் உலகத்தை விட்டு ஒழிக்கவேண்டும். சமாதானம் என்பது ஒவ்வொரு நாட்டிலும் ஜனங்களிடையே யுள்ள சமாதானத்தைப் பொறுத்தது" என்று புரொபெஸர் லஸ்கி எழுதுகிறார். ('இங்கிருந்து எங்கே போகிறோம்'-ப-125) இந்த உள்நாட்டுச் சமாதானமும் பொருளாதாரச் சுக சௌகரிய சமத்துவங்கள் இல்லாமல் ஏற்பட முடியாது. அப்படிப்பட்ட சமத்துவங்கள், கூட்டுறவு முறைகளில் தொழில்களையும் உற்பத்திகளையும் அங்கங்கே பிரித்துவிட்டு, சம உரிமைகளையும், சம அதிகாரங்களையும் தருகிற நாடுகளில்தான் வளரமுடியும். குடிசைத் தொழில்களால் ஏற்படக்கூடிய சிக்கன முறைதான் இந்தப் பேராசை பிடித்த ஏகாதிபத்ய வெறியை அடியோடு ஒழிக்க வல்லது; அப்போதுதான் நாட்டுக்குநாடு போட்டி ஒழிந்து, சமாதானம் சாத்தியமாகும். ஆகையினால் நமக்கு இப்போது உடனடியாக வேண்டியது 'ஆயுதப் பரிஹரணம்' மட்டும்

அல்ல, 'பண வெறிப் பரிஹரணமே'யாகும். "பெரிய தேசங்களில் மக்களின் ஆர்வமும் ஆவேசமும் 'தேசீயம்' என்ற பெயரில் அன்னிய நாடுகளின்மேற் பாயாமல், உள் நாட்டில் மக்கள் சுகமாக இருக்கவேணும் என்ற எண்ணத்துடன் உள்ளூர் விசுவாசங்களை விருத்தி செய்தால், பிற நாடுகளைச் சிரமழித்து உலகத்தைப் பாழாக்கு கிற யுத்தங்கள் வரா." என்று புரொபெஸர் கோல் எழுதுகிருர். ('இக்கால அரசியலுக்கு வழிகாட்டி' - ப - 370).

## வைத்தியரே! முதலில் உங்களைச் சொஸ்தப்படுத்திக் கொள்ளுங்கள்

அதிகாரங்களையும் பொருளாதார உரிமைகளையும் அங்கங்கே ஜனங்களிடம் பிரித்துக் கொடுக்கிற 'மத்ய அதிகாரம்' இல்லாத முறைதான் உலகத்துக்கு நல்லது என்று, 'நேச தேசங்கள்', தங்களால் தோற்கடிக்கப் பட்ட ஜெர்மனிக்கு உபதேசம் செய்வது விதியின் விசித்திரம்தான். 'போட்ஸ்டாம்' மகாநாட்டில் 'முப்பெரும் வல்லரசுகள்' சேர்ந்து "ஜனநாயக முறையில் ஸ்தல சுய ஆட்சியை, ஜெர்மனி தேசம் முழுவதிலும் ஏற்படுத்த வேண்டுமென்றும், விவசாயத்தை அதிகமாக கவனிக்கச் செய்யவேண்டியது அவசியமென்றும், 'சமாதானமான வீட்டுத் தொழில்களை' விருத்தி செய்வதில் விசேஷ கவனம் செலுத்தவேண்டும் என்றும்" தீர்மானித்தார்கள். அவர்கள் எதை மனதில் வைத்துக்கொண்டு இதைச் சொல்லியிருந்தாலும், நான் இந்த 'அரசியல் பொருளாதார அதிகாரப் பிரிவினை'யானது ஹிட்லருடைய நாட்டிற்கு நிரந்தரமான சமாதானத்தையும் செழுமையையும் உண்டுபண்ணுமென்று உறுதியாக நம்புகிறேன். பலாத்கார முறைகளை அளவுக்கு மீறி அனுஷ்டித்த அந்த நாட்டில் 'சமாதானமான வீட்டுத் தொழில்களை' ஏற்படுத்த வேண்டும் என்று சொல்லப்படுவது மிகவும் குறிப்பிடத் தகுந்தது. இதில் நாம் துக்கப்படவேண்டிய விஷயம்

எதுவென்றால், இந்த ஏற்பாடு ஜெர்மானியர் தாங்களாகவே உணர்ந்து தங்கள் இஷ்டத்தால் செய்துகொண்டது அல்ல. அன்னியர்களால் சுமத்தப்பட்டுள்ளது. இந்த வெகு நல்ல ஏற்பாட்டை ஜெர்மனியில் புகுத்திவிட்டதைப்பற்றி வெற்றி வீரர்களாகிய நேச தேசங்கள் வெறி கொண்டு பெருமை யடித்துக்கொள்ள வேண்டியதில்லை. இந்த நேசக் கட்சியாருக்கு நான் கத்திக்கத்திச் சொல்லுகிறேன்: "வைத்தியர்களே! அந்த மருந்தை நீங்களும் உட்கொண்டு உங்கள் வியாதியை முதலில் போக்கிக் கொள்ளுங்கள்." நேச தேசத்தார் ஜெர்மனியில் புகுத்தி மகிழும் இந்தப் புது முறையை தங்கள் தங்கள் நாடுகளிலும் புகுத்துவார்களானால் நிரந்தரமான உலக சமாதானம் நிச்சயம். ஏனெனில் அதனால் ஒரு நாட்டை இன்னொரு நாடு ஆக்ரமிக்கவேண்டிய காரணமே அற்றுப் போகிறது. இல்லையானால் இந்த உலகம் இதுவரையிலும் கண்டிராத வினைக்குழியில் மீண்டும் தலைகுப்புற விழ வேண்டியது தான்.

குற்றம் கண்டுபிடிக்க முயல்கின்றவர்கள் நம்மைப் பார்த்து "ஜெர்மனியை அடிமைப்படுத்திவைக்க வேண்டுமென்றே நேச தேசத்தார் அதன்மேல் சுமத்தியிருக்கிற ஒரு ஏற்பாட்டை இந்தியாவிலும் புகுத்தவேண்டுமென்று ஏன் விரும்புகின்றீர்கள்?" என்று கேட்கலாம். அதற்கு உடனே நான் சொல்லக்கூடிய பதில் என்னவென்றால்: "சுதந்தர இந்தியா சுதாவாக அந்த முறையை இந்த நாட்டில் ஏற்படுத்தினால், உள்நாட்டில் மட்டுமன்று, வெளி நாடுகளிலும் சமாதானத்தைப் பரப்ப உதவியாகும். இந்தியா ஜெர்மனியைப்போல அவமதித்து அடக்கப்பட்ட தேசம் அல்ல; அது ஜெர்மனியைப்போல நெஞ்சில் குமுறிக்கொண்டிருக்கிற அவமானக்கொதிப்பை அடக்கிக்கொண்டு, திருட்டுத்தனமாக தன்னுடைய பழைய பலாத்காரச் சக்திகளை மீண்டும் அடைந்து, உலக ஆதிக்யம் பெற்றுவிட வேணுமென்ற ஆசையிலேயே

என்னேரமும் ஆத்திரப்பட்டுக் கொண்டிருக்கவேண்டிய அவசியமில்லை. சுரண்டலும் ஏகாதிபத்தியமும் நிறைந்த இருட்டில் இந்தியாவானது, மற்ற தேசங்களுக்கெல்லாம் கடற்கரை தீபஸ்தம்பம்போல் வழிகாட்டும். அது வேறு எந்த நாட்டையும் சுரண்டாது; வேறு எந்த நாடும் தன்னைச் சுரண்டவும் விடாது.

## அது பழையகால அநாகரீகமா?

காந்தீயத்தைப்பற்றி அடிக்கடி கூறப்படுகிற குற்றம் எதுவென்றால், 'காந்தீயம் மனித சமூகத்தின் முன்னேற்றத்தைப் பின்னுக்கு இழுத்துக்கொண்டுபோய் அநாகரீகமான மத்திய காலத்தில் விடுகின்றது,' என்பதுதான். ஆனால் காந்திஜியின் கருத்துகளைப்பற்றிய இப்படிப்பட்ட குற்றச்சாட்டுகள் வெறும் அறியாமையினால் சொல்லப்படுவன. கிராம சமுதாயங்கள் தேசத்தின் மற்றப் பகுதிகளுக்கும் உலகத்துக்கும் சம்பந்தமில்லாமல் தனித் தனியாக இருக்கவேண்டுமென்பது காந்திஜியின் இஷ்டமல்ல. அப்படித் தனித்திருப்பது சாத்தியமும் அல்ல, விரும்பத்தக்கதும் அல்ல. ஆனால் சமூக வாழ்விலும் பொருளாதார நிலையிலும் அரசியல் அதிகாரங்களிலும் முற்றிலும் சுதந்தரமான தனித்தனி கிராம சமுதாயங்களை அடிப்படையாகக் கொண்ட சுயராஜ்ய அரசாங்கத்தை இந்தியாவில் ஏற்படுத்தவேண்டும் என்பதுதான் காந்திஜியின் விருப்பம். கிராமங்கள் சரியான முறையில் தாலூகா பஞ்சாயத்து, ஜில்லா பஞ்சாயத்து, மாகாண சபை, மத்திய ஐக்யம் ஆகியவற்றுடன் இணைக்கப்படவேண்டும்.

பூர்வீக காலத்தில் மட்டுமின்றி மத்திய காலத்திலும் கூட கிராம சமுதாயங்கள் ஒன்றுக்கொன்று சம்பந்தமில்லாமலிருந்ததாக நினைப்பது தவறு. மனுஸ்மிருதி, மகாபாரதம், கௌடில்யாவின் அர்த்த சாஸ்திரம் முதலான

பல வடமொழி இலக்கியங்களிலிருந்து, கிராமத்துக்கு ஒரு தலைவன், பத்து கிராமங்களுக்கு ஒரு தலைவன், இருபது கிராமங்களுக்கு ஒரு தலைவன், நூறு கிராமங்களுக்கு ஒரு தலைவன், ஆயிரம் கிராமங்களுக்கு ஒரு தலைவன் என்று தலைவர்கள் இருந்ததாகவும் ஒவ்வொரு தலைவனும் தனக்குக் கீழிருந்தவர்களைக் கண்காணித்து வந்ததாகவும் அறிகிறோம். தேசத்தின் பொதுப் பாதுகாப்புக்கும் திறமைக்கும் பங்கமில்லாமல் ஒவ்வொரு கிராமமும் உள்ளூர் விவகாரங்களில் பூரண சுதந்தரமுள்ளதாக இருந்தது என்பதும் உண்மை. ஆனால் இந்தக் கிராம சமுதாயங்கள் ஒன்றன்மேல் ஒன்றாக பல ஐக்ய சமுதாயங்களாக அடுக்கப்பட்டு, அடியிலிலுள்ள கிராம சமுதாயத்திலிருந்து உச்சிவரைக்கும் ஜன சம்மத ஆட்சியென்ற விஸ்தாரமான அஸ்திவாரத்தின்மேல் கட்டப்பட்ட ஓரே கோபுரமாக விளங்கின. டாக்டர் ராதா குமுத முகர்ஜி, இந்தச் சுதந்தரமான வெவ்வேறு சமுதாயங்கள் எப்படி ஒன்றன்மேல் ஒன்று அதிகாரமுள்ளனவாகச், 'சபை' என்றும், 'மகாசபை' என்றும், 'நாட்டார்' என்றும் பெயர் பெற்றிருந்தன வென்பதை விளக்கியிருக்கிறார். இந்த அடுக்கு முறையான அரசாட்சி, தமிழ் நாட்டில் சோழ மன்னர்களின் சாம்ராஜ்யத்தில் ராஜராஜ சோழன் காலத்தில் மிகவும் சிறப்புற்றிருந்ததாக அந்த மன்னனைப்பற்றிய அனேக பட்டயங்களிலிருந்தும் சாசனங்களிலிருந்தும் அறியக் கிடக்கின்றது. அரசாங்கத்தின் அடிப்படையாக இருந்த ஆரம்பப்பகுதிக்கு 'ஊர்' அல்லது 'நகர்' என்றும், அதற்குப் பெரிய பகுதிக்கு 'நாடு' அல்லது 'குறம்' என்றும், அதற்கும் பெரிய பகுதிக்கு 'கோட்டம்' அல்லது 'விஷயம்' என்றும் அதற்கும் மேலான பகுதிக்கு 'மண்டலம்' அல்லது 'ராஷ்ட்ரம்' என்றும், இவைகள் எல்லாவற்றிற்கும் மேல் 'சாம்ராஜ்யம்' என்றும் பெயர் வழங்கப்பட்டிருந்தது. கே. பி. ஜெயஸ்வால் என்பவரும் அவருடைய 'ஹிந்து

அரசியல்' என்ற நூலில் 'ஜனபதம்' என்ற பெயரில் இருந்துவந்த ராஜாங்க சபையைப் பற்றிச் சொல்லுகிறார். அந்தச்சபை, சுதந்தரமான பல சிறுசிறு சமுதாயங்களின் அதிபதிகள் அடங்கினது. இந்த உண்மைகளெல்லாம் இந்திய கிராம சமுதாயங்கள் வெறும் ஜாதிமத சம்பந்தமான பழங்காலக் கட்சிகளின் எச்சங்கள் அல்லவென்பதையும் ஜனநாயகக் கூட்டுறவு முறையில் அமைக்கப்பட்ட சிறந்த அரசியல் ஸ்தாபனங்கள் என்பதையும் தெளிவாகக் காட்டுகின்றன. இந்தக் காலத்துக்கேற்றபடி, அவற்றின் கூட்டுறவுக் கட்டுப்பாடுகள் புதிய ஒழுங்கு முறைகளில் அமைக்கப்பட வேண்டுமென்பது அவசியம்தான். ஆனால் அந்தக் கிராம சமுதாயங்களில் இருந்த மூலக் கருத்துகளான பொருளாதார, அரசியல் அதிகார சுதந்தரங்கள் தான் நமது வருங்கால அரசாங்க அமைப்பின் அஸ்திவாரமாக இருக்கவேண்டும். ஏனெனில் அந்த முறை நெடுங்காலச் சோதனைகளுக்கு நிலை குலையாமல் நின்றது. அப்படித் திருத்தியமைக்கப்பட்ட ஒரு கிராம சமுதாயம் பழங்கால அநாகரீகம் ஆகிவிடமாட்டாது; எதிர்கால இந்திய அரசியலுக்குச் சிறந்த சாதனமாகவே இருக்கும். "'மீண்டும் கிராமங்களுக்குப் போ' என்பது 'மீண்டும் ஆதிகால அநாகரிகத்துக்குப் போ' என்னும் அர்த்தத்தில் அல்ல. மனித வாழ்க்கைக்கு ஒரு நோக்கத்தையும் நம்பிக்கையையும் கொடுப்பதேயாகும். உலக வாழ்வைப்பற்றி இந்தியர்களுக்குள்ள மனப் பண்புகளுக்கு ஒத்ததாகிய ஒரே ஒரு மார்க்கத்துக்கு அதுதான் சரியானது. நம்முடைய இன நாகரீகத்தைப் பாதுகாப்பதற்கும் அதுதான் ஒரே வழி. இந்தியாவிலிருந்த பகட்டில்லாத விவசாய வாழ்க்கையும், கிராம சமுதாயங்களும், வனங்களில் மகரிஷிகள் இருந்த ஆன்ம சாந்தி ஆச்ரமங்களும் இந்த உலகத்திலுள்ள எந்த மனிதனுக்கும் எவ்விதத் தீங்கும் புரியாமலும், எந்த நாட்டையும் எவ்வகையிலும் துன்புறுத்தாமலும், இதர மக்களின்

மேல் எந்தவிதமான ஆதிக்யமும் செலுத்த ஆசை கொள்ளாமலும் உலகத்துக்கெல்லாம் ஒப்பற்ற உபதேசங்களை உதவியிருக்கின்றன" என்று டாக்டர் ராதாகிருஷ்ணன் எழுதுகிறார். (மகாத்மா காந்தி: அவருடைய வாழ்க்கையும் வேலையும் கட்டுரைகளும் விமர்சனங்களும்).

அவமதிக்க வேண்டுமென்றே குற்றம் பேசுகின்றவர்கள் காந்தீயத் தத்துவங்கள் அநாகரீகமானவைதான் என்று சாதிப்பார்களானால் அவர்களுக்கு பகிரங்கமாக நான் "பிறநாடுகளைச் சுரண்டுவதும், அன்னிய நாடுகளை ஆக்ரமித்துக் குடியேறுவதும், ஏகாதிபத்யப் பேராசை வெறிகொள்வதும், ஆன்ம உணர்ச்சிகளை அடியோடு அழித்துவிட்ட யுத்தங்களை உண்டாக்கியிருப்பதுமான இப்போதுள்ள நவ நாகரீகத்தைக் காட்டிலும் காந்தீய அநாகரீகமே ஆயிரம் மடங்கு உயர்ந்தது" என்று சொல்லுவேன். மனித சமூகத்தின் முன்னேற்றத்துக்கு அடையாளம் இப்போதுள்ள லௌகீக போகபோக்கியங்கள் தான் என்றால் அந்த நாகரீகம் நாசமாய்ப் போகட்டும்!

## தேசீயமும் அகண்டாகாரமும்

காந்தீயத்தை 'பட்டிக்காட்டுத் தனம்' என்று கூசாமல் இகழ்ந்துவிட்டு, தேசீயத்தைப்பற்றி நினைத்தபடிக்கெல்லாம் உளறுகின்றோம். ஆனால் காந்திஜி இந்தத் தேசீயத்தை யெல்லாம் கடந்தவர் என்பதைச் சிறிதளவாவது அறிந்துகொள்ளச் சிரத்தைகொண்டிருக்கிறோமா? அவர் தேசீயத்தைமட்டும் அவலம்பிப்பவரல்ல; அகண்டாகார உணர்ச்சியையும் ஆசிக்கிறார். அவர் நம்முடைய அக்கம்பக்கமான மனிதர்களிடத்திலும், நம்முடைய கிராமத்தினிடத்திலும், மாகாணத்தினிடத்திலும், தேசத்தினிடத்திலும், உலகத்தினிடத்திலும் மட்டும் அன்புகாட்டுவது போதாதென்றும், அகண்டிதா

காரமான அண்டங்களோடும்கூட ஒட்டிய உறவு கொண்டாட வேண்டுமென்று உபதேசிப்பவர். ஆனால் இந்த அகண்டித உணர்ச்சியை அனுஷ்டிக்க, நாம் இடைவிடாமல் சொர்க்கத்துக்கும் பூமிக்கும் இடையில் ஓடிக்கொண் டிருக்கவேண்டும் என்பதல்ல. நம்முடைய சிறு குடிசைகளில் அடக்கமான எளிய வாழ்க்கையை நடத்திக்கொண்டே இந்தப் பரந்த நோக்கத்தைப் பயிற்சி செய்யலாம். தேசீய உணர்ச்சியும் அகண்டித உணர்ச்சியும் வெறும் மனோபாவங்களேயல்லாமல் காலத்தையும் இடத்தையும் கருதினவைகள் அல்ல. பட்டிக்காட்டானாகவே இருந்துகொண்டு இந்த அகண்டித உணர்ச்சியை அனுஷ்டிக்க முடியும். காந்திஜியின் எண்ணத்தின்படி நம்முடைய ஸ்தூல வாழ்க்கை கிராமவாசமாகவும், நம்முடைய பண்பும் ஆன்ம உணர்ச்சியும் அகண்டாகார வாசமாகவும் இருக்கவேண்டும். அவர் சொல்லுகின்ற சுதேசியத்தின் சாரம் இதுதான். காந்திஜி மனித வர்க்கத்துக்கும் அகண்டாகாரத்துக்கும் சேவை செய்ய விரும்புகிறார்; ஆனால் அந்த சேவைகளை அக்கம்பக்கத்திலுள்ளவர்கள் மூலமாகவும் தேசத்தின் மூலமாகவுந்தான் செய்ய முடியும் என்று நம்புகிறார். "என்னுடைய தேசாபிமானம் ஏககாலத்தில் 'எல்லாரோடும் சேர்ந்ததாகவும்', 'எவரோடும் சேராததாகவும்' உள்ளது. என்னுடைய சேவைகளை, நான் பிறந்த என் சொந்த நாட்டின் நலங்களையே பிரதானமாகக் கருதிச் செய்கிறேன் என்பதைத் தாழ்மையோடு ஒப்புக்கொள்ள வேண்டி யிருக்கிறபோ தெல்லாம் நான் 'பிறரோடு சேராதவனாக' இருக்கிறேன். ஆனால் என்னுடைய சேவைகள் பிறரோடு போட்டியிடாமலும் வேறெவருக்கும் தீங்கு நினைக்காமலும் இருக்கிறபோதெல்லாம் 'எல்லாரோடும் சேர்ந்ததாக இருக்கிறது. உயிருள்ள எல்லா ஜீவராசிகளுடைய சுகதுக்கங்களும் என்னுடையனவாகக் கருதும்படிக் கலந்துவாழ விரும்புகின்றேன்"

என்று காந்திஜி சொல்லுகிறார். ('காந்தியின் ஞானம்'- ராய்வாக்கர் எழுதினது. ப-55.)

## ஒரு நூதன நாகரீகம்

உண்மை என்னவென்றால் 'காந்தி வழி' என்பது பழசாய்ப்போன அநாகரீகம் அல்ல; ஆனால் அது ஒரு மிகவும் புதுமையான நாகரீகம். இக்காலத்தின் நவநாகரீகத்திலுள்ள எண்ணிறந்த தீமைகளை ஒழிப்பதற்கு எத்தனையோ பரிகாரங்கள் சொல்லப்பட்டிருக்கின்றன. ஆனால் அவைகள் அத்தனையும் ஆக்ரமிப்பும் பலாத்காரமும் நிறைந்த ஒரே இனத்தைச் சேர்ந்தவை. "உலக ஆதிக்யத்தைக் கைப்பற்ற வேண்டுமென்று சண்டை போட்டுக்கொள்ளுகிற வெவ்வேறு கட்சியினரும் வெவ்வேறு வர்ணங்களுள்ள சட்டைகளை அணிந்திருந்தாலும், அவர்கள் ஆயுதங்களெல்லாம் ஒரே ஆயுத சாலையிலிருந்து எடுக்கப்பட்டவை; அவர்களுடைய கொள்கைகளும் ஒரே நோக்கத்தைக் கொண்ட வேறு பிரதிகள் தான்; அவர்கள் யுத்தகளங்களுக்குப் போகும்போது பாடுகின்ற பாட்டுகளிலும் ஸ்வர பேதமன்றி பொருள் பேதம் இருப்பதில்லை. மனிதவர்க்கத்தை பலாத்காரத்தால் கட்டாயப்படுத்தி, அதன் வாழ்க்கையையும் உழைப்பையும் தங்கள் உத்தரவின்படி நடக்கச் செய்வதுதான் அவர்களுடைய ஆயுதங்கள். கொடுமைகளையும் துன்பங்களையும் அவற்றினும் அதிகமான கொடுமைகளாலும் துன்பச் செயல்களாலும்தான் வெல்ல முடியும் என்பதே அவர்களுடைய நம்பிக்கை. அரசாங்கத்தின் அதிகார பலத்தைக்கொண்டு மக்களைச் சுகப்படச் செய்யலாம் என்பதுதான் அவர்களுடைய வாக்குறுதி." என்று வால்டர் லிப்மன் என்பவர் எழுதுகிறார். ('நல்ல சமூகம்' - வால்டர் லிப்மன் - ப-3). அரசாங்க பலாத்காரத்தினிடமுள்ள இந்த நம்பிக்கை தான் இக்காலத்தின் சம்பிரதாயம். சர்வாதிகாரத்தையும் சமதர்மப் பேச்சையும் ஆதரிக்காதவன் ஒரு 'பழம்

பசலி'யாகவும் பிற்போக்காளனுகவும் கருதப்படுகிருன். அல்லாவிட்டாலும் அவனை 'எதிர்க்கமுடியாத வெள்ளத்தை எதிர்த்து நீந்துகின்ற ஒரு பைத்தியம் பிடித்த சாது' என்ருவது ஏளனம் செய்கிருர்கள். கடந்த பல பத்தாண்டுகளாக மகாத்மா காந்தி ஒருவர்தான் இடைவிடாமல் ஒரேவிதமாக அஹிம்சையைப் பற்றியும் அதிகாரப் பிரிவினைகளைப்பற்றியும் உபதேசம் செய்து வருகிருர். படாடோபமற்ற தூய்மையிலும் வைராக்கியத்திலும் வாய்மையிலும் அவருடைய நோக்கம்தான் கீழ்நாட்டு இனத்தைச் சேர்ந்தது. டாக்டர் ராதாகமல முகர்ஜி சொல்லுகிருர்:

"கீழ்நாட்டவர்களாகிய நாம் நினைக்கிற எதிர்கால அரசியல், புத்திபலம் படைத்தவர்களின் சர்வாதிகாரம் அல்ல; மத்ய வகுப்புகளைச் சேர்ந்த சிலபேருடைய ஆதிக்யமும் அல்ல; ஏழைமக்களின் எதேச்சாதிகாரமும் அல்ல; இவைகள் எல்லாம் தங்கள் தங்கள் வகுப்பு நலத்தையே கோரும் ஆசையுள்ளவை. அவைகள் வாயில்லாப் பூச்சிகளான கோடிக் கணக்கான எதிர்ப்பில்லாத ஏழை மக்களின் தலையில் பலவந்தமாக சுமத்தப்படும் ஆட்சிகள். ஆனுல் நாம் நினைக்கிற அரசியலோ குடியானவர்களுடைய ஜனநாயகம்; அது புராதன, அத்யாவசியமான ஸ்தல சுதந்தரமுள்ள சமுதாயங்கள் ஒன்றன்மேல் ஒன்ருக அடுக்கப்பட்ட அரசியல். அது கிராமத்திலிருந்து ஜில்லாவிற்கும் ஜில்லாவிலிருந்து மாகாணத்துக்கும் மாகாணத்திலிருந்து தேச ஐக்ய சபைக்கும் சுமுகமாக வளர்ந்து விரிகின்ற ஜனநாயகம். அந்த ஆட்சியில் ஜன நாயகத்திற்கு ஆதிகாலத்தில் அரசியல் காரியாலயமாக விளங்கிய கிராமக் கோயிலின் சக்திகளையும், பொதுக் காரியங்களுக்காகக் கூடிப் பேச நிழல்கொடுத்த தெய்வத்தன்மை வாய்ந்த, கிராம ஆலமரத்தின் பெருமையையும் மீண்டும் இந்த நாட்டில் நிலைநாட்டவல்லதாக இருக்கும். அதுதான் மிகவும்

புதுமையானதும் பரிசுத்த முள்ளதுமான ஒரு நூதனக் குடித்தன ஆர்வத்தையும் சமூக சக்தியையும் அளிக்க வல்லதாக இருக்கும்" ('கீழ்நாடுகளில் இருந்த ஜனநாயகம்' ப-363-4).

சமீபத்தில் வெளியான ஒரு அறிக்கையில், காந்திஜி தமது மனதில் உருக்கொண்டுள்ள நூதன நாகரீகமாகிய 'ராமராஜ்யம்' என்னவென்பதை விவரிக்கிருர்:

"அதை மத சம்பந்தமான வார்த்தைகளில் மொழி பெயர்த்துச் சொன்னுல் 'பூமியில் நடக்கும் கடவுள் ஆட்சி' என்றுதான் சொல்லலாம். அரசியல் பாஷையில் சொன்னுல் 'பணமுள்ளவன் பணமில்லாதவன் என்ற வித்தியாசங்களினுல் உண்டாகும் ஏற்றத் தாழ்வுகளும், நிறம், இனம், மதம், ஆண் - பெண் என்ற வேற்றுமைகளில் ஒன்றுகூட இல்லாமல் மறைந்துபோகிற ஒரு அப்பழுக்கில்லாத பரிபூரண ஜனநாயகம்' என்று சொல்லலாம். அதில் விளை நிலங்களும் அரசாட்சியும் ஜனங்களின் பொது உடைமை; அதில் நீதி என்பது உடனுக்குடன் வழங்கப்படும்; அந்த நீதி குற்றமற்றதாகவும் செலவில்லாததுமாக இருக்கும்; அதனுல் இஷ்டப்படி தெய்வத்தை வணங்கவும், பேசவும் பத்திரிகையில் அச்சடிக்கவும் சுதந்தரம் இருக்கும்; இந்த சுதந்தரங்கள் ஜனங்கள் தாங்களே இயற்றிக்கொள்ளும் சட்டங்களுக்கு அடங்கினதாக இருக்கும் என்பதனுல் ஒழுங்கும் அடக்கமும் உள்ள சுதந்தரமாகவே இருக்கும். இந்த அரசாங்கம் சத்தியத்தையும் அஹிம்சையையுமே அடிப்படைகளாகக் கொண்டதாக இருக்கும்; அந்த அரசாங்கத்தில் செழிப்பும், திருப்தியும், மக்களுக்குத் தேவையான எல்லா வசதிகளும் தம்முள் அடங்கியதுமான கிராமங்களும் கிராம சமுதாயங்களுமே அடங்கியிருக்கும்" ('ஹிந்து' பத்திரிகை - ஜூன் 22, 1945).

என்னுடைய மனதிற்கு, காந்திய முறையில் ஒரு அரசியலை அமைப்பது என்பது வெறும் மனக்கோட்டை

அல்ல. உலகத்தில் பொருளாதார முரண்பாடுகளேயும் உலக மகா யுத்தங்களேயும் நிரந்தரமாக ஒழிப்பதற்கு அது மிகவும் அனுபவ சாத்தியமான திட்டம். காந்திய எண்ணங்களே வெறும் கற்பனேயான மனேராஜ்யங்கள் என்று இகழ்ந்து பேசுகிறவர்கள், எழுத்துகளுக்கடங்காத கோரக் கொடுமைகள் நிறைந்த யுத்தங்களேப்பற்றி நன்ருக எண்ணிப்பார்க்க வேண்டும். இப்படிப்பட்ட மகா யுத்தங்கள் மறுபடியும் எக்காரணத்தைக்கொண்டும் வரமுடியால் செய்யவேண்டுமென்ற ஆர்வம் மட்டும் நமக்கிருந்தால் நம்முடைய பொருளாதார முறைகளேயும் அரசியல் முறைகளேயும் அடியிலிருந்து நுனிவரையிலும் மூற்றிலும் மாற்றியமைக்கத்தான் வேண்டும். முன்னேற்றத் திட்டங்கள் என்ற பெயரால் பேசப்படுகிற எந்தத் திட்டமும் நமக்கு நன்மை பயக்காது. ஸர் வில்லியம் பீவரிட்ஜ் சொல்லுவதுபோல 'காந்திய மனேராஜ்யம் வேண்டுமா அல்லது நாம் பார்க்கிற இந்த உலகமே போதுமா' என்பதல்ல நாம் இப்போது தீர்மானிக்க வேண்டிய விஷயம். "மனேராஜ்யம் வேண்டுமா அல்லது நரகம் வேண்டுமா" என்பதுதான் இப்போதுள்ள கேள்வி. மனேராஜ்யம் என்று சொல்லப்படுகிற காந்தியத்தை முயற்சிக்கலாமா அல்லது நரகத்தை ஏற்றுக் கொள்ளலாமா? நம்பிக்கையோடும் உறுதியோடும் இதற்குப் பதில் உடனே சொல்லியாக வேண்டிய நிர்ப்பந்தமான நிலேயில் இருக்கிருேம். எள்ளளவும் தாமதிக்கக் கூடாது. இல்லேயாளுல் ஆலகால விஷத்தைப் போல் உலக முழுவதையும் அழிக்கக் காத்துக்கொண்டிருக்கிற தீமைகளின் வெள்ளத்தை விலக்குவதற்கு காலம் கடந்துவிடும்.

முதல்பாகம் முற்றிற்று.

## 2-ம் பாகம்

காந்தீய அரசியல்

# ஜீவாதார உரிமைகளும் கடமைகளும்

இந்தச் சிறு புத்தகத்தின் முதல் பாகத்தில் சுயராஜ்ய அரசாங்கத்தின் அமைப்புக்கு வேண்டிய அடிப்படையான கொள்கைகளைச் சொல்லியிருக்கிறேன். இரண்டாவது பாகத்தில் அந்தச் சுராஜ்ய அமைப்புக்கு அவசியமான வெவ்வேறு அம்சங்களின் குணுகுணங்களைப் பற்றி விவரிக்கப்போகிறேன். சுயராஜ்யத் திட்டத்தின் சட்டப் பிரிவுகளை ஒவ்வொன்ருகச் சொல்லி, முழுத் திட்டத்தையும் எழுதி முடித்துவிடும் முயற்சி ஒன்றும் இதில் இல்லை. அரசியல் அமைப்பின் நுணுக்கங்களையெல்லாம் அரசியல் சட்ட நிபுணர்கள்தான் செய்யவேண்டும். நான் சொல்லப் போகிற திட்டம், பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்துக்குச் சம்பந்தப்படாத சுதந்தர இந்தியாவை எண்ணி எழுதப்பட்டது என்பதை முதலில் தெளிவாக தெரிவித்துவிட வேண்டுகிறேன்.

மூலாதாரமான உரிமைகளைப் பற்றி முதலில் கவனிப்போம். நம்முடைய நாட்டிலுள்ள ஜாதிமதப் பிரச்னைகளைக் கருதி, ஒவ்வொரு தனி நபருக்கும் இந்திய அரசாங்க அமைப்பில் இருக்கவேண்டிய பிரஜா உரிமைகளைத் தெளிவாகத் தெரிவித்துவிட வேண்டும். சிறுபான்மைகளாக உள்ள எல்லா வகுப்புகளுக்கும் பரிபூரண பாதுகாப்பை அளிக்கக்கூடிய இந்த உரிமைகளை அந்த அரசியல் சட்டத்தின் ஒரு முக்ய பகுதியாக அமைக்க வேண்டும். அந்த உரிமைகளாவன :

1. ஜாதி, நிறம், கொள்கை, ஆண்-பெண், மதம் அல்லது செல்வம் என்கிற எந்த வித்தியாசமும் பாராட்டாமல் எல்லாப் பிரஜைகளும் சட்டப்படி சம அந்தஸ்துள்ளவர்கள்

2. எந்தப் பிரஜையும் தன்னுடைய மதம், ஜாதி, கொள்கை இவற்றின் காரணமாக அரசாங்க உத்தியோகத்திற்கும் பகிரங்கப் பாராட்டுகளுக்கும், தொழிலுக்கும், வியாபாரத்திற்கும் தகுதி குறைந்தவராகக் கருதப்படக்கூடாது.

3. அஹிம்சா கொள்கைக்கும் பொதுநல ஒழுக்கத்துக்கும் பங்கமில்லாமல், ஒவ்வொரு பிரஜையும் தேக சுதந்தரம், பேச்சு சுதந்தரம், சங்கமாகக்கூடும் சுதந்தரம், கட்சிகளாகச் சேர்ந்து விவாதிக்கும் சுதந்தரம் முதலான சுதந்தரங்களை அனுபவிக்கலாம்.

4. பொதுநலத்துக்கும் பகிரங்க ஒழுக்கத்துக்கும் இடையூறில்லாமல், ஒவ்வொரு பிரஜையும் மனச்சாட்சி சுதந்தரம், சொந்த அல்லது சமூக வழக்க சுதந்தரம் இவற்றை அனுபவிக்கலாம்.

5. எல்லாப் பிரஜைகளுக்கும் தத்தம் எழுத்துகளையும், பாஷைகளையும், கலைகளையும் பாதுகாக்கவும் விருத்தி பண்ணவும் சுதந்தரம் உண்டு.

6. அரசாங்கச் செலவிலோ, ஸ்தலஸ்தாபனப் பொதுச் செலவிலோ, அல்லது பொதுஜன உபயோகத்துக்கென்று யாராவது தானம் செய்ததாகவோ, உண்டாக்கப்பட்ட கிணறுகள், குளங்கள், ரஸ்தாக்கள், பள்ளிக்கூடங்கள் அல்லது பொதுமக்கள் உபயோகத்துக்கான வேறு இடங்கள் முதலியவற்றை உபயோகித்துக்கொள்ள எல்லாப் பிரஜைகளுக்கும் சம உரிமை இருக்கவேண்டும்.

7. ஒவ்வொரு பிரஜைக்கும் 'நய் தாலீம்' என்று சொல்லப்படுகிற ஆதாரக் கல்வியை இலவசமாகப் பயில உரிமை உண்டு.

8. ஒவ்வொரு பிரஜைக்கும் தன்னுடைய தேகத்துக்கும் உடைமைகளுக்கும், பலாத்காரமோ கட்டாயப்படுத்தலோ, அல்லது பயமுறுத்தலோ நேராதபடி சட்டப் பாதுகாப்பும் போலீஸ் பாதுகாப்பும் கிடைக்க உரிமை இருக்கும்.

9. ஒவ்வொரு பிரஜைக்கும் கண்ணியமான உழைப்போ உத்தியோகமோ செய்து வாழ்க்கைக்குப் போதுமான குறைந்தபக்ஷ ஊதியம் பெற உரிமை உண்டு.

10. ஒவ்வொரு பிரஜைக்கும் ஒரு நாளைக்கு எட்டு மணி நேரத்துக்கு மேல் வேலை செய்யக் கட்டாயப் படுத்தப்படாமல் ஓய்வுக்கொள்ள உரிமையுண்டு.

11. ஒவ்வொரு பிரஜைக்கும் வைத்திய விஷயங்களில் இச்சைப்படி நடந்துகொள்ள சுதந்திரம் இருக்க வேண்டும். (இப்போது அமுலில் இருந்து வருகிற கட்டாய அம்மை - குத்தல், கட்டாய ஊசி குத்தல் முதலான சட்டங்களை சமயோசிதமாக மாற்றவேண்டும்).

12. ஒவ்வொரு பிரஜைக்கும் வயதுவந்தவர்களுக்குள்ள வாக்குரிமையை உபயோகித்து அரசாட்சியில் பங்குகொள்ள சுதந்தரம் இருக்கவேண்டும்.

13. ஒவ்வொரு பிரஜைக்கும், சட்டதிட்டங்களுக்கு உட்பட்டு, ஆயுதங்களை வைத்துக் கொள்ளவும், உடன் கொண்டு போகவும் உரிமை உண்டு.

## கடமைகள்

ஆனால் இந்த உரிமைகளெல்லாம் கீழே சொல்லப்படுகிற மூலாதாரமான கடமைகளைப் பொறுத்ததாகத் தான் இருக்கும் :

1. எல்லாப் பிரஜைகளும் அரசாங்கத்துக்கு விசுவாசமுள்ளவர்களாக இருக்கவேண்டும். முக்கியமாக தேசத்தில் அவசர நெருக்கடிகள் ஏற்படுகிறபோதும் அன்னியப் படையெடுப்பு நேருகின்ற போதும் விசுவாசம் வெகு முக்கியம்.

2. சட்டங்களில் குறிக்கிறபடி, ஒவ்வொரு பிரஜை யும் பணமாகவோ, வேறு பொருளாகவோ, அல்லது தேக உழைப்பாகவோ அரசாங்கச் செல்வத்துக்குத் தன் பங்கைச் செலுத்திப், பொதுநலத்தை அபிவிருத்தி செய்ய வேண்டும்.

3. மனிதனை மனிதன் ஏய்த்துச் சுரண்டும் வேலை களைத் தான் செய்யாமலும், பிறர் செய்தால் தடுத்தும், ஒவ்வொரு பிரஜையும் உதவவேண்டும்.

## கிராமம் அரசியலுக்கு அடிப்படை

முன்னமேயே குறிப்பிட்டிருக்கிறபடி, சுதந்தர இந்தியாவின் அரசாங்க அமைப்பிற்கு சுய சக்திகளும் சுய ஆட்சியும் உள்ள கிராமங்கள்தான் அடிப்படையான ஆதாரமாக இருக்கவேண்டும் என்பது காந்திஜியின் விருப் பம். அப்படிப்பட்ட ஒரு திட்டம் இந்தநாட்டின் பரம்பரை யான வழக்க ஒழுக்க வாழ்க்கையை ஒட்டினதாகத்தான் இருக்க வேண்டும். மிகவும் சிறு கிராமமாக இருக்கிற இடங்களில் அப்படிப்பட்ட சில அக்கம்பக்கமாக உள்ள கிராமங்கள் ஒன்ருகச் சேர்க்கப்பட்ட தொகுதி அரசிய லின் ஆரம்பஸ்தாபனமாக அமையலாம்.

## பஞ்சாயத்

கிராமத்தில் வயது வந்தவர்களான எல்லாரும் சேர்ந்து அவர்களின் வாக்கு (ஓட்)களின் மூலமாக ஒவ் வொரு கிராமத்துக்கும், சாதாரணமாக ஐந்து பேரைக் கொண்ட ஒரு 'பஞ்சாயத்தை' ஏற்படுத்த வேண்டும். கிராமம் பெரியதாக இருந்தால் ஏழிலிருந்து பதினேரு பேர் வரைக்கும் பஞ்சாயத்தாக இருக்கலாம். அந்தப் பஞ்சாயத் தார் தமக்குள் ஒருவரை ஏகமனதாகத் தலைவராகத் தேர்ந்துகொள்ள வேண்டும். பஞ்சாயத்தாருக்குள் ஏக மனம் ஏற்படாவிட்டால் கிராமத்திலுள்ள வயதுவந்தவர்

களெல்லாம் சேர்ந்து அந்தப் பஞ்சாயத்திலுள்ள ஒரு வரைத் தலைவராகத் தேர்ந்தெடுக்க வேண்டும்.

அப்படிப்பட்ட பஞ்சாயத்து சாதாரணமாக மூன்று வருஷங்கள் அதிகாரத்தில் இருக்கும். பஞ்சாயத்தில் ஒருமுறை அங்கத்தினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டவர் இரண்டாவது மூன்ருவது தடவையும் தேர்ந்தெடுக்கப் படுவதற்குத் தடையில்லை. ஆனால் மூன்று தடவைக்கு மேல் யாரும் அபேக்ஷகராக இருக்கக்கூடாது. எந்தப் பஞ்சாயத்து அங்கத்தினராவது, கிராமப் பொதுஜனங் களின் நம்பிக்கையை இழந்துவிட்டால், அப்படிப்பட்ட அங்கத்தினரை நூற்றுக்கு எழுபத்தைந்து ஓட்டுகளால் நீக்கிவிடலாம்.

கிராம முன்சீப், கணக்குப் பிள்ளை, கிராமப் போலீஸ் உத்தியோகஸ்தர்கள் முதலானவர்களை, உத்தியோகங் களில் அமர்த்தவும், நீக்கிவிடவும் சகல அதிகாரமும் கிராமப் பஞ்சாயத்துக்கேதான் உண்டு.

பஞ்சாயத்தாரின் தீர்ப்புகள், கூடுமான வரையில் ஏகோபித்ததாகவே இருக்கும். முக்கியமாக சிறுபான் மையோரைப் பற்றிய விஷயங்களில் ஏகோபித்ததாகவே இருக்க வேண்டும்.

## பஞ்சாயத்தின் அலுவல்கள்

ஒவ்வொரு கிராமமும் ஏறத்தாழ பூரண சுதந்தர முள்ளதாக இருக்குமானதால், கிராமப் பஞ்சாயத்தின் அதிகாரங்கள் கிராமத்தின் சமூக, பொருளாதார, அரசி யல் சம்பந்தமான எல்லா விஷயங்களிலும் வெகு விஸ்தாரமானதாக இருக்கும். அவை யாவன :

1. கல்வி

(அ) கலைகளும் தொழில்களும் சம்பந்தப்பட்ட தாயும், உற்பத்திகளுக்கு உதவக்கூடிய தாயுமுள்ள ஆதாரக் கல்விமுறையில் போதிக்கக்கூடிய ஆரம்பப்

பள்ளிக்கூடத்தையோ அதற்கு மேற்பட்ட பள்ளிக் கூடத்தையோ நடத்தவேண்டும்.

(ஆ) ஒரு புத்தகசாலையையும் ஒரு வாசகசாலையையும் வைத்து ஆதரிக்கவேண்டும், புத்தகசாலையிலுள்ள நூல்கள் கிராமத்தின் சமூக, பொருளாதார, அரசியல் அறிவுகளைப் புகட்டத்தக்கனவாகவே இருக்க வேண்டும்.

(இ) வயது வந்தவர்களுக்கு ஒரு இராத்திரிப் பள்ளிக் கூடத்தை நடத்தவேண்டும்.

2. பொழுது போக்குகள்—

(அ) கெரடிக்கூடங்களையும் தாலீம்கானுக்களையும் ஏற்படுத்தவும், சுதேச விளையாட்டுக்களையும் தேகப் பயிற்சிகளையும் ஆதரிக்கவும் வேண்டும்.

(ஆ) அப்போதைக் கப்போது கலைகளிலும் கைத் தொழில்களிலும் காட்சிச் சாலைகள் நடத்தவேண்டும்.

(இ) ஒவ்வொரு வகுப்பாருடைய பிரத்தியேக விழாக்களையும் எல்லா வகுப்பாரும் கலந்து நடத்த வேண்டும்.

(ஈ) அடிக்கடி நடக்கும் சந்தைகளைக் கூட்ட வேண்டும்.

(உ) பஜனை கோஷ்டிகளையும் கீர்த்தன காலட்சேபங் களையும் நடத்தவேண்டும்.

(ஊ) பாமரப் பாட்டுகள், பாமர நாட்டியங்கள், பாமர நாடகங்கள் முதலியவைகளை ஆதரிக்கவேண்டும்.

3. பாதுகாப்பு—

(அ) திருடர்களாலும் கொள்ளைக்காரர்களாலும் துஷ்டமிருகங்களாலும் கிராமத்துக்கு நஷ்டம் நேராதபடி பாதுகாக்க கிராமக் காவல்களை ஏற்படுத்தி அவற்றின் பொறுப்பை கவனிக்கவேண்டும்.

(ஆ) எல்லாக் குடிமக்களுக்கும் சத்யாக்ரஹம் என்ற ஸாத்வீக எதிர்ப்பையும் தற்காப்பையும் விளக்கி அவற்றில் முறையான பயிற்சியளிக்கவேண்டும்.

4. விவசாயம்—

(அ) கிராமத்தைச் சேர்ந்த ஒவ்வொரு விளைநிலத்துக்கும் அதன் தராதரத்துக்கு தக்கபடி வரிவிகிதத்தை நிச்சயித்தல் வேண்டும்.

(ஆ) நில வரியை வசூலித்தல் வேண்டும்.

(இ) விவசாய நிலங்களை வளப்படுத்திக் கூட்டுப் பண்ணைகளை ஆதரித்து விருத்தி செய்யவேண்டும்.

(ஈ) நீர்ப்பாசனத்துக்கு வேண்டிய சரியான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும்.

(உ) கூட்டுறவுக் கடைகளின் மூலம் விவசாயிகளுக்கு நல்ல விதைகளையும் விவசாயக் கருவிகளையும் பரிவர்த்தனை செய்யவேண்டும்.

(ஊ) கிராமத்துக்குத் தேவையான எல்லா உணவுப் பொருள்களையும் கிராமத்திலேயே கூடுமான வரையில் விளைவிக்க ஏற்பாடுகளைச் செய்யவும், வெறும் வியாபாரத்துக்கென்று விளைவிக்கப்படுகிற பொருள்களை அதிகமாக உண்டாக்குகிற தற்கால வழக்கத்தைக் கண்டிக்கவும் வேண்டும்.

(எ) கணக்குப் பார்த்து, சரியான தணிக்கை செய்து, அவசியமானால் கடன்களைக் குறைத்து, வட்டி விகிதங்களை ஒழுங்குபடுத்தி, முடிந்த மட்டிலும் கூட்டுறவு முறையில் கடன் கொடுக்கிற பாங்குகளின் மூலமாக விவசாயிகளுக்கு வேண்டிய உதவிகளைச் செய்யவேண்டும்.

(ஏ) நிலங்களை அரித்துக்கொண்டு போய்விடுவதைத் தடுக்கவேண்டிய முயற்சிகளைச் செய்து, தரிசாகக் கிடக்கும் நிலங்களைக் கூட்டு முயற்சிகளால் சாகுபடிக்குத் தகுதியாக்க வேண்டும்.

5. உற்பத்தித் தொழில்கள்—

(அ) கிராமத்தினரின் உபயோகத்துக்கு வேண்டிய 'கதர்' உடைகளை உற்பத்தி செய்யவேண்டும்.

(ஆ) கூட்டுறவு முறையில் பல்வேறு கைத்தொழில்கள் நடக்கும்படிச் செய்யவேண்டும்.

(இ) கூட்டுறவுப் பால் பண்ணைகளை நடத்தவும் எருமைக்கு பதிலாக பசுமாட்டையே விருத்தி செய்யவும் வேண்டும்.

(ஈ) செத்துப்போன ஆடு மாடுகளின் தோல்களைப் பதனிடும் கிராமத் தொழிலை நடத்தவேண்டும்.

6. பண்டமாற்றலும் வியாபாரமும்—

(அ) விவசாய விளைபொருள்களையும் கைத்தொழில் உற்பத்திச் சரக்குகளையும் கூட்டுறவுமுறையில் நடக்கும் வியாபாரச் சந்தைகளுக்கு அனுப்பவேண்டும்.

(ஆ) சரக்குகளை வாங்குகிறவர்களுடைய சங்கங்களைக் கூட்டுறவு முறையில் ஏற்படுத்த வேண்டும்.

(இ) உள்ளூர்த் தேவைகளுக்கு மிஞ்சிய பண்டங்களை மட்டும் ஏற்றுமதி செய்வதும் உள்ளூரில் உற்பத்தி செய்ய முடியாத பண்டங்களைமட்டும் இறக்குமதி செய்தலும் வேண்டும்.

(ஈ) கூட்டுறவுக் கிடங்குகளைப் பராமரித்தல் வேண்டும்.

(உ) கிராமத் தொழிலாளிகள், தேவையானபோது சரசமான வழிகளில் கடன் வாங்கும் வசதிகளை உண்டாக்கிவைத்தல் வேண்டும்.

7. சுகாதாரமும் வைத்திய உதவியும்—

(அ) சரியானபடி சாக்கடைகளை அமைத்து கிராமச் சுகாதாரங்களைப் பாதுகாத்தல் வேண்டும்.

(ஆ) பொது இடங்களில் அசுத்தம் செய்வதைத் தடுத்து, கொள்ளை நோய்கள் பரவாமல் பார்த்துக் கொள்ளவேண்டும்.

(இ) சுகாதாரத்துக்குகந்த குடிதண்ணீர் கிடைப்பதற்கான முயற்சிகளைப் போதியவரையிலும் செய்ய வேண்டும்.

(ஈ) இலவச வைத்தியம் கிடைக்கும்படியான ஒரு கிராம வைத்திய சாலையையும் ஒரு பிரசவ விடுதியையும்

வைத்துப் பராமரிக்கவும், சுதேச வைத்திய முறைகளையும், இயற்கை வைத்திய முறைகளையும், மூலிகை மருந்துகள் முறைகளையும் ஆதரிக்கவும் வேண்டும்.

8. நீதி பரிபாலனம்—

(அ) கிராமவாசிக்கு குறைந்த செலவில், காலதாமதமில்லாமல், கிராம வழக்குகளைத் தீர்த்து நீதி வழங்க வேண்டும். பஞ்சாயத்துக்களுக்கு, துஷ்கிருத்திய குற்றங்களையும் (கிரிமினல்) பண சம்பந்தமான (சிவில்) குற்றங்களையும் விசாரிக்க ஏராளமான அதிகாரம் இருக்கும்.

(ஆ) கட்சிக்காரர்களுக்குப் பணச் செலவில்லாமல் சட்ட நிபுணர்களின் சகாயம் கிடைக்கவும், உண்மைகளைச் சேகரிக்கும் முயற்சிகளைச் செய்யவும் வசதிகளை உண்டாக்கி வைக்கவேண்டும்.

9. பொருளாதாரமும் வரி விதித்தலும்—

(அ) குறிப்பிட்ட காரியங்களுக்காக வரி போடவும் வசூல் செய்யவும் வேண்டும். கிராமப் பொதுக் காரியங்களுக்கு, பண்டங்களாகவும் பலர் கூடிச் செய்யும் தேக உழைப்பாகவும் வரி வசூலிப்பதைச் சிறப்பாகக் கொள்ளலாம்.

(ஆ) சமூக சம்பந்தமான காரியங்களுக்கும் மத சம்பந்தமான காரியங்களுக்கும் தனிப்பட்ட மனிதர்களிடம் நன்கொடைகளை வசூலிக்கவேண்டும்.

(இ) சரியான வரவு செலவு கணக்குகளை எழுதி வைக்க வேண்டியதை கவனித்துக்கொள்ளவும், அந்தக் கணக்குகளை பகிரங்கமாக தணிக்கை செய்யவும், ஐந்தொகை செய்யவும் வேண்டும்.

காந்தீய அரசியல் அமைப்பில், கிராமங்களுக்கு எவ்வளவு சுதந்தரம் இருக்கும் என்பதை அறியும் பொருட்டு, கிராமப் பஞ்சாயத்தின் அலுவல்களை ஏறத்தாழ முற்றிலும் சொல்லிவிட்டதாக நினைக்கிறேன்.

# தாலூகா-ஜில்லாப் பஞ்சாயத்துக்கள்

கிராமங்களைச் சமூக, பொருளாதார, அரசியல் வேலைகளில் ஒன்றுக்கொன்று சம்பந்தமுள்ளதாகவும் உதவியுள்ளதாகவும் இருக்கும்படிச் செய்து, அந்த ஐக்கியத்தைப் பாதுகாக்கத் தாலூகாப் பஞ்சாயத்துக்களும் ஜில்லாப் பஞ்சாயத்துக்களும் ஏற்படுத்தவேண்டும். இந்தப் பெரிய பஞ்சாயத்துக்களின் வேலை கிராமப் பஞ்சாயத்துக்களுக்கு ஆலோசனைகள் சொல்லி உதவி செய்வதற்கேயன்றி அதிகாரம் செலுத்த அல்ல. அவை கிராமப் பஞ்சாயத்துக்களின் வேலைகளை மேற்பார்வை செய்து குறைகளை நீக்க உதவி செய்யும்; உத்தரவுகள் செய்யாது.

## தாலூகாப் பஞ்சாயத்து

ஒரு குறிப்பிட்ட எண்ணிக்கை கொண்ட சில கிராமங்களின் தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர்கள் சேர்ந்தது தாலூகாப் பஞ்சாயத்து. அங்கத்தினர்களின் எண்ணிக்கை அந்தத் தாலூகாவைச் சேர்ந்த கிராமங்களின் எண்ணிக்கைக்குத் தக்கபடிதான் இருக்கும். சாதாரணமாக இருபது கிராமங்கள் சேர்ந்ததாகவும் ஏறத்தாழ இருபதினாயிரம் ஜனத்தொகை கொண்டதாகவும் இருப்பது நல்லது. நிர்வாகங்களும் சட்ட ஆலோசனைகளும் நீதி விசாரணைகளும் தாமதமின்றித், திறமையாக நடத்தப்பட வேண்டுமானால் இப்போதுள்ள தாலூகாக்களின் விஸ்தீரணத்தை மிகவும் குறைத்துவிட வேண்டும் என்பதை சொல்லத் தேவையில்லை.

தாலூகா பஞ்சாயத்தும் கிராமப் பஞ்சாயத்தைப் போலவே மூன்று வருஷங்கள் உத்யோகத்திலிருக்கும்.

**தாலூகாப் பஞ்சாயத்தின் அலுவல்களாவன :—**

(அ) கிராமப் பஞ்சாயத்துக்கள் செய்கிற எல்லாக் காரியங்களிலும் துணைபுரிந்து, மேற்பார்வை செய்து, ஒப்புரவு உண்டாக்கி, கணக்குகளைத் தணிக்கை செய்வது.

(ஆ) கிராமங்களில் உள்ளதைக் காட்டிலும் மேல் படிப்புகளைப் புகட்டக்கூடிய உயர்தர ஆதாரக் கல்விப் பள்ளிக்கூடங்களை ஏற்படுத்துவது.

(இ) குறிப்பான வியாதிகளுக்கு வைத்தியம் செய்ய வசதிகள் உள்ள பெரிய வைத்திய சாலைகளையும் பிரசவ விடுதிகளையும் வைத்து பராமரிப்பது.

(ஈ) அவசர காலங்களில் கிராமங்களுக்கு உதவ பிரத்யேக காவல் படைகளை வைத்திருப்பது.

(உ) தாலூகா ஐக்கிய - நாணய - சங்கங்களையும் வியாபார விற்பனை சங்கங்களையும் நிர்வகிப்பது.

(ஊ) கிராமத்துக்கு - கிராமம். இடையிலுள்ள ரஸ்தாக்களை நல்ல நிலையில் வைத்திருப்பது.

(எ) விவசாயத் திறமையை விருத்திசெய்ய மாதிரிப் பண்ணைகளை வைத்து நடத்திக் காட்டுவது.

(ஏ) கிராமத்துக்கு கிராமம் விளையாட்டுக்களையும் பந்தய விழாக்களையும் நடத்துவது.

## ஜில்லாப் பஞ்சாயத்து

தாலூகாப் பஞ்சாயத்துக்களின் தலைவர்களெல்லாம் சேர்ந்தது ஜில்லாப் பஞ்சாயத்து. சாதாரணமாக, மேலே சொல்லப்பட்ட தாலூகாக்களைப் போன்ற பன்னிரண்டு தாலூகாக்களுக்கு அதிகப்படாமல் ஜில்லாப் பஞ்சாயத்துக்களின் விஸ்தீரணம் இருக்கவேண்டும். ஜில்லாப் பஞ்சாயத்துக்கும் மூன்றே வருஷம் அதிகாரமிருக்கும்.

அதன் அலுவல்களாவன :—

(அ) தாலூகாப் பஞ்சாயத்துக்களின் வேலைகளுக்குத் துணைபுரிந்து, மேற்பார்வை செய்து, ஒப்புரவுண்டாக்கி, கணக்குகளை தணிக்கை செய்தல்.

(ஆ) ஆதாரக் கல்விக் கல்லூரிகளையும் உயர்ந்த முயற்சிகளையும் மேற்கொள்ளல்.

(இ) மற்ற வைத்திய சாலைகளில் குணப்படுத்த முடியாத குறிப்பிட்ட வியாதிகளுக்காக வசதிகள் நிறைந்த பெரிய வைத்திய விடுதிகளை வைத்துப் பராமரித்தல்.

(ஈ) அவசர காலங்களுக்கு உதவும்படியான ஜில்லாப் பாதுகாப்பு மூலபலப் படைகளை வைத்துப் பராமரித்தல்.

(உ) ஜில்லா ஐக்கிய நாணயச் சங்கங்களையும் விற்பனை - வியாபாரச் சங்கங்களையும் ஏற்படுத்தி நிர்வகித்தல்.

(ஊ) நீர்ப்பாசனங்களுக்குப் போதுமான முயற்சிகளை மேற்கொள்ளல்.

(எ) தாலூகாவுக்குத் தாலூகா விளையாட்டுக்களையும் பந்தயங்களையும் நடத்தல்.

மாகாணங்களைச் சிறியனவாக்க நேர்ந்தால் ஜில்லாப் பஞ்சாயத்துக்கள் அவசியமில்லை. தாலூகாப் பஞ்சாயத்துக்கள் நேரடியாக மாகாண நிர்வாகத்தோடு உறவு வைத்துக்கொள்ளும்.

## முனிசிப்ல் சபைகள்

நகரங்களில் 'வார்டுக்கு வார்டு' பஞ்சாயத்துக்களும் அவற்றிற்குமேல் 'முனிசிபல்' சபையும் இருக்கும். அவற்றிற்கு விஸ்தாரமான நிர்வாக அதிகாரமும் சட்டம் வகுக்கும் அதிகாரமும் இருக்கும். அதன் அலுவல்கள் ஏறத்தாழ ஜில்லாப் பஞ்சாயத்துக்களைப்போல் இருக்கும். அவைகள் 'வார்டு பஞ்சாயத்'துக்களை ஒப்புரவு செய்து மேற்பார்வை நடத்தும். வாகனங்கள், மின்சாரம், தண்ணீர்க் குழாய்கள் முதலியவைகள் 'முனிசிபாலிடி'களின் உடைமைகளாகவும் பொறுப்பாகவும் இருக்கும்.

# மாகாண ஆட்சி

ஜில்லாப் பஞ்சாயத்துக்களும் முனிசிபல் சபைகளும் தங்கள் தலைவர்களை மாகாணப் பஞ்சாயத்துக்கு அங்கத்தினர்களாக அனுப்புவார்கள். மாகாணப் பஞ்சாயத்தின் அங்கத்தினர்களின் எண்ணிக்கை மாகாணத்துக்கு மாகாணம் வேறுபடும். சிறிய மாகாணங்களில், ஜில்லாப் பஞ்சாயத்துத் தலைவர்களும் முனிசிபல் தலைவர்களும் போக வேறு பிரதிநிதியையும் அனுப்பலாம்.

மாகாணப் பஞ்சாயத்து மூன்று வருஷங்கள் அதிகாரத்திலிருக்கும். சாதாரணமாக வருஷத்துக்கு இரண்டு முறை கூடும்.

## அலுவல்கள்

மாகாணப் பஞ்சாயத்தின் அலுவல்களாவன :—

(அ) ஜில்லாப் பஞ்சாயத்துக்களின் காரியங்களுக்குத் துணைபுரிந்து, மேற்பார்வை செய்து, ஒப்பரவு உண்டாக்கி கணக்குகளைத் தணிக்கை செய்தல்.

(ஆ) அவசரங்களுக்கு உபயோகப்படுத்த பிரத்யேகமான மூலபலக் காவல் படையைப் பராமரித்தல்.

(இ) சர்வகலாசாலைப் படிப்பைக் கவனித்தல். குறிப்பாக உயர்தரத் தொழிற் பயிற்சிகளையும் ஆராய்ச்சிகளையும் நிர்வகித்தல்.

(ஈ) மாகாணத்தின் போக்குவரத்து, தபால், தந்தி முதலான சாதனங்களை ஒழுங்குபடுத்தி நிர்வகித்தல். போக்குவரத்து வாகனங்களெல்லாம் மாகாணப் பஞ்சாயத்தின் உடைமைகளாகவும் பொறுப்புகளாகவும் இருக்க வேண்டும்.

(உ) மாகாணத்துக்குத் தேவையான நீர்ப்பாசன வசதிகளை உண்டாக்கி நிர்வகித்தல்.

(ஊ) அவசியமான போதெல்லாம் பஞ்சநிவாரண உதவிகளை ஒழுங்குபடுத்தல்.

(எ) ஜில்லாப் பஞ்சாயத்துக்களுக்கு உதவி செய்ய மாகாண ஐக்கிய நாணய நிதிகளை ஸ்தாபித்தல்.

(ஏ) மாகாணத்தின் இயற்கை வளங்களைப் பயன் படுத்திக்கொள்ளும் முயற்சிகளை விருத்திசெய்தல். கூடிய மட்டும் மூலத் தொழில்களை ஏற்படுத்தி நிர்வகித்தல்.

## எல்லைகள்

மாகாணங்களின் எல்லைகள் பாஷாவாரியாக நிர்ணயிக்கப்படும். இப்போதுள்ள மாகாணப் பிரிவினைகள் சரித்திர நிகழ்ச்சிகளால் ஏற்பட்டவை. அவற்றில் சமூக சாஸ்திர நியாயங்கள் இல்லை. பெரும்பாலும் மாகாணங்கள், ஒன்றுக்கொன்று பொருத்தமில்லாத சமூகங்களும், முற்றிலும் வேற்றுமையான சமூகங்களும் அடங்கினவைகளாக இருக்கின்றன. ஆகையால், மாகாணப் பிரிவினைகளைப் பாஷையை ஆதாரமாகக்கொண்டு மாற்றியமைக்க வேண்டும். இது மிகவும் அவசியமானது. ஏனென்றால் சட்டசபையிலும், நிர்வாக இலாகாக்களிலும், நீதிமன்றங்களிலும், கல்வி ஸ்தாபனங்களிலும் அந்தந்த மாகாணத்தின் தாய்மொழியே உபயோகப்படுத்தப்பட வேண்டும் என்கிறபோது, ஒரு மாகாணத்தில் பல பாஷைகளுக்கு இடங்கொடுப்பது எல்லையற்ற சங்கடங்களுக்கு இடமுண்டாக்கும். மேலும் ஆரம்ப வகுப்பு முதற்கொண்டு அதிக உயர்ந்த படிப்புமுடிய, எல்லாப் பாடங்களையும் தாய் மொழியிலேயே போதிக்க வேண்டுமென்பது மிகவும் நியாயமானது. இரண்டு அல்லது மேற்பட்ட மொழிகள் வழங்குகின்ற மாகாணங்களில் அப்படிச் செய்வது அசாத்தியமாகி விடுகிறது. இதைக் கவனித்தால் பம்பாய், சென்னை, மத்திய மாகாணம் ஆகிய மூன்று

மாகாணங்களிலும் அநேக மிகப் பெரிய மாறுதல்களைச் செய்தாகவேண்டும்.

எதிர்கால இந்திய அரசாங்கத்தில் இருக்க வேண்டிய மாகாணங்களின் பெயர்களும் அவற்றின் பாஷைகளும்:

| | மாகாணம் | | பாஷை |
|---|---|---|---|
| 1. | ஆஜ்மீர்-மீர்வாரா | ... | ஹிந்துஸ்தானி |
| 2. | ஆந்த்ரா | ... | தெலுங்கு |
| 3. | அஸ்ஸாம் | ... | அஸ்ஸாம் பாஷை |
| 4. | பீஹார் | ... | ஹிந்துஸ்தானி |
| 5. | வங்காளம் | ... | வங்காளி |
| 6. | பம்பாய் (நகரம்) | ... | மராத்தியும்—குஜராத்தியும் |
| 7. | டெல்லி | ... | ஹிந்துஸ்தானி |
| 8. | குஜராத் | ... | குஜராத்தி |
| 9. | கர்னாடகம் | ... | கன்னடம் |
| 10. | கேரளம் | ... | மலையாளம் |
| 11. | மகாகோசலம் | ... | ஹிந்துஸ்தானி |
| 12. | மஹராஷ்டிரம் | ... | மராத்தி |
| 13. | நாகபுரி (பேராரும் சேர்ந்து) | ... | மராத்தி |
| 14. | வடமேற்கு எல்லைப்புறம் | ... | புஷ்டு |
| 15. | பஞ்சாப் | ... | பஞ்சாபி |
| 16. | சிந்து | ... | சிந்தி |
| 17. | தமிழ்நாடு | ... | தமிழ் |
| 18. | ஐக்ய மாகாணம் | ... | ஹிந்துஸ்தானி |
| 19. | உட்கல் | ... | உரியா |

மேற்சொன்ன மாகாணப் பிரிவினைகள், இப்போது காங்கிரஸ் காரியங்களில் அனுஷ்டிக்கப்பட்டு வரும் ஏற்பாட்டில் ஒரே ஒரு மாறுதல். நாகபுரியும் விதர்ப்பமும் இதில் ஒன்றாகச் சேர்க்கப்பட்டிருக்கின்றன. அதன் காரணம் எல்லாரும் அறிந்ததுதான். காங்கிரஸ்

பிரிவினைப்படி, பெயர்கள் அப்படியே இருந்தாலும் எதிர்காலப் பிரிவினையில், இப்போது அந்தந்தப் பெயரில் சேர்ந்திருக்கிற எல்லைகள் அப்படியே இருக்க முடியாது. உதாரணமாக, எதிர்கால இந்திய ஐக்யத்தில் எல்லாச் சமஸ்தானங்களும் சேராமல் சில சமஸ்தானங்கள் மட்டுமே சேர்ந்தாலும், அந்தச் சமஸ்தானங்களைக் கலந்து ஆலோசித்து எல்லைகளை மாற்றியமைக்க வேண்டியிருக்கும். இப்போதிருக்கிற 'ஐக்ய மாகாண'த்தை நியாயமாக இரண்டு மாகாணங்களாகப் பிரிக்கலாம்—கிழக்கும் மேற்கும். எப்படியிருந்தாலும் இந்த விஷயங்களையெல்லாம், எதிர்கால இந்திய அரசியல் அமைப்பை நிச்சயம் செய்ய, ஏற்படுத்தப் போகிற 'அரசியல் நிர்ணய' சபையினரால் நியமிக்கப்படும் ஒரு தனிக் கமிட்டியாருக்கு விட்டுவிட வேண்டும். அவசியமான இடங்களில், வயது வந்தவர்களுடைய ஓட்டுக்களைக் கொண்டு பொது மக்களின் விருப்பத்தை அறிந்து, அதற்கிணங்க அவசியமான மாறுதல்களைச் செய்யலாம்.

## நிர்வாகம்

மாகாணப் பஞ்சாயத்தே மாகாணத்தின் சட்ட சபையாக இருக்கும். அது, முன்னே சொல்லப்பட்ட மாகாண அலுவல்களுக்கு வேண்டிய சட்டங்களைச் செய்துகொள்ளப் பூரண அதிகாரம் உள்ளதாகிய 'ஏக சபை'யாக வேலை செய்யும்.

அந்த மாகாணப் பஞ்சாயத்து, தமக்குள் ஒருவரைத் தலைவராகத் தேர்ந்தெடுக்கும். அவரே மாகாணத் தலைவராகவும் இருப்பார்.

அந்தச் சட்ட சபையின் நடவடிக்கைகளெல்லாம் அந்த மாகாணத்தின் பாஷையிலேயே நடக்கும்.

சட்ட சபையின் அலுவல்களும் நிர்வாக அலுவல்களும் முற்றிலும் வெவ்வேறாக இருக்கும். ஒவ்வொரு இலாகாவிற்கும் மந்திரிகளை மாகாணப் பஞ்சாயத்தே

நியமிக்கும். மந்திரிகள் மாகாணப் பஞ்சாயத்துக்கு ஜவாப்தாரிகளாக இருப்பார்கள். ஆனால் பஞ்சாயத்தின் அங்கத்தினர் மந்திரியாக இருக்க முடியாது. "இங்கிலாந்தில் இருப்பதைப்போல, முக்கியமான நிர்வாகமும், முக்கியமான சட்ட சபையும் அதே மனிதர்களால் நடத்தப்பட்டு, நிர்வாக உத்யோகத்துக்காகப் போதுமான அல்லது கொழுத்த சம்பளங்கள் கொடுக்கப்படுகிற நாடுகளில் உண்மையான 'உத்தரவாதம்' என்பதற்கு இடமில்லை. அங்கே கட்சித் தந்திரங்களும் சூழ்ச்சிகளுமே மிகுந்து, சட்டம் இயற்றுவது சுயநலப் பற்றற்றதாக இருக்க முடியாது" என்று தேசபந்து தாஸும், டாக்டர் பகவான் தாஸும் சேர்ந்து எழுதிய 'சுயராஜ்யத் திட்டத்தின் வெளிக்கோடுகள்' என்ற புத்தகத்தில் சொல்லுகிறார்கள். (அத்யாயம் 6).

மாகாணப் பஞ்சாயத்தின் அங்கத்தினர்கள் உண்மையான கௌரவ உத்யோகம் செய்வார்கள்.

மந்திரிகளின் உத்யோகம் மூன்று வருஷங்கள் உள்ளது. சாதாரணமாகப் பஞ்சாயத்து மாறினாலும், மந்திரிகளை இடைக்காலத்தில் நீக்கமாட்டார்கள். குறிப்பிடத்தக்க திறமைக் குறைவோ லஞ்சக் குற்றமோ உள்ளவர்களை நீக்கத் தடையிராது.

மந்திரிகள், கட்சிகளையும் ஜாதி மதங்களையும் உத்தேசித்து நியமிக்கப்படமாட்டார்கள், மாகாணத்தில் மிகவும் திறமைசாலிகளாக உள்ளவர்களே மந்திரி பதவிகளுக்கு நியமிக்கப்படுவார்கள். மந்திரிகளின் எண்ணிக்கை மாகாணத்தின் விஸ்தீரணத்தைப் பொறுத்ததாக இருக்கும். எப்படியிருந்தாலும் மந்திரிகளின் எண்ணிக்கை ஐந்துக்குக் குறையாமலும் ஒன்பதுக்கு அதிகப்படாமலும் இருக்கும்.

# மத்ய அரசாங்கம்

மாகாணப் பஞ்சாயத்துக்களின் தலைவர்களெல்லாம் சேர்ந்தது அகில இந்தியப் பஞ்சாயத்து. பெரிய மாகாணங்கள், மாகாணத் தலைவரோடு மாகாணப் பஞ்சாயத்து அங்கத்தினர் ஒருவரையும் அகில இந்தியப் பஞ்சாயத்துக்கு அங்கத்தினராக அனுப்பலாம்.

அகில இந்தியப் பஞ்சாயத்தே இந்தியா முழுதுக்கும் மத்யச் சட்ட சபையாக இருக்கும். அப்படி ஒரு சபைதான் இருக்கும். ஏனெனில், இரண்டு சபைகள் இருப்பதில் அனுவசியமான சிக்கல்களும் செலவுகளும் உண்டாகின்றன. வட்டமேஜை மகாநாட்டில் பேசின பேச்சுக்கள் ஒன்றில் காந்திஜி சொன்னார்:—

'இரண்டு சட்ட சபைகள் இருப்பதில் எனக்கு மோகமும் இல்லை, நம்பிக்கையும் இல்லை. பொது ஜனங்களுக்குக் கட்டுப்பட்ட ஒரே ஒரு சபை போதும். அந்தச் சபை, அவசரப்பட்டு, பின்னால் வருத்தப்பட வேண்டிய சட்டங்களை, இயற்றிவிட்டு ஓடி ஒளிந்து கொள்ளுமே என்ற பயம் எனக்கில்லை. அந்தச் சபைக்கு வேண்டுமென்றே ஒரு குற்றத்தைச் சாட்டி அதை ஒழித்துவிட வேண்டுமென்று நான் விரும்பமாட்டேன். ஜன சம்மதம் பெற்ற ஒரு சபையே வேண்டிய காரியங்களைச் சரியாகக் கவனித்துக் கொள்ளுமென்று நான் நினைக்கிறேன்; ஏனென்றால், உலகத்தில் மிகவும் ஏழையான இந்திய நாட்டைப்பற்றிய விஷயமாகையால் எவ்வளவுக்கெவ்வளவு செலவுகளைக் குறைக்கிறோமோ அவ்வளவுக்கவ்வளவு நல்லது,".

இந்திய சுதேச சமஸ்தானங்கள் அகில இந்திய ஐக்கியத்தில் சேர்ந்தால், அவைகளும் தங்கள் பிரதி நிதிகளை அகில இந்தியப் பஞ்சாயத்துக்கு அனுப்ப சம உரிமை உண்டு. அப்படிப்பட்ட சமஸ்தானப் பிரதி நிதிகள் அந்தந்த சமஸ்தானப் பிரஜைகளின் சங்கங் களின் தலைவர்களாக இருக்க வேண்டும். அவர்கள் சமஸ்தாநாதிபதிகளால் நியமிக்கப்பட்ட 'பொம்மைகளாக' இருக்கக் கூடாது.

அகில இந்தியப் பஞ்சாயத்து மூன்று வருஷங்கள் அதிகாரத்திலிருக்கும்.

## அலுவல்கள்

கிராமங்களுக்கும் மாகாணங்களுக்கும் கூடுமான வரையில் பூரண ஸ்தல சுதந்தரங்களை விட்டுவிட வேண்டும் என்ற அடிப்படையின்மேல் அமைக்கப்படுகிற இந்த ஆட்சியில் அகில இந்தியப் பஞ்சாயத்தின் அலுவல் கள் மிகவும் குறைவாகத்தான் இருக்கும்.

அதன் அலுவல்களாவன :—

(அ) அன்னிய படையெடுப்புகளை எதிர்த்து தேசத் தைப் பாதுகாத்தல்.

(ஆ) அவசர காலங்களுக்கு உபயோகமாகும்படி சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்ட ஒரு தேசியக் காவல் சேனையை வைத்துப் பராமரித்தல்.

(இ) மாகாணங்களின் பொருளாதாரத் திட்டங்கள் ஒன்றுக்கொன்று பொருத்தமுள்ளதாக இருக்கும்படி கவனித்தல்.

(ஈ) அகில இந்தியாவுக்கும் சாதகமான 'மூலத்' தொழில்களை ஏற்படுத்தி நிர்வகித்தல்.

(உ) அகில இந்தியப் போக்குவரத்து, தந்தி தபால் சாதனங்களை பொறுப்போடு கண்காணித்தல்.

(ஊ) நாணய நடப்புகளையும், துறைமுக சுங்கங்

களையும், அன்னிய நாட்டு வியாபாரங்களையும் நிர்வகித்தல்.

(எ) அகில இந்திய அவசியத்தைச் சேர்ந்த கைத்தொழில், விஞ்ஞான ஆராய்ச்சி முதலியவற்றிற்கு அனுகூலமான கலாசாலைகளை ஸ்தாபித்து நடத்தல், கல்வி முறைகளில் எல்லா மாகாணங்களும் ஒரே கொள்கையுள்ளனவாக இருப்பதைக் கண்காணித்தல்.

(ஏ) அன்னிய நாட்டுச் சம்பந்தங்களை உருவாக்குதல்.

மிச்ச அதிகாரங்கள் எல்லாம் மற்றப் பஞ்சாயத்துக்களுக்கே இருக்கும். அவற்றில் மத்ய சர்க்கார் தலையிடாது.

## நிர்வாகம்

அகில இந்தியப் பஞ்சாயத்துதான் நாட்டின் பிரதான சட்ட சபையாக இருக்கும். அதற்குக் குறிக்கப்பட்டுள்ள அலுவல்களைப்பற்றிய எல்லாச் சட்டங்களையும் அதுவே இயற்றும். அகில இந்தியப் பஞ்சாயத்தின் தலைவர் அகில இந்திய அரசாங்கத்தின் தலைவராக இருப்பார்.

ஐக்கியப் பஞ்சாயத்து வெவ்வேறு இலாகாக்களுக்கு வேண்டிய மந்திரிகள் அல்லது அதிகாரிகளை நியமிக்கும். இந்த மந்திரிகள் அகில இந்தியப் பஞ்சாயத்தின் அங்கத்தினராக இருக்கக் கூடாது. இப்படியாகச் சட்டசபை வேலைகளையும் நிர்வாக அதிகாரங்களையும் பிரித்து வைக்கவேண்டும்.

நிர்வாக மத்ய ஸ்தாபனம் அல்லது மந்திரிகள் சபை மத்யப் பஞ்சாயத்துக்கு ஜவாப்தாரியாக இருக்கும். மந்திரிகளின் உத்யோக காலம் மூன்று வருஷங்கள். அவர்களுடைய உத்யோக காலம் முடிவடைவதற்குள் புது மத்யப் பஞ்சாயத்து சபை வர நேர்ந்தால், அவர்கள் திறமைக் குறைவானவர்களாகவும், லஞ்சக் குற்றமுள்ளவர்களாகவும் இருந்தாலல்லாமல் சாதாரணமாக நீக்கப்படமாட்

டார்கள். எந்த மந்திரியாவது துர்நடத்தையுள்ளவராக இருந்தால் அவரை எந்தச் சமயத்திலும் நீக்கிவிடலாம்.

மந்திரிகள், கட்சி அல்லது ஜாதி மதங்களின் காரணமாக நியமிக்கப்படமாட்டார்கள், அவர்கள் அகில இந்தியாவிலுமுள்ள மிகச் சிறந்த திறமைசாலிகள் என்ற இனத்தைச் சேர்ந்தவர்களாக இருப்பார்கள். மிகவும் விஸ்தாரமான அளவில் ஸ்தல சுதந்தரங்களை அவரவர்களுக்கே விட்டு விடுவதனுல், கட்டுப்பாடான அரசியல் கட்சிகள் இருக்கக் காரணமில்லை. ஒவ்வொரு சமூகத்துக்கும் மத்ய நிர்வாக ஸ்தாபனத்தில் உத்யோகம் கிடைக்கும்படியான எல்லா முயற்சிகளும் செய்யப்படுமென்ருலும், எதிர்கால இந்தியாவில் ஏற்படப் போகும் அரசியல் அமைப்பில் இப்போதிருக்கிற தீமைகள் மிகுந்த வகுப்புவாரி உத்யோகங்களுக்கு இடமே இருக்காது. உண்மையில் இந்தியாவானது, அஹிம்சை நிலையைப் பூரணமாக அனுஷ்டித்தால், தனித்து நிற்பதாகவும் பலஹீனமாக இருப்பதாகவும் பயப்பட வேண்டிய 'சிறுபான்மைகள்' இருக்கவே முடியாது.

## ஐக்யத்தைச் சேர்ந்த தனிப் பகுதிகள்

'அகில இந்தியப் பஞ்சாயத்து' என்பது, மிகப் பெரிய அளவிற்குச், சொந்த சுதந்தரங்கள் உள்ள பல மாகாணங்களும் சமஸ்தானங்களும், கட்டாயப்படுத்தப்படாமல் சுதாவான இஷ்டத்தினுல் ஐக்கியப்பட்ட ஒரு ஸ்தாபனமாக இருக்கும். பூகோள சாஸ்திரப்படிக்கு இயற்கை அமைப்பிலும் கலாசாரங்களிலும் இந்தியா, பிரிக்க முடியாத ஒரே நாடாக இருப்பதனுல், இந்த நாட்டின் பொது நலங்களைப் பாதுகாக்க மாகாணங்களும் சமஸ்தானங்களும் சந்தோஷமாக இந்த ஐக்கியத்தில் சேருவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது. எல்லாப் பகுதிகளுக்குள்ளும் பொது தேச நலங்களை விருத்தி செய்வதற்கான நெருக்கமான உறவுகளை பலப்படுத்த அவசியமான

எல்லா முயற்சிகளையும் செய்ய வேண்டும். இருந்தாலும் இந்த தேசத்தின் எந்தப் பகுதியையும் அந்தப் பகுதியிலுள்ள வயதுவந்த ஓட்டர்களால் வெளியிடப்படும் நிச்சயமான இஷ்டத்துக்கு விரோதமாக அகில இந்திய ஐக்கியத்தில் சேர வேண்டுமென்று பலவந்தப்படுத்தக் கூடாது. இஷ்டமிருந்தால் மட்டும் சேரலாம் என்பதிலேயே இஷ்டப்படுகிறபோது சேர்ந்தவர்களும் பிரிந்து போய்விடலாம் என்பதும் அடங்கியிருப்பதால் அதைப் பற்றிச் சொல்ல வேண்டியதில்லை. இந்த இடத்தில் ஒரு விஷயத்தைக் சொல்லிவிட வேண்டியது மிகவும் பொருத்தமாக இருக்கும். என்னவெனில், சோவியத் ருஷ்யாவில் பிரிந்து போய்விடுகிற உரிமை எல்லாப் பிரதேசங்களுக்கும் இல்லை. அந்த உரிமை ஒப்பந்தம் பேசியிருக்கிற பதினொரு 'ஐக்கிய ஜனநாயகங்க'ளுக்கு மட்டும்தான் உண்டு. 'சுதந்தர ஐக்யங்கள்' என்று சொல்லப்படுகிற எண்ணிறந்த மற்றப் பகுதிகளுக்கு அந்த உரிமை இல்லை. மேலும் அந்த உரிமை உள்ளனவாகச் சொல்லப்படுகிற 'பதினொரு 'ஐக்கிய ஜனநாயகங்க'ளுக்கும்கூட அது பெயரளவில்தான். ஏனெனில், பிரிந்துபோகிற உரிமைகளைச் செய்கைகளில் நடத்த விரும்பினால், சோவியத் நீதிஸ்தலங்களுக்கு முதலில் விண்ணப்பம் செய்துகொள்ள வேண்டும். அதைப்பற்றி அவர்கள் விசாரிப்பதற்கு முன்னால் பிரிந்துபோக எண்ணும் முயற்சியை சோவியத் அரசாங்கமும் நீதிஸ்தலங்களும் 'புரட்சிக்கு—எதிர்ப் புரட்சி' என்றும் மிக்க ராஜாங்கத் துரோகமான காரியமென்றும் கருதுவார்கள் என்ற பயம் இருக்கிறது.

அஹிம்சையை ஆதாரமாகக் கொண்ட நம் அரசாங்கத்தில் 'ஆயுத பலங்களைக் கொண்டு பலவந்தப்படுத்துவது' என்ற பேச்சுக்கே இடமில்லை. ஒவ்வொரு பகுதிக்கும் ஐக்யத்தில் சேரவோ சேராமல் இருக்கவோ பூரண உரிமை இருக்கிறது. அதுபோலவே பிரிந்துபோகிற உரிமைக்கும் தடை இருக்காது.' ஒருவருக்கொருவர் சகிப்

பும், நல்லெண்ணமும், ஒத்துழைப்பும் பொது வாழ்வில் அவசியமாக இருக்கவே வேண்டும் என்கிற 'காந்தீயத் திட்டத்தில்', பிரிந்து போகிற எண்ணமே உண்டா காமல் போய்விடும்.

## பாஷைகள்

அகில இந்தியப் பஞ்சாயத்தின் நடவடிக்கைகள் 'நாகரி' எழுத்துக்களும், 'உருது' எழுத்துக்களும் ஆகிய இரண்டிலும் நடத்தப்படும்.

# நீதி பரிபாலனம்

பிரிட்டிஷ் அரசாங்கத்தால் இந்தியாவில் புகுத்தப்பட்ட நீதி பரிபாலன முறை சமூக-பொருளாதார ஸ்தலங்களுக்குப் பெருங் கேடுகளை விளைத்திருக்கிறது. முற்காலங்களில் பஞ்சாயத்துக்கள், பாதகம் செய்த வழக்குகளிலும் (கிரிமினல்) பணசம்பந்தமான வழக்குகளிலும் (சிவில்) அப்போதைக்கப்போது அங்கங்கேயே தீர்ப்புச் சொல்லி, நீதி நடத்தி வந்தார்கள். பொய்ச் சாட்சி சொல்லுவதும் பொய்ச் சத்தியம் செய்வதும் மிகவும் பெரிய பாபங்களாக எண்ணி ஜனங்கள் பயப்பட்டார்கள். செலவில்லாமலும் பாரபட்சமில்லாமலும் நியாயம் கிடைத்தது. இக்காலத்திய நீதி விசாரணை ஸ்தலங்கள் அதிகச் செலவு வைக்கக்கூடியவைகளாக இருக்கின்றன. வெகு சாதாரண வழக்குகளிலும் தீர்ப்புச் சொல்லுவதற்கு மாதக் கணக்கிலும் வருஷக் கணக்கிலும் தாமதம் ஏற்படுகின்றது. மிகவும் சிக்கலான நீதி விசாரணை முறைகள் எல்லையற்ற மோசடிகளுக்கும் பித்தலாட்டங்களுக்கும் இடமளிக்கின்றன. கூட்டங் கூட்டமாக வக்கீல்கள் மிக விஸ்தாரமாகிவிட்ட தரகர்களின் உதவிகளைக் கொண்டு மிகவும் மானக்கேடானதும் பயனற்றதும் நஷ்டமுள்ளதுமான வழக்குகளை நடத்தி, வருஷா வருஷம் கிராமத்து ஜனங்களின் செல்வத்தை கோடிக்கணக்கில் கரந்துவிடுகிறார்கள். பொய்ச் சத்தியமும், பொய்ச் சாட்சியமும் சர்வ சாதாரண நாணயங்களாகிவிட்டன. சத்தியமும் யோக்யதையும் அபூர்வங்களாகி விட்டன. இப்படியாக பிரிட்டிஷ் நீதி பரிபாலன முறை சமூக ஒழுக்கங்களை உயர்த்துவதற்குப் பதிலாக அவற்றைப் பாழாக்குவதற்கு நேரடி

யாக ஆதரவளித்து அளவற்ற தீமைகளுக்குக் காரணமாக இருக்கிறது. அதனால் எவ்வளவுக் கெவ்வளவு சீக்கிரத்தில் இந்த முறையை ஒழித்து விடுகிறோமோ அவ்வளவுக்கவ்வளவு நமக்கும் நாட்டிற்கும் நல்லது. மிகவும் பிற்போக்கான ஆட்சி நடத்திய ஸர் மாரிஸ் ஹாலட்கூடச் சொல்லுகிறார் :

“இந்தியா அரசாங்கம் தன்னுடைய நிர்வாகப் பொறுப்புக்களையெல்லாம் மத்ய அதிகாரத்துக்கு அடங்கினதாகச் செய்துவிட்ட முறை மிகவும் கோணலான மார்க்கம் என்று நான் அடிக்கடி நினைக்கிறேன். கிராமங்களெல்லாம் தங்களுடைய நிர்வாகங்களுக்குத் தாங்களே பொறுப்பாளிகளாக இருந்த பழைய ஏற்பாடுகளை விட்டு விட்டதனால் அதிகத் துன்பங்கள் ஏற்பட்டு விட்டதாக எண்ணுகிறேன். கட்டுப்பாடான ராணுவ முறைகளில் எல்லா நிர்வாகங்களும் நடக்க வேண்டுமென்ற ஆசையினால் ‘மாஜிஸ்ட்ரேட்’ கச்சேரிகள் முதலான மேல்நாட்டு ஏற்பாடுகளை இங்கே புகுத்தி, அதைக் காட்டிலும் நன்றாகவும் பொருத்தமாகவும் கிராமங்களிலேயே நடத்தப்பட்டு வந்த நீதி பரிபாலனங்களைக் கெடுத்து விட்டார்கள். அதனால் ஒவ்வொரு கிராமத்திலோ அல்லது சில கிராமங்களை ஒன்றாகச்சேர்த்தோ அங்கங்கே பஞ்சாயத்துக்களை ஏற்படுத்தி, ‘சிவில்’ ‘கிரிமினல்’ ‘ரெவினியூ’ ஆகியவற்றைச் சேர்ந்த எல்லாச் சில்லரைக் குற்றங்களையும் விசாரிக்கும் அதிகாரங்களை அந்தப் பஞ்சாயத்துக்களுக்கே விட்டுவிடுவது நல்லது என்று நான் அபிப்பிராயப் படுகிறேன்.” (‘ஹிந்துஸ்தான் டைம்ஸ்’ அக்டோபர் 22, 1945)

## கிராமப் பஞ்சாயத்து

நீதி பரிபாலனங்களைக் கிராமப் பஞ்சாயத்துக்களிடம் விட்டு விடவேண்டும். அதற்கென்று ஒரு தனிப் பஞ்சாயத்து அவசியமில்லை. ஏழைக் குடியானவன் சொந்த

ஊரை விட்டு வெளியில் போய், கஷ்டப்பட்டுச் சம்பாதித்த பணத்தை விரயம் செய்து, வாரக்கணக்காகவும் மாதக் கணக்காகவும் வியாஜ்யங்களை நடத்தப் பட்டணங்களில் அலைந்து திரியவேண்டியதில்லை. சட்ட சம்பந்தமான சிக்கல்களுள்ள வழக்குகள் ஏதாவது ஏற்படுகிறபோது மட்டும் தாலூகாவிலிருந்தோ ஜில்லாவிலிருந்தோ ஒரு 'சப் ஜட்ஜ்' அந்தஸ்துள்ள உத்யோகஸ்தர் கிராமத்துக்கு வந்து கடினமான வழக்குகளைத் தீர்க்கக் கிராமப் பஞ்சாயத்துக்கு ஒத்தாசை புரிவார். அந்த 'சப் ஜட்ஜே' சட்ட சம்பந்தமான அறிவுகளை ஒன்றுமறியாத கிராம வாசிகளுக்குச் சொல்லி அவர்களுக்கு வழிகாட்டியாகவும் நண்பராகவும் உபதேசியாகவும் நடந்து கொள்வார். இப்படிப்பட்ட நீதி பரிபாலனம் ஆடம்பரம் இல்லாததாக இருப்பதுடன் உடனுக்குடன் தீர்ப்புக் கிடைக்கக் கூடியதாகவும், அதிகச் செலவில்லாததாகவும், உண்மையாகவே 'நியாயம்' கிடைக்கக் கூடியதாகவும் இருக்கும். ஏனென்றால் ஒவ்வொரு வழக்கின் உண்மைகளெல்லாம் ஏறக்குறைய கிராமத்தார் எல்லாருக்கும் தெரிந்ததாகவே இருக்குமாதலால் பித்தலாட்டங்களுக்கும் பொய்ச் சாட்சியத்துக்கும் சட்ட நிபுண ஜெகஜாலங்களுக்கும் வேலையில்லை.

## ஜில்லாக் கோர்ட்டுகள்

எல்லா வழக்குகளையும் விசாரிக்கக் கிராமப் பஞ்சாயத்துக்கே ஏராளமான அதிகாரங்கள் இருக்குமானதால் தாலூகா நீதி மன்றங்கள் தேவையில்லை. விசேஷ வழக்குகளில் 'அப்பீல்'களை நேராக ஜில்லா நீதிமன்றத்துக்கே செய்து கொள்ளலாம். நகரங்களில் ஏற்படுகிற வழக்குகளை விசாரிக்கவும் ஜில்லாக் கோர்ட்டுக்கே அதிகாரமிருக்கும். நீதிபதிகள் எந்த விதத்திலும் ஜில்லாவின் அரசாங்க நிர்வாக உத்யோகஸ்தர்களுக்கு அடங்கினவர்களாக இருக்கமாட்டார்கள். அவர்கள் ஜில்லா பஞ்சாயத்தால்

நியமிக்கப்பட்டவர்களாகவும் உத்யோகத்தில் ஒழுங்கு தவருதவர்களாக இருக்கும் வரையிலும் நீக்கமுடியாதவர்களாகவும் இருப்பார்கள்.

## மேல் கோர்ட்டுக்கள்

மிகவும் பிரத்யேகமான வழக்குகளில் மட்டும் ஜில்லாக் கோர்ட்டுக்களிலிருந்து ஹைகோர்ட்டுகளுக்கு அப்பீல்கள் அனுமதிக்கப்படும். ஹைகோர்ட்டின் நீதிபதிகள் மாகாணப் பஞ்சாயத்தால் நியமிக்கப்படுவார்கள். அவர்கள் நிர்வாக உத்தியோகஸ்தர்களுக்கு எந்த விதத்திலும் அடங்கினவர்களாக இருக்கமாட்டார்கள். ஒழுங்கு தவருதவர்களாக இருக்கிறவரை ஆயுள் பூராவும் அதிகாரத்தில் இருப்பார்கள்.

## சுப்ரீம் கோர்ட்

எல்லா நீதி மன்றங்களுக்கும் மேலானதாக, அகில இந்திய 'சுப்ரீம் கோர்ட்' அதிகாரம் வகிக்கும்.

அதனுடைய அலுவல்கள் :—

(அ) ஹைகோர்ட்டுகளிலிருந்து வரும் அப்பீல்களை விசாரித்தல்.

(ஆ) அகில இந்திய ஐக்கிய அரசாங்கத்தில் சேர்ந்த மாகாணங்கள் சமஸ்தானங்கள் இவைகளுக்குள் ஏற்படும் வழக்குகளை சட்ட சம்பந்தமான முறைகளில் விசாரித்தல்.

(இ) அரசாங்கச் சட்டங்களில் சொல்லப்பட்ட ஜீவாதாரமான உரிமைகளுக்குப் பங்கம் நேராதபடி, சிறுபான்மையாக உள்ளவர்களுடைய உரிமைகளைப் பயபக்தியோடு பாதுகாத்தல்.

அதன் நீதிபதிகள் அகில இந்தியப் பஞ்சாயத்தால் நியமிக்கப்படுவார்கள். அவர்கள் மிகவும் உயர்ந்த திறமைகளும் நன்னடத்தைகளும் வாய்ந்தவர்களாகவும்

ஜாதிமத வேற்றுமை உணர்ச்சிகளும் அரசியல் கட்சிபேத உணர்ச்சிகளும் இல்லாதவர்களாகவும் இருக்கவேண்டும். ஒழுங்கு தவருமல் இருக்கிற வரையில் ஆயுள்பூராவும் அதிகாரத்தில் இருப்பார்கள்.

## சட்டங்களை மாற்றுதல்

இந்தியாவில் இப்போது அமுலில் இருந்துவரும் 'சிவில்,' 'கிரிமினல்' சட்டங்கள் இந்தியப் பண்புகளுக்கு மிகவும் அன்னியமானவை. அவைகள், பிரித்துப் பொருள் கொள்வதில் அசாத்தியமான பல சிக்குகளும் சுமைகளும் உள்ளவை. ஆகையினுல் புது அரசியல் அமைப்பில் அவற்றை முற்றிலும் மாற்றிவிடவேண்டியது அவசியம். இந்தியாவின் எதிர்கால அரசியல் அமைப்பை வகுக்க ஏற்படப்போகும் 'அரசியல் அமைப்புச்' சபையாரால் இந்தச் சட்டங்களை மாற்றுவதற்கென்று நிபுணர்கள் அடங்கிய 'கமிட்டி' ஒன்றை உண்டாக்கவேண்டும்.

# தேர்தல் முறை

முந்தின அத்யாயங்களில் கூறப்பட்ட விஷயங்களிலிருந்து தேர்தல் முறை, கிராமப்பஞ்சாயத்துக்கு நேர்முகமாகவும், தாலூகா, ஜில்லா, மாகாண, அகில இந்திய மத்ய பஞ்சாயத்துக்களுக்கு மறைமுகமாகவும் இருக்கும் என்பது தெளிவாகின்றது. இந்த முறையில் நேர் முறை, மறைமுக முறை, என்ற இரண்டு முறைகளிலும் உள்ள முக்கிய நன்மைகள் அடங்கியுள. ஸ்தல சுதந்தரங்கள் மிகுதியும் உள்ள கிராமங்களில் நேரடியான தேர்தல் இருக்கும். கிராமப் பஞ்சாயத்துக்கு மேற்பட்ட பஞ்சாயத்துக்களின் அலுவல்கள் பெரும்பாலும் ஆலோசனை கூறுவதாகவும் ஐக்யத்தை கவனிப்பதாகவும் மட்டுமே இருக்குமானதால் அவற்றிற்கு மறைமுகத் தேர்தலே மிகவும் நல்லது. மறைமுகத் தேர்தல் நேர்முகத் தேர்தலில் ஏற்படுகின்ற ஏராளமான தேசீய சக்திகளின் விரயத்தையும், கால விரயத்தையும் பண விரயத்தையும் நீக்கிவிடுகிறது. அதுவும் இந்தியாவைப் போன்ற விஸ்தாரமான தேசத்தில் நேர்முகத் தேர்தல் தீமையே மிகுந்தது. தேசத்தின் பொது நலங்களுக்குத் தீங்குள்ளவைகளான ஜாதிமத மாச்சரியங்களும் அரசியல் கட்சி மனஸ்தாபங்களும் மறைமுகத் தேர்தலினுல் மிகவும் குறைந்து தாமாகவே மறைந்து விடும். மறைமுகத் தேர்தல்கள் சில பொறுப்புள்ள மனிதர்களிடையே மட்டும் நடக்குமானதால் லஞ்சங்களுக்கும் பித்தலாட்டங்களுக்கும் அதிக இடமிருக்காது. அன்றியும் மேல் பஞ்சாயத்துகளுக்குப் பிரதிநிதிகளாகப்போகிறவர்கள், தங்களுடைய ஸ்தானங்களைத் தங்களுடைய கீழ்த்தரப் பஞ்சாயத்தின் நன்மதிப்பால் அடைகிறவர்க

ளானதால் தங்கள் தொகுதிகளை 'மறந்து விட' முடியாது. இதில் கூறப்படுகிற எதிர்கால அரசியல் அமைப்பின்படி ஒரு கீழ்ப் பஞ்சாயத்தின் தலைவர் தாமாகவே மேலுள்ள பஞ்சாயத்துக்கு அதிகார சம்பந்தமுள்ள அங்கத்தினராகி விடுகிறார். இப்படியாக, ஒரு கிராமப் பஞ்சாயத்தின் தலைவரே அகில இந்தியப் பஞ்சாயத்தின் தலைவராகவும் ஆகிவிடலாம். அவர் அதே காலத்தில் தாலூகா, ஜில்லா, மாகாண பஞ்சாயத்துகளின் அங்கத்தினராகவோ தலைவ ராகவோ இருக்கலாம். ஆகையினால் அவர் பாமர மக்க ளின் குறைகளை முற்றிலும் நேரடியாகத் தெரிந்தவராக வும் அவற்றை நீக்கி வைப்பதில் ஆர்வமுள்ளவராகவும் இருக்கமுடியும். அவர் வெறும் திண்ணைப் பேச்சு அரசி யல் வாதியாக இருக்க முடியாது. அகில இந்தியப் பஞ் சாயத்தின் எந்த அங்கத்தினராவது ஜனங்களுக்குத் தாம் செய்யவேண்டிய கடமைகளைக் கவனிக்காமல் இருந்துவிட்டால் அவர் அடுத்த தேர்தலில் ஸ்தானம்பெற முடியாது. அப்படிப்பட்டவரை, அவருடைய மூன்று வருஷ உத்யோக காலம் முடிவதற்கு முன்னாலேயே, அவருடைய தொகுதியைச் சேர்ந்தவர்கள், அவர் வகிக்கும் எல்லாப் பதவிகளையும் விட்டுவிடும்படி கட்டாயப்படுத்த லாம். கிராமப் பஞ்சாயத்துகள் வெகு சுலபமாகச் சமா ளிக்கக்கூடிய சிறு தொகுதியானதாலும் அதன் தேர்தல் நேர்முகமானதாக இருக்குமானதாலும் தேர்தல் விரும்பு கிற அபேட்சகரின் யோக்யதாம்சங்களை எல்லாரும் நேரா கத் தெரிந்தவர்களாகவே இருப்பார்களானதால் தேர்தல் பிரசாரப் பித்தலாட்டங்களையும் மோசடிகளையும் வேரோடு களைந்து விடலாம்.

## வாக்குரிமை

வாக்காளர்கள் ஓட்டுப்போடும் உரிமைக்கு வேண்டிய தகுதிகளைப்பற்றிய பேச்சு கிராமப் பஞ்சாயத்து தேர்தல் ஒன்றில்தான் இருக்கும். கிராமங்களில், ஜாதி, மதம்,

ஆண் - பெண், கொள்கை, சமூகத்தில் அந்தஸ்து, படிப்பு முதலிய எந்த வித்யாசத்தையும் கவனிக்காமல் வயது வந்த ஆண்கள் பெண்கள் அனைவருக்கும் வாக்குரிமை உண்டு. எழுதப்படிக்கத் தெரிந்திருக்க வேண்டுமென்பது கூட ஓட்டுரிமைக்கு அவசியமில்லை. காந்திஜி சொல்லுகிறார் :—

"பணமுள்ளவர்களுக்கு ஓட்டுரிமை இருக்கவேண்டுமென்றும், ஆனால் மிகவும் நல்லொழுக்கமுள்ளவராக இருந்தும் பணமோ படிப்போ இல்லாதவர்களுக்கும் இரவுபகலாக நெற்றி வேர்வை நிலத்தில்விழ சூது வாதில்லாமல் பாடுபடுகின்ற உழைப்பாளிகளுக்கும் அவர்கள் ஏழைகளாக இருக்க நேர்ந்த குற்றத்திற்காக ஓட்டுரிமை இல்லையென்றும் இருக்கிற இந்த அநியாயத்தை என்னால் சகிக்க முடியவில்லை......ஓட்டராக இருக்க வேண்டியவன் படிக்கவும் எழுதவும் கணக்குப்போடவும் ஆகிய மூன்றும் உள்ளவனாக இருக்கவேண்டும் என்கிற படிப்பு யோக்யதையை பற்றியும் எனக்கு மோகமில்லை. அந்த மூன்று பயிற்சியுமுள்ள படிப்பாவது என்னுடைய நாட்டு மக்கள் எல்லாருக்கும் இருக்கவேண்டுமென்பது என்னுடைய ஆசைதான். ஆனால் அவர்களுக்கு அந்த மூன்று பயிற்சிகளும் உண்டான பிறகுதான் அவர்களுக்கு ஓட்டுரிமை கிடைக்கும் என்றால் நான் யுகாந்த காலம் வரையில் காத்திருக்க வேண்டியதுதான். அவ்வளவு காலம் காத்திருக்க நான் தயாராக இல்லை" (வட்டமேஜை மகாநாட்டுப் பேச்சு).

## பிரத்யேக யோக்யதாம்சங்கள்

பஞ்சாயத்துக்களில் அங்கத்தினர்களாகவும் உத்யோகஸ்தர்களாகவும் இருக்க விரும்புகிறவர்களுடைய தகுதிகள் இன்னின்ன விதமாக இருக்க வேண்டுமென்று சட்டதிட்டங்களால் வரையறுக்க முடியாது. ஆனாலும் அடியில் குறிப்பிடப்படும் யோக்யதைகளை அனுசரித்து

ஓட்டர்கள் அபேக்ஷகர்களைத் தேர்ந்தெடுக்கவேண்டும்:

(அ) எழுதப்படிக்கத் தெரிவதும் பொதுவான கல்வித் திறமும்.

(ஆ) லௌகிக காரியங்களில் அனுபவ முதிர்ச்சி.

(இ) செல்வநிலையில் வேறொருவருடைய உதவியை நாடவேண்டிய கஷ்டமில்லாதவராக இருத்தல் (லஞ்சக் குற்றங்களுக்கு இடமில்லாதிருக்க.)

(ஈ) அது வரையிலும் கிராமப் பொதுவுக்கு அவர் செய்திருக்கிற நிச்சயமான தன்னலமற்ற சேவைகளின் அளவு.

இந்தச் சூழ்நிலையில், ஓட்டுகளுக்காக வீடு வீடாகப் போய்ச் சேகரம் செய்வதைக் குற்றமாகக் கருதவேண்டும். பஞ்சாயத்து அங்கத்தினர் தம் பதவியை ஒரு பாரமான பொறுப்பாகக் கருதவேண்டுமே யல்லாமல் சுயநலக் காரியங்களை சாதித்துக்கொள்ள ஒரு கௌரவமாகக் கருதக் கூடாது.

## கூட்டுத் தொகுதிகள்

இந்த அரசாங்க அமைப்பில் ஒவ்வொருவருக்கும் ஜீவாதாரப் பிரஜா உரிமைகள் மிகவும் விஸ்தாரமாக நிச்சயிக்கப் பட்டிருக்கிறபடியால், ஜாதிமத வித்தியாசங்களுக்கென்ற தனித் தொகுதிகள் ஒழிந்து போகவேண்டும். உண்மையில், பிரிட்டிஷ் அதிகார வர்க்கத்தாரின் தூண்டுதலின்மேல் இந்த நாட்டில் ஏற்படுத்தப்பட்ட தனித் தொகுதிகள்தான் இங்கே இப்போதுள்ள ஜாதிமதச் சண்டைகளுக்கும் மனக்கசப்புகளுக்கும் மூலகாரணம். இந்த விஷயம் 'சிறுபான்மைப் பிரச்னை' என்ற அத்யாயத்தில் மிகவும் விரிவாகச் சொல்லப்பட்டிருக்கிறது அதனால், சுதந்தர இந்தியாவின் அரசியல் அமைப்பில் தேர்தல்களுக் கெல்லாம் கலப்புத் தொகுதிகளே தான் ஏற்படும் என்பதை மட்டும் இங்கே சொன்னால் போதும்.

## கூட்டங்கூடித் தேர்ந்தெடுத்தல்

உத்தரமல்லூர் (தமிழ்நாடு) என்ற இடத்திலுள்ள இரண்டு சாசனங்களில் மிகவும் ருசிகரமான தேர்தல் முறை ஒன்று வட்டெழுத்துக்களால் எழுதப்பட்டிருக்கிறது :—

"பன்னிரண்டு வீதிகள் அடங்கிய அந்தக் கிராமம் தேர்தல் சௌகர்யத்துக்காக முப்பது தொகுதிகள் அல்லது 'வார்டு'களாகப் பிரிக்கப்பட்டிருந்தது. ஒவ்வொரு வார்டிலும் அதிலுள்ள ஜனங்கள் ஒரே இடத்தில் கூடுவார்கள். அங்குள்ள ஒவ்வொருவரும் ஒரு சீட்டுத் துணுக்கில் தமக்கு விருப்பமுள்ள அபேக்ஷகரின் பெயரை—அபேக்ஷகருடைய தகுதிகளை அந்தக்கூட்டம் அங்கேயே நிர்ணயிக்கிற நிபந்தனைகளுக்கிணங்க ஆலோசித்து—எழுத வேண்டும். அந்தச் சீட்டுகளை யெல்லாம் வார்டு—வார்டாகத் தனித்தனியே கத்தையாகக் கட்டி முப்பது கட்டுகளாக்குவார்கள். ஒவ்வொரு கத்தையின் மேலும் அதன் வார்டைக் குறிக்கிற தனிச்சீட்டு ஒன்று இருக்கும். இந்த முப்பது கத்தைகளும் ஒரு பானையில் வைக்கப்படும். அந்தப் பானை ஊரார் அனைவரும்—இளையோர் முதியோர் எல்லாரும்—கூடிய மகாசபையின் மத்தியில் வைக்கப்படும். அந்த மகாசபை ஊர்க் கோயிலின் உள்மண்டபத்தில் கூடும். 'ஒருவர்கூட பாக்கியில்லாமல்,' அன்றைய தினத்தில் ஊரில் இருக்கிற கோயில் பூசாரிகளும் அங்கே கூடுவார்கள். 'அந்தச் சபையின் மத்தியில் கோயில் பூசாரிகளின் நடுவில் அவர்களுள் வயது அதிகமாக உள்ள ஒருவர் அந்தப் பானையை அண்ணாந்து மேலே பார்த்துக் கொண்டே உயரத்தில் தூக்கி சபையிலுள்ள எல்லாரும் பார்க்கும்படி நிற்பார்.' பிறகு அந்தப் பானையில் என்ன இருக்கிறதென்றுகூட அறியாத அந்தக் கூட்டத்திலுள்ள ஒரு இளைஞனைக் கூப்பிட்டு அந்தப் பானையிலுள்ள கத்தைகளில் ஒரு கத்தையை எடுக்கச் சொல்லுவார்கள்.

அந்தக் கத்தையிலுள்ள சீட்டுக்களையெல்லாம் வேருெரு காலியாக உள்ள பானையில் அவிழ்த்துப் போட்டுக் குலுக்கிக் கலக்குவார்கள். அந்தப் பையன் அப்படிக் கலக்கப்பட்ட சீட்டுக்களில் ஒன்றை எடுத்து அந்தச் சபைக்கு மத்யஸ்தராக ஏற்படுத்தப்பட்டுள்ள ஒருவர் கையில் கொடுப்பான். 'அந்தச் சீட்டை அந்த மத்யஸ்தர் கையில் கொடுக்கும்போது அவர் தம்முடைய வலது கையின் ஐந்து விரல்களையும் பரக்க விரித்து அதை வாங்குவார். அந்தச் சீட்டில் எழுதப்பட்டுள்ள பெயரை உரக்க வாசிப்பார். அவருக்குப்பின் அங்குள்ள பூசாரிகள் அனைவரும் அப்படியே ஒவ்வொருவராக அந்தப் பெயரைப் படிப்பார்கள். அப்படிப் படிக்கப்பட்ட பெயருள்ளவர் தேர்ந்தெடுக்கப்பட்டதாக நிச்சயிக்கப்படும்.' இப்படியாக முப்பது வார்டுக்கும் முப்பது பேர் தேர்ந்தெடுக்கப்படுவார்கள் ('பூர்வகால இந்தியாவில் உள்ளூர் ஆட்சி,' ப-ள், 171-172. டாக்டர் ராதா குமுத முகர்ஜி எழுதியது). இந்தத் தேர்தல் முறை சரியான ஜனநாயக முறையைச் சேர்ந்தது அல்லவென்று கருதப்படலாம். என்ருலும் கிராமங்களில் அக்காலத்திலிருந்த சமூக வாழ்க்கை நல்லெண்ணத்தையும் பரிசுத்தத்தையும் நிச்சயமாகக் காட்டுகின்றது. இக்காலத்தியத் தேர்தல்களிஞல் ஏற்படுகிற மனக்கசப்புக்களும் விரோதங்களும் அக்காலத்தில் இருந்ததே இல்லை. அந்தப் பழைய முறையை இப்போதும் தேர்தல்களுக்குச் சிற்சில தேவையான மாறுதல்களுடன் உபயோகப்படுத்திக் கொள்ளலாம். உதாரணமாக—பகிரங்கமான ஓட்டுகளாலோ மறைவில் போடப்படும் ஓட்டுகளாலோ அபேக்ஷகராக நிற்கத் தகுதியுள்ளவர்களை முதலில் தேர்ந்தெடுத்து, அந்த ஜாப்தாவை வைத்துக் கொண்டு, அந்த ஜாப்தாவிலுள்ள பெயர்களை யெல்லாம் சீட்டுக்களில் எழுதிப் போட்டுக் குலுக்கி, முன்னே சொன்னபடி கூட்டம் கூடித் தேர்ந்

தெடுப்பதில் குற்றமில்லை. ஏனென்றால், அந்த ஜாப்தா விலுள்ள எல்லாரும் ஏறத்தாழ ஒரேவிதமான தகுதி யுள்ளவர்கள் என்று முன்னமேயே தேர்ந்தெடுக்கப்பட்ட வர்கள். இப்படி 'ஜாப்தா'வும், 'கூட்டம் கூட்டிப் பொறுக்கியெடுப்பதும்' சேர்ந்த தேர்தல், ஜனநாயக முறைக்கு ஒத்ததாகவும் மாச்சரியங்களுக்கு இடமில்லாத தாகவும் இருக்கும். ஆகையினால், இந்த முறையை எத்தனை இடங்களில் ஏற்படுத்தலாமோ அத்தனை இடங் களிலும் ஏற்படுத்த வேண்டிய வழிகளை ஆராயவேண்டும்.

# இந்திய சுதேச சமஸ்தானங்கள்

இப்போதுள்ள இந்திய சுதேச சமஸ்தானங்கள் இந்தியாவின் சுதந்தரப் பாதையில் உள்ள பெரிய இடையூறுகளில் ஒன்ருக இருக்கின்றன. அவைகள் பிரிட்டிஷ் அரசாங்கத்தின் கையிலுள்ள இரண்டு பக்கத்திலும் கூரான ஆயுதங்கள். இந்திய சமஸ்தானங்கள் உடன்படிக்கைகளினுல் ஏற்பட்ட சர்வ சுதந்தரமுள்ள தனியரசுகள் என்ற காரணத்தைக் காட்டி அகில இந்திய அரசியல் திருத்தங்களுக்கு எண்ணப்படும் திட்டங்களுக்கு ஆட்சேபம் சொல்லப் படுகிறது; அகில இந்திய ஐக்யத்தில் சேருவதோ இல்லையோ அவைகளின் சொந்த விருப்பத்தைப் பொறுத்த உரிமையாகிவிடுகிறது. சமஸ்தானத்திலுள்ள ஜனங்களுக்கு ஜவாப்தாரியான ஜனநாயக அரசாட்சியை ஏற்படுத்த முயன்ருலும் அந்த சுதேச மன்னர்கள் பிரிட்டிஷ் ஆதிபத்யத்துக்கன்றி மற்றவர்களுக்குக் கட்டுப் பட்டவர்கள் அல்லவென்பதனுல் பிரிட்டிஷ் ஆதிபத் யத்தின் அனுமதியில்லாமல் எவரும் தங்கள் ஆட்சியில் தலையிடக் கூடாதென்ற ஒரே ஆட்சேபனையை ஓயாமல் சொல்லிக்கொண்டே வருகிருர்கள். இவ்வாருக, இந்தச் சுதேச மன்னர்கள் தாமாகவே ஒரு முன்னேற்றமும் அறியாத 'ஆடம்பர அடிமைகளாகப்' போய்விட்டதோடு, பிரிட்டிஷ் சர்க்காரும் இந்திய தேசீய முன்னேற்ற முயற்சி களுக்கும் எதிர்கால அரசியலை ஏற்படுத்துவதற்கும், இந்தச் சுதேச மன்னர்களே முட்டுக்கட்டையாக இருப்ப தாகச் சுட்டிக் காட்டுகிருர்கள். வாஸ்தவத்தில் பிரிட்டிஷ் சர்க்காருக்கும் இந்தச் சுதேச மன்னர்களுக்கும் ஏற்

பட்டிருப்பதாகச் சொல்லப்படுகிற 'உடன்படிக்கைப் பத்திரங்கள்' அவைகள் எழுதப்பட்டுள்ள காகித விலை கூட பெறு. "அந்தப் பத்திரங்கள், முக்கியமாக, அல்லது முற்றிலும் பிரிட்டிஷ் ஏகாதிபத்யம் இங்கே வேரூன்றுவதற்கென்றே எழுதிக்கொள்ளப்பட்ட 'அனுமதிச் சீட்டுகளே' யன்றி வேறல்ல. ஆனால், அந்தப் பத்திரங்கள், சுதேச மன்னர்கள் கட்டாயப் படுத்தத் தக்க உரிமைகள் அடங்கிய பயபக்திக்குரிய 'உடன்படிக்கைகள்' என்று வாதிக்கக்கூடிய வக்கீல்கள் இருக்கத்தான் இருப்பார்கள். ஒரு சித்திரக் குள்ளன் ஒரு மிகப் பெரிய பூதத்தை எப்படிக் கட்டாயப்படுத்த முடியும்?" ('ஹரிஜன்', 16-12-1939).

சமஸ்தானங்களின் எல்லைகளுங்கூட சரியானவைகள் அல்ல. அவைகளுக்கு, பாஷையோ கலாசாரமோ, பொருளாதார சம்பந்தமோ அடிப்படையல்ல. எப்படி எண்ணிப் பார்த்தாலும் அநேக நியதிகளால் இந்தியா முழுவதும் ஒரே தொகுதியாகத்தான் இருக்க முடியும். அதனால் இனிமேல் ஐக்யத்தில் சேரப்போகிற மாகாணங்கள் சமஸ்தானங்கள் இவற்றிற்கு எல்லைகளை மாற்றியமைக்க வேண்டியது மிகவும் புத்திசாலித்தனமாக இருக்கும். பிரிட்டிஷ் அரசாங்கம் அந்த உடன்படிக்கைப் பத்திரங்கள் என்று சொல்லப்படுகிற சீட்டுக்களை ரத்து செய்துவிட்டாலும் அல்லது அவற்றை சுதந்தர இந்திய அரசாங்கத்துக்கு மாற்றிவிட்டாலும் நல்லதுதான். சுதேச மன்னர்களே அந்த உடன்படிக்கை ஒப்பந்தங்களைத் துறந்துவிட்டு இந்திய மக்களோடு சேர்ந்து கொண்டால் அது இன்னும் விசேஷமானது. இந்த இரண்டில் ஒன்று ஏற்படாவிட்டால் பிரிடிஷ் அரசாங்கம் இந்தியாவிற்கு நியாயம் வழங்க இஷ்டப்படவில்லை என்பதை நாம் அறிந்துகொள்ள வேண்டியதுதான்.

ஸர் ஜார்ஜ் சஸ்டர் எழுதுகிறார்:

"இந்திய சமஸ்தானங்களும் சேர்ந்த ஒரு ஐக்கிய அமைப்பில், இந்திய சமஸ்தானங்களின் அரசாட்சி முறைகளும் தாராள மனப்பான்மையுள்ளதாகவும் தற்கால ஜனநாயக முறைகளுக்குப் பொருந்தினதாகவும் மாறும் என்ற நம்பிக்கையை உடனே உண்டாக்கக்கூடிய உறுதிகள் புலப்படுகின்றன. அப்படிச் செய்வதுதான் இந்தியா முழுவதும் அரசியல் ஒற்றுமையில் உறுதியுள்ளதாக இருப்பதற்கு உதவும். மேலும் சுதேச சமஸ்தானங்களும் பிரிட்டிஷ் இந்தியாவும் பொருளாதார விஷயங்களிலும் சமூக சம்பந்தங்களிலும் ஒன்ருேடொன்று மிகவும் நெருக்கமாகப் பிணைந்திருக்கிறபடியால், சமஸ்தானங்கள் சேராமல் பிரிட்டிஷ் இந்தியாவில்மட்டும் ஒரு ஜனநாயக மத்ய சர்க்கார் ஏற்படுவது அநேக முரண்களுக்கும் முட்டுப்பாடுகளுக்கும் இடமுண்டாக்கும். கடைசியாக சமஸ்தானுதிபதிகளின் நன்மையைமட்டும் கருதினுலும் அவர்கள் தங்களுடைய நாடுகளில் அரசாட்சியின் அஸ்திவாரங்களை பலப்படுத்தி ஏளனத்துக்கு இடமுண்டாக்கும் காரணங்களைக் குறைத்துக்கொள்வதே அறிவுடைமை என்று அடிக்கடி வற்புறுத்த வேண்டும்" (ஜார்ஜ்சஸ்டரும், கைவின்ட் என்பவரும் சேர்ந்து எழுதிய 'இந்தியாவும் ஜனநாயகமும்' என்ற புத்தகத்தில் ப-ள் 365-66)

சரியானபடி அர்த்தம் செய்தால், மேலே காட்டப்பட்டிருக்கிற வாசகம், இந்திய சமஸ்தான மன்னர்களை காலப்போக்கின் தன்மையை அவர்கள் அறிந்துகொள்ள வேண்டுமென்று அறைகூவி எச்சரிக்கை செய்து, இனிமேல் அவர்கள் இந்திய மக்களோடு ஒன்ருகக் கலந்துகொள்ள வேண்டுமேயல்லாமல் பிரிட்டிஷ் படைபலத்தின் நிழலில் ஒதுங்கிக்கொண்டு இந்திய முன்னேற்றத்துக்குத் தடையாக இந்திய மக்களை பயமுறுத்துகிற சர்வாதிகாரிகளாக இருப்பது அவர்களுக்கே அபாயம் என்று புத்தி புகட்டுவதாகும்.

இந்திய மக்கள் அஹிம்சை என்ற இனிமையான எண்ணத்தில் இசைந்து நிற்பதால் சுதேச மன்னர்கள் இந்திய மக்களிடம் பயப்படவேண்டியது ஒன்றுமில்லை. அவர்கள் தங்களுடைய நேர்மையான நடத்தைகளிலேயே நம்பிக்கை வைக்கவேண்டும். அதுதான் அவர்களுக்குப் பூரண பாதுகாப்பும் பலமும் ஆகும். இனிமேல் அவர்களுடைய யதேச்சாதிகாரங்கள் வெகுநாளைக்கு செல்லு மென்று எண்ணிவிடக் கூடாது. அது காந்தி சொல்லுவதுபோல அவர்களை 'இரட்டை அடிமைகள்' ஆக்கும்.

# தேசத்தின் தற்காப்பு

அஹிம்சையைப் பற்றி காந்திஜீக்கு உள்ள உறுதியானதும் தீர்மானமானதுமான அபிப்பிராயங்கள் எல்லாரும் அறிந்தனவே. அஹிம்சை ஹிம்சையைக் காட்டிலும் எண்ணிறந்த சிறப்புக்களும் பலமும் வாய்ந்தது என்று அவர் நம்புகிறார். அவர் சுதந்தர இந்தியா அன்னியப் படையெடுப்புகளுக்கு அஞ்சி, ஆயுதம் தரித்த படைகளை வைத்திருப்பதை விரும்பவில்லை. பண்பட்ட அஹிம்சா சக்திகளை வளர்த்து, படையெடுப்புகளை தைரியமாகவும் வெற்றிகரமாகவும் எதிர்க்கவேண்டுமென்று காந்திஜி விரும்புகின்றார். பிரிட்டிஷ் நாடு ஹிட்லர் விழுங்கிவிடுவானோ என்று நடுங்கிக்கொண்டு நிர்க்கதியான நிலைமையில் இருந்த சமயத்தில், காந்திஜி தம்முடைய சக்தி வாய்ந்த ஏகக்குரலை எழுப்பி, ஹிம்சையினால் கிடைக்கக் கூடிய வெற்றியின் பயனற்ற தன்மையை எடுத்துக் காட்டி இங்கிலாந்து ஆயுதமில்லாமல் ஜெர்மெனியை எதிர்க்க வேண்டுமென்று உபதேசித்தார்:

"உங்களுடைய ஆயுதங்கள் உங்களையோ அல்லது உலகத்தையோ காப்பாற்ற உபயோகப் படா. அவற்றைக் கீழே போட்டுவிடுங்கள். நீங்கள் ஹெர் ஹிட்லரையும் சின்னர் முஸ்ஸலோனியையும் அழைத்து உங்களுக்குச் சொந்தமென்று நீங்கள் வைத்துக்கொண்டிருக்கிற நாடுகளில் எதைவேணுமானாலும் அவர்கள் இஷ்டப்படி எடுத்துக்கொள்ள விட்டுவிடுங்கள். உங்களுடைய அழகான தீவுகளை அவற்றிலுள்ள அழகான கட்டிடங்களோடு அவர்கள் கைப்பற்றிக் கொள்ளட்டும். இவைகள்

எல்லாவற்றையும் விட்டுவிட்டாலும் உங்கள் ஆன்மாவையும் மனசையும் மட்டும் விடவேண்டாம்" (ஹரிஜன் 6-7-40)

பிரிட்டன் தன்னுடைய சரித்திரத்தில் மிகவும் அபாயகரமான நிலைமையில் தவித்துக் கொண்டிருந்த சமயத்தில் 'ஒவ்வொரு பிரிட்டானியருக்கும் வேண்டுகோள்' என்ற பெயரால் எழுதப்பட்ட மறக்கமுடியாத இலக்கியச் சிறப்புடைய இந்த வாசகத்தை மகாத்மா காந்தியைத் தவிர இந்த உலகத்திலுள்ள வேறு எந்த மனிதனால் எழுத முடியும்? அவர் தம்முடைய ஆழ்ந்த மனப்பூர்வமான உணர்ச்சிகளை உலகத்தாரின் ஏளனத்துக்கும் அஞ்சாமல் வெளியிட்டார். ஆனால் யார் அதன்படி நடந்தார்கள்? இருந்தாலும், ஆயுதந்தாங்கிய ஹிம்சையினால் ஏற்படும் வெற்றியினால் எள்ளளவும் எவருக்கும் நன்மையில்லை என்ற உண்மையை, ரத்தமும், உழைப்பும், கண்ணீரும் ஏராளமாகச் சேதமாகி, உலகத்தைச் சுடுகாடாக்கிவிட்ட இரண்டு உலக மகா யுத்தங்களும் சந்தேகமறக் காட்டிவிட்டன. நெப்போலியனைக் கசக்கிப் பிழிந்துவிட்டவர் என்ற புகழ்படைத்த டியூக் ஆவ் வெல்லிங்டன் என்பவர் "வெற்றியே தோல்வியைக் காட்டிலும் மிகவும் பயங்கரமானது என்பதை நான் அறிவேன்" என்று சொன்னார். 'இரும்பு டியூக்' என்ற இவர் சொன்ன இந்த மிகவும் தீர்க்க தரிசனம் வாய்ந்த உண்மையை உலகம் என்றென்றும் நினைவில் வைக்க வேண்டும். மாண்டு மடிந்துபோன 'அட்லாண்டிக் சாசனம்'கூட "உலகத்திலுள்ள எல்லா நாடுகளும் லெளகீக காரணங்களுக்காயினும் ஆன்மார்த்த காரணங்களுக்காயினும் ஹிம்சை வழிகளை விட்டொழிக்கவேண்டுமென்ற முடிவுக்குத்தான் வரவேண்டும்" என்ற உண்மையை ஒத்துக்கொண்டது. மாயாவித் தன்மையுள்ள அணுகுண்டைக் கண்டுபிடித்து, அறிவைத் திகைக்க வைக்கிற விஞ்ஞானங்களின் விருத்தியே

இப்போது நம்மை 'ஹிம்சைக்குரிய ஆயுதங்களையெல் லாம் தூக்கி எறிந்துவிட்டு தீரர்களுடைய ஆயுதமாகிய அஹிம்சையை மேற்கொள்ளும்படி' கட்டாயப்படுத்தப் போதுமானது. அச்சமற்ற, ஆற்றல் மிகுந்த அஹிம்சை, அணுகுண்டைக் காட்டிலும் வேகம் பொருந்திய எப்படிப் பட்ட மூர்க்கத் தனத்தையும் வெற்றிகரமாக எதிர்த்து நிற்க வல்லது. ஏனெனில் அஹிம்சை தீரன் தோல்வி என்பதையே அறியமாட்டான். உண்மையான அஹிம்சை முறைகளில் எதிர்த்து நிற்கவல்ல ஒரு தேசம் ஒரு ஆள் கூட மிச்சமில்லாதபடி சந்தோஷமாகவே சாகத்துணியுமே அல்லாமல், கடைசியில் ஒன்று மற்றவனுகைப் போகிற படையெடுப்புக்காரனுக்கு அடிபணிந்து அடிமையாக வாழ ஆசைப்படாது.

காந்திஜி வெறும் மனக்கோட்டை கட்டுபவரல்லர். அவர் ஒப்பரிய யதார்த்தவாதி; அனுபவத்தில் நடத்தக் கூடிய ஆன்மஞானக் கொள்கையுடையவர். நாட் டின் சக்திகளின் அளவை நன்ருக அறிந்தவர். சுதந் தர இந்தியாவில் ஆயுதந்தாங்கிய சேனைகள் இல்லா மல் அஹிம்சா சேனையே இருக்க முடியுமானல் காந்திஜி மிகவும் திருப்தியடைவார் என்ருலும், அந்த உன்னத லக்ஷியம் உடனே கைகூடுவது கடினம் என்பதையும் அவர் ஒத்துக்கொள்ளுகிருர். "மானத்தை இழந்துவிட்டு அடிமையாகி விடுவதைப் பார்த்துக்கொண்டிருப்பதைவிட இந்திய தேசம் ஆயுத பலத்தையேனும் மேற்கொண்டு தன் கௌரவத்தைக் காத்துக்கொள்வதையே நான் விரும்புவேன்" என்ருர் காந்திஜி (எங்கிந்தியா, 11-8-1920). மேலும் காந்திஜி எழுதுகின்ருர் :—"ஐயோ! இன்றைக்கு நான் வகுக்கக்கூடிய சுயராஜ்யத் திட்டத்தில் போர்வீர னும் இருக்கவேண்டியதாக இருக்கிறது. புத்திக் கூர்மை யும் படிப்பும் பயிற்சியும் உள்ள போலீஸ் படைகளை வைத்துக்கொண்டு உள்நாட்டுக் கலகங்களையும் வெளி நாட்டுப் படையெடுப்புக்களையும் அடக்கவேண்டி யிருக்

கிறது. இந்த இரண்டு தீமைகளையும் ஆயுத பலங்களைக் காட்டிலும் சிறந்த ஒரு சக்தியைக் கொண்டு அடக்கக் கூடிய வழியை நானாவது அல்லது வேறு யாராவது காட்டுகிற வரையிலும் அப்படித்தான் நடக்கும்போலிருக்கிறது" (எங்இந்தியா, 7-5-1925).

காந்திஜி இந்தியாவின் தற்காப்பு இப்போதுள்ள ஆயுதந்தாங்கிய ராணுவமும் போலீசுமாக இல்லாமல் வெறும் அஹிம்சா தேசீயப் பாதுகாப்புப் போலீசாக இருக்கவேண்டுமென்று எண்ணுகிறார்:

"அதனுடைய அணிவகுப்பில் உள்ளவர்கள் அஹிம்சையில் நம்பிக்கை யுள்ளவர்களாக இருப்பார்கள். அவர்கள் ஜனங்களின் எஜமானர்கள்போல் நடந்துகொள்ளாமல் சேவகர்களாக இருப்பார்கள்...போலீஸ் படையினர் ஏதாவது ஆயுதம் தரித்திருப்பார்கள். ஆனால் அநேகமாக அந்த ஆயுதத்தைப் பிரயோகம் செய்யமாட்டார்கள். உண்மையில் அந்தப் போலீஸ்காரர்கள் ஜனங்களின் சீர்திருத்தக்காரர்களாகவே இருப்பார்கள்". ('ஹரிஜன்' 1-9-1940)

அகில இந்தியப் பஞ்சாயத்து இந்தத் தேசீயத் தற்காப்புப் போலீஸ் சேனைக்கு அதிகாரியாக இருக்கும். அது அந்தச்சேனைக்கு ஒரு தலைவரை நியமிக்கும். அந்தச் சேனைத்தலைவர் தேசீயப் பாதுகாப்பு மந்திரியாகவும் இருப்பார். படைகளுக்கு வேண்டிய கலை அறிவுகளைப் புகட்ட அன்னிய அறிஞர்களை அப்போதைக்கப்போது சேர்த்துக் கொள்ளலாமெனினும், இந்தத் தேசீயக் காவலாளிகள் படையில் இந்தியர்களே இடம் பெறுவார்கள்.

இந்த அத்யாயத்தை முடிப்பதன் முன், எதிர்கால இந்திய அரசியலில், தற்காப்பைப் பற்றிய சம்பந்தா சம்பந்தங்களைச் சிறிது கவனிப்பது பயனுள்ளதாகும். யுத்த வெறிபிடித்த இந்த உலகத்தில், தேசத்தின் தற்காப்பு மற்றெல்லாவற்றிலும் மிகவும் முக்கியமான

விஷயமாக இருந்தாலும் காந்திஜி எண்ணுகின்ற சுதந்தர இந்தியாவில் அன்னியப் படையெடுப்பைப் பற்றி அதிகக் கவலைகொள்ள வேண்டியதில்லை. ஏனென்றால்:

(அ) யுத்த வியூக சாஸ்திரப்படி, இந்தியா தேசம் பூகோளத்தில் இயற்கையாக அமைந்திருக்கிற விதத்தில், எந்த ஒரு தனி நாடும், மற்ற நாடுகளையும் யுத்தத்துக் கிழுத்து ஒரு உலக மகாயுத்தத்தை உண்டாக்காமல் இந்தியாவின்மேல் படை யெடுக்க முடியாது.

(ஆ) இந்தியா, தன்னுடைய பொருளாதார விருத்திக் கான சிக்கன முறைகளை, வேறு எந்த நாட்டையும் பாதிக் காத வண்ணம் தன் தேவைகளுக்குப் போதுமான செல்வம் தனக்குள்ளேயே கிடைக்கும்படியான ஒரு திட்டத்தில் அமைத்துக் கொள்ளும். இந்தியாவிற்குப் பிறநாடுகளின்மேல் கண்ணுள்ள ஏகாதிபத்ய முயற்சிகள் இருக்கா. அல்லது ஏராளமான எந்திரச் சரக்குகளை உற்பத்தி செய்து, அந்தச் சரக்குகளை விற்பனை செய்ய அன்னிய வியாபாரஸ்தலங்களைக் கைப்பற்றிவிடவேண்டு மென்ற வெறிபிடித்த போட்டிகளிலும் இந்தியா கலந்து கொள்ளாது. அதனால் இதர நாடுகளின் மனஸ்தாபத் துக்கு ஆளாக வேண்டிய காரணங்கள் ஏறத்தாழ தாமாகவே விலகிவிடுகின்றன.

(இ) வியாபாரத்துக் கென்று போய்த்தான் ஆதிக் யத்தை நாட்டுவது எப்போதும் நடந்து வருகிறது. தங்கள் தங்கள் தேவைகளுக்கு வேண்டிய எல்லாப் பொருள்களை யும் தாங்களே உற்பத்தி செய்துகொள்ளுகிற கிராமச் சமுதாயங்கள் உள்ள இந்தியாவில், அன்னிய நாட்டுச் சரக்குகளை வாங்குவாரே இல்லாமற் போய்விடுகிற படியால் எந்த அன்னிய நாடும் இந்திய வியாபாரத்தைப் பிடித்துக்கொள்ள வேண்டுமென்று மோகங்கொள்ள முடியாது. அதனால் படையெடுக்கவும் ஆசைப்படாது.

மேலும், மிக உயர்ந்த உணர்ச்சிகளைத் தூண்டக் கூடிய காந்திஜியின் துணைகொண்டு இந்தியா அரசியல் சுதந்தரத்தை அடைந்துவிட்டால், உலக மக்களுக் கெல்லாம் நட்பும் நல்லெண்ணமும் உண்டாக்கக்கூடிய மிகப் பெரிய சக்திகளை சண்டையிட்டு மடிகின்ற பல நாடுகளுக்கிடையே பரப்பி சேவை புரியும்.

காந்திஜி எதிர்பார்க்கிறபடி, இந்தியாவின் விடுதலை யும் சுதந்தரமும் உலகத்தில் தேசத்துக்கு தேசம் ஆதிக்ய ஆசைகொள்ளாத மனப்பான்மையையும் ஒப்புரவையும் உண்டாக்கும்.

# சிறுபான்மையோர் பிரச்னை

சிறுபான்மையோர் பிரச்னை என்பது இந்தியாவுக்கு மட்டும் உள்ளதல்ல. அது உலகம் முழுவதிலும் உள்ள ஒரு விஷயம். ஏறத்தாழ, உலகத்திலுள்ள எல்லா ராஜ்யங்களிலும் வெவ்வேறு இனங்களைச் சேர்ந்த ஜனங்கள் இருக்கிருர்கள். அவர்களுள் சிறுபான்மையாக இருப்பவர்களுடைய உரிமைகளெல்லாம், சர்வதேச சம்மதமான ஒரு சம்பிரதாயத்துக் கிணங்க, ஒவ்வொரு ராஜ்யத்திலும் பாதுகாக்கப்பட்டே இருக்கின்றன. ஆனால் பிரிட்டிஷ் அரசாங்கம், அது நெடுங்காலமாக அனுஷ்டித்து வரும் 'பிரித்தாளும்' ஏகாதிபத்தியக் கொள்கைக் கிணங்க, இந்தியாவிலுள்ள ஜாதிமத வித்யாசங்களை மிகவும் கோரமான வர்ணங்களில் வரைந்து காட்டி, பிரிட்டிஷார் இந்தியாவை விட்டுப் போய் விட்டால், ஹிந்துக்களும் முஸ்லீம்களும் ஒருவர்மேல் மேல் ஒருவர் பாய்ந்து உடனே உள்நாட்டுக் கலகங்கள் உண்டாகிவிடும் என்று உலகத்தார் நம்பும்படிச் செய்து வருகிருர்கள். அவர்களுக்கு நல்லகாலமாக, தெரிந்தோ தெரியாமலோ, அவர்களுடைய திட்டங்களுக்கு இணங்கி நடப்பதுபோல, ஜின்னு சாயபு பிரிட்டிஷ் அரசாங்கத்தின் கைக்கிசைந்த ஆயுதமாக அமைந்திருக்கிருர்.

இந்தியாவில் இப்போது இருந்துவரும் மத சம்பந்தமான வேற்றுமை உணர்ச்சிகளின் சரித்திரத்தை புத்தி சாலித்தனத்தோடு ஆராய்ந்தால், பிரிட்டிஷார் வேண்டுமென்றே இந்திய அரசியலில் இந்த மதவித்யாச மாச்சரியங்களைக் புகுத்திவிட்டு, பயிர்செய்து, பராமரித்து வந்

திருக்கிறார்கள் என்பது தெரியவரும். பத்தொன்பதாவது நூற்றாண்டின் இறுதி வரையிலும் பிரிட்டிஷ் அரசாங்கத்தார் மகம்மதியர்களிடத்தில் சந்தேகமுள்ளவர்களாகவே இருந்து வந்தார்கள் ; ஏனென்றால் இந்தியாவின் ஆட்சியை பிரிட்டிஷார் கடைசியாக மகம்மதியர்களிடத்திலிருந்து தான் கைப்பற்றினார்கள். ஆனால் இருபதாவது நூற்றாண்டின் ஆரம்பத்தில், ஹிந்துக்களும் மகம்மதியர்களும் ஒன்று சேர்ந்து விட்டால் தங்களுடைய ஏகாதிபத்தியத்துக்கு இடைஞ்சல்கள் நேரும் என்பதை பிரிட்டிஷார் உணர்ந்தார்கள். அதனால் இந்த அன்னிய அரசாங்கத்தார், மிகவும் ஆலோசனை செய்து தீர்மானிக்கப்பட்ட ஒரு திட்டப்படி மத மாச்சரியங்களின் விதையை விதைத்தார்கள். முதன் முதல், மேன்மை தங்கிய ஆகாகான் தலைமையின் கீழ் ஒரு முஸ்லிம் தூதுகோஷ்டியார் சிம்லாவிற்குச் சென்று, அப்போது வைசிராயாக இருந்த மிண்டோ பிரபுவுக்கு உபசாரப்பத்திரம் வழங்கிய 1906-ம் வருஷ அக்டோபர் மாத முதல் தேதிதான் இந்திய தேசீயத்திற்குச் சனியன் பிடித்தநாள். அந்தத் தூது கோஷ்டியார் தங்கள் முஸ்லிம் சமூகத்தை ஒரு தனி சமூகமாகக் கருதி ஸ்தலஸ்தாபன, மாகாண, மத்ய தேர்தல்களில் தங்களுக்குத் தனித்தொகுதி கொடுக்கவேண்டுமென்று வைசிராயைக் கேட்டுக்கொண்டார்கள். காலஞ்சென்ற மௌலானா மஹம்மத் அலி, அந்தத் தூது கோஷ்டியை, வெள்ளைக்காரரின் 'உத்தரவுக்குக் கீழ்ப்படிந்து நடத்தப்பட்ட' தென்று கண்டித்தார். அந்தத் தூது கோஷ்டி, சில பிரிட்டிஷ் அதிகாரிகளால் தூண்டிவிடப்பட்டதென்று இப்போது தஸ்தாவேஜுகளின் மூலம் ருசுவாகிவிட்டது. அந்தத் தூது கோஷ்டியார் ராஜப்பிரதிநிதிக்கு சமர்ப்பித்த உபசாரப் பத்திரம், அப்போது அலிகார் மகம்மதிய கல்லூரின் தலைமை ஆசிரியராக இருந்த மிஸ்டர் ஆர்ச்பால்ட் என்ற ஆங்கிலேயரால் எழுதித் தரப்பட்டதென்று அனுமானிக்க ஆதாரங்கள் உள்ளன. மிண்டோ

பிரபு தமது பதிலில் "உங்கள் விருப்பத்தை நான் முற்றிலும் ஒத்துக் கொள்ளுகிறேன்." என்று சொல்லி, 'இந்தத் திக்கற்ற தேசத்தில் தனி மதத்தொகுதிகளை உண்டாக்கினுர். அப்போது இந்தியா மந்திரியாக இருந்த மார்லி பிரபு, மகம்மதியர்களுக்கு ஸ்தானங்களை மட்டும் ஒதுக்கி வைத்துவிட்டு தேர்தல்களை கலப்பாகவே நடத்த வேண்டுமென்று அபிப்பிராயப்பட்டார். அவர் மிண்டோ பிரபுவுக்கு எழுதினுர்:

"நான் இனிமேல் மகம்மதியர் விஷயமாக நமக்குள் இருக்கிற அபிப்பிராய பேதத்தில் உங்களைப்போல் கட்சி பேசிக்கொண்டிருக்க விரும்பவில்லை. ஆனுல் ஒன்று மட்டும் உங்களுக்கு மரியாதையாக இன்னும் ஒரு முறை நினைப்பூட்டுகிறேன். என்னவென்ருல், இந்தப் பிரத்யேக உரிமையைப்பற்றி மகம்மதியர்களுக்கு நீங்கள் ஆரம்பத்தில் செய்த பிரசங்கம்தான் இந்த முஸ்லீம் முயலை முடுக்கி விட்டிருக்கிறது." ('வைகவுண்ட் மார்லி: நினைவுகள்.' வால்யம் 2, ப-325).

ராம்சே மெக்டனல்ட்கூட அவருடைய 'விழித்தெழுந்த இந்தியா' என்னும் புத்தகத்தில், மதங்களின் பெயரால் இந்தியாவில் தனித்தொகுதிகளை ஏற்படுத்தினதற்கு பிரிட்டிஷ் அதிகாரிகள்தான் உத்தரவாதிகள் என்பதைப் பதிவு செய்திருக்கிருர். ஒரு பெரிய அரசாங்க உத்யோகஸ்தரிடமிருந்து தமக்கு வந்த கடிதத்திலிருந்து, மிண்டோ பிரபுவின் மனைவியான மிண்டோ சீமாட்டி தமது தினசரியில் எடுத்துக்காட்டுகிற அடியிற் குறிப்பிட்டிருக்கிற வாசகத்தினுல், இந்தியாவின் தேசிய ஒற்றுமையைக் குலைப்பதற்கென்றே யுக்திபண்ணிக் கொண்டு திணிக்கப்பட்டிருக்கிற இந்தத் 'தனித்தொகுதி' யின் உண்மைகள் மிகவும் தெளிவாகத் தெரிகின்றன:

"மேன்மை தங்கிய சீமாட்டியே! இங்கே இன்று நடந்த ஒரு மகத்தான நிகழ்ச்சியைப்பற்றி தங்களுக்கு நான் ஒரு வரி எழுத வேண்டியது அவசியம். அந்த

நிகழ்ச்சி, இந்தியாவையும் இந்திய சரித்திரத்தையும் நெடுங்காலத்திற்கு ஆட்டி வைக்கக்கூடிய ஒரு ராஜதந்திர வேலை. அது வேறொன்றுமில்லை; இந்தியாவின் ஆறு கோடியே இருபது லட்சம் மக்களை, நமக்கு ராஜத்வேஷம் செய்கிற எதிர்ப்புக் கூட்டங்களிலிருந்து பிரித்து இழுத்துக்கொண்டதான உயர்ந்த காரியம்தான்."

இந்த குற்றச்சாட்டு அரசாங்க தஸ்தாவேஜுகளிலும் ஒப்புக் கொள்ளப்பட்டிருக்கிறது. அந்த தஸ்தாவேஜு, அரசியல் சட்டங்களைப் பரிசீலனை செய்ய அனுப்பப் பட்ட சட்டபூர்வமாக ஏற்படுத்தப்பட்ட 'சைமன் கமிஷன்' என்ற கூட்டத்துடன் ஒத்துழைத்த 'இந்திய மத்திய கமிட்டி' சமர்ப்பித்த யாதாஸ்து 'ரிபோர்ட்' தான். அதில் சொல்லப்பட்டிருப்பது என்னவென்ருல் "அந்தக் காலத்தில் தங்களுக்குத் தனித்தொகுதி வேண்டுமென்று முஸ்லீம்கள் தாங்களாகவே கோரவில்லை; ஆனுல் எல்லாருக்கும் தெரிந்த பெயருள்ள ஒரு பெரிய ஆங்கில அதிகாரியினுல் தூண்டப்பட்டே அவர்கள் அதைக் கேட்டார்கள்." (யாதாஸ்து, ப-117).

1916-ல் செய்து கொள்ளப்பட்ட 'லட்சுமணபுரி ஒப் பந்தம்' ஹிந்துக்களுக்கும் முஸ்லீம்களுக்கும் இடையிலிருந்த மனஸ்தாபத்தை மாற்றுவதற்காக செய்யப்பட்ட மிகவும் பயபக்தி நிறைந்த வெற்றிகரமான ஏற்பாடு. ஆனுல் அந்த ஏற்பாட்டின்படி ஹிந்துக்களும் மகம்மதியரும் ஒன்று சேர்ந்து விடுவதை மீண்டும் பிரிட்டிஷ் அரசாங்கத்தார் முறியடித்து விட்டார்கள்; அந்த ஒப்பந்தத்தின் பிரகாரம் முஸ்லீம்களுக்குக் கிடைக்கிற ஸ்தானங்களைக் காட்டிலும் அதிகமான ஸ்தானங்களைக் கொடுத்துச் சலுகை காட்டித், தங்களுக்கு மிகவும் கைவந்த தந்திரத்தால் ஹிந்துக்களும் முஸ்லீம்களும் சேர்ந்து வாழ முடியாமற் செய்துவிட்டார்கள். மத சம்பந்தமான தனித் தொகுதிகளை ஏற்படுத்துவதற்கு பலமான எதிர்ப்பு இருந்தும், 1919-ம் வருஷத்தில் புகுத்தப்பட்ட 'மாண்ட் போர்ட்'

சீர்திருத்தங்களில் இந்தத் தனித்தொகுதிகளை மீண்டும் நீடித்து விட்டார்கள், துர் அதிருஷ்டவசமாக அதுதான் இன்னும் அமுலில் இருந்து வருகிறது. தேர்தலில் தனித் தொகுதிகளை ஏற்படுத்தினதும்,மதத்துக்காகச் சட்டசபை களில் ஸ்தானங்களின் எண்ணிக்கையை ஒதுக்கினதும், 'போதாக்குறை'க்கு நாளுக்கு நாள் மகம்மதியர்களுக்கு அதிக ஸ்தானங்களைப் பெற இடங்கொடுத்ததும், எல்லாமாகச் சேர்ந்து, 'பாக்கிஸ்தான்' கோரிக்கையை இப்போது உண்டாக்கி யிருக்கிறது. ஆகையினால் இந்தப் பாக்கிஸ்தானை ஈன்றவர் இக்பாலும் அல்ல, ரெஹ்மத் அலியும் அல்ல, ஜின்னுவும் அல்ல; மீண்டோ பிரபுவே பாக்கிஸ்தானின் தந்தையாவார். (1933-ல், கெம்பிரிட்ஜில் படித்துப் பட்டம் பெற்றவரான ரெஹ்மத் அலி என்ற பஞ்சாபி ஒருவர் பஞ்சாப், ஆப்கனிஸ்தானம், காஷ்மீரம், சிந்து, பலூசிஸ்தானம் ஆகிய நாடுகளை ஒன்று சேர்த்து தன் மனசுக்குள்ளேயே கற்பனை செய்து ஒரு நாடாக்கி அதற்கு பாக்கிஸ்தான்' என்று பெயரிட்டார்.)

பாக்கிஸ்தான் எப்படியிருக்கும் என்று பார்க்க அதை 'எக்ஸ்ரே' படம் பிடித்துக் காட்ட வேண்டியது இப் போது அவசியமில்லை. அதை அறியவேண்டுமென்று ஆவலுள்ளவர்களுக்கு அதைப்பற்றிய ஏராளமான புஸ்த கங்கள் இருக்கின்றன. (பின்வரும் புத்தகங்களை சிபார்சு செய்கிறோம்:—அசோக மேத்தாவும், அச்சுதபட்ட வர்தனும் எழுதின 'இந்தியாவிலுள்ள மதசம்பந்தமான முக்கோணம்,—டாக்டர் ராஜேந்திர பிரசாத் எழுதிய 'பிளவுபட்ட இந்தியா'—டாக்டர் அம்பேத்கார் எழுதிய 'பாக்கிஸ்தான் அல்லது இந்தியாவின் பிரிவினை')

ஆனால் பாக்கிஸ்தான் என்ற கூச்சல் முற்றிலும் நடைமுறைக்கு முடியாததும், நியாய மற்றதும், விரும்பத் தகாததுமான விஷயம் என்பதை மட்டும் இங்கே சொல் லப் போகும்.. ஹிந்துக்களும் முஸ்லீம்களும் வெவ்வேறு

தேசீய இனத்தைச் சேர்ந்தவர்கள் என்பது சோதனைக்கு நிற்காது.

"பிரிப்பது என்பது பகிரங்கமான ஒரு அசத்தியம். ஹிந்து மதமும் மஹம்மதிய மதமும் ஒன்றுக்கொன்று விரோதமான இரண்டுவித கலாசாரங்களையும் கொள்கைகளையும் உள்ளன என்பதைக் கேட்டு என் ஆன்மா முழுவதும் துடிக்கிறது. சில நாளைக்கு முன்னால் வரையிலும் ஹிந்துக்களாக இருந்த கோடிக்கணக்கான இந்தியர்கள், இஸ்லாம் மார்க்கத்தைத் தழுவினதனாலேயே அவர்கள் வேறு தேசீயத்தைச் சேர்ந்தவர்களாகிவிட்டார்கள் என்று சொல்வதை எதிர்த்து, நான் கலகமே செய்ய வேண்டுமென்று கருதுகிறேன்." ('ஹரிஜன்' ஏப்ரல் 13, 1940).

மேலும் பாக்கிஸ்தான், சிறு பான்மைப் பிரச்னைகளைத் தீர்த்து விடுவதாக இல்லை. அது அந்தப் பிரச்னையை இன்னும் சிக்கலானதாகச் செய்கிறது. பாக்கிஸ்தானிலும் ஹிந்துஸ்தானிலும் முறையே வசிக்கிற ஹிந்துக்களும் மகம்மதியர்களும் அப்புறமும் தங்கள் உரிமைகளுக்குத் தனிப்பாதுகாப்புத் தேட வேண்டிய சிறு பான்மைகளாகவே இருப்பார்கள். இந்தியாவைத் துண்டு செய்து விட்டால் தேசத்தின் பாதுகாப்பு பலவீனப்படும்; சிக்கனத்துக்கும் செல்வத்துக்கும் சேதமுண்டாகும்; அகில தேச மதிப்பில் இந்தியா அற்பமாகி விடும். "ஐக்கிய அரசுகள் ஒன்ருகச் சேர்ந்திருக்கும் இந்தியா நாளடைவில் உலகத்தின் மிகப்பெரிய அரசாட்சிகளில் ஒன்ருகப் பெருமை கொள்ளும் நிலையை எளிதில் எதிர்பார்க்கலாம்" என்று புரொபெசர் கூப்லந்த் எழுதுகிருர். ('இந்தியாவின் எதிர்காலம்' பாகம் 2-ப-108) ஆனால் துண்டுபட்ட இந்தியாவில் நாம் நமக்கு நியாயமாகக் கிடைக்கவேண்டிய நிலைமையை அடைய முடியாது.

பார்க்கப் போனால், காந்திஜி எண்ணுகின்ற பலாத்காரமில்லாத இந்திய அரசியலில் சிறுபான்மைப் பிரச்னை

என்பதே இருக்க முடியாது. ஏனெனில், அஹிம்சையின் அர்த்தமே சகிப்புத்தன்மையும் ஒருவர் இன்னொருவரின் உரிமைகளை மதித்து மரியாதை காட்டுவதும்தான். அச்சத்திற்கோ, அவநம்பிக்கைக்கோ, அபாயத்திற்கோ இடுகளவேனும் காரணம் இருக்காது. அதனால் பாக்கிஸ்தான் அல்லது பாகப்பிரிவினை என்பது அனாவசியமும் பொருத்த மற்றதும் ஆகிவிடும். உண்மையாகவே இந்திய முஸ்லீம்கள் தனியாகப் பிரிந்து போகத்தான் வேண்டுமென்று வற்புறுத்தினால், அஹிம்சையைப் போதிக்கின்ற காந்திஜி அந்த விருப்பத்தை பலாத்காரமாக எதிர்க்க எண்ணமாட்டார். "ஆனால் நான் இந்தியாவைக் கூறு போடுவதற்கு என் மனமார ஒத்தாசை செய்யமாட்டேன். அதைத் தடுப்பதற்கு பலாத்காரமில்லாத எல்லா முயற்சிகளையும் செய்வேன். ஏனென்றால் அப்படி இந்தியாவைக் கூறு போடுவது அநேக நூற்றாண்டுகளாக எண்ணிறந்த ஹிந்துக்களும் முஸ்லீம்களும் ஒரே தேசத்தினராக அக்கம்பக்கமாக வசிப்பதற்காகப் பட்ட பாடுகளையெல்லாம் பாழாக்குவதாகும்." என்று காந்திஜி எழுதினார் (ஹரிஜன் 13-4-1940).

இந்தியாவை இரண்டு மூன்றாகத் துண்டு போடுவது தேசீயத் தற்கொலையயேன்றி வேறில்லை. பிரிந்து போகவோ கூறுபோடவோ பிறருக்கு உள்ள உரிமைகளை காந்திஜி ஒத்துக்கொள்ளுகிறார். என்றாலும் அப்படித் தேசத்தைத் துண்டு போடுவதைத் தடுக்கத் தமக்குள்ள உரிமைகளைக் கொண்டுசெலுத்தும் முயற்சிகளில், அஹிம்சா முறைப்படித் தம்முடைய தர்மபலம் ஆன்ம பலம் முதலான வற்றையே பிரயோகிப்பார். அதில் வெற்றி பெறாவிட்டாலும் அந்த முயற்சியிலேயே அழிந்து போகவேண்டியது அவசியமானாலும் அஞ்சமாட்டார்.

நல்ல வேளையாக, முஸ்லிம் பாமர மக்களிடையேயும் ... காட்டுகிறவர்கள் இப்போதும்

இல்லாமலில்லை. ஆனால் பிரிட்டிஷ் அரசாங்கத்தார், எரிகிற கொள்ளியை ஏறத்தள்ளிவிட்டு நமக்குள்ளிருக்கும் பேத உணர்ச்சிகளை தங்களுக்குச் சாதகமாகப் பயன் படுத்திக்கொள்ளவே பார்க்கிறார்கள். நம்மை ஆண்டு வரும் அன்னிய அரசாங்கம் மட்டும் அதிகாரங்களை நம்மிடம் மாற்றிவிட அந்தரங்கசுத்தியோடு ஆசைப்படுமானால் இந்த மதப்பிரச்னையை ஒரே ராத்திரியில் பொழுது விடிவதற்குள் போக்கிவிடலாம். பிரிட்டிஷார் பாக்கிஸ்தான் உண்டாக்குவதில் பரிவில்லாதவர்கள்போல காணப்படுகிறார்கள். ஆனால் அவர்கள் வெளியில் காட்டுகிற வேஷத்துக்கு விரோதமாக ஏறத்தாழ பாக்கிஸ்தானைப் போன்ற இன்னொரு மத்யஸ்தத்தை கடைசியில் நம் தலையில் போட்டுவிடுவார்களோ என்று எனக்குப் பயமாகத்தானிருக்கிறது. இனிமேலாவது அவர்கள் தங்களுடைய பிரித்தாளும் கொள்கைகளை விட்டுவிட வேண்டுமென்று கண்டிப்பாகச் சொல்லிவிட வேண்டும். தனித்தொகுதிகளை உண்டாக்கினவர்கள் பிரிட்டிஷ் சர்க்கார்தான். நேர்மைக்காகவும் நீதிக்காகவும் அவர்களேதான் அந்தத் தீமைகளை நீக்கிவிட வேண்டும். பிரிட்டிஷார், தங்களுக்குத்தான் ராஜ தந்திரக் கெட்டிக்காரத்தனம் உண்டென்று எண்ணிவிட வேண்டாம். இந்தியா, ஒரே ஒரு வருஷத்துக்கு பிரிட்டனை அடக்கியாள அதிகாரம் கிடைக்குமானால் பிரிட்டனைச் சேர்ந்த மூன்று பகுதிகளான இங்கிலாந்து, ஸ்காட்லாந்து, வேல்ஸ் என்ற மூன்றும் வெவ்வேறு இனங்கள் என்பதை ருசுப்படுத்தி அவைகள் பாகப் பிரிவினை செய்து கொள்ளக் கூக்குரலிடும்படிச் செய்துவிட முடியும்.

சர்வதேச சம்பிரதாயப்படி, அடியில் வரும் விஷயங்களை எதிர்கால இந்திய அரசியல் அமைப்பில் அழுத்தமானச் சட்டமாகச் செய்துவிட்டால், சிறுபான்மைப் பிரச்னைகள் தீர்ந்துபோகும்:

(அ) ஜீவாதாரமான பிரஜா உரிமைகள் ஒவ்வொரு

இனத்தாருக்கும் அவர்களுடைய கலாசாரம், பாஷை, எழுத்து, கல்வி, தொழில்கள், மத அனுஷ்டானங்கள், சமூக வழக்கங்கள், தனி மனிதனுடைய வாழ்க்கை முதலியவற்றைப் பாதுகாக்கும் என்ற உறுதி கொடுத்தல்.

(ஆ) ஐக்யத்தில் சேர்ந்த ஒவ்வொரு பிரதேசமும் ஸ்தல ஆட்சி, பொருளாதாரம், அரசியல், கலாசாரப் பண்புகள், இவற்றில் பரிபூரண சுதந்தரம் உள்ளதாக இருக்கும். தமக்கு வேண்டிய பொருள்களைத் தாமே செய்துகொண்டு, தங்களைத் தாங்களே ஆண்டு கொண்டு, சுதந்தரமாக இருக்கக்கூடிய கிராம சமுதாயங்களை அமைக்கப் போகிறபடியால் அரசியல் இடைஞ்சல்களை எழுப்பக்கூடிய சிறுபான்மைப் பேச்சுகள் இருக்கவே இருக்கா.

(இ) அவரவர்களுக்கு வேண்டிய ஸ்தானங்களை ஒதுக்கிக் கொடுத்து, வேறு ஸ்தானங்களுக்கும் போட்டியிட உரிமை தந்து, கலப்புத் தேர்தல்களே நடக்கவேண்டுமென்பது அரசியலமைப்பின் அடிப்படையாக இருக்க வேண்டும். காந்தீய அஹிம்சா அரசியலமைப்பில் ஸ்தானங்கள் ஒதுக்கவேண்டிய அவசியம்கூட இருக்காது. என்றாலும் இடைக்காலம் வரையிலுமாவது அவைகளுக்கு இடமிருப்பது நல்லது.

(ஈ) எவ்வித வேற்றுமையும் குறையும் பாராட்டாமல் வயது வந்த எல்லோருக்கும் ஓட்டுரிமை உண்டு.

(உ) சர்க்கார் உத்யோகங்களை வழங்குவதில் அதற்கென்று ஒரு தனி 'பப்ளிக் சர்விஸ் கமிஷன்' என்ற ஒரு பஞ்சாயத்தை ஏற்படுத்தி, உத்யோகத் திறமைகளுக்குப் பங்கமில்லாமல், எல்லா வகுப்புக்களுக்கும் நியாயமான அளவில் உத்யோகங்கள் கிடைக்க வேண்டும் என்பதை கவனிக்க வேண்டியது.

சிறுபான்மையோருடைய உரிமைகளை இன்னும் நுணுக்கமாகக் கவனிப்பதற்கு, இந்தியாவின் எதிர்கால அரசியல் அமைப்பை நிர்ணயிக்கப் போகிற 'அரசியல்

நிர்ணயசபை' என்ற சபையினர் ஒரு கமிட்டியை ஏற்படுத்தலாம். அவசியமானால், பிரிட்டனும் பிரிட்டிஷ் ஏகாதிபத்யத்தைச் சேர்ந்த நாடுகளும் இல்லாமல் இதர நாடுகள் அடங்கிய ஒரு மத்யஸ்தம் ஏற்படுத்தி அதன் தீர்ப்பை முடிவானதாகக் கொள்ளலாம்.

முன்னமேயே நான் சுட்டிக் காட்டியிருக்கிறபடி, ஒரு அரசியல் அமைப்புச் சட்டங்களை எவ்வளவு குற்ற மற்றதாக எழுதினாலும், அதில் ஒவ்வொரு வகுப்பின் உரிமைகளைப்பற்றியும் எவ்வளவு திடமான உறுதி மொழிகள் அடங்கியிருந்தாலும்,பரஸ்பரம் நல்லெண்ணம் மட்டும் இல்லாவிட்டால் அது நிரந்தரமான ஒற்றுமையை யும் சமாதானத்தையும் உண்டாக்காது. எனினும், தலைவர் களும் பேச்சாளர்களும் அந்த நல்லெண்ணத்தை வளர்க்க எவ்வளவோ விதத்தில் உதவி புரியலாம்.

"அவர்களுடைய பேச்சினாலும் சொந்த செய்கைகளி னாலும், மிதமான சொற்களால் ஒழுங்கான முறைகளில் ஜீவாதார உரிமைகளைப்பற்றி உபதேசம் செய்வ தால், சமயத்துக்கேற்றபடி உறுதியாகவோ சகித்துக் கொண்டோ நடந்து கொள்வதனால், தங்களுடைய கட்சி யின் அறிவையும் நியாயத்தன்மையையும் அவசியமான போதெல்லாம் அழுத்திச் சொல்லுவதனால், பொது நலத்துக்காக உழைக்கின்ற சங்கங்களையும் இயக்கங்களை யும் தங்களுடைய சக்திக்குள் அடங்கினமட்டும் ஆதரிப்ப தனால், பிளவுகளையும் குழப்பங்களையும் உண்டாக்கக் கூடிய முயற்சிகளை யெல்லாம் முழு பலத்தோடும் எதிர்த்து முறியடிப்பதனால், இந்தியாவில் இப்போது கிளம்பியிருக்கிற விதமாக உள்ள 'சிறுபான்மை'ப் பிரச்னைகளையாவது நிரந்தரமாக எல்லா இடங்களிலும் எல்லா விஷயங்களிலும் தீர்த்துவிட முடியும்." ('எங்கே சிறுபான்மைகள் ?' - எம். என். தலால் எழுதினது ப-193).

ஹிந்துக்கள் முஸ்லீம்கள் எல்லோரையும் முறைத் துப் பார்த்துத் திகைக்க வைக்கிற முக்கியமான

விஷயம் தாங்கமுடியாத தரித்திரம்தான். பொருளா தாரக் குறைவினால் எல்லா ஜாதியினருக்கும் பொதுவாக இருக்கும் இந்தத் தரித்திரக் கொடுமைகளை நினைத்தால், இந்த வகுப்பு வாதங்கள் ஒன்றுமில்லா தனவாக மறைந்தொழிகின்றன. சுயராஜ்யம் வந்தவுடன் பாமரமக்களின் வாழ்க்கைத்தரங்களை வளப்படுத்து வதற்கே கவனத்தையெல்லாம் செலுத்த வேண்டியிருக் கும். அப்புறம் இந்த வகுப்பு வாதங்களெல்லாம் காலைப் பனிபோல் கரைந்து மறைந்து போகும். காந்திஜி எழுது கிறார்:

"இந்த வகுப்பு வாதங்கள் அன்னியரின் ஆதிக்யத் தால் 'உண்டாக்கப்பட்டன' என்று சொல்லாவிட்டாலும் அந்த ஆதிக்யத்தினால் 'இறுகிப்போய்விட்டன' என்பது உண்மை. ஆனதால் இந்த வகுப்புவாதப் பிணக்கங்களை முதலில் தீர்த்துவைப்பது ஸ்வராஜ்ய அரசாங்கத்துக்கு அடிப்படைமட்டுமல்ல, முடிசூட்டுவதுமாகும். சுதந்தர சூரியன் தோன்றிய உடன் அவனுடைய கிரணங்களின் வெதுவெதுப்பினால் இந்த வகுப்புவாதப் பனி மலைகள் உருகி ஒழிந்து போகும் என்பதில் எனக்கு ஒருவித சந்தேக மும் இல்லை" ('ஸ்வராஜ்யத்துக்கான நியாயங்கள்', ப - 103)

# அன்னிய நாடுகளுடன் சம்பந்தம்

அன்னிய நாடுகளுடன் இந்தியாவிற்கு இருக்க வேண்டிய சம்பந்தா சம்பந்தங்களைப்பற்றி, இந்தியா ஏற்கனவே ஒரு நிச்சயமானதும் விஸ்தாரமானதுமான கொள்கையை விளம்பரப்படுத்தியிருப்பதற்கு, ஜவஹர்லாலின் பரந்த நோக்கங்களே காரணமானதால் அவருக்கு நாம் வந்தனம் செலுத்த வேண்டும். பாஸீஸ யதேச்சாதிகார வெறியர்களைத் திருப்தி செய்ய முயன்று, மூனிச் ஒப்பந்தத்தில் முடிந்த பிரிட்டிஷாரின் 'திருப்தி செய்யும் கொள்கை'களைப் பகிரங்கமாகச் சந்தேகத்துக்கிடமில்லாமல் முதல் முதல் கண்டித்த அரசியல் கட்சி இந்திய காங்கிரஸ் மகாசபைதான். ஜப்பான் சீனாவைப் படையெடுத்தபோதும் காங்கிரஸ் அதைக் கண்டித்தது. ஸ்பெயின் தேசத்தின் குடியரசு அரசாங்கம், தமது நாட்டை ஆக்கிரமித்த அன்னியர்களை எதிர்க்கவும், உள்நாட்டுக் கலகக்காரர்களை அடக்கவும் கஷ்டப்பட்டுகொண்டிருந்தபோதும் காங்கிரஸ் மனப்பூர்வமாக ஸ்பெயினுக்கு அனுதாபம் காட்டிற்று. சமீபத்தில் நடந்த உலக யுத்தத்திலும் இந்தியாவிற்கு உடனே பூரண சுதந்தரம் கொடுப்பதானல் ஐக்கிய நாடுகளுடன் சேர்ந்து தன் முழு பலத்தையும் அவர்களுக்கு உதவுவதற்குக் காங்கிரஸ் தயாராக இருப்பதாகத் தெரிவித்தது. இந்தோனேஷியாவை அடக்கிவிட இந்தியப் படைகளை உபயோகிக்கக் கூடாது என்று இந்தியத் தலைவர்களெல்லாம் ஏகோபித்து எதிர்த்ததானது, நம்முடைய நாடு அக்கம்பக்க நாடுகளுடன் எப்படி நடந்துகொள்ள விரும்புகிறதென்பதைக் காட்டுகிறது.

இருந்தாலும் இந்தியாவின் எதிர்கால அரசாங்கத்தில் அன்னிய நாட்டுக் கொள்கை எப்படியிருக்க வேண்டும் என்பதைத் தெளிவாகச் சொல்லிவிட வேண்டியது விரும்பத்தக்கது. கீழ்க்காணும் அம்சங்கள் முக்கியமானவை:

(அ) இந்திய மக்கள் அக்கம்பக்கமான நாடுகளுடனும் உலகத்திலுள்ள மற்றெல்லா நாடுகளுடனும் பரிபூரண சமத்துவத்துடன், நட்புள்ளவர்களாக சமாதானமாக வாழ விரும்புகிறார்கள். அக்கம்பக்க தேசங்களின் மீது இந்தியா, நாடு பிடிக்கும் ஆசையைக் கொள்ளாது. மற்ற நாடுகளின் சுதந்தரத்தை மதித்து பல நாடுகளுக்கும் இடையில் நல்லெண்ணமும் ஒப்புரவும் வளரும்படி நடந்து கொள்ளும்.

(ஆ) இந்தியா, தொழில்களின் மூலமாகவும் வியாபாரத்தின் மூலமாகவும் எந்த நாட்டினுடைய பொருளாதாரத்தையும் சுரண்ட எண்ணாது; இதர நாடுகள் தன்னைச் சுரண்டவும் இடங்கொடுக்காது.

இருதரத்தாருக்கும் லாபமும் விருத்தியும் உண்டாகக் கூடிய முறைகளில் மட்டும் அன்னிய நாடுகளுடன் வியாபார ஒப்பந்தங்களைச் செய்து கொள்ளும்.

(இ) உலகத்தில் சமாதானம் நிலைக்கவும், ஒழுங்கான முன்னேற்றங்கள் உருப்படவும், உலகத்திலுள்ள சுதந்தர நாடுகளெல்லாம் சேர்ந்த ஒரு ஐக்ய அதிகார சங்கத்தை உடனே ஏற்படுத்த வேண்டுமென்று இந்தியா நம்புகிறது. "அப்படிப்பட்ட 'உலக ஐக்ய சங்கம்' ஒன்றை ஏற்படுத்தினால் எல்லா நாடுகளிலும் 'ஆயுதப் பரிகரணம்' என்பது உடனே சாத்தியமாகும். தனித்தனியாக ஒவ்வொரு நாடும் தனது தரைப் படைகளையும் கடற்படைகளையும் ஆகாயப்படைகளையும் வைத்திருக்க வேண்டிய அவசியம் இல்லாமற்போகும். எல்லா தேசங்களும்சேர்ந்த ஒரு 'உலகப் பாதுகாப்பு போலீஸ்' உலக சமாதானத்தைக்காத்து ஆக்ரமிப்புகளை அடக்கும். சுதந்தர இந்தியா அப்படிப்பட்ட ஒரு ஐக்யத்தில் சந்தோஷமாகச் சேர்ந்து, சரிநிகர்

சமான முறையில் மற்ற தேசங்களுடன் ஒத்துழைத்து, உலக சமாதானத்துக்கு உதவி புரியும்" (அ. இ. கா. கமிட்டியின் தீர்மானம் 8, ஆகஸ்ட் 1942).

(ஈ) சமாதானத்துக்காகவும் சுதந்தரத்துக்காகவும் ஜனநாயகத்துக்காகவும் வேலை செய்கிற எல்லா தேசீய, ஜனநாயக, சமதர்ம சக்திகளுக்கும் பூரண ஆதரவு கொடுத்து, எந்த தேசமாவது இன்னொரு தேசத்தை ஆக்ரமிக்க முயன்றால் அந்த ஆக்ரமிக்கும் தேசத்தை அடக்கப், பொருளாதாரத் தடைகளைப் பிரயோகிப்பதில் மற்ற நாடுகளுடன் ஒத்துழைக்கத் தயாராக இருக்கும்.

(உ) மற்ற நாடுகளுடன் சேர்ந்து, உலக சமாதானத்தைப் பாதுகாக்க இந்தியா எப்போதும் தயாராக இருக்குமென்றாலும் எந்த நாட்டையேனும் அடக்கவோ கெடுக்கவோ ஒருவருக்கும் ஒத்தாசை புரியாது.

(ஊ) பெரியதும் சிறியதுமான எல்லாத் தேசங்களும் இனத்திலும் நிறத்திலும் செல்வத்திலும் நாகரீகத்திலும் குறைந்தது என்ற வித்யாசம் பாராட்டாமல் சுதந்தரமாக இருக்க வேண்டும் என்பதையே இந்தியா நோக்கமாகக் கொள்ளும். எக்காரணத்தைக் கொண்டும் ஒரு தேசம் இன்னொரு தேசத்தை அடிமைப்படுத்தி ஆளும் உரிமையை ஒத்துக் கொள்ளாது.

# வருமானமும் வரியும்

இப்போது இருந்துவரும் வரி, வருமான முறைகள் பாரபட்சமுள்ளனவாகவும் பகுத்தறிவுக்கு ஒவ்வாதனவாகவும் இருக்கின்றன. ஆகையினால் அவற்றை முற்றிலும் மாற்றி ஒழுங்குபடுத்தவேண்டும். வருங்கால அரசியல் திட்டத்தில் அடியிற் குறிப்பிட்டிருக்கிற ஒருசில அம்சங்களை அமைக்க வேண்டும்:

(அ) அரசாங்க வருமானங்களை, ஸ்தல சுய ஆட்சிகள் உண்மையாகவே சுதந்தரமுள்ளவைகளாகச் செய்வதற்கான முறையில் அங்கங்கே பகிர்ந்து விட்டுவிட வேண்டும். நிலவரி வருமானத்தில் குறைந்தபக்ஷம் சரிபாதியையாவது அந்தந்தக் கிராமப் பஞ்சாயத்துகளுக்கே கொடுத்துவிட வேண்டும்.

(ஆ) மீதிப் பாதியை ஜில்லா, மாகாண, அகில இந்திய பஞ்சாயத்துகளுக்குப் பங்கிட வேண்டிய வீதாசார நுணுக்கங்களை 'அரசியல் நிர்ணய கமிட்டி'யார் நியமிக்கிற ஒரு 'கமிஷனுக்கு' விட்டுவிடுவோம்.

(இ) உள்ளூர் ஆட்சிக்கு வேண்டிய இதர வருமானங்களை அறுவடை சந்தாவாகவும், பிரத்யேக நன்கொடையாகவும், மத்யஸ்தங்களைச் செய்யத்தரும் காணிக்கையாகவும், அபராதங்களாகவும், மேய்ச்சல் வரியாகவும் இவைபோன்ற இதர வழிகளிலும் கிராமப் பஞ்சாயத்துகளே வசூல் செய்து கொள்ளும். தேக உழைப்பையே வரியாக ஏற்றுக்கொள்ளும் வழக்கத்தை அபிவிருத்திசெய்ய வேண்டும்.

(ஈ) ராணுவச் செலவுகள், உயர்தர உத்யோகஸ்தரின் பெருஞ் சம்பளங்கள் இவைபோன்ற தலைச்சுமை மிகுந்த செலவுகளையெல்லாம் மிகவும் குறைத்துவிட

வேண்டும். தொழில் ரகசியங்களை அறிந்து கொள்ள அன்னிய நாடுகளிலிருந்து அழைக்கப்படுகிற நிபுணர்களைத் தவிர மற்ற உத்யோகஸ்தர்களுக்கு ரூ. 500-க்கு அதிகமான சம்பளம் கொடுக்கக் கூடாது.

(உ) மேற்சொன்ன அதிகப்படியான செலவுகளைக் குறைப்பதற்குச் சரியாக சுகாதாரம், கல்வி, ஆராய்ச்சிகள் முதலான பொதுநலச் செலவுகளை அதிகப்படுத்த வேண்டும்.

(ஊ) இப்போதுள்ள பொறுப்பற்ற அரசாங்கத்தினல் வாங்கப்பட்டிருக்கிற, வெளிநாட்டு அல்லது உள்நாட்டுக் கடன்களுக்கு, விடுதலை பெற்ற சுதந்தர இந்தியா பொறுப்பாளியாகாது.

(எ) ஒரு குறிப்பிட்ட குறைந்த வரிக்குமேல் விவசாய வருமானங்களுக்கு தரத்துக்குத் தக்கபடி விகித வரி விதிக்க வேண்டும்.

(ஏ) ஒரு குறிப்பிட்ட மதிப்புக்கு அதிகமான பிதிரார்ஜித சொத்துக்களின்மேல் சொத்துரிமை வரி படிப்படியான முறையில் விதிக்கப்பட வேண்டும்.

(ஐ) வருமான வரி மாகாணத்தைச் சேர்ந்தது.

(ஒ) உப்பு காற்றைப்போல ஒரு வரிக்கும் உள்ளாகாது.

(ஓ) சுதந்தர இந்தியாவில் போதை வஸ்துக்களின் விற்பனையே அடியோடு நீக்கப்படுமானதால் கலால் வருமானம் இருக்காது.

(ஔ) வரிகளைத், தானிய தவசங்களாகவோ அல்லது தேக உழைப்பாகவோ வசூல் செய்துகொள்ளும் வழக்கத்தை வரவேற்க வேண்டும். குறிப்பாக கிராமாந்தரங்களுக்கு அது மிகவும் உகந்தது.

(ஃ) மாகாணப் பஞ்சாயத்துக்களுக்கும் அகில இந்திய பஞ்சாயத்துக்கும், 'மூலத்' தொழில்களின் வரும்படிகளும், பொதுநல சேவை இலாகாக்களின் வரும்படிகளும் சேர்ந்து வருமானத்துக்கு ஒரு பெரிய இனமாக இருக்கும்.

# தேசியச் சொத்து

ஸ்வராஜ்ய அரசாங்கத்தில், இப்போது மக்களுக்குள்ள சொந்தச் சொத்துரிமைகள் ஒழிந்துபோக வேண்டுமென்பது அவசியமல்ல. ஆனால் இப்போதுள்ள சுயநல சமூகத்தில் சொந்தச் சொத்துரிமையினால் இருந்து வருகிற தீமைகளை நீக்குவதற்கு அவசியமான அளவில் மட்டும் அதன் ஆதிக்யத்தின் எல்லைகளை வரையறுக்க வேண்டும். இப்போது பிரத்யேக முதலாளிகளுடைய உடைமைகளாக இருந்து வருகிற அடியிற் குறிக்கப்படுகிற தினுசான சொத்துக்கள் மட்டும் இனிமேல் தேசத்தின் சொத்தாகப் போய்விடும் :

(அ) எல்லா நிலமும் அரசாங்கத்தைச் சேரும் : சொந்த நிலச்சுவான்தாரி முறையும் ஜமீன்தார் முறையும் இனிமேல் இருக்கா. விளைநிலங்களை நேராகத், தாங்களே உழுது, பயிர் செய்து, பண்ணைகளில் பாடுபடுகிற விவசாயிகளுக்கு அரசாங்கமே நீண்டகாலக் குத்தகைக்கு விடும்.

(ஆ) எல்லா மூலப் பொருள்களின் உற்பத்தித் தொழில்களுக்கும் அரசாங்கமே இனிச் சொந்தக்காரராக இருக்கும். பிரத்யேக தொழில் நிபுணர்கள் தரகு முறையில் அந்தத் தொழில்களை அரசாங்க ஆதிக்யத்தின் கீழ் நடத்தலாம். ஆனால் அவர்கள் ஆதாரத் தொழில்களை இனிமேல் சொந்த லாபத்தைக் கருதி நடத்துகிற சொந்தக்காரர்களாக இருக்க முடியாது.

(இ) சுரங்கங்கள், ஆறுகள், காடுகள், ரஸ்தாக்கள், ரயில்வேக்கள், ஆகாய விமான நிலையங்கள், தந்திகள், தபால்கள், கப்பல்கள் இதர போக்குவரத்து சாதனங்கள் முதலான எல்லாம் அரசாங்க உடைமைகளாக இருக்கும்.

(ஈ) இப்போது பிரத்யேக மனிதர்களின் சொந்தச் சொத்துக்களாக இருக்கிற மேற்குறித்தவைகளை, நியாயமான முறையில் அவர்களுடைய பாத்யதையின் உண்மைகளை ஆராய்ந்துவிட்டு, சரியான ஈடு செய்துவிட்டு அரசாங்கம் கைப்பற்றிக் கொள்ளலாம்.

CONNEMARA ... MADRAS 21 ... 19



# கல்வி

இந்தியாவில் இப்போது நடத்தப்பட்டுவரும் கல்வி முறை, தேசிய வாழ்க்கைக்கு அவசியமான ஜீவாதார உணர்ச்சிகளை உண்டாக்கத் தவறிவிட்டது. சமூக வழக்க ஒழுக்க வாழ்க்கைக்கும் பொருளாதார நிலைமைகளுக்கும் அந்தக் கல்விக்கும் துளிக்கூட சம்பந்தமில்லாமற் போய்விட்டது. அந்தக் கல்வியினால் உற்பத்தி செய்யும் திறமைகளோ, உயர்ந்த நோக்கங்களை விரும்பும் உணர்ச்சிகளோ உண்டாகவில்லை. சுயராஜ்ய அரசாங்கத்தில் இந்தக் கல்வி முறையை அடியோடு மாற்றக்கூடிய சீர்திருத்தங்களைச் செய்ய வேண்டும். அடியிலுள்ளவை சில மூலாதாரமான மாறுதல்கள் :

(அ) ஆதாரக் கல்வி முறையில் இலவசமான கட்டாயப் படிப்பை ஏற்படுத்த வேண்டும். அது, ஆணுக்கும் பெண்ணுக்கும் 14 வயசு வரைக்கும் நூல் நூற்றல், நெசவு, விவசாயம் முதலான ஒரு உற்பத்தித் தொழிலோடு சேர்த்துப் புகட்டப்பட வேண்டும். இப்படிப்பட்ட கல்வி ஏழை இந்தியாவில் மூன்று அனுகூலங்களை ஏககாலத்தில் உண்டாக்கும்.

1. அது மாணவர்களுக்கு குற்றமற்ற அறிவை உண்டாக்கும்.

2. பெரும்பாலும் அல்லது ஒரு பகுதி கல்விச் செலவை அதுவே கட்டிக் கொள்ளும்.

3. மாணவர்களை ஏதாவது ஒரு ஜீவனத்துக்கு உதவக்கூடிய தொழிலுக்குத் தகுதியுள்ளவர்களாகச் செய்து வைக்கும்.

(ஆ) பள்ளிக்கூடங்களில் எவ்விதக் பிரம்படித் தண்டனையும் இருக்கக் கூடாது.

(இ) எல்லா வகுப்புகளிலும் எல்லாப் பாடங்களையும் தாய் மொழியிலேயே நடத்த வேண்டும். இங்கிலீஷில் பாடங்களை நடத்தும் முறையைச் சுமத்தினது மிகவும் துக்கப்பட வேண்டிய தீமைகளை உண்டாக்கிவிட்டது. "அது தேசத்தின் ஜீவ சக்திகளை உறிஞ்சிவிட்டது. அது மாணவர்களின் ஆயுளைக் குறைத்துவிட்டது. அது படித்தவர்க்கும் பாமரருக்கும் சம்பந்தமில்லாமற் செய்து விட்டது. அது படிப்பை அனுவசியமாக அபாரச் செலவுள்ளதாகச் செய்துவிட்டது. இந்த முறையை இன்னும் நடக்கவிடுவது தேசத்தின் ஆன்மாவை பறிகொடுப்பதே ஆகும்" ('யங் இந்தியா'வில் காந்திஜி : 5-7-28).

(ஈ) கிராமப் பஞ்சாயத்துகள், கூடிய சீக்கிரத்தில் கிராமத்தில் எழுதப் படிக்கத் தெரியாதவர்களே இல்லாமற் செய்துவிட முயல வேண்டும். 'முதியோர்கள் கல்வி' என்பது வயது வந்தவர்களுக்கு எழுதவும் படிக்கவும் கணக்குப் போடவும் சொல்லித் தருவது என்று மட்டும் இருக்கக்கூடாது. வயது வந்தவர்களுக்கு சுகாதாரம், சுசிகர வாழ்க்கை, அசுத்தமற்ற அக்கம்பக்கம், விவசாயத் திறமை, கூட்டுறவு விஷயங்கள், பிரஜா உரிமைகள் முதலானவற்றை முக்கியமாக போதிக்க வேண்டும். இங்கேயும்கூட படிப்பு முழுதும் பயனுள்ள ஒரு கைத் தொழிலோடு கலந்தே புகட்டப்படும்.

(உ) சர்வ கலாசாலைப் படிப்பு என்பது மிகவும் உயர்தரமான தொழில் பயிற்சிக்கும், கலைப் பயிற்சிகளுக்கும், அறிவு ஆராய்ச்சி பயிற்சிக்கும் மட்டுமே போதனை தருவதாக இருக்கும்.

(ஊ) சர்வ கலாசாலைப் பட்டம் பெறுகிறவர்கள், படிப்பு முடிந்ததும் ஒரு வருஷம் சம்பளமில்லாமல் சமூக சேவை செய்த பிறகுதான் பட்டங்களைப் பெற உரிமையுடையவர்கள் ஆவார்கள் என்பது கட்டாயமானதாக

# குற்றமும் தண்டனையும்

முற்காலங்களில் குற்றங்களை ஹிம்சையான தண்டனைகளினாலோ அல்லது அளவுகடந்த ஜீவகாருண்ய முறைகளினாலோ திருத்த முயன்றார்கள். இன்ன குற்றத்துக்கு இன்ன தண்டனை என்ற எண்ணங்கள், முன்னேற்றமடைந்த நாடுகளில் இப்போது மிகவும் மாறிவிட்டன. குற்றம் செய்கிற குணம் இயற்கையாகவே மனிதர்களுக்கு உடன்பிறந்தது என்ற எண்ணங்கள் மாறி, அது சமூகத்தில் ஏற்படும் சமய சந்தர்ப்பங்களினால் அப்போதைக்கப்போது உதிக்கிற உணர்ச்சிகளால் உண்டாகிறதென இப்போது கருதப்படுகிறது. குற்றவாளிகளை மனிதர்களாகவும், குற்றங்களை நோய்களாகவும் பாவிக்க வேண்டும். நோயின் காரணங்களைக் கண்டுபிடிக்க வைத்ய முறையில் ஆராய்வதைப் போலக் குற்றத்தின் காரணத்தைக் கண்டுபிடிக்க சமூக சந்தர்ப்பங்களிலுள்ள காரணங்களைக் கண்டுபிடித்து அந்தக் காரணங்களை மாற்றினால் நோய் போய்விடும் என்பது இக்காலத்திய எண்ணம். அதனால் காந்திஜி குற்றங்களை வெறுக்கினும் குற்றவாளியை வெறுப்பதில்லை. குற்றங்களை கவனத்துடன் ஆராய்ந்து பார்த்தால், குற்றங்களுக்குப் பிரதானமாக உள்ள அடிப்படைக் காரணங்கள் தரித்திரம், 'வேலையில்லாத் திண்டாட்டம், கல்வி போதாமை, அல்லது குலைந்துபோன குடும்ப வாழ்க்கை முதலியவைகள்தான் என்பது புலனாகும். ('இக்காலத்திய சமூகப் பிரச்னைகள்' என்று டாக்டர் ஹாரோல்டு வெல்ப்ஸ் எழுதியுள்ள நூலைப் பாருங்கள்). ஆகையினால், குற்றங்களைக் குறைக்க

வேண்டுமானுல் சமூகத்தில் அவற்றின் காரணமாக உள்ள சமய சந்தர்ப்பங்களைக் குறைக்க வேண்டும்.

நோய் வந்தபின் மருந்து கொடுப்பதைக் காட்டிலும் நோய் வராமல் தடுத்துவிட நடந்து கொள்வது நல்லது. 'காந்திய அரசியல்' அமைப்பில் கருதப்பட்டுள்ள மிக முக்கியமான சமூகப் பொருளாதார அமைப்புகளின் மாறுதல்கள் இந்த நாட்டிலுள்ள குற்றங்களை வெற்றிகரமாகத் 'தடுப்பதற்கு' மிகவும் உதவுமென்று எதிர்பார்ப்பது மிகையல்ல.

எப்படி இருந்தாலும், சுயராஜ்யம் வந்ததும் எல்லா விதக் குற்றங்களும் தாமாகவே மறைந்துபோகும் என்று எண்ணிவிடுவது மதியீனம். சுதந்தர இந்தியாவும் குற்றங்களைச் சமாளித்து, தண்டனை கொடுத்து, சிறைச் சாலைகளையும் நடத்தத்தான் வேண்டியிருக்கும். ஆனுலும் சிறைச்சாலைகளை வைத்திருக்கிற மாதிரியும் நோக்கமும் மாறும். இப்போதுள்ள சிறைச்சாலைகள் தண்டனையடைந்த மனிதனைச் சீர்திருத்துவதற்குப் பதிலாக அவனை முன்னிலும் ஸ்திரமான, திருத்தவே முடியாத குற்றவாளியாகச் செய்துவிடுகிறது. புது அரசியல் அமைப்பில், சிறைச்சாலைகளெல்லாம் மிகவும் ஒழுங்குள்ள சீர்திருத்தச்சாலைகளாக நடத்தப்படும். இது சம்பந்தமாக ருஷ்ய யு. எஸ். எஸ். ஆர். அரசாட்சியில் நடத்தப்படுகிற போல்ஷிவோ சீர்திருத்தக் குடியேற்ற ஸ்தலத்தைப் பற்றிய சில விஷயங்களை அறிந்துகொள்வது நல்ல பயன் தரக்கூடிய படிப்பாகும். சிட்னிவெப் என்பவரும், பியாட்ரிஸ் வெப் என்பவரும் சேர்ந்து எழுதியிருக்கிற 'சோவியத் பொது உடைமை அரசியல்—ஒரு நூதன நாகரிகம்' என்ற புத்தகத்தில் எழுதுகிருர்கள் :

"மாஸ்கோ எல்லையைச் சேர்ந்த 'போல்ஷிவோ' என்னுமிடத்தில் 'ஜி. பி. யு.', தன் மேற்பார்வையில் ஒரு மிகவும் விசேஷமான சீர்திருத்தக் குடியேற்றப் பண்ணையை நிர்வகிக்கிருர்கள். அது சமூகத்திற்குக்

குற்றங்களைச் செய்தவர்களை சீர்திருத்துவதற்காக, உலகத்தில் பல இடங்களில் செய்யப்படும் பலவிதமான முயற்சிகளில், மிகவும் சிறந்த வெற்றி தரக்கூடிய முயற்சியாக விளங்குகின்றது. அது கிட்டத்தட்ட ஆயிரம் பேர்கள் அடங்கிய மிக விஸ்தாரமான பண்ணை. கண்ணுக்கு அழகானதும் மனோகரம் பொருந்தியதுமான வளங்கள் சூழ்ந்த இடத்தில், ஒரு கோடீஸ்வரராக இருந்த ஆலை முதலாளியிடமிருந்து பறிமுதல் செய்யப்பட்ட பூஸ்திதியில் அமைந்திருக்கிறது. அதில், உற்பத்தித் தொழில்களும் விவசாயமும் நடக்கின்றன. சமூகத்தில் பலவித குற்றம் செய்துவிட்டவர்களைச் சேர்த்து வைத்திருக்கும் அந்த இடத்தில், அவர்கள் ஓடிப் போகாதிருக்கும்படிக்கென்று உயர்ந்த சுவர்களோ பூட்டப்பட்ட கதவுகளோ இல்லை. திருட்டு, கன்னக் களவு, அல்லது பலாத்காரத்தோடு கூடிய கொள்ளை முதலிய குற்றங்களைச் செய்து, ஒருதரத்துக்கு மேலும் தண்டனையடைந்தவர்களுக்குள் சீர்திருத்தத்துக்குத் தகுந்தவர்கள் என்று கருதப்பட்டவர்களைச் சேர்த்து வைத்திருக்கிற இடம் அது. ருஷ்யாவைச் சேர்ந்த பல சுதந்தர ஸ்தல அரசாங்கங்களால் வெவ்வேறு இடங்களிலிருந்து அனுப்பப்பட்டவர்கள் அங்குள்ளவர்கள். அவர்கள் அனைவரும், இஷ்டப்படி செய்த வேலைக்குத் தகுந்த கூலியை வாங்கிக் கொண்டு போகிற தொழிலாளிகளைப் போலத்தான் அங்கே விடப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் செய்கிற வேலைக்குச் சம்பளமுண்டு. அதை அங்குள்ள அநேக விதக் கடைகளில் அவர்களுடைய இஷ்டப்படி செலவிடலாம். அவர்களுக்கு பீடி, சிகரெட் குடிக்கவும், பேசிக் கொண்டிருக்கவும், சங்கீதம், நாடகம் முதலானவற்றை அனுபவிக்கவும், சவகாச நேரங்களில் நியாயமான அளவுக்கு இஷ்டப்படி வேடிக்கையாகப் பொழுது போக்கவும் அனுமதி உண்டு உண்மையாகவே, கூடுமான சுதந்தரங்களோடு ஒழுங்காக வேலை செய்து விளையாடிக்

கொண்டு வாழ்வது திருடுவதையும் பிச்சையெடுப்பதை யும்விட அதிக இன்பமுள்ளது என்பது அவர்களுக்கு அனுபவபூர்வமாக போதிக்கப்படுகிறது. ஒரு குறிப்பிட்ட காலத்துக்குப்பின் அவர்கள் தங்கள் மனைவிமார்களையும் அங்கே வரவழைத்துக் கொள்ளலாம். அப்படி மனைவி மக்களோடு வாழுகின்ற குடும்பங்களைத் தனித்தனி வீடு களில் வசிக்க விடுவார்கள். அநேகம்பேர் தங்களுடைய தண்டனை காலம் தீர்ந்த பிறகும் அதை விட்டுப்போக மறுக்கிறார்கள்; சிலபேர் அங்குள்ளவர்களையே மணந்து கொள்ளுகிறார்கள். அந்தக் குடியேற்றம் கொஞ்சங் கொஞ்சமாகத் தன் செலவைத் தானே சரிக்கட்டிக் கொள் ளக்கூடிய ஒரு கலப்பு சமுதாயமாக வளர்ந்து, இப்போது தண்டனையுள்ளவர்களும் இல்லாதவர்களும் சேர்ந்து 3000 பேர்களடங்கிய இடமாக இருக்கிறது. அப்படிப் பட்ட ஸ்தாபனம் ருஷ்யாவில் இந்த 'போல்ஷிவோ' என்ற ஒன்று மட்டுமல்ல; இதே முறையில் நடக்கிற இதைப் போன்ற இன்னும் பத்து சீர்திருத்தப் பண்ணை கள் நடக்கின்றன."

சுதந்தர இந்தியாவில் எப்பேர்ப்பட்ட குற்றத்துக் கும் மரண தண்டனை இருக்காது.

குற்றம் செய்யக்கூடிய குணங்களைக் காட்டுகிற சிறு குழந்தைகளை ஆரம்பத்திலேயே சீர்திருத்திவிட முயலும் ஆஸ்பத்திரிகள் ஏற்படும். அவைகள் அரசாங்கச் செலவில் நடக்கும்.

கிரிமினல் குற்றச் சட்டம் மிகவும் சுருக்கமானதாக வும் சிக்கலில்லாததாகவும் மாற்றப்படும். சட்டங்களி லுள்ள சிக்கல்களே குற்றங்களையும் குற்றப் பரம்பரை களையும் உற்பத்தி செய்கின்றன.

# சர்க்கார் உத்யோகங்கள்

(அ) மாகாண சர்க்காரிலும் அகில இந்திய சர்க்காரி லும் இப்போது வேலை பார்த்துவருகிற உத்யோகஸ்தர் களை வைத்துக் கொள்வதோ நீக்கிவிடுவதோ, சுதந்தர இந்திய சர்க்காரின் இஷ்டத்தையே பொறுத்தது.

(ஆ) உத்யோகத்திலிருந்து விலக்கிவிட நேரும் உத்யோகஸ்தர்களுக்கு சுதந்தர இந்திய சர்க்கார் நியாய மான உபகாரச் சம்பளமோ ஜீவனாம்சமோ கொடுக்கலாம்.

(இ) உத்யோகத்தில் நிறுத்திக்கொள்ள நேருகின்ற வர்கள் இதுவரையிலும் வேலைபார்த்த காலத்தையும் அவர்களுடைய உத்யோக காலத்தோடு சேர்த்துக் கொண்டு, பின்னால் உபகாரச் சம்பளம் கொடுக்கப்படும்.

(ஈ) கிராமங்களுக்கும் தாலூகாக்களுக்கும் ஜில்லாக் களுக்கும் புது உத்யோகஸ்தர்களை நியமிக்கும் அதிகாரம் கிராம, தாலூகா, ஜில்லா பஞ்சாயத்துகளுக்கே முறையே இருக்கும். அந்த அதிகாரங்கள் அவர்களே நிச்சயித்துக் கொள்ளுகிற சட்ட திட்டங்களுக்கு உட்பட்டதாக இருக்கும்.

(உ) மாகாணத்துக்கும் அகில இந்திய அரசாங்கத் துக்கும் புது உத்யோகஸ்தர்களை நியமிப்பது 'பப்ளிக் சர்விஸ் கமிஷன்' என்ற சங்கத்தினுடைய அதிகாரத் துக்கு உட்பட்டிருக்கும். அந்தச் சங்கங்களை முறையே மாகாணப் பஞ்சாயத்தும் மத்யப் பஞ்சாயத்தும் ஏற்படுத் தும். அந்த 'பப்ளிக் சர்விஸ் கமிஷன்' சங்கத்தின் அங்கத் தினர்கள் ஒழுக்கத்திலும் திறமைகளிலும் மிகவும் உயர்ந் தவர்களாக இருப்பார்கள்.

(ஊ) அந்த 'பப்ளிக் சர்விஸ் கமிஷன்' என்னும் 'அரசாங்க உத்யோக நியமனச்' சங்கமே, நியமித்தல், உத்யோக உயர்வு கொடுத்தல், உத்யோகஸ்தர்கள் நடந்து கொள்ளவேண்டிய ஒழுங்கு, உபகாரச் சம்பளம் பெறுதல், வேலையிலிருந்து விலகி ஓய்வு கொள்ளும் வயசை நிர்ணயித்தல் முதலியவைகளுக்கு வேண்டிய சட்டதிட்ட நுணுக்கங்களை நிச்சயிக்கும்.

(எ) ஒவ்வொரு உத்யோகத்துக்கும் அதற்கென்று தேவையான விசேஷப் படிப்புகளுடன் திறமை, நல்ல நடத்தை, பொதுநல சேவை முதலான தகுதிகள் மிகுந்தவர்களைத்தான் சேர்த்துக்கொள்ளப்படும். சர்க்கார் உத்யோகங்களில் ஒவ்வொரு சிறுபான்மையோருக்கும் முன்னேற்றம் குறைவான வகுப்புக்களுக்கும் நியாயம் தவருமல் பங்கு கொடுத்து, எல்லா வகுப்பினர்களுக்கும் இடமிருக்க வேண்டுமென்பது மிகவும் கவனிக்கப்படும். என்றாலும் 'வகுப்புப் பிரதிநிதித்வம்' என்ற முறையை உத்யோகங்களில் நுழைத்து' சுதந்தர இந்தியாவின் அரசியல் நிர்வாகத்தை அசுத்தப்படுத்தி விடக் கூடாது. உத்யோகங்களை நியமிக்கிற உத்யோக நியமனச் சங்கத்தின் அங்கத்தினர்கள், ஜாதிமத பாரபட்சமில்லாமல் நடந்து கொள்ள வேண்டுமென்பதை மதவைராக்யமாக மதித்து நடக்கக் கடமைப் பட்டவர்கள்.

(ஏ) சர்க்கார் உத்யோகஸ்தர்கள், சர்க்கார் காரியங்களில் உயர்ந்த சன்மார்க்க நெறியில் நடந்து கொள்ள வேண்டும் என்பதைக் கண்டிப்பாக்குவதற்காக, லஞ்சம் வாங்குதல், மோசடி, பந்து மித்திரர்களுக்குப் பொது விஷயங்களில் பாரபட்சமாக உதவி செய்தல், ஜாதிமத வித்யாசம் பாராட்டல் முதலிய குற்றங்களைச் செய்கிற உத்யோகஸ்தர்களுக்கு எந்தவிதச் சலுகையும் காட்டப் படமாட்டாது.

(ஐ) காரியாலயங்களை ஒழுங்காக வைத்துக்கொள்வது, நிர்வாக வேலை, பொதுமக்களிடம் நடந்துகொள்ள வேண்டிய மாதிரி இவைகளை உத்யோகஸ்தர்களுக்குப் போதிக்கவென்று பிரத்யேகமான பயிற்சிப் பள்ளிக்கூடங்கள் நடத்த வேண்டும்.

(ஒ) உத்யோகங்களுக்கு ஆள்களைப் பொறுக்கும்போது, இந்திய சுதந்தரத்துக்காகப் பாடுபட்டுப் பொதுச் சேவைகளைச் செய்த இளைஞர்களுக்கு, முதல் இடங்கள் தரவேண்டும்.

# இதர விஷயங்கள்

## கொடி

சுதந்தர இந்திய சர்க்கார் கொடி, நடுவில் ராட்டையின் உருவம் பொறித்துள்ள பச்சை, வெள்ளை, காவி என்ற மூன்று நிறங்களமைந்த, 'மூவர்ணக் கொடி' யாகும்.

## பெயரிடும் முறை

சுதந்தர இந்தியாவிற்கு இனி எழுதப்போகும் சட்டத்தில் வெவ்வேறு முறைகளுக்கும் நியாயங்களுக்கும் அலுவல்களுக்கும் குறிப்பிட்டுக் காட்ட வேண்டிய மற்ற விஷயங்களுக்கும் ஹிந்துஸ்தானியில் பெயர்கள் சூட்டுவதற்கென்று ஒரு பிரத்யேகக் 'கமிட்டியை' அரசியல் அமைப்பு நிர்ணய சபையார் ஏற்படுத்த வேண்டும்.

## அரசியல் சட்டத்தைத் திருத்தல்

அரசியல் சட்டத்தில் திருத்தங்களைச் செய்ய அகில இந்தியப் பஞ்சாயத்துக்கு அதிகாரம் உண்டு. அப்படிப் பட்ட ஒவ்வொரு திருத்தத்தையும் அகில இந்தியப் பஞ்சாயத்தும் மாகாணப் பஞ்சாயத்தும் நூற்றுக்கு எழுபத்தைந்துக்குக் குறையாத அதிகப்படி (மெஜாரிடி) ஓட்டுகளால் அங்கீகரிக்கவேண்டும். அந்தத் திருத்தம் ஒரே ஒரு மாகாணத்தைமட்டும் பாதிப்பதாக இருந்தால் அந்த மாகாணப் பஞ்சாயத்து மட்டும் அதைப்பற்றித் தீர்ப்புச் சொல்ல வேண்டும்.

ஜீவாதாரப் பிரஜா உரிமைகளை மாற்றுவதாக இருந்தால் இந்தியாவின் 'சுப்ரீம் கோர்ட்' என்ற எல்லாவற்றிற்கும் மேலதிகாரமுள்ள நீதி மன்றத்தின் அனுமதியை எழுத்து மூலமாகப் பெற்றுக்கொண்டுதான் மாற்ற வேண்டும்.

# முடிவான குறிப்புகள்

முந்தின அத்யாயங்களில் வரைந்து காட்டப்பட்டிருக்கிற 'காந்திய அரசியல்' அமைப்புக்கும் இப்போது இந்தியாவில் நடந்துவருகிற 'தலை கனத்த' ஆட்சி முறைக்கும் அதிக வித்தியாசம் இல்லை போலத் தோன்றலாம். கிராம, தாலூகா, ஜில்லா, மாகாண, அகில இந்திய பஞ்சாயத்துக்கள் என்ற கண்காணிப்பு அடுக்கு முறை இப்போதும் இருந்துவருகிறது என்பதில் சந்தேகமில்லை. ஆனால் கவனித்துப் படிக்கிறவர்களுக்கு, இந்தச் சிறு புத்தகத்தில் வரையப்பட்டிருக்கிற அரசாட்சியின் 'தொனியும் ஜீவனும்' இப்போதுள்ள அரசாட்சிக்கு முற்றிலும் வேறானது என்பது எளிதில் புலப்படும். இந்தப் புத்தகத்தில் எழுதப்பட்டிருக்கும் அரசியல் சட்டத்தின் ஆட்சி முறை, ஆழ்ந்த அகலமான அஸ்திவாரத்தின் மேல் எழுப்பப்பட்டுள்ள கோபுரத்தைப் போல இந்த நாட்டிலுள்ள எண்ணிறந்த கிராமச் சமுதாயங்களின் அடிப்படையின்மேல் அமைக்கப்பட்டிருக்கிறது. மேலிருக்கும் பஞ்சாயத்துகள் குற்றமற்ற புத்திமதிகளைப் புகட்டி, அனுபவம் முதிர்ந்த வழிகாட்டியாக உதவி, பயன்படக் கூடிய செய்திகளை அறிவித்து, ஐக்கிய உணர்ச்சிகளை அதிகப்படுத்தி, கிராமப் பஞ்சாயத்துகளின் நிர்வாகம் பொதுநல சேவைகள் புரிவதாகவே இருக்கும்படி பார்த்துக் கொள்வதே தமது கடமையாகக் கருதும் என்பதே இந்த அரசியல் அமைப்பின் முக்கியச் சிறப்பு. ஆனால் காந்திஜியின் கருத்திற்கிசைந்த பலாத்காரமற்ற அரசிய

லில் அடிப்படைத் தொகுதிகளான கிராமங்களே மத்ய சர்க்காருக்கு வழிகாட்டியாக இ குமே யல்லாது மத்ய சர்க்கார் கிராமங்களுக்கு வழிகாட்டியாக இருக்க இடமில்லை. உண்மையில், இப்போதுள்ள ஆட்சி முறை முற்றிலும் தலை கீழாக மாறிவிடும். இனி அரசியல் நிர்வாகங்களுக்கு கிராமங்களே மூலஸ்தானம் ஆகிவிடும், அதுவே தான் உத்ஸவ தேவதையாகவும் உலவி வரும்.

'இந்திய கிராமங்கள் இப்போது கெட்டுப்போய்க் கிடக்கின்றன' என்று வாதிக்கலாம். 'கிராமங்களில் அற்பத்தனமான பொருமைகளும் குட்டிக் கலகங்களும் கட்சிப் பிரதிக் கட்சிகளும் மலிந்து, கிராம வாசிகள் படிப்பு வாசனையே இல்லாதவர்களாகப், பிரஜா உரிமைகள் இன்னதென்றே தெரியாமல் இருக்கிறார்கள். அதனால் கிராமப் பஞ்சாயத்துக்களிடத்தில் அவ்வளவு அளவு கடந்த நம்பிக்கையும் பொறுப்பும் வைத்துவிடுவது அபாய கரமானது.' ஆனால் இப்படிப்பட்ட வாதங்கள் எல்லா மனிதப் பிறவியின் மனோதத்துவத்தை அறியாமையை ான் காட்டிவிடுகின்றன. "நம்பிக்கை நம்பிக்கை ண்டுபண்ணும்." பிரிட்டிஷார் வெகு காலமாக நா ய்ராஜ்யத்துக்குத் தகுதியுள்ளவர்கள் அல்லவென்று சொல்லிக்கொண்டே வருகிறார்கள். ஆனால் நாம் உடனே பளிச்சென்று "நல்ல அரசாட்சி சுய ஆட்சி ஆகாது" என்று திருப்பிச் சொல்லுகிறோம். ஆரம்பத்தில் சி குற்றங்களையோ அல்லது பெருந் தவறுகளையோ நாம் செய்துவிட் நேர்ந்துவிட்டால்தான் என்ன முழுகிப் போகும்? தப்பிதங்கள் செய்து தான் அனுபவத்தை அடைகிறோம். ஆதலால் நாம் கிராமச் சமுதாயங்களுக்கு ஏராளமான அதிகாரங்களைக் கொடுக்க அஞ்ச வேண்டியதில்லை உள்ளூர் அதிகாரங்களை அதிகப்படுத்துவதும் மேல் அதிகாரங்களைக் குறைத்துக் கொள்வதும் கொஞ்சங் கொஞ்சமாகவும் படிப்படியாகவும் நடக்க வேண்டிய காரி

யங்களாகக் கவனித்துக் கொண்டால் அதுவே போதும். ஆனால் முடிவான நோக்கம் தெளிவானதாகவும், தீர்மான மாகவும், திரித்துப் பொருள்செய்ய இடமில்லாததாகவும் இருக்க வேண்டும். காந்தீயத் திட்டத்தின் அரசியல் அமைப்பில் நமது கிராமங்கள் பூரண சக்திகளை வளர்த்து, உண்மையான ஜனநாயகத்தின் ஜோதிகளாக மீண்டும் உலகத்துக்கு வழிகாட்டும் என்று நான் உறுதியாக நம்புகின்றேன்.